Copies can be had from the
Assistant Director,
Government Publiction Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 12-12-18 Issued: 12-12-18

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
# (பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
# (FIFTEENTH ASSEMBLY)

**வியாழக்கிழமை, மார்ச் 22, 2018—தொகுதி 38—எண் 2**
**Thursday, the 22nd March 2018—Volume 38—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*
**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

**22-3-2018**

**உள்ளடக்கம்**


| | | பக்கங்கள் |
|---|---|---|
| **1.** | **வினாக்கள்-விடைகள்—** | |
| | *உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 6 மற்றும் 7)* .. | *285-431* |
| **2.** | **தகவல் கோரல்—** | |
| | *உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி காவேரி மேலாண்மை வாரியம் அமைத்தல், 15-வது நிதி ஆணையத்தின் ஆய்வு வரம்பு மற்றும் 2015 ஆம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட வெள்ளம் குறித்த தணிக்கை அறிக்கை சட்டமன்றத்தில் வைக்காதது ஆகியவை குறித்து* .. | *432-444* |
| | *திரு. மு.க. ஸ்டாலின்* .. | *432-433* |
| | *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | *433-444* |
| **3.** | **சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| | *(அ) மதுரை மாவட்டத்தில் கிறித்தவ ஆலயங்கள் தாக்கப்பட்டது* .. | *444-449* |
| | *திரு. எஸ். ஆஸ்டின்* .. | *444-446* |
| | *திரு. ஜே.ஜி. பிரின்ஸ்* .. | *446-447* |
| | *மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி* | *447-449* |
| | *(ஆ) சென்னை அரசு சட்டக் கல்லூரி திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு மாற்றப்படுவதைத் தடுத்து நிறுத்துவது* .. | *449-453* |
| | *திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்* .. | *449-452* |
| | **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்* .. | *452-453* |
| | *(இ) மதுரை, அருள்மிகு மீனாட்சியம்மன் கோயில் தீ விபத்து* .. | *454-459* |
| | **திரு. பழனிவேல் தியாக ராஜன்* .. | *454-457* |
| | *திரு. கரி. இராமசாமி* .. | *457* |

பக்கங்கள்


**3. சிறப்புக் கவன ஈர்ப்பு**—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன் .. 457-459

(ஈ) திருக்கோவிலூர் தொகுதி, வெள்ளம்புத்தூர் கிராமம், மர்ம நபர்கள் தாக்கி உயிரிழந்த சிறுவனுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கல் .. 460-462

முனைவர் க. பொன்முடி .. 460

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி .. 461-462

(உ) சென்னையில் கொசுக்களின் உற்பத்தியைத் தடுத்தல் .. 462-466

திரு. மா. சுப்பிரமணியன் .. 462-463

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி.. 463-466

**4. கவன ஈர்ப்பு**—

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, ஓசூர் வனச் சரகத்தில் யானை தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்குதல் 466-472

திரு. பி. முருகன் 467, 469-470, 472

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் 467-472

**5. அறிக்கைகள் அளித்தல்**—

அரசு உறுதிமொழிக் குழு .. 473




பக்கங்கள்


**6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—

(அ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 .. 473-474

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் .. 473-474

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2018 .. 488-489

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் .. 488-489

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2018 .. 494-495

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்.. 494-495

**7. முன்பண மானியக் கோரிக்கைகள், 2018-2019, அளித்தல்**—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் .. 474-477

**8. இறுதி துணை நிதிநிலை அறிக்கை, 2017-2018, அளித்தல்**—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் .. 478-483

**9. அறிவிப்புகள்**—

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 2017-2018, முன்மொழிதல் (ஆ.செ.) .. 484

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2018 (ஆ.இ.) .. 488

பக்கங்கள்

9. **அறிவிப்புகள்**—தொடர்ச்சி

(இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2018-2019, முன்மொழிதல் (ஆ.செ.) .. 489

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2018 (ஆ.இ.) .. 494

(உ) மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்திற்கு உறுப்பினர்கள் தேர்வு 495

10. **கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2017-2018, வாக்கெடுப்பு**— .. 484-488

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் .. 484

11. **முன்பண மானியக் கோரிக்கைகள், 2018-2019, வாக்கெடுப்பு**— .. 489-493

திரு. ஓ. பன்னீர்செல்வம் 489-490

12. **வரவு-செலவுத் திட்டம், 2018-2019, பொது விவாதமும் பதிலுரையும்**—தொடர்ச்சி .. 495-580

திரு. துரைமுருகன் .. 495-498, 500-503, 506-508, 510, 512-516, 518-519, 522-526, 528-529, 532-534, 536, 538-545, 549-552, 578



பக்கங்கள்

12. **வரவு-செலவுத் திட்டம், 2018-2019, பொது விவாதமும் பதிலுரையும்**—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி.. 497-500, 506, 511-512, 519-520, 526, 529-530. 537-539, 545, 550-552

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் .. 503-505, 507-512,

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் .. 505-506, 514-515, 554-580

மாண்புமிகு திரு. பி. தங்கமணி .. 509-511, 543-544

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில் .. 515

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் .. 516-517

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் .. 517-518, 546

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி .. 520-525, 527, 530-533, 548-549

திரு. மு.க. ஸ்டாலின் .. 527-528, 546

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் .. 534-537

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன் .. 544-545

பக்கங்கள்

**12. வரவு-செலவுத் திட்டம், 2018-2019, பொது விவாதமும் பதிலுரையும்**—தொடர்ச்சி

*மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் .. *546*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் .. *547,553*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு .. *553-554*

திரு. உ. மதிவாணன் .. *580*

**13. அரசினர் தீர்மானங்கள்**—

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் .. *580-581*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் *580-581*

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் .. *592-593*

மாண்புமிகு திரு.ஓ. பன்னீர்செல்வம்.. *592*

**14. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2018 .. *581-583*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் *581-583*

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2018 .. *583-585*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்.. *583-585*

(இ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 .. *585-588*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்.. *585-587*



பக்கங்கள்

**14. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி

*திரு. கு. பிச்சாண்டி .. *586*

(ஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 2018 .. *588-590*

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ .. *588-589*

(உ) தமிழ்நாடு தனியார் மருத்துவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2018 .. *590-592*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் .. *590-591*

**15. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் ..** *593-598*

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஹேவிளம்பி, பங்குனி 8, திருவள்ளுவர் ஆண்டு 2049

## 2018 மார்ச் 22, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு*
*அவ்வது உறைவது அறிவு"*

*உலகத்தில் உள்ள சான்றோர்கள் எப்படி வாழ்கிறார்களோ, அதுபோல அவர்களைப் பின்பற்றி, அவர்கள் கூறும் வாழ்வியல் நெறிப்படி வாழ்வதே உயர்ந்த அறிவுடைமை ஆகும்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 6 மற்றும் 7)@

### பட்டியல் 6

**1—**

### புதிய காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 18988—திரு. மு.க.ஸ்டாலின்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கொளத்தூர் தொகுதி, கே.1 செம்பியம் காவல் நிலையத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதிகளை இரண்டாகப் பிரித்து 69-வது வார்டில் ரமணா நகர் பகுதியில் புதியதாக காவல் நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

---

*@ இப்பட்டியல்களிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.*

[2018 மார்ச் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

கே.1 செம்பியம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் மொத்தம் 79,817 பேர் (39,228 ஆண்களும், 40,579 பெண்களும் மற்றும் 10 திருநங்கைகள்) வசித்து வருகின்றனர். கே.1 செம்பியம் காவல் நிலையம் 17-9-2013 ஆம் தேதி முதல் அரசு கட்டடத்தில் நல்லமுறையில் இயங்கி வருகிறது. இக்கட்டடத்தின் கீழ்தளத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரிவும், முதல் தளத்தில் குற்றப் பிரிவும், இரண்டாவது தளத்தில் போக்குவரத்துப் பிரிவும் செயல்பட்டு வருகிறது. கே.1 செம்பியம் காவல் நிலையத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரிவில் 1 காவல் ஆய்வாளர், 10 உதவி ஆய்வாளர்கள், 10 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மற்றும் 33 காவலர்கள் உட்பட 54 காவல் ஆளினர்கள் பணிபுரிந்து வருகின்றனர். குற்றப் பிரிவில் 1 காவல் ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர்கள், 3 சிறப்பு உதவி ஆய்வாளர்கள், 8 காவலர்கள் உட்பட 14 காவல் ஆளினர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

கே.1 செம்பியம் காவல் நிலையத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரிவு மற்றும் குற்றப் பிரிவு ஆய்வாளர்களுக்கு தனித்தனியே நான்கு சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 4 உதவி ஆய்வாளர்களுக்கு இரண்டு சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், செக்டார் பீட் அலுவலுக்கு தனித்தனியே 4 இரண்டு சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சுற்றுக்காவல் ரோந்து பணிக்கு 2 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் சிறப்பு ரோந்து பணிக்கு தனியே நான்கு சக்கர வாகனம் ஒன்றும், stricker என்ற சிறப்பு வாகனத்தில் 8 ஆயுதப் படை காவல் ஆளினர்கள் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சட்டம்-ஒழுங்குப் பிரிவில் கடந்த 2015 ஆம் ஆண்டு 1,091 வழக்குகளும், 2016 ஆம் ஆண்டு 1,605 வழக்குகளும், 2017 ஆம் வருடம் மே மாதம் வரை 797 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. குற்றப் பிரிவில் கடந்த 2015 ஆம் ஆண்டு 130 வழக்குகளும், 2016 ஆம் ஆண்டு 119 வழக்குகளும், 2017 ஆம் ஆண்டு மே மாதம் வரை 44 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் 2015 ஆம் ஆண்டு 100% வழக்குகளும், 2016 ஆம் ஆண்டு 72% வழக்குகளும், 2017 ஆம் ஆண்டு 80% வழக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டு, களவாடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டு குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.



2018 மார்ச் 22]

கே.1 செம்பியம் காவல் நிலையத்தில், 2015 ஆம் ஆண்டு 836 சமுதாய பார்வைப் பதிவேடும் (CSR), 2016 ஆம் ஆண்டு 1,016 சமுதாய பார்வைப் பதிவேடும் (CSR), 2017 ஆம் ஆண்டு மே மாதம் வரை 845 சமுதாயப் பார்வைப் பதிவேடும் (CSR) பதிவு செய்யப்பட்டு, அதன்மீதான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது. கே.1 செம்பியம் காவல் நிலையத்தில் 2015 ஆம் ஆண்டு 19 குற்றவாளிகள்மீதும், 2016 ஆம் ஆண்டு 22 குற்றவாளிகள்மீதும், 2017 ஆம் ஆண்டு இதுவரை 5 குற்றவாளிகள்மீதும் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கே.1 செம்பியம் காவல் நிலைய சரகத்தில் சட்டம்-ஒழுங்கு மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் சிறப்பாக செயல்படுவதால் 2015 முதல் 2017 ஆம் ஆண்டு வரை எந்தவிதமான குறிப்பிடத்தகுந்த சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளோ, குற்றச் செயல்களோ நடைபெறாமல் தடுக்கப்பட்டுள்ளதால், கே. 1 செம்பியம் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. கே.1 செம்பியம் காவல் நிலையத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதிகளை இரண்டாகப் பிரித்து, 69-வது வார்டில் உள்ள ரமணா நகர் பகுதியில் புதியதாக காவல் நிலையம் தேவையில்லாததால் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**2—**

## காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம்

**வினா எண் 19347—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, மங்கலம் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் உட்கோட்டம், மங்கலம் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அருள்மிகு

மாதேசிலிங்கம் திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வே எண் 306/1 முதல் 5 வரை உள்ள 14.34 ஏக்கர் நிலத்தில் 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, அரசாணை எண் 277, நாள் 3-3-2016-ன்படி, நிலக்கிரய முன்தொகை ரூ.1,15,00,000/- திருக்கோயிலின்பேரில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை எண் 712, நாள் 6-10-2016-ன்படி மங்கலம் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட ரூ.83.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 1245—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, 107-வது வார்டு, வெங்கடாஜலபதி தெருவிலுள்ள நியாய விலைக் கடையில் மூன்று பகுதி மக்களுக்கு பொருட்கள் விநியோகம் செய்வதால் அம்மூன்று பகுதிகளுக்கும் தனித்தனியாக நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சென்னை எழும்பூர் தொகுதி, 107-வது வார்டு, வெங்கடாஜலபதி தெருவில், சென்னை திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தில் இரண்டு நியாய விலைக் கடை, சேத்துப்பட்டு 3 (DC015) 1,263 குடும்ப அட்டைகளுடனும், சேத்துப்பட்டு 5 (DC012) 1,202 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன. அரசு வழிகாட்டு நெறிகளின்படி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் புதிய நியாய விலைக் கடை அமைக்க 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட நியாய விலைக் கடைகள் இணைக்கப்பட்ட தெருக்களில் 800-க்கும் குறைந்த குடும்ப அட்டைகளே உள்ளது. எனவே, அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், 107-வது வார்டு, வெங்கடாஜலபதி தெருவிலுள்ள பகுதிகளுக்கு தனித்தனியாக நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.





**4—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 8148—திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சி, 56-வது வட்டம், ஹட்கோ காலனியில் (முருகன் நகர்) நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், கே.1008 சிங்காநல்லூர் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கோயம்புத்தூர் மாநகராட்சி, 56-வது வட்டம், ஹட்கோ காலனி (முருகன் நகர்) பகுதியில், முருகன் நகர் பகுதியினைச் சேர்ந்த 180 குடும்ப அட்டைகள், சி. 1064 பிளேக் மாரியம்மன் கோயில் வீதியிலுள்ள முழுநேர நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டு, அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மேற்படி சங்கத்திற்கு சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லை. மேலும், அரசு வழிகாட்டு நெறிகளின்படி, பகுதிநேரக் கடை அமைப்பதற்கு இலவசமாக கட்டட வசதி அக்கிராம மக்களால் செய்து தரப்பட வேண்டும் என்ற விதி உள்ளதால், மேற்படி சி.1064 பிளேக் மாரியம்மன் கோயில் வீதியிலுள்ள முழுநேர நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**5—**

## நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 9386—திரு. அ. மருதமுத்து:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெடாவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 மார்ச் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, தெடாவூர் பேரூராட்சி பகுதியிலுள்ள 2635 தெடாவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்கீழ், தெடாவூர்-1, தெடாவூர்-2 மற்றும் தெடாவூர் புதூர் ஆகிய 3 முழுநேர நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்திலும், தெடாவூர் அம்பேத்கர் நகர் பகுதிநேர நியாய விலைக் கடை வாடகையில்லா இலவசக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. தெடாவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் சொந்த இடமோ, நிதி வசதியோ இல்லை என்பதனால் மேற்குறிப்பிட்டுள்ள நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

**6—**

## நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 9388—திரு. அ. மருதமுத்து:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தலைவாசல் ஒன்றியம், காட்டுக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்குட்பட்ட தேனூற்றுவாரி மற்றும் ஆயர்பாடி கிராம நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியம், காட்டுக்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் தேனூற்றுவாரி முழுநேர நியாய விலைக் கடை 456 குடும்ப அட்டைகளுடன் வாடகை கட்டடத்திலும்* 07BP093P1 *ஆயர்பாடி பகுதிநேர நியாய விலைக் கடை 312 குடும்ப அட்டைகளுடன் இலவச கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. காட்டுக்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு*



2018 மார்ச் 22]

*சொந்த இடமோ நிதி வசதியோ இன்மையால், தேனூற்றுவாரி முழுநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், ஆயர்பாடி பகுதிநேர நியாய விலைக் கடை இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.*

**7—**

## நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 13319—திரு. ஆர். முருகையா பாண்டியன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அம்பாசமுத்திரம் தொகுதி, அம்பாசமுத்திரம் வட்டம், 0.838 மார்க்கெட்டிங் சொசைட்டிமூலம் அம்பாசமுத்திரம் நகராட்சி மற்றும் விக்கிரமசிங்கபுரம் பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*அம்பாசமுத்திரம் தொகுதி, அம்பாசமுத்திரம் வட்டத்தில் 0.838 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் அம்பாசமுத்திரத்தில் செயல்பட்டு வருகிறது. இச்சங்கமானது அம்பாசமுத்திரம் நகராட்சியில் 4 முழுநேர நியாய விலைக் கடைகளையும், விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் 11 முழுநேர நியாய விலைக் கடைகளையும் 2 பகுதிநேர நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகிறது. இதில், விக்கிரமசிங்கபுரம் முழுநேர நியாய விலைக் கடை எண் 3, 6, 9 மற்றும் பொதிகையடி பகுதிநேர நியாய விலைக் கடை ஆகியவை ஏற்கெனவே அரசு கட்டடத்தில்தான் செயல்பட்டு வருகின்றன. எனவே, மேற்படி கடை எண் 3, 6, 9 மற்றும் பொதிகையடி பகுதிநேர நியாய விலைக் கடைகளுக்கு கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை. மேலும், அம்பாசமுத்திரம் முழுநேர நியாய விலைக் கடை எண் 2 விக்கிரமசிங்கபுரம் முழுநேர நியாய விலைக் கடை எண்கள் 1, 2, 5 கடைகளுக்கு அரசுக் கட்டடங்கள் ஏதுமில்லாததாலும் மற்றும் அய்யனார்குளம் பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு இலவசமாக கட்டட வசதி அக்கிராம மக்களால் செய்து தரப்படவேண்டும் என்பதாலும் மேற்படி நியாய விலைக் கடைகளுக்கு கட்டடங்கள் கட்ட சாத்தியக் கூறுகளில்லை.*

[2018 மார்ச் 22

**8—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 14160—திரு. க. கார்த்திகேயன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம், அரியூர் மதுர அம்மங்கொல்லைமேடு பகுதியில் நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் ஒன்றியம், ஐஐ.67 ஜி. அரியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் அம்மங்கொல்லைமேடு பகுதிநேர நியாய விலைக் கடை 716 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதற்கு 1999 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டப்பட்டு, அக்கட்டடத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. எனவே, அம்மங்கொல்லைமேடு பகுதிநேர நியாய விலைக் கடைக்கு மேலும் ஒரு கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.*

**9—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 14558—திருமதி நா. மனோரஞ்சிதம்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆனந்தூர் ஊராட்சி, செங்கம்பட்டி, சாவடியூர் மற்றும் ராஜீவ் நகர் ஆகிய பகுதிகளில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*



2018 மார்ச் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், ஆனந்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 573 குடும்ப அட்டைகளுடன் ஆனந்தூர் முழுநேர நியாய விலைக் கடையும், ரங்கனூர் பகுதிநேர நியாய விலைக் கடையும், 431 குடும்ப அட்டைகளுடன் ஆனந்தூர் முழுநேர நியாய விலைக் கடையும் இயங்கி வருகின்றன. மேற்படி, பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் செங்கம்பட்டியைச் சேர்ந்த 132 குடும்ப அட்டைகளும் ரங்கனூர் பகுதிநேர நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக்கடை கோரும் பகுதியில் குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், செங்கம்பட்டியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**10—**

## நியாய விலைக் கடையை மீண்டும் செயல்படுத்துதல்

**வினா எண் 16194—திரு. ஏ. இரத்தினசபாபதி:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி தொகுதி, உலர்பனி ஊராட்சி, ஆலங்குடி கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், T.1254 பாக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் ஆலங்குடி முழுநேர நியாய விலைக் கடை 194 குடும்ப அட்டைகளுடன் அறந்தாங்கி டவுன் மண்டிக்குளம் மாரியம்மன்*

[2018 மார்ச் 22

கோயில் குளத்துக்கரையிலுள்ள வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி, ஆலங்குடி முழுநேர நியாய விலைக் கடை ஆலங்குடி கிராமத்திலிருந்து அறந்தாங்கி டவுன் மண்டிக்குளம் மாரியம்மன் கோயில் குளத்துக்கரையிலுள்ள வாடகைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, தற்போது எவ்வித பிரச்சினையுமின்றி நடத்தப்பட்டு வருகிறது. மேலும், ஆலங்குடி முழுநேர நியாய விலைக் கடையை ஆலங்குடி கிராமத்திற்கு மாற்றி செயல்படுத்த ஆலங்குடி கிராமத்தில் அரசு கட்டடம் ஏதுமில்லாததால், ஆலங்குடி முழுநேர நியாய விலைக் கடையினை ஆலங்குடி கிராமத்திற்கு மாற்றி செயல்படுத்த வழிவகை இல்லை.

**11**—

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 17790—திரு. அ. பிரபு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி தாலுகா, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், உலகங்காத்தான் மற்றும் நல்லாத்தூரில் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியிலுள்ள புதிய நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தாலுகா, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஐ.ஐ.624 பங்காரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும், உலகங்காத்தான் ஊராட்சியில் உலகங்காத்தான் முழுநேர நியாய விலைக் கடை 1,052 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இதில் உலகங்காத்தான் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியின் 85 குடும்ப அட்டைகளும் அடங்கும். இதேபோன்று, ஐ.ஐ.558 குதிரைச்சந்தல் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் நல்லாத்தூர் ஊராட்சியில் நல்லாத்தூர் முழுநேர நியாய விலைக் கடை*



2018 மார்ச் 22]

*652 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இதில் நல்லாத்தூர் ஊராட்சியிலுள்ள நல்லாத்தூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் 130 குடும்ப அட்டைகளும் அடங்கும். எனவே, உலகங்காத்தான் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதி மற்றும் நல்லாத்தூர் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதி ஆகியவற்றில் உள்ள முழுநேர நியாய விலைக் கடைகள் ஏற்கெனவே அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதனால் மேற்படி பகுதிகளுக்கென புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.*

**12**—

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 18921—திரு. சு. ரவி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, டிபென்ஸ் காலனியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நடத்தும் கற்பகம் கடை எண் 15 நியாய விலைக் கடை 982 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் டிபென்ஸ் காலனியைச் சேர்ந்த 284 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் கிராமப்புற பகுதியில் குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். தாய்க் கடைக்கும், பகுதிநேர கடைக்கும் 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். மேற்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் டிபென்ஸ் காலனியில் 284 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டிருப்பினும், தாய்க்*

*கடைக்கும் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் 1 கி.மீ. தூரம்தான் உள்ளது. மேலும், உத்தேச பகுதிநேரக் கடை அமைக்க இலவச கட்டடம் ஏதுமில்லை. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் டிபென்ஸ் காலனியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

**13—**

## சுற்றுச் சுவர் கட்டுதல்

**வினா எண் 18923—திரு. சு. ரவி:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரத்தில் கற்பகம் கூட்டுறவு அங்காடி அமைந்துள்ள வளாகத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரத்தில், வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் கிளை அலுவலகம் சுமார் 79,000 சதுரடி வளாகத்தில் அமைந்துள்ளது. பண்டகசாலை தற்போது ரூ.22 கோடி குவிந்த நட்டத்தில் செயல்படுவதாலும், போதிய நிதி வசதி இல்லாததாலும் தற்போது சுற்றுச் சுவர் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**14—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 18931—திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு கிராமத்திலுள்ள நியாய விலைக் கடை எண் 1-லிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து, பருத்திக்குடி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருவையாறு வட்டம், திருவையாறு கிராம கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில்* BP01 *திருவையாறு 1 முழுநேர நியாய விலைக் கடை 824 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பருத்திக்குடி கிராமத்தைச் சேர்ந்த 130 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் இடைப்பட்ட தூரம் குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டும். புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பருத்திக்குடி கிராமத்தில் 130 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளது. தாய்க் கடைக்கும் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பருத்திக்குடி கிராமத்திற்கும் இடையே 1.25 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் பருத்திக்குடி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**15—**

## கூடுதலாக நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 21510—திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பத்மநாபபுரம் தொகுதி, திக்கணங்கோடு பகுதியில் கூடுதலாக நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, திக்கணங்கோடு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் திக்கணங்கோடு முழுநேர நியாய விலைக் கடை 274 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அரசு வழிகாட்டு நெறிகளின்படி, புதிய நியாய விலைக் கடை அமைக்க கிராமப்புறங்களில் குறைந்தபட்சம் 500 குடும்ப*

அட்டைகள் இருக்க வேண்டும். மேற்படி புதிய நியாய விலைக் கடை கோரும் திக்கணங்கோடு முழுநேர நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ள கிராமத்தில் 500 குடும்ப அட்டைகளுக்கும் குறைவாக 274 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் கூடுதலாக புதிய நியாய விலைக் கடை திக்கணங்கோடு பகுதியில் அமைக்க வாய்ப்பில்லை.

**16—**

## முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றியமைத்தல்

**வினா எண் 22228—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, இந்திரா நகர் பகுதியில் உள்ள பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் பெருங்களத்தூர் 10 (02PD155SK) முழுநேர நியாய விலைக் கடை 644 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையிலிருந்து இந்திரா நகர் பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை ஏற்கெனவே பிரிக்கப்பட்டு 374 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அரசு வழிகாட்டு நெறிகளின்படி, நகர்ப்புற பகுதியில் முழுநேர நியாய விலைக் கடை துவக்க குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இந்திரா நகர் பகுதிநேர நியாய விலைக் கடையில் 374 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளது. எனவே, அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில் இந்திரா நகர் பகுதியில் உள்ள பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றியமைக்க வாய்ப்பு இல்லை.





**17—**

## முதலீட்டாளர்கள் குறித்த விவரம்

**வினா எண் 585—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கணினி சார்ந்த தொழிற்சாலைகள் துவங்குவதற்கு எத்தனை முதலீட்டாளர்கள் முன் வந்துள்ளனர்?

(ஆ) எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்கள் தமிழகத்தில் தழைத்து வளர தமிழக அரசின் கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்), சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை (இரண்டு இடங்கள்) திருச்சி, சேலம், திருநெல்வேலி, ஓசூர் ஆகிய 8 இடங்களில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களை (எல்கோசெஸ்கள்) நிறுவியுள்ளது. சுமார் 129 நிறுவனங்களுக்கு நிலம் மற்றும் இட ஒதுக்கீட்டினை எல்காட் நிறுவனம் வழங்கியுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்தில் சிறுசேரி, நாவலூர் மற்றும் காழிபட்டூர் கிராமங்களில் சுமார் 782.45 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அப்பூங்காவில், ஒதுக்கீட்டுக்குரிய 391.70 ஏக்கர் நிலப்பரப்பில் 329.58 ஏக்கர் நிலப்பரப்பு கணினி சார்ந்த 77 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றுள் 45 தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் சந்திப்பின்போது, தகவல் தொழில்நுட்பத் துறை சார்பில் 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. இப்புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை துறையில் ரூ.10,950 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு,

[2018 மார்ச் 22

*2,05,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 7 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் ரூ.5,021 கோடி முதலீடு செய்வது உறுதி செய்யப்படுவதோடு, 6,950 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

**18—**

## கல்குவாரிகள் ஒதுக்கீடு

**வினா எண் 845—திரு. பா. ஆறுமுகம்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் கல்குவாரிகளை மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்திற்குட்பட்ட அரசு புறம்போக்கு புலங்களில் அமைந்துள்ள சாதாரண கல்குவாரிகளிலிருந்து ஜல்லி / சக்கை / குண்டுக்கல் / கட்டுக்கல் / அரளை போன்ற சிறுகனிமங்களைக் குவாரி செய்து எடுத்துச் செல்வதற்கு முன்னுரிமை அடிப்படையில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட* (SGSY) *குழுக்கள் மற்றும் கொத்தடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களால் அமைக்கப்பட்ட சங்கங்கள் ஆகியவற்றிற்கு நேரடியாக குவாரி குத்தகை உரிமம் வழங்கும் பொருட்டு, புதுக்கோட்டை மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண் 17, நாள் 22-12-2015-ன்மூலம் 81 குவாரிகளின் பட்டியல் பிரசுரம் செய்யப்பட்டு, 19 குவாரிகளுக்கு மட்டும் சுய உதவிக் குழுக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்று விதிகளின்படி மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் அமையப்பெற்ற மாவட்ட சிறப்புக் குழுவினர்மூலம் 18-8-2016 அன்று பரிசீலிக்கப்பட்டும், குழு உறுப்பினர்களை நேர்காணல் செய்தும், தகுதி வாய்ந்த குழுக்கள் கண்டறியப்பட்டு, ஆணையர், புவியியல் மற்றும் சுரங்கத் துறை*



2018 மார்ச் 22]

*அவர்களின் கடித ந.க.எண் 3868/2012, நாள் 7-11-2014-ன்மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதலின்படி, குத்தகை உரிமம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குத்தகை உரிமம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.*

**19—**

## சிறப்பு நடைமுறைகள் ஏற்படுத்துதல்

**வினா எண் 12711—திரு. ப. பலராமன்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதிய தொழில் தொடங்க வரும் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், அனைத்து ஆவணங்களும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே வழங்கிட சிறப்பு நடைமுறைகள் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:**

*மாநில அளவில் முதலீட்டு திட்டங்களை ஈர்த்திடவும், அனைத்து தகவல்களும் தொழில் தொடங்கத் தேவையான ஒப்புதல்களும் ஒரே இடத்தில் ஒற்றைச் சாளர நடைமுறையில் கிடைத்திடவும் தமிழ்நாடு வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் 1992 முதல் செயல்பட்டு வருகிறது. எனவே, புதிய தொழில் தொடங்க வரும் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், அனைத்து ஆவணங்களும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே வழங்கிட சிறப்பு நடைமுறைகளை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**22—**

## மின் உற்பத்தியை விரைவுபடுத்துதல்

**வினா எண் 21508—திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் மின் உற்பத்தி செய்வதற்கான பணிகளை விரைவுபடுத்த அரசு முன்வருமா?*

*[2018 மார்ச் 22*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:**

*கள்ளக்குறிச்சி, கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இணை மின் உற்பத்தி செய்வதற்கான இயந்திரத் தளவாடங்கள் நிர்மாணிக்கும் பணி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்மூலம் நடைபெற்று வருகின்றது. 2018-2019 ஆம் அரவைப் பருவம் துவங்குவதற்கு முன்னர் ஒப்பந்ததாரர் பணியினை விரைந்து முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.*

**23—**

## சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்

**வினா எண் 22823—திருமதி பி. கீதா ஜீவன்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தூத்துக்குடி மாநகரப் பகுதியில் உள்ள சிப்காட் வளாகத்தில் கழிவு நீரை குளத்திற்குள் விடுவதைத் தடுத்து, கழிவுநீரை சுத்திகரித்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் வளாகத்தில் அமைந்துள்ள கடல் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், சிப்காட் வளாகத்தில் இதற்கென ஒதுக்கப்பட்ட 10 ஏக்கர் நிலப்பரப்பில் பல வகைப்பட்ட மரக்கன்றுகளை வளர்ப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. மேலும், தூத்துக்குடி சிப்காட் வளாகத்தின் சுத்திகரிக்கப்பட்ட / சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் குளத்தில் விடப்படுவதில்லை.*

**24—**

## கூடுதலாக அரிசி, பருப்பு வகைகள் மற்றும் மண்ணெண்ணெய் வழங்குதல்

**வினா எண் 9212—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



*2018 மார்ச் 22]*

*மேலூர் தொகுதியிலுள்ள நியாய விலைக் கடைகளுக்கு கூடுதலாக அரிசி, பருப்பு வகைகள் மற்றும் மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:**

*மதுரை மாவட்டம், மேலூர் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் 172 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த நியாய விலைக் கடைகளுடன் 81,641 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. மேலூர் தொகுதிக்குட்பட்ட நியாய விலைக் கடைகளுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளுக்கு உரிய அரிசி, துவரம் பருப்பு மற்றும் மண்ணெண்ணெய் உள்ளிட்ட பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் தேவையான அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. எனவே, மேலூர் தொகுதிக்குட்பட்ட நியாய விலைக் கடைகளுக்கு கூடுதலாக அத்தியாவசியப் பொருட்கள் வழங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.*

**25—**

## அமுதம் கடை எண் 2-ஐப் பிரித்தல்

**வினா எண் 12437—திரு. மு.பெ. கிரி:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கம் தொகுதி, செங்கம் பேரூராட்சி, தளவநாய்க்கன் பேட்டை பகுதியில் உள்ள அமுதம் கடை எண் 2-ஐ பிரிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செங்கம் வட்டம் மற்றும் நகரம், தளவநாய்க்கன்பேட்டை பகுதியில் உள்ள அமுதம் கடை*

*எண் 2-ல் 973 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்கடையில் உள்ள அனைத்து குடும்ப அட்டைகளும் 1 கி.மீ. தூரம் சுற்றளவுக்கு உள்ளேயே அமைந்துள்ளன. மேலும், மேற்கூறிய பகுதியில் அரசுக்கு சொந்தமான கட்டடம் ஏதும் இல்லை என்பதால் செங்கம் வட்டம் மற்றும் நகரம், தளவநாய்க்கன்பேட்டை பகுதியில் உள்ள அமுதம் கடை எண் 2-ஐ பிரிக்க தற்போது வழிவகை இல்லை.*

**26—**

## மாவட்ட நுகர்வோர் நீதிமன்றக் கட்டடம்

**வினா எண் 13943—திரு. டி.பி.எம். மைதீன்கான்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்ட நுகர்வோர் நீதிமன்றக் கட்டடப் பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கான சொந்த கட்டடமானது ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தினுள் கட்டி முடிக்கப்பட்டு, 8-7-2017 அன்று திறக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.*

**27—**

## நேரடி நெல் கொள்முதல் நிலையம்

**வினா எண் 17930—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கும்பகோணம் தொகுதி, கிருஷ்ணாபுரத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மண்டலம், கும்பகோணம் தொகுதி, கிருஷ்ணாபுரம் கிராமத்தில் தற்போது நெல்வரத்து இல்லாத காரணத்தால் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**28—**

## அடுக்குமாடி குடியிருப்புகளைச் சீரமைத்தல்

**வினா எண் 5014—திரு. இரா. இராஜேந்திரன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாநகரம், செவ்வாய்பேட்டை பெரியார் நகரிலுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*சேலம் மாநகரம், செவ்வாய்பேட்டை பெரியார் நகர் குடிசை மாற்று வாரியத் திட்டத்தில் உள்ள அனைத்து அடுக்குமாடி வீடுகளின் ஸ்திரத்தன்மையை அரசு அறிவுரைப்படி அமைக்கப்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் குழு ஆராய்ந்து அவற்றை முழுவதுமாக இடிக்க பரிந்துரை செய்ததைத் தொடர்ந்து அரசாணை எண் 163, நாள் 21-7-2010 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. இப்பொருள் தொடர்பாக அரசிடம் நிதிபெற ஒப்புதல் வேண்டி வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் இத்திட்டப் பகுதியில் பராமரிப்புப் பணிகள் செய்ய இயலாத நிலையில் வாரியம் உள்ளது. மேலும், இத்திட்டத்தில் அமைந்துள்ள சாலைகள், சாக்கடை வசதி மற்றும் தெரு விளக்குகள் ஆகியவை தொடர் பராமரிப்பிற்காக ஏற்கெனவே சேலம் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.*

[2018 மார்ச் 22

29—

## புதிய குடியிருப்புகள் கட்டுதல்

**வினா எண் 6239—திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மடத்துக்குளம் தொகுதி, மருள்பட்டியில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்கு மாற்றாக புதிய குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை மருள்பட்டியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 22 உயர் வருவாய்ப் பிரிவு மற்றும் 294 மத்திய வருவாய்ப் பிரிவு வீடுகள் ஆக மொத்தம் 316 வீடுகள் தவணை முறை திட்டத்தின்கீழ் 1997 இல் கட்டி முடிக்கப்பட்டன. இவற்றில் 277 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 39 வீடுகளுக்கு போதிய கேட்பு பெறப்படவில்லை. 63 வீடுகளுக்கு ஒதுக்கீடு ஆணை இரத்து செய்யப்பட்டது. ஆக மொத்தம் 102 வீடுகளுக்கு போதிய கேட்பு பெறப்படும்போது சிதிலமடைந்துள்ள வீடுகளை இடித்துவிட்டு புதிய வீடுகள் கட்டித்தரப்படும்.

30—

## வீடுகள் கட்டுதல்

**வினா எண் 12577—திரு. ஆர். முருகையா பாண்டியன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, தென்காசி சாலையில் வாகைகுளம் ஊராட்சியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு அடுக்குமாடி வீடு கட்ட ஒப்படைக்கப்பட்ட இடத்தில் வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2018 மார்ச் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அம்பாசமுத்திரம் நகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வசிப்பவர்களை மறுகுடியமர்வு செய்ய ஏதுவாக, அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட, தென்காசி சாலையில் வாகைகுளம் ஊராட்சியில் உள்ள தேவையான நிலத்தினை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு மாற்றம் செய்ய அல்லது திட்டப் பணிகள் நிறைவேற்ற முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டபின், அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

31—

## விற்பனைப் பத்திரம் வழங்குதல்

**வினா எண் 22131—திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, சாமநத்தம் ஊராட்சி, பெரியார் நகரில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்குட்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பரங்குன்றம் தொகுதி, சாமநத்தம் ஊராட்சி, மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், பெருமானேந்தல் கிராமம், புல எண் 120/1-ல் 63.43 ஏக்கர் பரப்பளவில் பெரியார் நகர் என்னும் திட்டப் பகுதி நிலம் வாரியத்தின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 1988-ல் வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டப்பட்டு ஒதுக்கீடும் செய்யப்பட்டது.

[2018 மார்ச் 22

இக்குடியிருப்புகளை "உள்ளது உள்ளபடி" (As is where is) நிலையில் மனைக்கான தற்போதைய விலை நிர்ணயம் செய்து விற்பனைப் பத்திரம் வழங்கப்படும்.

**32—**

## உடை மாற்றும் அறை கட்டுதல்

**வினா எண் 1978—திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கரிகால சோழனால் கட்டப்பட்ட கல்லணைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உடை மாற்றும் அறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கரிகால சோழனால் கட்டப்பட்ட கல்லணைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் (2011-2012) ரூ.408.00 இலட்சம் மதிப்பில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகளில் ரூ.14.00 இலட்சத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனியே உடை மாற்றும் அறைகள் சுற்றுலாத் துறையின் மூலம் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் காவேரி வடிநிலக் கோட்டம், நீர்வள ஆதாரப் பிரிவால் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, மேலும், உடை மாற்றும் அறை கட்டவேண்டிய தேவை எழவில்லை.

**33—**

## கடற்கரையைப் பாதுகாத்தல்

**வினா எண் 2914—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், லீபுரம் ஊராட்சி, வட்டக்கோட்டை சுற்றுலாத் தலத்தின் இருபுறமும் உள்ள கடற்கரையைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2018 மார்ச் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரியிலிருந்து 6 கி.மீ. தொலைவிலுள்ள கல்லால் ஆன வட்டக்கோட்டை, லீபுரம் ஊராட்சி பகுதியில் அமைந்துள்ளது. இக்கோட்டை 3.5 ஏக்கர் பரப்பளவில், 26 அடி உயரம் மற்றும் 28 அடி கனமுள்ள சுவருடன் அமைந்துள்ளது. இக்கோட்டை அனுஷம் திருநாளில் மார்த்தாண்ட வர்மா மகாராஜாவால் 18 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இங்கு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்து செல்கின்றனர். வட்டக்கோட்டையில் சுற்றுலாத் துறையின்மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் பல செய்யப்பட்டுள்ளன. தற்போது வட்டக்கோட்டை இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை (ASI) கட்டுப்பாட்டின்கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதியானது இந்திய கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின் (CRZI) கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. எனவே, கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், லீபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள வட்டக்கோட்டை சுற்றுலாத் தலத்தில் கடற்கரையைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் தற்பொழுது எழவில்லை.

**34—**

## தென்னை மரங்களைப் பராமரித்தல்

**வினா எண் 2915—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், லீபுரம் ஊராட்சி, வட்டக்கோட்டை சுற்றுலாத் தலத்தின் பூங்கா மற்றும் சுற்றுலாத் தலத்திலுள்ள உயரமான தென்னை மரங்களை முறையாக பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 மார்ச் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரியிலிருந்து 6 கி.மீ. தொலைவிலுள்ள கல்லால் ஆன வட்டக்கோட்டை, லீபுரம் ஊராட்சிப் பகுதியில் 3.5 ஏக்கர் பரப்பளவில், 26 அடி உயரம் மற்றும் 28 அடி கனமுள்ள சுவருடன் அமைந்துள்ளது. இக்கோட்டை அனுஷம் திருநாளில் மார்த்தாண்ட வர்மா மகாராஜாவால் 18 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இங்கு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்து செல்கின்றனர். வட்டக்கோட்டையில் சுற்றுலாத் துறையின்மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் பல செய்யப்பட்டுள்ளன. வட்டக்கோட்டை சுற்றுலாத் தலத்தில் உள்ள புல்வெளிகள், மரங்கள் மற்றும் பூங்காக்கள் இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின்மூலம் (திருச்சூர் வட்டம், கேரளா) பராமரிக்கப்பட்டு வருகிறது. கோட்டையின் பராமரிப்பு இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டம், லீபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள வட்டக்கோட்டை சுற்றுலாத் தலத்தின் பூங்கா மற்றும் தென்னை மரங்களை சுற்றுலாத் துறைமூலம் பராமரிக்க வேண்டிய அவசியம் தற்பொழுது எழவில்லை.*

**35—**

**புல்கரன் அமைத்தல்**

**வினா எண் 2933—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரியில் காந்தி மண்டபம், காமராஜ் மண்டபம் சாலையோரம் புல்கரன் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2006-2007 ஆம் ஆண்டு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.258.52 இலட்சம் மதிப்பீட்டில்,*



2018 மார்ச் 22]

*கன்னியாகுமரி கடற்கரை பகுதியில் சுற்றுலா மேம்பாட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் பயன்பாட்டில் உள்ளது. கன்னியாகுமரி கடற்கரை பகுதியில் 2010-2011 ஆம் ஆண்டு மத்திய மாநில அரசு நிதி உதவி திட்டத்தின்கீழ், ரூ.1,375.50 இலட்சம் மதிப்பீட்டில் காட்சி கோபுரத்திலிருந்து சூரியன் மறையும் காட்சி இடம் வரை சுமார் ஒரு கி.மீ. தூரத்திற்கு பூங்காவுடன் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி திட்டத்தின்மூலம் 2015-2016 ஆம் ஆண்டு ரூ.260.00 இலட்சம் மதிப்பீட்டில் கடற்கரை பகுதியில் உயர்ரக மின் விளக்குகள் மற்றும் அறிவிப்புப் பலகைகள் நிறுவப்பட்டு சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டில் உள்ளன. தற்போது மத்திய அரசு "சுதேஸ் தர்சன்" கடற்கரை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி கடற்கரைப் பகுதி தேர்வு செய்யப்பட்டுள்ளதோடு, அத்திட்டத்தின்கீழ் நடைபாதை அமைத்தல், பூங்கா அமைத்தல் போன்ற பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன. எனவே, கன்னியாகுமரியில் காந்தி மண்டபம், காமராஜர் மண்டபம் சாலையோரம் புல்கரன் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.*

**36—**

**சுற்றுலா மாளிகையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 4951—திரு. எஸ். பவுன்ராஜ்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பூம்புகார் தொகுதி, காவேரிபூம்பட்டினம் ஊராட்சியில் உள்ள சுற்றுலா மாளிகையைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*முற்கால சோழர்களின் தலைநகராக விளங்கிய பூம்புகார் (காவேரிபூம்பட்டினம்), சென்னையிலிருந்து 276 கி.மீ. தொலைவில் உள்ளது. இது முற்கால சோழர்களின் புகழ்பெற்ற துறைமுக நகரங்களுள் ஒன்றாக விளங்கியது. காவேரிபூம்பட்டினத்தில் காவேரி ஆறு வங்காள விரிகுடா கடலில் சங்கமமாகிறது. காவேரிபூம்பட்டினத்திற்கு அருகில் பாடல் பெற்ற சிவஸ்தலங்களும், மங்களாசாசனம் பெற்ற விஷ்ணு*

[2018 மார்ச் 22

ஸ்தலங்களும், நவக்கிரக ஸ்தலங்களும் அமைந்துள்ளன. காவேரிபூம்பட்டினத்தில் சிலப்பதிகாரக் கலைக்கூடம் மற்றும் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. காவேரி சங்கமத்தில் புனித நீராடவும், சிலப்பதிகார கலைக்கூடத்தைப் பார்வையிடவும் நாள்தோறும் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். காவேரிபூம்பட்டினம் கடற்கரைக்கு அருகில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா மாளிகை பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ளது. எனவே, சுற்றுலா மாளிகையை சுற்றுலாத் துறையின்மூலம் புதுப்பிக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், சுற்றுலா மாளிகையை சுற்றுலாத் துறையின்மூலம் புதுப்பிக்க பொதுப் பணித் துறையினருடன் கலந்தாலோசித்து, மாவட்ட ஆட்சியர் / சுற்றுலா ஆணையரின் கருத்துரு பெற்று சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**37**—

## அடிப்படை வசதிகள் செய்தல்

**வினா எண் 8385—திரு. எஸ். ஈஸ்வரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டத்தில், பவானிசாகர் அணையிலிருந்து 10 கி.மீ. தொலைவில் பண்ணாரி மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. இத்திருக்கோவிலில் குடிநீர் வசதி, குளியலறை மற்றும் கழிப்பறை வசதிகள், தங்கும் விடுதிகள், திருமண சத்திரங்கள், சமுதாயக் கூடம் ஆகிய அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்பட்டு, இந்து சமய அறநிலையத்துறையின்கீழ் பராமரிக்கப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டில் உள்ளது. இக்கோவிலுக்கு வார நாட்களில் 500 முதல் 700 வரை உள்ளூர் / வெளியூர் பொது மக்களும், விடுமுறை நாட்களில் சுமார் 5,000 வரையிலான உள்ளூர், வெளியூர் பொது மக்களும், சுற்றுலாப் பயணிகளும் வருகை தருகின்றனர். எனினும், இனிவரும் காலங்களில் ஈரோடு மாவட்டம், பண்ணாரி அம்மன்



2018 மார்ச் 22]

கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள்/சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், கூடுதல் வசதிகள் தேவைப்படின் இந்து சமய அறநிலையத் துறையினருடன் கலந்து ஆலோசித்து, மாவட்ட ஆட்சியர் / சுற்றுலா ஆணையரின் பரிந்துரையுடன் கருத்துரு பெற்று, சுற்றுலாத் துறையின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**38**—

## அடிப்படை வசதிகள் செய்தல்

**வினா எண் 8386—திரு. எஸ். ஈஸ்வரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் அணைப் பூங்கா பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டத்தில் அமைந்துள்ள பவானிசாகர் அணைப் பூங்காவிற்கு வார நாட்களில் 200 முதல் 300 வரை உள்ளூர் / வெளியூர் சுற்றுலாப் பயணிகளும் விடுமுறை நாட்களில் சுமார் 700 வரையிலான உள்ளூர், வெளியூர் சுற்றுலாப் பயணிகளும் வருகை தருகின்றனர். இனிவரும் காலங்களில் ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணைப் பூங்காவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், கூடுதல் வசதிகள் தேவைப்படின் பொதுப் பணித் துறையினருடன் (நீர்வள ஆதாரம்) கலந்தாலோசித்து, மாவட்ட ஆட்சியர் / சுற்றுலா ஆணையரின் பரிந்துரையுடன் கருத்துரு பெற்று, சுற்றுலாத் துறையின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**39**—

## பயணிகள் நிழற்குடை அமைத்தல்

**வினா எண் 11570—திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2018 மார்ச் 22

*(அ) செங்கம் தொகுதி, சாத்தனூர் அணைப் பகுதியில் பயணியர் நிழற்குடை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலையிலிருந்து 32 கி.மீ. தொலைவில் தண்டராம்பட்டு வட்டத்தில் தென்பெண்ணையாற்றின் குறுக்கே 1957 ஆம் ஆண்டு சாத்தனூர் அணை கட்டப்பட்டுள்ளது. இவ்வணையின் முழு நீர்மட்டக் கொள்ளளவு 7,321 கன சதுர அடியாகும். 2006-2007 ஆம் நிதி ஆண்டில் மாநில அரசு நிதியுதவி திட்டத்தின்கீழ் ஜவ்வாது மலை மற்றும் சாத்தனூர் பகுதிகளில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் ரூ.108.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டில் உள்ளன. மேலும், சாத்தனூர் அணைக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், பயணியர் நிழற்குடை அமைப்பது குறித்து சுற்றுலாத் துறையின் நிதி ஆதாரத்தை கருத்திற்கொண்டு பரிசீலிக்கப்படும்.*

**40—**

## அடிப்படை வசதிகள் செய்தல்

**வினா எண் 12280—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தர்மபுரம் ஊராட்சிக்குட்பட்ட மணிக்கெட்டி பொட்டல் அருகே உள்ள மூப்பன்காடு பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2018 மார்ச் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரியிலிருந்து ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தர்மபுரம் ஊராட்சிக்குட்பட்ட மணிக்கட்டிப் பொட்டல் அருகே உள்ள மூப்பன்காடு பகுதியில் ஒரு கோவிலும் அதன் குளமும் உள்ளது. இக்கோவிலுக்கு உள்ளூர் மக்கள் மட்டுமே வந்து வழிபட்டு செல்கின்றனர். இப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் வருகைபுரிவதில்லை. எனவே, கன்னியாகுமரி மாவட்டம், ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தர்மபுரம் ஊராட்சிக்குட்பட்ட மணிக்கெட்டி பொட்டல் அருகே உள்ள மூப்பன்காடு பகுதியில் அடிப்படை வசதிகள் செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.*

**41—**

## சுற்றுலாத் தலத்தை மேம்படுத்துதல்

**வினா எண் 13321—திரு. இ. கருணாநிதி:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லாவரம் தொகுதி, மீனம்பாக்கம் விமான நிலையம் எதிரில் உள்ள திரிசூலம் ஊராட்சி மலைப் பகுதியில் தரமான வழிப்பாதை அமைத்து சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம் ஆலந்தூர் தொகுதி, திரிசூலம் ஊராட்சியில் இம்மலைப் பகுதி அமையப்பெற்றுள்ளது. இது சென்னையிலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இம்மலைப் பகுதி மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு எதிரில் அமைந்துள்ளது. இம்மலை உச்சியில் பழங்கால மசூதியும், சிறிய முருகன் கோயிலும் உள்ளன. திரிசூலம் மலைப் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இம்மலைப்பகுதியின் பாதை*

மிகக் குறுகலாக உள்ளதால், சுற்றுலாப் பயணிகளின் வாகனங்கள் வந்து செல்வதற்கு உகந்ததாக இல்லை. எனவே, சுற்றுலாப் பயணிகள் யாரும் இங்கு வருவதில்லை. திரிசூலம் மலைப் பகுதியைச் சுற்றி உள்ள உள்ளூர் மக்கள் மட்டுமே இம்மலைப் பகுதிக்கு வந்து செல்கின்றனர். எனவே, பல்லாவரம் தொகுதி, மீனம்பாக்கம் விமான நிலையம் எதிரில் உள்ள திரிசூலம் ஊராட்சி மலைப் பகுதியில் தரமான வழிப்பாதை அமைத்து சுற்றுலாத் தலமாக மேம்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**42**—

## அடிப்படை வசதிகள் செய்தல்

**வினா எண் 14268—திரு. கோ. லோகநாதன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வைத்தினான் குப்பம் தொகுதி, காங்குப்பம் ஊராட்சியில் உள்ள மகாதேவ மலைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூரிலிருந்து 30 கி.மீ. தொலைவிலும், குடியாத்தத்திலிருந்து 16 கி.மீ. தொலைவிலும், கீழ்வைத்தினான் குப்பம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 5 கி.மீ. தொலைவிலும் மகாதேவ மலை அமைந்துள்ளது. இம்மலையில் சுமார் 200 ஆண்டுகள் பழமையான பிரசித்திபெற்ற சிவன் ஆலயம் அமைந்துள்ளது. இக்கோவிலுக்கு தற்போது அனைத்து வசதிகளும் ஸ்ரீலஸ்ரீ மகானந்த சித்தர் சுவாமிகள் அவர்கள்மூலம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. எனினும், வேலூர் மாவட்டம், மகாதேவ மலைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் / ஆன்மீக பக்தர்கள் வருகை அதிகரிக்கும்பட்சத்தில், கூடுதல் அடிப்படை வசதிகள் தேவைப்படின் மாவட்ட ஆட்சியரிடமிருந்து கருத்துரு மற்றும் அதன்மீது சுற்றுலா ஆணையரின் பரிந்துரையை பெற்று சுற்றுலாத் துறையின் நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு பரிசீலிக்கப்படும்.





**43**—

## பூங்காவைச் சீரமைத்தல்

**வினா எண் 14797—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் ஊராட்சி ஒன்றியம், அருவிக்கரை ஊராட்சி, அருவிக்கரை சுற்றுலா மையப் பூங்காவைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாரிலிருந்து 65 கி.மீ. தொலைவில் அருவிக்கரை அமைந்துள்ளது. தாமிரபரணி நதிக்கரையில் அமைந்துள்ள அப்பகுதிக்கு மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ், 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் அணுகுசாலை, படகு குழாம், பயணிகளுக்கான குடில்கள், அருவிப் பகுதிகளில் உள்ள பாறைகளை அகற்றுதல், 3 fibre படகுகள் மற்றும் உயர்கோபுர மின் விளக்குகள் அமைத்தல் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டில் உள்ளன. மேலும், அப்பகுதியில் பூங்கா ஏதும் அமைக்கப்படவில்லை. ஆகையால், அருவிக்கரை பகுதியில் பூங்கா எதுவும் அமைக்கப்படாததால், அதனை சீரமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**44**—

## ஒலி, ஒளிக் காட்சி அமைத்தல்

**வினா எண் 16670—திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி கோட்டையில் இராஜா தேசிங்கின் வரலாற்றை சுற்றுலாப் பயணிகள் அறிந்துகொள்ளும் வகையில் ஒலி, ஒளிக் காட்சி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 மார்ச் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் உள்ள செஞ்சிக்கோட்டை இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாகப் பராமரிக்கப்படுவதால், இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையினருடன் கலந்தாலோசித்து, செஞ்சிக் கோட்டையில் இராஜா தேசிங்கின் வரலாற்றை சுற்றுலாப் பயணிகள் அறிந்துகொள்ளும் வகையில் ஒலி, ஒளிக் காட்சி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**45—**

## அடிப்படை வசதிகள் செய்தல்

**வினா எண் 22185—திரு. ஏ.கே. போஸ்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, சேர்மத்தான் கண்மாய் மற்றும் புளியங்குளம் கண்மாயைச் சுற்றிலும் நடைபாதை மற்றும் பூங்கா அமைக்கவும், சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்திலிருந்து 3.5 கி.மீ. தொலைவில் சேர்மத்தான் கண்மாய் அமைந்துள்ளது. இக்கண்மாய் சுமார் 15 ஏக்கர் பரப்பளவு கொண்டது. திருப்பரங்குன்றத்திலிருந்து 4.5 கி.மீ. தொலைவில் விளாச்சேரி செல்லும் வழியில் புளியங்குளம் கண்மாய் அமைந்துள்ளது. இக்கண்மாய் சுமார் 10 ஏக்கர் பரப்பளவு கொண்டது. 2001-2002 ஆம் ஆண்டு மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ், திருப்பரங்குன்றத்தில் ரூ.36.00 இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படை*



2018 மார்ச் 22]

*வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 2009-2010 ஆம் ஆண்டு மத்திய அரசு நிதி உதவி திட்டத்தின்கீழ் ரூ.387.67 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு கிரிவலப் பாதையில் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகள் பயன்பாட்டில் உள்ளன. மேலும், சேர்மத்தான் கண்மாய், புளியங்குளம் கண்மாய்க்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், இக்கண்மாய்களைச் சுற்றிலும் நடைபாதை மற்றும் பூங்கா அமைக்கவும், சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யவும், சுற்றுலாத் துறையின் நிதி ஆதாரத்தைப் பொறுத்து பரிசீலிக்கப்படும்.*

**46—**

## பொற்கொல்லர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்குதல்

**வினா எண் 12738—திரு. எம். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொற்கொல்லர்களுக்கு நகை செய்யும் உபகரணங்கள் வழங்குவதோடு மானியத்துடன் கூடிய கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*பொற்கொல்லர்களுக்கு நகை செய்யும் உபகரணங்கள் வழங்குவதோடு மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**47—**

## கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் பணியிடம்

**வினா எண் 21965—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் படுக்கை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் மூன்று மருத்துவர் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் செயல்பட்டு வருகிறது. இம்மருந்தகத்தில் சுமார் 8,648 காப்பீட்டு நபர்கள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளனர். இம்மருந்தகத்தில் நாளொன்றுக்கு சுமார் 72 காப்பீட்டு நபர்கள் வெளிநோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருந்தகத்தில் படுக்கை வசதிகள்* (Inpatient treatment) *கிடையாது. தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தின் விதிமுறைப் படி, இம்மருந்தகத்திற்கு தேவையான மூன்று மருத்துவர் பணியிடங்கள் மற்றும் இதர பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. காப்பீட்டு நபர்களின் எண்ணிக்கைக்கேற்பவே மருத்துவர்கள் மற்றும் இதர பணியாளர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுவதால், கும்பகோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்கு கூடுதல் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.*

**48—**

## தொழிலாளர் உதவி சேவை மையம் அமைத்தல்

**வினா எண் 22484—திரு. செ. ராஜேஷ் குமார்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், கருங்கல் பேரூராட்சியில் தொழிலாளர் உதவி சேவை மையம் அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் தொழிலாளர் உதவி சேவை மையம் அமைக்க வழிவகை இல்லை. எனவே, கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், கருங்கல் பேரூராட்சியில் தொழிலாளர் உதவி சேவை மையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.*





**49—**

## கோயில்களில் சூரிய ஒளி மின் உற்பத்தி சாதனம் பொருத்துதல்

**வினா எண் 1595—திரு. எம். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து கோயில்களுக்கும் சூரிய ஒளி மின் உற்பத்தி சாதனங்கள் பொருத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் 20* KWP *திறன் கொண்ட சூரிய ஒளி மாற்று மின் உற்பத்தி திட்டம் ரூ.27.00 இலட்சத்திலும், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 20* KWP *திறன் கொண்ட சூரிய ஒளி மாற்று மின் உற்பத்தி திட்டம் ரூ.27.00 இலட்சத்திலும், திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு திரு ஆவினன்குடி திருக்கோயிலில் 10* KWP *திறன் கொண்ட சூரிய ஒளி மாற்று மின் உற்பத்தி திட்டம் ரூ.13.25 இலட்சத்திலும் கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலய சுவாமி திருக்கோயிலில் 10* KWP *திறன் கொண்ட சூரிய ஒளி மாற்று மின் உற்பத்தி திட்டம் ரூ.13.50 இலட்சத்திலும் பொருத்தப்பட்டு இயங்கி வருகிறது.*

**50—**

## வழிபாட்டுத் தலங்கள் கட்ட அனுமதி

**வினா எண் 2887—திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டத்தில் சொந்த பட்டா நிலங்களில் வழிபாட்டு தலங்கள் கட்டுபவர்களுக்கு அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

[2018 மார்ச் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டத்தில் சொந்த பட்டா நிலங்களில் வழிபாட்டு தலங்கள் கட்டுபவர்களுக்கு அனுமதி வழங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

**51—**

## பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்தல்

**வினா எண் 3317—திரு. பி.வி. பாரதி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதியிலுள்ள திருநாங்கூரையில் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகபப்பட்டினம் மாவட்டம், சீர்காழி, திருநாங்கூரில் அருள்மிகு நாராயண பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் வளாகத்தில் பக்தர்களுக்கு அடிப்படை வசதியான குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் ஏற்கெனவே செய்யப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டில் உள்ளன.*

**52—**

## பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்தல்

**வினா எண் 3318—திரு. பி.வி. பாரதி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2018 மார்ச் 22]

*(அ) சீர்காழி தொகுதி, அருள்மிகு வைத்தீஸ்வரன்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகபப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், வைத்தீஸ்வரன்கோயில், அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயிலில் கீழ இராஜகோபுரம் அருகில் பக்தர்களுக்கு சுற்றுலாத் துறைமூலம் குளியல் அறைகள் மற்றும் கழிவறைகள் ரூ.8.69 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இத்திருக்கோயிலின் வடக்கு பிரகாரத்தில் ஸ்ரீபத்ரகாளியம்மன் சன்னதி மற்றும் கீழகோபுரவாசல் அருகில் குடிநீர்க் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. திருக்கோயிலின் பிரகாரத்தில் R.O.Water plant அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கீழகோபுரம் அருகில் ஆண்கள் குளியல் அறை 1, பெண்கள் குளியல் அறை 1, ஆண்கள் கழிவறைகள் 3, பெண்கள் கழிவறைகள் 3 அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

**53—**

## கோயில் குளத்தைத் தூர் வாருதல்

**வினா எண் 4804—திரு. C.V. சேகர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டிணம் பேரூராட்சியில் உள்ள சிவன் கோயிலைப் புனரமைத்து, கோயில் குளத்தைத் தூர் வாரி, பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அதிராம்பட்டிணம், அருள்மிகு அபயவரதேஸ்வர சுவாமி*

[2018 மார்ச் 22

திருக்கோயில் சட்டப் பிரிவு 46 (ii)-ன்கீழ் பிரசுரம் செய்யப்பட்ட பட்டியலைச் சார்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு சொந்தமான ஈஸ்வரன் கோயில் குளம் அதிராம்பட்டினம் நகர் புல எண் 338/3**A**-ல் 74,800 சதுர அடி பரப்பில் அமைந்துள்ளது. மேற்படி குளம் 1991 ஆம் ஆண்டு தூர் வாரப்பட்டு, தற்போது மேற்படி குளம் கோரை மண்டியும், முட்புதர் மண்டியும் சுமார் 25 வருடங்களாக எந்தவிதமான பயன்பாட்டிலும் இல்லாமல் உள்ளது. தற்போது இத்திருக்குளத்தினை சீரமைக்க மதிப்பீடு தயார் செய்து நிதியாதாரங்களைக் கண்டறிந்து திருக்குளம் தூர் வார திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

**54**—

## கோயில் குளத்தை சீரமைத்தல்

**வினா எண் 6029—திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி, மண்டலம் 4, 46-வது வார்டு, மூர்த்திங்கர் தெருவில் உள்ள அருள்மிகு ஈஸ்வரன் கோயில் குளத்தைத் தூர் வாரி, சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை வியாசர்பாடி, அருள்மிகு இரவீஸ்வரர் திருக்கோயிலின் எதிரே மூர்த்திங்கர் தெருவில் உள்ள திருக்குளம் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. திருக்குளத்தின் கிழக்கு மதில்சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.4,95,000/- மதிப்பீட்டிலும் மற்றும் திருக்குளம் சாய்மானத் தளம் சீரமைக்கும் பணிக்கு ரூ.25,00,000/- மதிப்பீட்டிலும் 22-6-2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு விரைவில் பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.



2018 மார்ச் 22]

**55**—

## ஊரணிக்கு முள்வேலி அமைத்தல்

**வினா எண் 6357—திரு. ஏ. இரத்தினசபாபதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஒன்றியம், ஈச்சாம்பொட்டல் கிராமத்திலுள்ள அருள்மிகு விநாயகர் திருக்கோயில் ஊரணிக்கு முள்வேலி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஊராட்சி ஒன்றியம், ஈச்சாம்பொட்டல் கிராமத்தில் உள்ள அருள்மிகு விநாயகர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுபாட்டின்கீழ் இல்லாத சிறிய திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயில் அமைந்துள்ள ஊரணிக்கு இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் முள்வேலி அமைத்திட வழிவகை இல்லை.

**56**—

## கோயில் குளத்தை சுத்தப்படுத்துதல்

**வினா எண் 8131—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 169-வது வட்டம், அருள்மிகு கங்கையம்மன் கோயில் குளத்தை சுத்தப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட காரப்பாக்கம், பழைய மகாபலிபுரம் சாலையில் அமைந்துள்ள

அருள்மிகு கங்கையம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் ஆகும். எனவே, இத்திருக்கோயில் திருக்குளத்தினை இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் சுத்தப்படுத்த வழிவகை இல்லை.

**57**—

### நாடக மேடை அமைத்தல்

**வினா எண் 9288—திரு. ஏ. இரத்தினசபாபதி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், காடாங்குடியில் உள்ள அருள்மிகு பிள்ளையார் கோயிலுக்கு நாடக மேடை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், காடாங்குடியில் உள்ள அருள்மிகு பிள்ளையார் கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத சிறிய திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயிலுக்கு இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் நாடக மேடை அமைக்க வழிவகை இல்லை.*

**58**—

### நாடக மேடை அமைத்தல்

**வினா எண் 9289—திரு. ஏ. இரத்தினசபாபதி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், குருங்களூர் ஊராட்சி, சிறுக்கத்தான்குடி கிராமத்தில் உள்ள அருள்மிகு சித்தி விநாயகர் கோயில் அருகில் நாடக மேடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், குருங்களூர் ஊராட்சி, சிறுக்கத்தான்குடி கிராமத்தில் உள்ள அருள்மிகு சித்தி விநாயகர் கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத சிறிய திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் நாடக மேடை அமைக்க வழிவகை ஏதும் இல்லை.*

**59**—

### நாடக மேடை அமைத்தல்

**வினா எண் 9290—திரு. ஏ. இரத்தினசபாபதி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், மதகம் ஊராட்சி, செப்பவாயல் கிராமத்திலுள்ள அருள்மிகு உளி வீரன் திருக்கோயிலுக்கு நாடக மேடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், மதகம் ஊராட்சி, செப்பவாயல் கிராமத்திலுள்ள அருள்மிகு உளி வீரன் கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் நாடக மேடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.*

[2018 மார்ச் 22

**60**—

## ஊரணியில் படித்துறை மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 9295—திரு. ஏ. இரத்தினசபாபதி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், மதகம் ஊராட்சி, இச்சிக்கோட்டையிலுள்ள மாரியம்மன் கோயில் ஊரணியில் படித்துறை மற்றும் சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், மதகம் ஊராட்சி, இச்சிக்கோட்டை அம்பாள் நகரில் உள்ள மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி கட்டுபாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இந்து சமய அறநிலையத் துறைமூலம் இத்திருக்கோயில் ஊரணியில் படித்துறை மற்றும் சுற்றுச்சுவர் கட்ட வழிவகை இல்லை.*

**61**—

## கோயிலுக்குத் தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 9927—திரு. தா. உதயசூரியன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சங்கராபுரம் தொகுதி, சின்னசேலம், கல்லாநத்தம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு அடிபெருமாள் திருக்கோயிலுக்கு தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?*



2018 மார்ச் 22]

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் வட்டம், கல்லாநத்தம், கிராமம், அருள்மிகு அடிபெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் இந்த கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்களால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் வனத் துறைக்குச் சொந்தமான கல்வராயன் மலையோரமாக அமைந்துள்ளது. எனவே, இத்திருக்கோயிலுக்கு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைமூலம் தார்ச் சாலை வசதி செய்து கொடுக்க வழிவகை ஏதும் இல்லை.*

**62**—

## கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 11620—திரு. எம். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவாரூர் அருள்மிகு தியாகராசர் திருக்கோயில் தேரோடும் வீதிகளை கான்கிரீட் வீதிகளாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*திருவாரூர் மாவட்டம், வட்டம் மற்றும் நகர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலின் தேரோடும் நான்கு வீதிகளில் கடந்த 2010 ஆம் ஆண்டு கான்கிரீட் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டு தற்சமயம் வரை தேரோட்டத்திற்கு ஏற்ற வகையில் நல்ல நிலையில் உள்ளது. எனவே, தேரோடும் வீதிகளில் மேலும் புதிதாக கான்கிரீட் சாலைகள் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**63**—

## கோயிலுக்குச் சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 12088—திரு. வெ. கணேசன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2018 மார்ச் 22*

*(அ) திட்டக்குடி தொகுதி, திட்டக்குடி வட்டம், மங்களூர் ஒன்றியம், பொய்யனப்பாடி கிராமத்திலுள்ள செல்லியம்மன் ஆண்டவர் திருக்கோயிலுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், பொய்யனப்பாடி அருள்மிகு செல்லியம்மன் ஆண்டவர் திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லை. எனவே, இத்திருக்கோயிலுக்கு தற்போது சுற்றுச்சுவர் கட்டுவதற்கான திட்டம் ஏதும் இல்லை.*

**64—**

## நடைபாதை அமைத்தல்

**வினா எண் 12089—திரு. வாகை சந்திரசேகர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேளச்சேரி தொகுதி, பிராமின் தெருவிலுள்ள அருள்மிகு கங்கை அம்மன் கோயில் குளத்தைத் தூர் வாரி, சுற்றுச்சுவர் கட்டி, குளக்கரையைச் சுற்றி நடைபாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*வேளச்சேரி தொகுதி, பிராமின் தெருவிலுள்ள கங்கை அம்மன் திருக்கோயிலுக்கு அருகிலுள்ள குளம் திருக்கோயிலுக்கு சொந்தமான குளம் இல்லை. மாநகராட்சிக்கு சொந்தமான குளமாகும். எனவே, இக்குளத்தை இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின்மூலம் தூர் வாரி சுற்றுச்சுவர் அமைத்து குளக்கரையைச் சுற்றி நடைபாதை அமைத்திட வழிவகை இல்லை.*



*2018 மார்ச் 22*]

**65—**

## கோயிலுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 12115—திரு. துரை. கி. சரவணன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், குமுடிமலை காலனி பகுதியிலுள்ள திருக்கோயிலுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*புவனகிரி தொகுதி, புவனகிரி வட்டம், குமுடிமலை காலனி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் வருமானம் வரப்பெறாத மிகச் சிறிய திருக்கோயில் ஆகும். உள்ளூர் பக்தர்கள் மிகச் சிலரே வருகை புரிகின்றனர். போதிய நிதிவசதி இல்லாததன் காரணமாக, இத்திருக்கோயிலுக்கு தற்போது சுற்றுச்சுவர் கட்டுவதற்கான திட்டம் ஏதும் இல்லை.*

**66—**

## நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு அடையாள அட்டை மற்றும் ஓய்வூதியம் வழங்குதல்

**வினா எண் 12316—திரு. எம். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் நாட்டுப்புறக் கலையை மேம்படுத்தி நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு அடையாள அட்டை வழங்கவும், ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*தமிழகத்தின் பாரம்பரியக் கலைகளை வளர்த்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்களை*

ஊக்குவிக்கும் வண்ணம், துறையின் வாயிலாக கலை நிகழ்ச்சிகள் வழங்குதல், கிராமியக் கலைகளை அழியாமல் பாதுகாக்கும் பொருட்டு இளைய சமுதாயத்தினருக்கு கலைப் பயிற்சி அளித்தல், தமிழகத்தின் பண்பாட்டு கலைகளை வெளிமாநிலத்தவரும், வெளிநாட்டினரும் அறிந்து கொள்ளும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், திறமைமிக்க கலைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக, அகவைக்கு ஏற்றவாறு மாவட்ட அளவில் கலை விருதுகள் வழங்குதல் மற்றும் மாநில அளவில் விருதுகள் வழங்குதல், நலிவுற்ற நிலையில் வாழும் வயோதிகக் கலைஞர்களுக்கு, திங்கள்தோறும் நிதியுதவி வழங்குதல், தன்னார்வ கலை அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குதல், கலைஞர்களை ஊக்குவித்து, அவர்களது வாழ்வில் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுத்தல், கலை வடிவங்களை மீட்டுருவாக்கி அதனை தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லுதல் ஆகிய கலைப் பணிகளை கலை பண்பாட்டுத் துறை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள நாட்டுப்புறக் கலைஞர்களின் சமூகப் பாதுகாப்பிற்காகவும், நலத் திட்ட உதவிகள் வழங்கும் நோக்கத்திற்காகவும், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

ஒவ்வோர் ஆண்டும் வரவு-செலவுத் திட்டத்தில் கலை நிகழ்ச்சிகளுக்கான ஒரு மொத்த நிதியொதுக்கமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.100 கோடி தொகையிலிருந்து தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள், வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகள் ஆகியவற்றில் நாட்டுப்புறக் கலைஞர்கள் வாயிலாக தமிழக பாரம்பரியக் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.71,67,758/- தொகையும், 2016-2017 ஆம் நிதியாண்டில் ரூ.54,88,500/- தொகையும், 2017-2018 ஆம் நிதியாண்டில் இதுவரை ரூ.65,75,000/- தொகையும் தமிழக பாரம்பரிய நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கென நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள திறன்படைத்த ஐந்து கலைஞர்களுக்கு அவர்களது வயதிற்கும், கலைத் திறமைக்கும் ஏற்றவாறு அரசால் வழங்கப்பட்டு வந்த மாவட்டக் கலைமன்ற விருதுத் தொகை 2017-2018 ஆம் நிதியாண்டு முதல் இரண்டு





மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் 31-5-2017 வரை 33,030 நாட்டுப்புறக் கலைஞர்கள் உறுப்பினர்களாக பதிவு பெற்று அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தின்கீழ், 1961 ஆம் ஆண்டில் ரூ.75/- என வழங்கப்பட்டு வந்த நிதியுதவித் தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு 2006 ஆம் ஆண்டில் ரூ.1,000/- ஆகவும், பின்னர் 1-4-2013 முதல் ரூ.1,500/- ஆகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை 1,799 நாட்டுப்புறக் கலைஞர்கள் இந்நிதியுதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, நிதியுதவி பெற்று வருகின்றனர்.

கலைஞர்களிடையே எவ்விதப் பாகுபாடுமின்றி நலிந்த கலைஞர்களின் நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில், நாட்டுப்புறக் கலைஞர்களின் மாத ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**67**—

## கோயிலில் தேங்கும் மழைநீரை வெளியேற்றுதல்

**வினா எண் 12881—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, தாராசுரம் பேரூராட்சி, அருள்மிகு ஐராவதீஸ்வரர் திருக்கோயில் மற்றும் அம்மன் கோயிலில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், தாராசுரம் அருள்மிகு ஐராவதீஸ்வரர் திருக்கோயில் யுனெஸ்கோவால் உலகப் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டு இந்திய தொல்லியல் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் தரைமட்டத்திலிருந்து சுமார் ஐந்து அடி ஆழத்தில் அமைந்துள்ளது.

[2018 மார்ச் 22

இதனால் ஒவ்வோர் ஆண்டும் மழைக் காலங்களில் தேங்கும் மழைத் தண்ணீர் இந்திய தொல்லியல் துறையால் மின் மோட்டார்மூலம் இறைக்கப்பட்டு வெளியேற்றப்பட்டு வருகிறது.

**68—**

## நிதி வழங்குதல்

**வினா எண் 13005—திரு. பெரியண்ணன் அரசு:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம் வெட்டன்விடுதி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியிலுள்ள அருள்மிகு ஸ்ரீமுத்து கருப்பையா, அருள்மிகு ஸ்ரீகாப்பு முனீஸ்வரர் சுவாமி ஆகிய திருக்கோயில்களின் கட்டுமானப் பணிகளுக்கு நிதி வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், வெட்டன்விடுதி, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீமுத்து கருப்பையா மற்றும் அருள்மிகு ஸ்ரீகாப்பு முனீஸ்வரர் சுவாமி ஆகிய திருக்கோயில்களின் கட்டுமானப் பணிகளுக்கு 2017-2018 ஆம் நிதியாண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் நிதியுதவி வழங்க பரிசீலிக்கப்படும்.*

**69—**

## குளங்களைத் தூர் வாரி, படிக்கட்டுகளைச் சீரமைத்தல்

**வினா எண் 13843—திரு. கே.ஏ. பாண்டியன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிதம்பரத்திலுள்ள ஞானப்பிரகாசகுளம், இளமையாக்கினார் கோயில் குளம் ஆகிய குளங்களைத் தூர்வாரி, படிக்கட்டுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?*



2018 மார்ச் 22]

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம் மற்றும் நகரில் உள்ள ஞானபிரகாச திருக்குளம் என்பது எந்த ஒரு திருக்கோயிலுடனும் இணைந்ததாக இல்லை. அரசு புறம்போக்கில் உள்ள இக்குளம் சிதம்பரம் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே இத்திருக்குளத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் வாயிலாக திருப்பணி செய்ய வழிவகை இல்லை.*

*சிதம்பரம் நகர் அருள்மிகு இளமையாக்கினார் திருக்கோயில் திருக்குளம் யாருக்கு சொந்தம் என்பது குறித்து திருக்கோயில் நிருவாகத்திற்கும், நகராட்சிக்கும் இடையே சிதம்பரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 47/2013 நடைபெற்று வருகிறது. எனவே, தற்போது இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைமூலம் இத்திருக்குளத் திருப்பணி (தூர் வாருதல்) செய்ய இயலாத நிலை உள்ளது. மேலும், இக்குளத்தின் படிகள் சுத்தம் செய்யப்பட்டு திருக்கோயில் நிருவாகத்தால் நல்ல முறையில் பேணப்பட்டு வருகிறது.*

**70—**

## தெருக்கூத்து கலைஞர்களின் மாத ஓய்வூதியம்

**வினா எண் 15223—திரு. எஸ். சுதர்சனம்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் தெருக்கூத்து கலைஞர்களின் மாத ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம், தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம் வாயிலாக 1962 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், கலைகளில் சேவை புரிந்து 58 வயது பூர்த்தியடைந்து வயதின் காரணமாக வாய்ப்புகள் இன்றி வறிய நிலையில் உள்ள கலைஞர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்றுவரும் நலிந்த கலைஞர் மரணமுற்றால் அந்நிதியுதவி அன்னாரின் மனைவிக்கு தொடர்ந்து வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள கலைஞர்களின் ஆண்டு வருமானத்தினை 28-4-2012 முதல் ரூ.60,000/- என திருத்தியமைக்கப்பட்டுள்ளது.*

*கலைஞர்களிடையே பாகுபாடியின்றி கலைக்கு மிகச் சிறந்த சேவை செய்து நலிவுற்ற நிலையில் வாழும் கலைஞர்கள் அவர்களின் விண்ணபத்தின் அடிப்படையில் அரசால் அமைக்கப்பட்ட தெரிவுக் குழுவின் வாயிலாக தெரிவுசெய்யப்படுகிறார்கள்.*

*கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை இந்நிதியுதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட 3,000 கலைஞர்களில், 1,799 பேர் நாட்டுப்புறக் கலைஞர்கள் ஆவர். இவர்களில் 887 தெருக்கூத்து கலைஞர்கள் இந்நிதியுதவினைப் பெற்று வருகின்றனர்.*

*1961 ஆம் ஆண்டில் ரூ.75/- என வழங்கப்பட்டு வந்த நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு 2006 ஆம் ஆண்டில் ரூ.1000/- எனவும், பின்னர் 1-4-2013 முதல் ரூ.1500/- ஆகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.*

*கலைஞர்கள் இடையே எவ்விதப் பாகுபாடுமின்றி நலிந்த கலைஞர்களின் நிதியுதவித் திட்டத்தினைச் செயல்படுத்தி வரும் நிலையில் தெருக்கூத்து கலைஞர்களின் மாத ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*



**71—**

## சாலை அமைத்தல்

**வினா எண் 16166—திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) செஞ்சி வட்டம், சிங்கவரம் ஊராட்சியில் உள்ள ஸ்ரீ அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு மலை மேல் சாலை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், சிங்கவரம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் குடவரைகோயில் ஆகும். இத்திருக்கோயில் மலை மீது அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு போதிய நிதி வசதி இல்லை. எனவே, திருக்கோயிலுக்கு மலை மேல் சாலை அமைக்க தற்போது வழிவகை இல்லை.*

**72—**

## திருக்கோயிலுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 16223—திரு. ஏ. இரத்தினசபாபதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியம், மஞ்சக்குடி ஊராட்சி, விளத்தூர் அருள்மிகு சந்தன மாரியம்மன் திருக்கோயிலுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியம், மஞ்சக்குடி ஊராட்சி, விளத்தூர்*

[2018 மார்ச் 22

அருள்மிகு சந்தன மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின்மூலம் இத்திருக்கோயிலுக்கு சுற்றுச்சுவர் கட்ட வழிவகை இல்லை.

**73—**

## திருக்கோயிலுக்கு தங்கும் விடுதி கட்டுதல்

**வினா எண் 16224—திரு. ஏ. இரத்தினசபாபதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், மீமிசல் அருள்மிகு ஸ்ரீ கல்யாணராமசாமி திருக்கோயிலுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் வட்டம், மீமிசல் அருள்மிகு கல்யாணராமசாமி திருக்கோயில் கிராமப்பகுதியில் அமைந்துள்ளதால், திருவிழாக் காலங்களில் மட்டுமே பக்தர்கள் அதிகமாக வருவார்கள். ஏனைய நாட்களில் பக்தர்களின் வருகை மிகக் குறைவாக இருக்கும். எனவே இத்திருக்கோயிலுக்கு தனியே பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**74—**

## உட்பிரகார நடைபாதையைச் சீரமைத்தல்

**வினா எண் 16227—திரு. ஏ. இரத்தினசபாபதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், திருப்புணவாசல் அருள்மிகு பழம்பதிநாதர் விருத்தீஸ்வரர்



2018 மார்ச் 22]

கோயிலின் உட்பிரகார நடைபாதையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டம், திருப்புணவாசல் அருள்மிகு பழம்பதிநாதர் விருத்தீஸ்வரர் திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, உபயதாரர்களைக் கொண்டு திருக்கோயிலின் உட்பிரகாரத்தில் நடைபாதை அமைப்பதற்கு திருக்கோயில் நிருவாகத்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**75—**

## பாரம்பரியக் கலைகளைப் பாதுகாத்தல்

**வினா எண் 16255—திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தெருக்கூத்து போன்ற பாரம்பரியக் கலைகளை அழிவிலிருந்து காப்பாற்ற போதுமான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசால் அடையாளம் காணப்பட்ட 100 நாட்டுப்புறக் கலைகளில், தெருக்கூத்து என்பதும் ஒரு கலையாகும். கிராமப்புறங்களில் இன்றளவும் கோயில் திருவிழாக்களில் தெருக்கூத்து கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது என்பதே தெருக்கூத்து கலை நிகழ்ச்சியின் மீது மக்கள் கொண்டுள்ள ஈடுபாட்டினை நமக்கு எடுத்துரைக்கின்றது.

[2018 மார்ச் 22

கலைகளின் வளர்ச்சிக்காகவும், கலைஞர்களின் நல்வாழ்விற்காகவும் பல அரிய கலைப் பணிகளை தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறை ஆற்றி வருகின்றது. குறிப்பாக கிராமியக் கலையினை மேம்படுத்தும் நோக்கில், அருகிவரும் தெருக்கூத்துக் கலையை அழிவிலிருந்து மீட்டெடுக்கவும், தெருக்கூத்துக் கலைஞர்களின் வாழ்வாதாரம் சிறந்தோங்கவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

கலை பண்பாட்டுத் துறையால் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படும் கலை விழாக்கள் / கோயில் விழாக்களில் தெருக்கூத்து கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டு, தெருக்கூத்து கலை நிகழ்ச்சி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. தெருக்கூத்து கலையானது அழிந்துவிடாவண்ணமும், எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்லும் நோக்கிலும் தெருக்கூத்து கலையானது கலை பண்பாட்டுத் துறையால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் வாயிலாக மூத்த கலைஞர்களைக் கொண்டு அழிந்து வரும் கலை வடிவங்களில் இளைய தலைமுறையினருக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

2012-2013 மற்றும் 2013-2014 ஆம் நிதியாண்டுகளில் “திரௌபதை வஸ்திராபரணம்”, “கீசக வதம்” போன்ற தெருக்கூத்து நிகழ்ச்சிகள் ரூ.1,10,000/- செலவிலும், 2015-2016 ஆம் நிதியாண்டில் “குறவஞ்சி”, “திரௌபதி குறவஞ்சி”, “இந்திரஜித்”, “சுபத்திரைக் கல்யாணம்”, “கீசகன் சம்ஹாரம்” ஆகிய ஐந்து தெருக்கூத்துக் கலை நிகழ்ச்சிகள் ரூ.1,85,000/- செலவிலும் நடத்தப்பட்டன.

மேலும் 2014-2015 ஆம் ஆண்டில் கலைமாமணி குண்டையார்தண்டலம் திரு. வி. தக்ஷிணாமூர்த்தி, கலைமாமணி புரிசை சுப்பிரமணிய தம்பிரார், திரு. டி. ஏழுமலை மற்றும் கலைமாமணி கட்டைக்கூத்து திரு. ராஜகோபால் ஆகிய தெருக்கூத்துக் கலைஞர்களைப் பற்றி இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் ரூ.3.00 இலட்சம் செலவில் ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2015-2016 ஆம் நிதியாண்டில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரக அருங்காட்சியக வளாகத்தில் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின்மூலம் சனிக்கிழமை தோறும் நடத்தப்பட்ட பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சியின் ஒரு நிகழ்வாக புரிசை கலைமாமணி நடேச



2018 மார்ச் 22]

கண்ணப்ப தம்பிரான் அவர்களால் 24 கலைஞர்களைக் கொண்டு “திரௌபதி துகில்உரி” தெருக்கூத்து நிகழ்த்தப்பட்டது.

2016-2017 ஆம் நிதியாண்டில் காஞ்சிபுரம்மாவட்டம், புஞ்சரசந்தாங்கல் கிராமத்தில் இயங்கி வரும் கட்டைக்கூத்து சங்கத்தின் 26-வது கட்டைக்கூத்து நிகழ்த்து கலை விழாவிற்கு அரசின் நிதியுதவியாக ரூ.1.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தெருக்கூத்துக் கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்திடும் பொருட்டு வெளியூர்களுக்கு தொடர்வண்டியில் இரண்டாம் வகுப்பில் 75% கட்டணச் சலுகையில் பயணம் மேற்கொள்ள கலைஞர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. 2012-2013 ஆம் ஆண்டு முதல் 2016-2017 ஆம் ஆண்டுவரை 60 தெருக்கூத்துக் கலைஞர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தின்கீழ் நலிந்த கலைஞர்களுக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் மாதந்தோறும் நிதியுதவித் தொகையாக ரூ.1,500/- வழங்கப்பட்டு வருகின்றது. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை 887 தெருக்கூத்துக் கலைஞர்களுக்கு இந்நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

**76**—

## அன்னதானத் திட்டத்தை செயல்படுத்துதல்

**வினா எண் 16329—திரு. C.V. சேகர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மஞ்சவயல் அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மஞ்சவயல், அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி

திருக்கோயில் பட்டியல் சார்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் தரிசன டிக்கெட், நன்செய், புன்செய், குத்தகை மற்றும் தேங்காய் வெட்டு ஆகியவற்றின்மூலம் வருமானம் கிடைக்கப்பெறுகிறது. இதன்மூலம் முக்கிய செலவினங்களுக்கே செலவு செய்யக்கூட இயலாத நிதிநிலைமை உள்ளது. எனவே, இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் தற்போது துவங்க இயலாத நிலை உள்ளது.

**77—**

## பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுதல்

**வினா எண் 16346—திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருதுநகர் மாவட்டம், சதுரகிரி மலை அடிவாரம் தாணிப்பாறையில் பக்தர்களுக்கு தங்கும் விடுதிகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சாப்டூர், சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்க சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சதுரகிரி மலை அடிவாரம் தாணிப்பாறையில் 0.30 சென்ட் இடம் மட்டுமே உள்ளது. இத்திருக்கோயில் அலுவலகம் சதுரகிரி மலையடிவாரம் தாணிப்பாறையில் இருந்து சுமார் 10 கி.மீ. தூரத்தில் உள்ள வத்ராயிருப்பு ஊரில் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது.*

*மேற்படி சதுரகிரி மலையடிவாரம் தாணிப்பாறையில் உள்ள திருக்கோயில் இடத்தில் திருக்கோயில் அலுவலகம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, தாணிப்பாறை அடிவாரத்தில் பக்தர்களுக்கு தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்கள் ஏதுமில்லை.*





**78—**

## திருப்பணி செய்தல்

**வினா எண் 16387—திரு. எ. ராமர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் வட்டம், பிள்ளப்பாளையம் கிராமம், பிள்ளப்பாளையம் பள்ளத் தெருவில் உள்ள அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறை மூலமாக திருப்பணி செய்ய நிதி வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், பிள்ளப்பாளையம் கிராமம் அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயிலுக்கு 2017-2018 ஆம் நிதியாண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் நிதியுதவி வழங்க பரிசீலனை செய்யப்படும்.*

**80—**

## கோயிலுக்கு கூடுதல் வசதிகள் செய்தல்

**வினா எண் 17113—திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவையாறு தொகுதி, சித்திரக்குடி கிராமம், அருள்மிகு சிவனாதீஸ்வரர் திருக்கோயிலுக்கு சுற்றுச்சுவர், மடப்பள்ளி, தளவரிசை, தட்டு ஓடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 மார்ச் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், சித்திரக்குடி கிராமம், அருள்மிகு சிவனாதீஸ்வரர் திருக்கோயிலின் திருப்பணிகள் அனைத்தும் உபயதாரர்கள்மூலம் செய்யப்பட்டு, திருப்பணிகள் நிறைவுற்று 21-9-2015 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. இத்திருக்கோயிலின் சுற்றுச்சுவர், மடப்பள்ளி, தளவரிசை அமைக்கும் பணி ஏற்கெனவே முடிவடைந்து விட்டது. தட்டோடுகள் பதிக்கும் பணி உபயதாரர்கள்மூலம் துவங்கப்படவுள்ளது.*

**81—**

## திருக்குளத்தைச் சீரமைத்து, சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 18196—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கும்பகோணம் தொகுதி, சாக்கோட்டை அருள்மிகு அமிர்தகலசநாதசுவாமி திருக்கோயில் திருக்குளத்தைச் சீரமைத்து, சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், சாக்கோட்டை அருள்மிகு அமிர்தகலசநாதசுவாமி திருக்கோயில் திருக்குளத்தினை சீர்செய்து சுற்றுச்சுவர் கட்ட உத்தேசமாக சுமார் ரூ.75.00 இலட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் தற்போது போதிய நிதிவசதி இல்லை. எனவே, போதிய நிதி ஆதாரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*



2018 மார்ச் 22]

82—

## கோயிலில் சூரிய ஒளி மின் உற்பத்தி சாதனங்கள் பொருத்துதல்

**வினா எண் 18303—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து கோயில்களுக்கும் சூரிய ஒளி மின் உற்பத்தி சாதனங்கள் பொருத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதியில் 442 திருக்கோயில்கள் உள்ளன. இதில் அதிக அளவில் மின்சாரம் பயன்படுத்தும் கீழ்க்கண்ட திருக்கோயில்களைத் தவிர மற்ற திருக்கோயில்களில் அதிக அளவில் மின்சாரம் பயன்படுத்துவது இல்லை:*

1. *அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை.*
2. *அருள்மிகு வேங்கடாஜலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோவில்.*
3. *அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம்.*
4. *அருள்மிகு ஆதிகும்பேஸ்வரசுவாமி திருக்கோயில், கும்பகோணம் நகர்.*

*இத்திருக்கோயில்களில் சூரிய ஒளிமூலம் மின்பயன் பெறும் திட்டம் வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும். மற்ற திருக்கோயில்களில் மின் பயன்பாடு நிதிவசதிக்குள் இருப்பதால் கும்பகோணம் தொகுதியில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள மற்ற திருக்கோயில்களில் மாற்று மின் திட்டமான சூரிய ஒளி மின் உற்பத்தி சாதனங்கள் பொருத்த வேண்டியதன் தேவை எழவில்லை.*

[2018 மார்ச் 22

**83—**

## தமிழில் அர்ச்சனை செய்தல்

**வினா எண் 18305—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் உள்ள அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயிலில் தமிழில் அர்ச்சனை செய்யும் முறையை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகர் மற்றும் வட்டம், அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயில் நகரின் முக்கிய திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் தமிழக அரசு உத்தரவின்படி 2001 ஆம் ஆண்டு முதல் தமிழிலும் அர்ச்சனை நடைபெற்று வருகிறது.*

**84—**

## பக்தர்களுக்கு தங்கும் விடுதி

**வினா எண் 18326—திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி வானமாமலை பெருமாள் திருக்கோயில், திருக்குறுங்குடி, அருள்மிகு அழகிய நம்பிராயர் திருக்கோயில் [நம்பிகோயில்] ஆகிய கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு நவீன தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு வானமாமலை பெருமாள் திருக்கோயில் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், திருக்குறுங்குடி அருள்மிகு அழகிய நம்பிராயர் திருக்கோயில் ஆகிய இரு திருக்கோயில்களும் ஜீயர் மடத்தின் மடாதிபதியின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. இத்திருக்கோயில்களுக்கு வந்து இரவு தங்கி சுவாமி தரிசனம் மற்றும் வழிபட்டு செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. மேலும் இவ்விரு திருக்கோயில்களிலும் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்கு போதிய இடவசதி மற்றும் நிதிவசதி இல்லாத காரணத்தாலும், இவ்விரு திருக்கோயில்களுக்கும் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.*



2018 மார்ச் 22]

**85—**

## பள்ளியைத் தொடர்ந்து நடத்துதல்

**வினா எண் 18596—திரு. ப. ஆடலரசன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியத்திலுள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியை இந்து சமய அறநிலையத் துறை மூலமாக தொடர்ந்து அதே இடத்தில் நடத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*திருத்துறைப்பூண்டி தொகுதி, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், கோட்டூர், அருள்மிகு கொழுந்தீஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான புல எண் 173/3பி1 மற்றும் புல எண் 173/4-ல் மொத்தம் 4.64 ஏக்கர் நிலத்தில் 21-9-1992 முதல் இந்து சமய அறநிலையத் துறையின் முறையான அனுமதி பெறாமல் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியினை இந்து சமய அறநிலையத் துறை மூலமாக நடத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.*

**86—**

## திருக்குளத்தைத் தூர் வாரி, படித்துறை கட்டுதல்

**வினா எண் 18600—திரு. எம். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், தென்மைநாடு ஊராட்சியில் உள்ள அருள்மிகு தோகமலை அய்யனார் திருக்கோயில் திருக்குளத்தைத் தூர் வாரி, படித்துறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், தென்மைநாடு ஊராட்சியில் உள்ள அருள்மிகு தோகமலை அய்யனார் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயிலின் திருக்குளத்தினை இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் தூர் வாரி, படித்துறைக் கட்ட வழிவகை இல்லை.

**87—**

## தெப்பத் திருவிழா நடத்துதல்

**வினா எண் 19848—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழும்பூர் தொகுதி, 104-வது வார்டு அருள்மிகு கங்காதீஸ்வரர் கோயில் தெப்பத் திருவிழாவை மீண்டும் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை, புரசைவாக்கம், அருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோயில் சட்டப் பிரிவு 46 (iii)-ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலின் திருக்குளத்தில் தெப்பத் திருவிழா 2010-ல் ஆரம்பிக்கப்பட்டு 2013





வரை நடத்தப்பட்டது. அதன்பிறகு திருக்குளத்தில் தண்ணீர் இல்லாத காரணத்தால் 2014 ஆம் ஆண்டிலிருந்து தெப்பத் திருவிழா நடைபெறவில்லை. தற்போது நிலவும் வறட்சி மற்றும் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக இத்திருக்கோயிலில் தெப்பத் திருவிழா நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**88—**

## குளங்களைச் சீரமைத்தல்

**வினா எண் 20150—டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, இலத்தூர் ஊராட்சி ஒன்றியம் கடலூர் ஊராட்சி, அருள்மிகு மேகாத்தம்மன் மற்றும் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயில்களின் குளங்களைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதி, இலத்தூர் ஊராட்சி ஒன்றியம், கடலூர் ஊராட்சி அருள்மிகு மேகாத்தம்மன் மற்றும் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயில்கள் என தெரிவிக்கும் திருக்கோயில்கள் முறையே மேற்காவநாச்சியார் மற்றும் அக்னீஸ்வரர் திருக்கோயில்கள் ஆகும். இவற்றில் அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக திருக்குளம் ஏதுமில்லை. அருள்மிகு மேற்காவநாச்சியார் திருக்கோயிலுக்கு சொந்தமான திருக்குளம் ஒன்று உள்ளது. இத்திருக்குளத்திற்கு படித்துறையோ, சுற்று சுவரோ ஏதுமில்லை. இதனால் இக்குளம் சிறிய குட்டை போன்று உள்ளது. இதனைச் சீரமைக்க தற்போது திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லை.

**89—**

## சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

**வினா எண் 20744—திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2018 மார்ச் 22

*(அ) திருவாலங்காடு அருள்மிகு வடாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான திருவாலங்காடு, அருள்மிகு வடாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயிலில் பின்னோக்கிச் செல்லும் சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் (RO Plant) தற்போது அன்னதானக் கூடத்தில் பொருத்தப்பட்டு அன்னதானத்திற்கும், பக்தர்களின் தேவைக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.*

**90**—

## ஊரணியில் படித்துறை கட்டுதல்

**வினா எண் 21050—திரு. ஏ. இரத்தினசபாபதி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஊர்வணி ஊராட்சி, பள்ளத்திவயல் கிராமத்தில் உள்ள பிள்ளையார் கோயில் ஊரணியில் படித்துறைக் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஊர்வணி ஊராட்சி பள்ளத்திவயல் கிராமத்தில் உள்ள அருள்மிகு பிள்ளையார் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை நேரடி நிருவாகத்தின்கீழ் கொண்டு*



2018 மார்ச் 22]

*வரப்படாத சிறிய திருக்கோயில் ஆகும். எனவே, மேற்படி திருக்கோயில் ஊரணிக்கு இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் படித்துறை கட்ட வழிவகை இல்லை.*

**91**—

## குடமுழுக்கு நடத்துதல்

**வினா எண் 22099—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் கடந்த 23-5-2008 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. இத்திருக்கோயிலினை தொன்மை மாறாமல் புதுப்பித்தல் பொருட்டு, புனரமைப்புப் பணிகளுக்கு அறநிலையத் துறையால் அமைக்கப்பட்டுள்ள தொல்லியல் துறை அலுவலர்கள் குழுவால் நேரில் பார்வையிடப்பட்டு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உயர் நீதிமன்ற குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் மதிப்பீடு அங்கீகாரம் பெறப்பட்டு இலாகா விதிகளின்படி பணிகள் துவக்கி திருப்பணிகள் நிறைவேற்றிய பின்னர் குடமுழுக்கு விழா நடத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.*

**92**—

## தங்கும் அறைகள் கட்டுதல்

**வினா எண் 22100—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், தோவாளை, அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயிலுக்கு கூடுதலாக வாகன நிறுத்துமிடம் ஏற்படுத்தவும், கூடுதலாக பொருட்கள் பாதுகாப்பு அறைகள் மற்றும் தங்கும் அறைகள் கட்டவும் அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், தோவாளை, அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயிலில் தற்போது வாகனங்களை நிறுத்துமிடம் போதுமானதாக உள்ளது. இத்திருக்கோயிலுக்கு வரும் வெளியூர் பக்தர்களின் எண்ணிக்கை மிக குறைவாக உள்ளது. தனியார்மூலம் நடத்தப்படும் விடுதிகள் கணிசமான எண்ணிக்கையில் உள்ளன. ஆகையால் திருக்கோயிலில் நிருவாகம் சார்பில் தங்கும் அறைகள் மற்றும் பாதுகாப்பு அறைகள் கட்டப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.*

**93—**

## கோயில் நிலத்தில் கழிவுநீர் தேங்குவதைத் தடுத்தல்

**வினா எண் 22143—திரு. எஸ்.ஆர். இராஜா:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் பெருநகராட்சி, 19-வது வார்டு பகுதியிலுள்ள அருள்மிகு பொன்னியம்மன் ஆலயத்திற்கு சொந்தமான நிலத்தில் கழிவுநீர் தேங்குவதைத் தடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் பெருநகராட்சி 19-வது வார்டு பகுதியில் உள்ள அருள்மிகு பொன்னியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமாக சர்வே எண் 155-ல் 4.75 ஏக்கர் நிலம் உள்ளது. இந்நிலத்தை ஒட்டியவாறு கழிவுநீர்க் கால்வாய் அமைந்துள்ளது. தாங்கல் கரை அடைத்ததனால் கால்வாயில் இருந்து நீர் வெளியேறி திருக்கோயில் இடத்தில் தேக்கமடைகிறது. இதனை சீர் செய்யும்முகமாக கால்வாய் நீர் திருக்கோயில் நிலத்திற்கு வராதவாறு மண் கொட்டி மேடு செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*



**94—**

## கருவேல மரங்களை அகற்றுதல்

**வினா எண் 22144—திரு. எஸ்.ஆர். இராஜா:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் பெருநகராட்சி, 32-வது வார்டு இரும்புலியூர் பகுதியிலுள்ள அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் உள்ள வேலிகாத்தான் கருவேல மரங்களை அகற்ற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் பெருநகராட்சி, என்.எஸ்.சி. போஸ் சாலையில் உள்ள அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக 6 ஏக்கர் புன்செய் நிலம் தாம்பரம் நகராட்சி 32-வது வார்டுக்குட்பட்ட இரும்புலியூர் கிராமத்தில் சர்வே எண் 12-ல் உள்ளது. இந்நிலத்தில் உள்ள சீமை கருவேல மரங்களை வெட்டி அப்புறப்படுத்திட 9-3-2017 அன்று பொது ஏலம் விடப்பட்டு சீமை கருவேல மரங்கள் வெட்டி அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.*

**95—**

## திருப்பணிக்கு நிதியுதவி வழங்குதல்

**வினா எண் 22813—திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2018 மார்ச் 22

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, இனாம்காரியந்தலில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலைச் சீரமைப்பதற்கு அறநிலையத் துறைமூலம் நிதியுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் வட்டம், இனாம்காரியந்தல் கிராமத்திலுள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத ஆதி திராவிடர் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் நிதியுதவி வழங்க பரிசீலிக்கப்படும்.

**96—**

## நிதியுதவி வழங்குதல்

**வினா எண் 22814—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, இனாம்காரியந்தலில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலைச் சீரமைப்பதற்கு அறநிலையத் துறையின்மூலம் நிதியுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் வட்டம், இனாம்காரியந்தல் கிராமத்திலுள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத ஆதி திராவிடர் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு ஆதி



2018 மார்ச் 22]

திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் நிதியுதவி வழங்க பரிசீலிக்கப்படும்.

**97—**

## திருப்பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்தல்

**வினா எண் 22816—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, மேப்பத்துறை ஊராட்சி, கீழாத்தூரில் உள்ள அருள்மிகு ஸ்ரீகாளியம்மன் திருக்கோயிலுக்கு திருப்பணிகள் செய்ய அறநிலையத் துறையின்மூலம் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் வட்டம், மேப்பத்துறை ஊராட்சி, கீழாத்தூர் கிராமத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீகாளியம்மன் திருக்கோயில் ரூ.5,000/-த்திற்குகீழ் ஆண்டு வருமானம் உள்ள பட்டியலைச் சாராத திருக்கோயிலாகும். திருக்கோயிலுக்கு 2017-2018 ஆம் நிதியாண்டில் கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணி திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் நிதியுதவி வழங்க பரிசீலிக்கப்படும்.

**98—**

## மாணவியர் விடுதியில் கூடுதல் இடம்

**வினா எண் 8575—திரு. வி.வி. இராஜன் செல்லப்பா:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, சாத்தமங்கலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதிகளில் கூடுதல் இடங்களை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[2018 மார்ச் 22

**விடை—**

**மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு ஏற்ப நடப்பு கல்வியாண்டில் சேர்க்கை மேற்கொண்ட பின்பு, 20% மறுபகிர்வு அடிப்படையிலும் மற்றும் 10% கூடுதல் இடங்கள் வழங்கவும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், துறைத் தலைவருக்கும் மாநிலத்தில் 2,185 கூடுதல் இடங்கள் வழங்க அதிகாரம் வழங்கப்பட்டு விடுதிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகப்படுத்தும் முறை நடைமுறையில் இருந்து வருவதால் மதுரை, சாத்தமங்கலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதிகளில் கூடுதல் இடங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.*

**99—**

## மாணவர் சேர்க்கையை அதிகப்படுத்துதல்

**வினா எண் 13309—திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, சத்திரப்பட்டி, இடையகோட்டை, பெரியகோட்டை, தேவத்தூர், கள்ளிமந்தையம் மற்றும் கீரனூர் தொப்பம்பட்டி ஆகிய பகுதிகளிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகளில், ஆண்டு மாணவர்கள் சேர்க்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு ஏற்ப நடப்பு கல்வியாண்டில் சேர்க்கை மேற்கொண்ட பின்பு, 20% மறுபகிர்வு அடிப்படையிலும் மற்றும் 10% கூடுதல் இடங்கள் வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், துறைத் தலைவருக்கும் மாநிலத்தில் 2,185 கூடுதல் இடங்கள் வழங்க அதிகாரம் வழங்கப்பட்டு விடுதிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகப்படுத்தும் முறை நடைமுறையில் இருந்து வருவதால் ஒட்டன்சத்திரம் தொகுதி, சத்திரப்பட்டி, இடையகோட்டை, பெரியகோட்டை, தேவத்தூர், கள்ளிமந்தையம் மற்றும் கீரனூர் தொப்பம்பட்டி ஆகிய பகுதிகளிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகளில் ஆண்டு சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.*



2018 மார்ச் 22]

**100—**

## மாணவியர் சேர்க்கையை அதிகப்படுத்துதல்

**வினா எண் 13310—திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம், கள்ளிமந்தையம் ஆகிய பகுதிகளில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகளில், ஆண்டு மாணவியர்கள் சேர்க்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு ஏற்ப நடப்பு கல்வியாண்டில் சேர்க்கை மேற்கொண்ட பின்பு, 20% மறுபகிர்வு அடிப்படையிலும் மற்றும் 10% கூடுதல் இடங்கள் வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், துறைத் தலைவருக்கும் மாநிலத்தில் 2,185 கூடுதல் இடங்கள் வழங்க அதிகாரம் வழங்கப்பட்டு விடுதிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகப்படுத்தும் முறை நடைமுறையில் இருந்து வருவதால் ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம், கள்ளிமந்தையம் ஆகிய பகுதிகளில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகளில் ஆண்டு சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.*

*(18-9-2017 முதல் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் தகுதி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்களால் கொடுக்கப்பட்ட வினா வரிசை எண்கள் 20, 21 மற்றும் 79-க்கான வினாக்கள்-விடைகள் இப்பட்டியலில் இடம் பெறவில்லை.)*

[2018 மார்ச் 22

## பட்டியல் 7

**1**—

### அம்மா மருந்தகம் அமைத்தல்

**வினா எண் 6581—திரு. வீ. அலெக்சாண்டர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அம்பத்தூர் தொகுதியில் இரண்டு இடங்களில் அம்மா மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தொகுதி, செங்குன்றத்தில் செயல்படும் சைதாப்பேட்டை தாலுகா கூட்டுறவு விற்பனை சங்கத்திற்குட்பட்ட பகுதியாகும். இந்த தொகுதியில் 2,64,990-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் ஓர் அரசு மருத்துவமனை மற்றும் 35 தனியார் மருந்தகங்களும் அங்கிருந்து 5 கி.மீ. தொலைவில் லெட்சுமிபுரத்தில் ஒரு கூட்டுறவு மருந்தகமும், 12 கி.மீ. தொலைவில் செங்குன்றத்தில் ஒரு கூட்டுறவு மருந்தகமும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. மேலும், அம்பத்தூர் தொகுதிக்கு அருகில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வணிக வளாகத்தில், முகப்பேர் மேற்கு பகுதியில் பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மூலமாக ஒரு அம்மா மருந்தகம் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றது. இந்நிலையில் தொடர்ந்து குவிந்த நட்டத்தில் செயல்பட்டு வரும் சைதை தாலுக்கா கூட்டுறவு விற்பனைச் சங்கம் மற்றும் பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை ஆகியவற்றால் அம்பத்தூர் தொகுதியில் புதியதாக அம்மா மருந்தகங்கள் திறப்பதற்கான சாத்தியக்கூறுகளில்லை.*

**2**—

### புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 7546—திரு. மா. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2018 மார்ச் 22]

*(அ) சைதாப்பேட்டை தொகுதி, வார்டு 170, 1 முதல் 3 வரை, பங்களா தெரு 1 முதல் 6 வரை, பிள்ளையார் கோயில், பூந்தமல்லி சாலை, மேட்டுத் தெரு மற்றும் அருள்பிரகாசம் ஆகிய பகுதிகளை இணைத்து பிள்ளையார் கோயில் தெருவில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை தொகுதி, வார்டு 170-இல் உள்ள பங்களா தெரு (1 முதல் 3 வரை) பிள்ளையார் கோயில் தெரு (1 முதல் 6 வரை), பூந்தமல்லி சாலை, மேட்டுத் தெரு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்ப அட்டைதாரர்கள் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும் ஈக்காட்டுத்தாங்கல் 2 (LC 004) நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர். மேற்குறிப்பிட்ட நியாய விலைக் கடையில் 1184 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. அரசு வழிகாட்டுதலின்படி நகர்ப்புற பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய்க்கடையிலிருந்து 1.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் இருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட பகுதியில் ஏற்கெனவே இரண்டு நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருவதாலும், மேற்குறிப்பிட்ட தெருக்கள் அனைத்தும் நியாய விலைக் கடையிலிருந்து 1/2 கிலோமீட்டர் தூரத்திற்குள் உள்ளதாலும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் பங்களா தெரு (1 முதல் 3 வரை), பிள்ளையார் கோயில் தெரு (1 முதல் 6 வரை), பூந்தமல்லி சாலை மேட்டுத்தெரு ஆகிய பகுதிகளை இணைத்து பிள்ளையார் கோயில் தெருவில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பு இல்லை.*

**3**—

### பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 9226—திரு. அ. சௌந்தரபாண்டியன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2018 மார்ச் 22*

*லால்குடி தொகுதி, அகலங்கநல்லூர் நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து, கீழ்மாரிமங்கலத்திற்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*லால்குடிதொகுதி, அகலங்கநல்லூர் பகுதியில், அகலங்கநல்லூர் (13DPO47PN) முழுநேர நியாய விலைக் கடை 614 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் கீழ்மாரி மங்கலத்தைச் சேர்ந்த 150 குடும்ப அட்டைகளும் அடங்கும். அகலங்கநல்லூர் தாய் அங்காடிக்கும், கீழ்மாரிமங்கலம் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீ. ஆகும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர அங்காடி பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால், கீழ்மாரிமங்கலம் பகுதியில் புதிதாக பகுதிநேர அங்காடி பிரிக்கப்பட்டபின் அகலங்கநல்லூர் தாய் அங்காடியில் 464 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கின்றன. எனவே, மேற்குறிப்பிட்ட அரசாணையிலுள்ள நிபந்தனை பூர்த்தியாகாததால், கீழ்மாரிமங்கலம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**4—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 10628—திரு. ஏ.பி. நந்தகுமார்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அணைக்கட்டு தொகுதி, பொய்கைபுதூர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி மற்றும் அணைக்கட்டு வட்டம் பொய்கை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் பொய்கை*



*2018 மார்ச் 22*]

*மோட்டூர் (04JE013PN) பகுதிநேர நியாய விலைக் கடை 437 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் பொய்கைபுதூர் பகுதியைச் சேர்ந்த 100 குடும்ப அட்டைகளும் அடங்கும். பொய்கை மோட்டூர் தாய்க் கடைக்கும் உத்தேச பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க கோரும் பொய்கைபுதூர் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 3/4 கிலோ மீட்டர் உள்ளது. அரசு வழிகாட்டு நெறிகளின்படி, பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கக் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். தாய்க் கடைக்கும் உத்தேச பகுதிநேரக் கடை அமைக்க கோரும் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கிலோ மீட்டர் இருக்க வேண்டும். மேலும், பகுதிநேர நியாய விலைக் கடை அமைவதற்கு வாடகையின்றி இலவசமாக கட்டட வசதி செய்து தரப்பட வேண்டும். மேற்படி அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், பொய்கைபுதூர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**5—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 12352—திரு. எம். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், காட்டுக் குறிச்சி ஊராட்சி, காட்டுக் குறிச்சி கிராமத்தில் புதிய கட்டடத்துடன் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு தாலுக்கா, ஒரத்தநாடு வட்டம் ட்டி.1665 ஆழிவாய்க்கால் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 19FPO36PY ஆழிவாய்க்கால் முழுநேர நியாய விலைக் கடை 715 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. புதிய நியாய விலைக் கடை கோரும் காட்டுக்குறிச்சி பகுதியைச் சேர்ந்த 130 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி புதிய பகுதிநேர நியாயவிலைக்*

[2018 மார்ச் 22

கடை கோரும் கிராமப்புற பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்ட பின் தாய் அங்காடியில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். தாய் அங்காடிக்கும் புதிய நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டும். மேற்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் காட்டுக்குறிச்சி கிராமத்தில் 130 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், சொந்தமான கட்டடமும் போதிய நிதியாதாரமும் இல்லை. எனவே, காட்டுக்குறிச்சி கிராமத்தில் புதிய கட்டடத்துடன் நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**6—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 18226—திரு. எஸ்.ஆர். இராஜா:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, 18-வது வார்டு, ஆதி நகர் மற்றும் பெருங்களத்தூர் பேரூராட்சியிலுள்ள குண்டுமேடு, அண்ணாநகர் ஆகிய பகுதிகளில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, 18-வது வார்டு காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நடத்தும் ஆனந்தபுரம் நியாய விலைக் கடை 1690 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. புதிய நியாய விலைக் கடை கோரும் ஆதி நகர் பகுதியைச் சேர்ந்த 312 குடும்ப அட்டைகளும் அதில் அடங்கும். தாம்பரம் தொகுதி, தாம்பரம், பெருங்களத்தூர் பேரூராட்சி காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் பெருங்களத்தூர் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையில் குண்டுமேடு, அண்ணாநகர் பகுதியை சேர்ந்த 750 குடும்ப அட்டைகளும் அடங்கும். அரசு*



2018 மார்ச் 22]

*வழிகாட்டு நெறிகளின்படி நகர்புறப்பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். அதிகபட்சம் 1000 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். தாய்க் கடைக்கும் புதிய நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் இடையே 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். மேற்படி புதிய நியாய விலைக் கடை கோரும் ஆதி நகர் பகுதிக்கும் தாய்க் கடைக்குமிடையே 1 கி.மீ. மட்டுமே உள்ளது மற்றும் குண்டுமேடு, அண்ணாநகரை இணைத்த பகுதியில் 750 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளன. மேலும், தாய்க் கடைக்கும் புதிய நியாய விலைக் கடை கோரும் குண்டுமேடு மற்றும் அண்ணாநகர் பகுதிக்குமிடையே 1 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் ஆதி நகர், குண்டுமேடு, அண்ணாநகர் பகுதிகளில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**7—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 18932—திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவையாறு தொகுதி, பெரமூர் PACB கடை எண் 39 செம்மங்குடி நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளை பிரித்து மடம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருவையாறு ஒன்றியம், பெரமூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் BPO-39 பெரமூர் 2 முழுநேர நியாய விலைக் கடை 776 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் மடம் கிராமத்தைச் சேர்ந்த 146 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150*

[2018 மார்ச் 22

குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதிநேர கடைக்கும் குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் மடம் பகுதியில் 146 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டிருப்பதால், மேற்படி மடம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**8—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 19421—திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமத்திவேலூர் தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நல்லூர் கந்தம்பாளையம் மற்றும் மணியனூர் நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து, ம. கந்தம்பாளையம் அல்லது உலகபாளையத்தில் புதியதாக பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் தொகுதி, பரமத்திவேலூர் ஊராட்சி ஒன்றியம், பரமத்திவேலூர் வட்டம், எண் 849 நல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 3 முழுநேர நியாய விலைக் கடைகளும், 2 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேற்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியான ம. கந்தம்பாளையத்தைச் சேர்ந்த 122 குடும்ப அட்டைகள் நல்லூர் கந்தம்பாளையம் முழுநேர நியாய விலைக் கடையிலும், உலகபாளையத்தைச் சேர்ந்த 107 குடும்ப அட்டைகள் பணியனூர் நியாய விலைக் கடையிலும் இணைக்கப்பட்டுள்ளன. அரசு வழிகாட்டுநெறிகளின்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும், பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க



2018 மார்ச் 22]

வேண்டும் மற்றும் தாய்க் கடைக்கும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் ம. கந்தம்பாளையத்தைச் சேர்ந்த 122 குடும்ப அட்டைகள் நல்லூர் முழுநேர நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், தாய் நியாய விலைக் கடையான நல்லூர் முழுநேர நியாய விலைக் கடைக்கும் ம. கந்தம்பாளையத்திற்கும் இடையே 1/2 (0.5) கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. இதேபோன்று புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் உலகபாளையத்தைச் சேர்ந்த 107 குடும்ப அட்டைகளும் மணியனூர் (08DP0019PY) முழுநேர நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ளது. தாய் நியாய விலைக் கடைக்கும் பகுதிநேர நியாய விலைக் கடைக் கோரும் உலகபாளையத்திற்கும் இடையே 1.00 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. மேலும், பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 420 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டிருக்கும். எனவே, மேற்கூறிய அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் நல்லூர் கந்தம்பாளையம் மற்றும் மணியனூர் நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகள் பிரித்து ம. கந்தம்பாளையம் அல்லது உலகபாளையத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**9—**

## நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 20787—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், திருநாகேஸ்வரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தைச் சார்ந்த திருநாகேஸ்வரம் நியாய விலைக் கடை எண் 1, 3 மற்றும் 4 ஆகியவற்றிற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியம், கும்பகோணம் தாலுகா, திருநாகேஸ்வரம் பேரூராட்சி பகுதியில் இசட் 819 திருநாகேஸ்வரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில்,* DD094 *திருநாகேஸ்வரம்-1 முழுநேர நியாய விலைக் கடை 993 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்திலும்,* DD *092 திருநாகேஸ்வரம்-3 முழுநேர நியாய விலைக் கடை 1028 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்திலும்,* DD 146 *திருநாகேஸ்வரம்-4 பகுதிநேர நியாய விலைக் கடை 307 குடும்ப அட்டைகளுடன் இலவச கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி, திருநாகேஸ்வரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் சொந்த இடம் இல்லாததால் திருநாகேஸ்வரம் நியாய விலைக் கடை எண்கள் 1, 3 மற்றும் 4 ஆகிய நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக் கூறுகள் இல்லை.*

**10—**

## முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றியமைத்தல்

**வினா எண் 22632—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 400 குடும்ப அட்டைகள் உள்ள பகுதிநேர நியாய விலைக் கடைகளை முழுநேர நியாய விலைக் கடைகளாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களால் 446 முழுநேர நியாய விலைக் கடைகளும், 114 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. புதிய நியாய விலைக் கடைகள் அமைக்க, நகர்ப்புறங்களில் 800 குடும்ப அட்டைகளுக்கு குறைவில்லாமலும், கிராமப்புறங்களில்*



*500 குடும்ப அட்டைகளுக்கு குறைவில்லாமலும் இருத்தல் வேண்டுமென அரசாணை (நிலை) எண் 63, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 11-3-1997 இல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 400 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ள அனைத்து பகுதிநேர நியாய விலைக் கடைகளையும் முழுநேர நியாய விலைக் கடைகளாக மாற்றியமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**11—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 22862—திரு. கே.எஸ். தென்னரசு:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு கிழக்கு தொகுதி, மாநகராட்சி பூங்கா அமைந்துள்ள இடத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகரத்தில் அமைந்துள்ள மாநகராட்சி பூங்கா, மாநகராட்சி கட்டுப்பாட்டிலுள்ளது. மாநகராட்சி பூங்கா அமைந்துள்ள இடங்களில் கட்டடங்கள் கட்ட தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, ஈரோடு கிழக்கு தொகுதியிலுள்ள மாநகராட்சி பூங்காவில் நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**12—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 26—திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 42 ஊராட்சிகளுக்கு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் செல்லப்பன்பேட்டை ஊராட்சிக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 மார்ச் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பூதலூர், திருவையாறு மற்றும் தஞ்சாவூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 229 குடியிருப்புகளுக்கான காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.28.47 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு 1-3-2013 முதல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ளது. இக்கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் செல்லப்பன்பேட்டை ஊராட்சியில், செல்லப்பன்பேட்டை, செல்லப்பன்பேட்டை புதிய குடியிருப்பு மற்றும் செல்லப்பன்பேட்டை நடு குடியிருப்பு ஆகிய மூன்று குடியிருப்புகளுக்கு (மக்கள் தொகை 1913) நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டரும் மற்றும் உள்ளூர் நீராதாரங்களின்மூலம் 10 லிட்டரும் ஆக மொத்தம் நிர்ணயிக்கப்பட்ட அளவான 40 லிட்டர் குடிநீர் தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது.*

**13—**

## குடியிருப்புகள் கட்டுதல்

**வினா எண் 9322—திரு. பி. மூர்த்தி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை கிழக்கு தொகுதியில் நரிக்குறவர் இன மக்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை கிழக்கு தொகுதியில் உள்ள சக்கிமங்கலம் ஊராட்சியில் நரிக்குறவர் இன மக்களுக்கு 1993-1994 முதல் 2015-2016 வரை இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் சுமார் 147 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் முதலமைச்சரின்*



2018 மார்ச் 22]

*சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 2014-2015 ஆம் ஆண்டு முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை கீழ்க்கண்டவாறு 6 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.*

| வ. எண் | வருடம் | பசுமை வீடு எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2014-2015 | 1 |
| 2. | 2015-2016 | 1 |
| 3. | 2016-2017 | 2 |
| 4. | 2017-2018 | 2 |
| | மொத்தம் | 6 |

**14—**

## குடிநீர் வசதி செய்தல்

**வினா எண் 22584—திரு. பெரியண்ணன் அரசு:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட நகராட்சி மற்றும் ஒன்றியங்களில் ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைத்து குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஒன்றியங்களில் உள்ளாட்சி நிதியிலிருந்து தேவையான இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், புதுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 22 ஊராட்சிகள் மற்றும் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 21 ஊராட்சிகள் ஆக மொத்தம் 43 ஊராட்சிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு தற்பொழுது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட 1751 குடியிருப்புகளுக்கான*

[2018 மார்ச் 22

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் காவேரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தற்பொழுது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், 1766 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் முடிவுற்று சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. சோதனை ஓட்டம் நிறைவுற்றபின் புதுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கவிநாடு கிழக்கு ஊராட்சி, கவிநாடு மேற்கு ஊராட்சி மற்றும் 9ஏ நத்தம்பண்ணை ஆகிய மூன்று ஊராட்சிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு காவேரி குடிநீர் வழங்கப்பட உள்ளது.

**15**—

## கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணி

**வினா எண் 23314—திரு. பி.வி. பாரதி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதியில் நடைபெறும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைந்து முடிக்கவும், கூடுதலாக கிராமங்களுக்கு விரிவாக்கம் செய்யவும் அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சார்ந்த சீர்காழி, கொள்ளிடம், மயிலாடுதுறை மற்றும் செம்பனார்கோவில் உள்ளடக்கிய ஒன்றியங்களில் 295 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் 315 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசு ஆணை எண் 163, நாள் 11-8-2010 இன்மூலம் ரூ.105.70 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான பணி ஆணை 29-12-2011 அன்று M/s. IVRCL நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, 23-1-2012 அன்று பணி தளம் ஒப்படைக்கப்பட்டது. ஒப்பந்தக் காலத்தில் 56 விழுக்காடு பணிகளே M/s. IVRCL நிறுவனத்தால் முடிக்கப்பட்டன.



2018 மார்ச் 22]

ஒப்பந்தக்காரரின் மந்தமான பணி முன்னேற்றத்தின் காரணமாக ஒப்பந்த விதிகளின்படி 30-9-2014-ல் M/s. IVRCL-ன் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. மீதம் உள்ள பணிகளை செயலாக்கும் பொருட்டு மறு ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு பணி ஏற்பு ஆணை 3-8-2015 அன்று M/s. SMC Infrastructure Pvt. Ltd., என்ற ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான பணி தளங்கள் 20-8-2015-ல் ஒப்படைக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் துவங்கப்பட்டு தற்போது 78 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள பணிகள் 10/2017-ல் முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் முடிவுறும் தருவாயில், 2012 ஆம் ஆண்டு மக்கள் தொகையின்படி 3.08 இலட்சம் மக்களுக்கு தினசரி 12.51 மில்லியன் லிட்டர் மற்றும் உச்ச கால 2042 மக்கள் தொகையின்படி 3.70 இலட்சம் மக்களுக்கு தினசரி 14.20 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட உள்ளது.

**16**—

## கட்டடம் கட்டுதல்

**வினா எண் 12130—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** *மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 196-வது வட்டம், மீனவர்களின் வலைகளை பாதுகாக்கவும், உலர வைக்கவும் கடற்கரை பகுதியில் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 196-வது வட்டம், கடற்கரை பகுதி குறுகியதாக இருப்பதால், அப்பகுதியில் மீனவர்களின் வலைகளைப் பாதுகாக்கவும், உலர வைக்கவும் கட்டடம் கட்டுவதற்கு போதிய இடம் இல்லாத காரணங்களால், மீன் வலை உலர்தளம் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2018 மார்ச் 22

**17—**

## பொறியியல் மாணவர் சேர்க்கை

**வினா எண் 7947—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பொறியியல் மாணவர் சேர்க்கையை உயர்த்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாணவர்களுக்கு பொறியியல் கல்வி மீதான நாட்டத்தினை ஊக்குவித்து, மாணவர்களின் கோரிக்கையை உயர்த்த மாணவர்களுக்கு திறன் மேம்பாடு, ஆய்வகப் பயிற்சி, மென்திறன் மேம்பாடு, தொழில்முறை சார்ந்த வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும், கீழ்க்காணும் வழிமுறைகளில் பொறியியல் மாணவர் சேர்க்கையை உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பொறியியல் மாணவர்களின் சேர்க்கையை உயர்த்தும் வழிமுறைகள்:—

1. தற்போது நடைமுறையில் இருக்கும் தொழில் கல்வி படிக்கும் மாணவ/மாணவியர்களின் வேலை வாய்ப்புக்கான கல்லூரி வளாக நேர்காணலை (Campus Interview) மேலும் செம்மைப்படுத்தி தொடர்தல்.

2. மாணவர்களுக்கு, பொறியியல் கல்வியில் உள்ள உலகளாவிய வேலை வாய்ப்பினை பற்றிய விழிப்புணர்வு முகாம்மூலம் தெரியப்படுத்துதல்.

3. பிற மாநிலங்கள் மற்றும் நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரியில் அண்ணா பல்கலைக்கழகத்தின்மூலம் பிற மாநில மற்றும் நாடுகளின் மாணவர்களின் சேர்க்கை செய்தல்.



2018 மார்ச் 22]

**18—**

## அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர்

**வினா எண் 657—திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, கீழகருவேலன்குளம் ஊராட்சி, கல்லடி சிதம்பராபுரம் மேலூர் அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் திருமதி வி.சரோஜா, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், கீழகருவேலன்குளம் ஊராட்சி, கல்லடி சிதம்பராபுரம் மேலூர் அங்கன்வாடி மையம் 1983 ஆம் ஆண்டு முதல் முதன்மை மையமாக அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது இம்மையத்திற்கு தென்னை ஓலைக் கொண்டு சுற்று வேலி அமைக்கப்பட்டு போதுமான பாதுகாப்புடன் உள்ளது. இருப்பினும் சுற்றுச்சுவர் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சம்மந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இம்மையத்தினை ஆய்வு செய்த பொழுது சுற்றுச்சுவர் அமைப்பதற்கு தேவையான நிதி தொடர்பாக உதவி புரிவதாக தெரிவித்துள்ளார். மேலும் சம்மந்தப்பட்ட வட்டாரத்தின் பொது நிதியின்மூலம் சுற்றுச்சுவர் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**19—**

## அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர்

**வினா எண் 1608—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?*

[2018 மார்ச் 22

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் திருமதி வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செயல்படும் 54,439 அங்கன்வாடி மையங்களில், 7,881 மையங்களுக்கு சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு என தனியாக நிதி ஒதுக்கீடு ஏதும் அளிக்கப்படுவதில்லை. குழந்தைகளின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு சுற்றுச்சுவர் தேவைப்படும் மையங்களுக்கு சமுதாய பங்கேற்பின்மூலம், சுற்றுச்சுவர் கட்டவும் மூங்கில் மற்றும் இதர மரங்களைக் கொண்டு இயற்கைவேலி* (Natural Fencing) *அமைக்கவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.*

**20—**

## அங்கன்வாடி மையத்திற்கு தொலைக்காட்சி வசதி

**வினா எண் 1859—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அனைத்து அங்கன்வாடிகளிலும் தொலைக்காட்சி வசதி செய்யவும், கார்ட்டூன் படங்களை தொலைக்காட்சி மூலமாக காட்டவும் அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் திருமதி வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படும் 54,439 அங்கன்வாடி மையங்களில், மின்வசதியுடன் செயல்படும் மையங்களில் 9,094 மையங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளும் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்மூலம் டிவிடி பிளையர்ஸூம் 2011-12 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.*

*அங்கன்வாடி மையங்களில் "ஆடிப்பாடி விளையாடு பாப்பா" என்ற முன்பருவக் கல்வி பாடத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, தொலைக்காட்சி பெட்டி வழங்க வேண்டிய தேவை எழவில்லை.*



2018 மார்ச் 22]

**21—**

## சமையலறையைச் சீரமைத்தல்

**வினா எண் 2530—திரு. ஐ.பி. செந்தில்குமார்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பழனி தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றியம், கலிக்நாயக்கன்பட்டி ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்தில் பழுதடைந்துள்ள சமையல் அறையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் திருமதி வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றியம், கலிக்நாயக்கன்பட்டி ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையம் 1984-1985 ஆம் ஆண்டு கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் கடந்த 5-7-2016 அன்று பழனி வட்டார வளர்ச்சி அலுவலர் மூலமாக சமையல் அறை மற்றும் இருப்பு அறை பழுது நீக்கம் செய்யப்பட்டு மையம் பயன்பாட்டில் உள்ளது.*

**22—**

## சமையல் கூடம் கட்டுதல்

**வினா எண் 3989—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குளச்சல் தொகுதி, நெட்டாங்கோடு ஊராட்சி, இலந்தவிளை கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்தில் சமையல்கூடம் கட்ட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் திருமதி வி.சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, நெட்டாங்காடு ஊராட்சி, குருத்தன்கோடு வட்டாரம், இலந்தவிளை*

கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம் 1982 ஆம் ஆண்டு முதல் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மைய சமையல் கூடத்தில் மழைக் காலத்தில் மட்டும் நீர் கசிவு ஏற்படும் நிலை உள்ளதால் அதனை பழுதுநீக்கம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்காணும் மைய கட்டடப் பழுதுகளை சீர்செய்யும் பொருட்டு வட்டார வளர்ச்சி அலுவலகப் பொறியாளரால் களஆய்வு மேற்கொள்ளப்பட்டுவிட்டது.

**23—**

## அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம்

**வினா எண் 7994—திரு. கே.எஸ். மஸ்தான்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், சாத்தாம்பாடி ஊராட்சி, சாத்தாம்பாடி குடியிருப்பு பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் திருமதி வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், சாத்தம்பாடி காலனி அங்கன்வாடி மையம் 2005 ஆம் ஆண்டு முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கென சர்வே எண்.81/1-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு புதிய கட்டடம் கட்ட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் 2017-2018 ஆம் ஆண்டில் இம்மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களுக்கு உரிய கருத்துரு ஏப்ரல் 2017-ல் அனுப்பப்பட்டுள்ளது.*





**24—**

## ஊட்டச் சத்து மையங்கள் குறித்த விவரம்

**வினா எண் 9933—திரு. தா. உதயசூரியன்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சங்கராபுரம் தொகுதியில் ஊட்டச் சத்து மையங்கள் அரசு மற்றும் தனியார் கட்டடத்தில் எத்தனை செயல்படுகின்றன என்பதை தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் திருமதி வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தொகுதியில் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து வழங்கும் வகையில் 304 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 266 மையங்கள் அரசு கட்டடங்களிலும், 25 மையங்கள் தனியார் வாடகைக் கட்டடங்களிலும், 4 மையங்கள் அரசு இலவச கட்டடங்களிலும் மற்றும் 9 மையங்கள் தனியார் இலவச கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.*

**25—**

## அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 12650—திரு. ஏ.பி. நந்தகுமார்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அணைக்கட்டு தொகுதி, பள்ளிக்கொண்டா பேரூர், வெட்டுவானம் அம்பேத்கர் நகரிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் திருமதி வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, பள்ளிக்கொண்டா பேரூர், வெட்டுவானம் அம்பேத்கர் நகர் அங்கன்வாடி மையம்*

*1984 ஆம் ஆண்டு முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சர்வே எண். 194-ல் சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இம்மையம் பேரூராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளதாலும், பேரூராட்சி துறையில் அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை என்பதாலும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களிடம் வேறு ஏதேனும் நிதியின்மூலம் 2017-2018 ஆம் ஆண்டில் சொந்தக் கட்டடம் கட்டித் தரக்கோரி ஏப்ரல் 2017-ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.*

**26**—

## பேருந்து அல்லது சிற்றுந்து வசதி

**வினா எண் 12875—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அங்கன்வாடி மையத்தில் பயிலும் மாணவர்களுக்கு பேருந்து அல்லது சிற்றுந்து வசதி செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ)ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் திருமதி வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி நகர்ப்புறம் மற்றும் ஊரக பகுதிகளில் 400 முதல் 800 மக்கள்தொகை இருந்தால் முதன்மை அங்கன்வாடி மையமும், 150 முதல் 400 மக்கள்தொகை இருந்தால் குறு அங்கன்வாடி மையமும் தோற்றுவிக்கலாம். மலைவாழ் பகுதிகளில் 300 முதல் 800 மக்கள்தொகை இருந்தால் முதன்மை அங்கன்வாடி மையமும், 150-300 மக்கள்தொகை இருந்தால் குறு அங்கன்வாடி மையமும் தோற்றுவிக்கலாம்.*

*மேலும், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி 1 கி.மீ. சுற்றளவுக்குள் மையம் அமைக்கப்பட வேண்டும். இம்மையங்களில் பயனடையும் பெரும்பாலான குழந்தைகள் சம்மந்தப்பட்ட மையப் பணியாளர்/உதவியாளர் ஆகியோர்களால் அவரவர் வீட்டிற்கே சென்று அழைத்து வரப்படுகின்றனர். அங்கன்வாடி மையங்கள் தமிழ்நாட்டின் குக்கிராமங்களிலும், மலைப்பிரதேசங்களிலும் செயல்பட்டு வருவதாலும் மற்றும் குழந்தைகள் வசிக்கும் உள்ளூரிலேயே மையங்கள் செயல்படுவதாலும் அங்கன்வாடி மையங்களுக்கு பேருந்து மற்றும் சிற்றுந்து வசதி செய்யும் தேவை எழவில்லை.*





**27**—

## இலவசப் பயிற்சி வழங்குதல்

**வினா எண் 12898—திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் இளம் பெண்களுக்கான நவீன ஆடை அலங்காரத் தொழில்நுட்பப் பயிற்சியினை இலவசமாக வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் திருமதி வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி திருநெல்வேலி மாவட்டத்திற்குட்பட்டதாகும். திருநெல்வேலி மாவட்டத்தில், கிஷோரி சக்தி யோஜனா* (Kishori Shakti Yojana (KSY) *திட்டத்தின் கீழ் வளரிளம் பெண்கள் சுயமாக தொழிற்பயிற்சி பெற்று தங்களது வாழ்வாதாரத்தைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் வகையில் தேவைப்படும் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு வேலைவாய்ப்புப்பெறும் வண்ணம் "தேசிய படச்சுருள் மேம்பாட்டு கழகம்* (NFDC)" *மூலம்* Multimedia *பயிற்சி மற்றும் பி.எஸ்.என்.எல்* (BSNL) *மூலம் "கைபேசி பழுதுநீக்க சேவை" பயிற்சியும் அளிக்க முடிவெடுக்கப்பட்டு விரைவில் பயிற்சி துவக்கப்படவுள்ளது. எனவே, நவீன ஆடை அலங்காரப் பயிற்சியை வழங்க வேண்டிய தேவை எழவில்லை.*

[2018 மார்ச் 22

**28**—

### சத்துமாவினை மாற்றி தயாரித்து வழங்குதல்

**வினா எண் 13032—டாக்டர் (திருமதி) பூங்கோதை:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்படும் சத்துமாவினை பல வகையில் மாற்றி தயாரித்து வழங்க அரசு முன்வருமா?*

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் திருமதி வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*மத்திய அரசு வழிகாட்டுதலின்படி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வீட்டிற்கு எடுத்துச் சென்று உண்ணும் வகையில் (Take Home Ration) இணை உணவு வழங்க வேண்டும். அதன்படியே கர்ப்பிணிப் பெண்களுக்கு அங்கன்வாடி மையத்தில் பதிவு செய்த நாள் முதல் குழந்தை பிறந்த ஆறு மாதங்கள் வரை, நாளொன்றுக்கு 160 கிராம் சத்துமாவு வீதம், வாரம் ஒரு முறை சத்துமாவு வீட்டிற்கு எடுத்துச்சென்று உண்ணும் வகையில் (Weekly Take Home Ration) இணை உணவாக வழங்கப்பட்டு வருகிறது.*

*மேலும், இத்திட்டத்தில் பணியாற்றும் களப்பணியாளர்கள் வாயிலாக சத்துமாவை கஞ்சி, கொழுக்கட்டை, தோசை, பக்கோடா, புட்டு போன்ற பல்வேறு வகைகளில் உணவுபொருட்கள் செய்து உண்ணும் வகையில் செய்முறை ஆலோசனைகள்/விளக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வாறே கர்ப்பிணிப் பெண்கள் வீட்டில் சத்துமாவை அவர்கள் விருப்பப்படி பல வகைகளில் தயாரித்து உண்கிறார்கள்.*

**29**—

### அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர்

**வினா எண் 18177—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2018 மார்ச் 22]

*(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், தேவனாஞ்சேரி ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்டவும், கீழப்பழையார் ஊராட்சி, மண்டகமேட்டிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் திருமதி வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், தேவனாஞ்சேரி ஊராட்சி, தேவனாஞ்சேரி அங்கன்வாடி மையம் 1-7-1982-ல் துவங்கப்பட்டு அரசுக் கட்டடத்தில் நல்ல நிலையில் செயல்பட்டு வருவதால் இங்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை. மேலும் கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், கீழப்பழையார் ஊராட்சி, மண்டகமேட்டிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு 2015-2016 ஆம் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டப்பட்டு நல்ல நிலையில் பாதுகாப்பாக இயங்கி வருவதால் தற்சமயம் சுற்றுச்சுவர் கட்டும் தேவை எழவில்லை.*

**30**—

### நிதி ஒதுக்கீடு செய்தல்

**வினா எண் 22955—திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் சிறப்புப் பொருளாதார மண்டலப் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 மார்ச் 22

**விடை—**

**மாண்புமிகு திரு எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் உள்ள பல்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்தை டிட்கோ நிறுவனம் ஏ.எம்.ஆர். குரூப் உடன் இணைந்து கூட்டுத் துறை நிறுவனமாக ஏ.எம்.ஆர்.எல். ஹைடெக் சிட்டி லிமிடெட் என்ற கூட்டுத் துறை நிறுவனத்தின்மூலம் வழிகாட்டித் துறையில் செயற்படுத்தி வருகிறது. இச்சிறப்பு பொருளாதார மண்டலத்தில் செயல்பட்டு வரும் நிறுவனங்கள்மூலம் மார்ச் 2011 முதல் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நாள் ஒன்றுக்கு 7 இலட்சம் லிட்டர் தண்ணீரை இச்சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு டிசம்பர் 2013 முதல் வழங்கி வருகிறது. ஒரு பிரத்யேக துணை மின் நிலையம் (11 KVA) தமிழ்நாடு மின் வாரியம்மூலம் அமைக்கப்பட்டு, ஜூலை 2013 முதல் செயல்பட்டு வருகிறது.

மேலும், சாலை, தெரு மின் விளக்குகள், மழைநீர்க் கால்வாய்கள் போன்ற அடிப்படை வசதிகள் இச்சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரை, 28 நிறுவனங்களுடன் இடம் வழங்குதலுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. 20 நிறுவனங்களுக்கு அலகு ஒப்புகை குழு (MEPZ, Chennai) ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், 10 நிறுவனங்கள் தங்களது உற்பத்தியைத் துவங்கி ஏற்றுமதி செய்து வருகின்றனர். மார்ச் 2017 வரை, இம்மண்டலத்தின் மொத்த ஏற்றுமதி மதிப்பு ரூ.575.15 கோடியாகும்.

மேலும், நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் கூட்டுத் துறை நிறுவனத்தின்மூலம் அடிப்படை கட்டுமான வசதிகளை பல்வேறு நிலைகளில் ஏற்படுத்தி வருகின்றன.

இதைத் தவிர இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யும் திட்டம் ஏதும் தற்போது அரசின் கவனத்தில் இல்லை.



2018 மார்ச் 22]

**31—**

## தேங்காய் எண்ணெய் வழங்குதல்

**வினா எண் 9996—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாய விலைக் கடைகளில் பாமாயிலுக்குப் பதிலாக தேங்காய் எண்ணெய் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:**

(அ) சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ், செறிவூட்டப்பட்ட பாமாயில் 1,50,00,000 லிட்டர் (பாக்கெட்டுகள்) மாதாந்தோறும், நியாய விலைக் கடைகள்மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு ஒரு லிட்டர் பாக்கெட் வீதம் விநியோகம் செய்யப்படுகிறது. இந்நிலையில், நியாய விலைக் கடைகளில் பாமாயிலுக்குப் பதிலாக தேங்காய் எண்ணெய் விநியோகம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பு இல்லை.

**32—**

## அரிசி வழங்குதல்

**வினா எண் 9998—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு உணவு மற்றும் ள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிறிஸ்துவ மக்களுக்கு தவக் காலங்களில் அரிசி வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2018 மார்ச் 22

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:**

*இரமலான் மாதத்தில் பள்ளிவாசல்களில் நோன்பாளர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் இரமலான் நோன்பு கஞ்சி தயாரிக்க சுமார் 4,500 மெ.டன் முதல் 5,000 மெ.டன் வரை பச்சரிசி வழங்கப்பட்டு வருகிறது. இதேபோன்று கிறிஸ்துவ மக்களுக்கு தவக் காலங்களில் அரிசி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.*

**33—**

## அமுதம் அங்காடி அமைத்தல்

**வினா எண் 17391—திரு. எம். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒரத்தநாடு தொகுதி, திருவோணம் ஊராட்சி ஒன்றியம், கிளாமங்கலம் ஊராட்சி, 8—வது வார்டில் வாழைத் தோட்டம், 7—வது வார்டில் தெற்கு தெரு மற்றும் கானாங்கொல்லை ஆகிய பகுதிகளுக்காக அமுதம் அங்காடி அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிளாமங்கலம் ஊராட்சியில், கிளாமங்கலம்-2 பகுதிநேர நியாய விலைக் கடை 385 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடையுடன் கிளாமங்கலம் ஊராட்சி, 8-வது வார்டில் வாழைத்தோட்டம், 7-வது வார்டில் தெற்குத் தெரு மற்றும் கானங்கொல்லை ஆகிய பகுதிகளைச் சார்ந்த குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. கிளாமங்கலம் ஊராட்சி, 8-வது வார்டு, வாழைத்தோட்டம் பகுதியில் 75 குடும்ப அட்டைகளும், 7-வது வார்டில் தெற்குத் தெருவில் 80 குடும்ப அட்டைகளும் மற்றும் கானங்கொல்லை பகுதியில் 30 குடும்ப அட்டைகளும் மட்டுமே உள்ளதால், அப்பகுதிகளில் அமுதம் அங்காடி அமைத்திட தற்போது வழிவகை இல்லை.*



2018 மார்ச் 22]

**34—**

## மானிய விலையில் கால்நடை தீவனங்கள் விற்பனை

**வினா எண் 2685—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கால்நடை தீவனங்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக மானிய விலையில் விற்பனை செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கால்நடைகளுக்கு பசுந்தீவனம் கிடைத்திடும் பொருட்டு, தமிழக அரசு பல்வேறு மாநில மற்றும் மத்திய தீவன அபிவிருத்தி திட்டங்களின்மூலம் விவசாயிகளின் சொந்த நிலத்தில் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய தீவன விதை மற்றும் இடுபொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், கால்நடைகளுக்கு உலர் தீவனம் கிடைத்திடும்பொருட்டு உலர் தீவனக் கிடங்குகள் (Fodder Depots) அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு, உலர் தீவனம் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசால் மாநிலம் முழுவதிலும் கால்நடை பராமரிப்புத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கால்நடைகளுக்கு தீவனங்கள் வழங்கியது போக மீதமுள்ள தீவனங்களை விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கப்படுகிறது. இதுதவிர, வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பசுந்தீவனம் உற்பத்தி மையம் அமைக்கப்பட்டு, பசுந்தீவனம் உற்பத்தி செய்து குறைந்த விலையில் வழங்கப்படுகிறது. எனவே, கால்நடை தீவனங்களை கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக மானிய விலையில் விற்பனை செய்ய அவசியம் எழவில்லை.*

**35—**

## மருத்துவர்களுக்கு தங்கும் விடுதி

**வினா எண் 3722—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2018 மார்ச் 22

*(அ) குளச்சல் தொகுதி, வெள்ளிச்சந்தை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளிச்சந்தை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பொதுவாக, கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ அலுவலருக்கான தங்கும் விடுதி கட்டப்படுவதில்லை. பிரதான ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டுமே இவ்வசதி செய்து தரப்படுகிறது. எனவே, வெள்ளிச்சந்தை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்களுக்கு தங்கும் விடுதி கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

**36—**

## வார்டின் மேல்தளத்தைச் சீரமைத்தல்

**வினா எண் 6802—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எழும்பூர் தொகுதி, அரசு கண் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை முடிந்த நோயாளிகள் தங்கும் வார்டில் மேல்தளத்தை சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை, எழும்பூர் அரசு கண் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை முடிந்த நோயாளிகள் தங்கும் வார்டில் மேல்தளத்தை சீரமைப்பதற்காக, 2017-2018 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் (கட்டடம்) கணக்கின்கீழ் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானத்திற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*



2018 மார்ச் 22]

**37—**

## குளிர்சாதன வசதி மற்றும் மின்னாக்கி வசதி

**வினா எண் 7616—திரு. கே.எஸ். மஸ்தான்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சத்தியமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள அறுவை சிகிச்சை செய்யும் அரங்கில் புதிய குளிர்சாதன வசதி செய்யவும், மின்னாக்கி அமைத்துத் தரவும் அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் சுகாதாரப் பகுதி மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் முதன்மை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள அறுவை சிகிச்சை செய்யும் அரங்கிற்கு குளிர்சாதன பெட்டி மற்றும் மின்னாக்கி (Generator) வழங்கப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகின்றன.*

**38—**

## ஊசி போடும் அறைகள் அமைத்தல்

**வினா எண் 8184—திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மடத்துக்குளம் தொகுதி, கணியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடும்ப நல அறுவை சிகிச்சைக்குப் பின் கவனிப்பு அறை (Post Observation Ward) மற்றும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென ஊசி போடும் அறைகள் அமைக்க ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 மார்ச் 22

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் கணியூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.*

*கணியூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு குடும்ப நல அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு அறை* (Post Observation Ward) *2011-2012 ஆம் ஆண்டு தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும், மகப்பேறு பிரிவு கட்டடம் 2012-2013 ஆம் ஆண்டு தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.*

*ஆண்கள் மற்றும் பெண்களுக்கென ஊசி போடும்பொருட்டு தற்பொழுது தனியாக அறை ஒதுக்கப்பட்டு ஊசி போடப்பட்டு வருகிறது.*

**39—**

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர்

**வினா எண் 9228—திரு. சி. ராஜா:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் மகுடஞ்சாவடி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.*



2018 மார்ச் 22]

*மகுடஞ்சாவடி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு இல்லாததால், மகுடஞ்சாவடி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.*

**40—**

## மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர்

**வினா எண் 9975—திரு. ஈ.எம்.ஆர். ராஜா** *(என்கிற)* **கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அந்தியூர் தொகுதி, கூகலூர் பேரூராட்சியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*அந்தியூர் தொகுதி, கூகலூர் பேரூராட்சியில் அரசு மருத்துவமனை ஏதும் செயல்படவில்லை. கூகலூர் பேரூராட்சியில் அரசு பிரதான மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது.*

*தற்போது நிதி ஒதுக்கீடு இல்லாததால் கூகலூர் பிரதான மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

**41—**

## இலவச ரத்த வங்கி அமைத்தல்

**வினா எண் 11447—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரசு மருத்துவமனைகளில் இலவச இரத்த வங்கி அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2018 மார்ச் 22

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் செயல்பட்டு வருகிறது. இவற்றில் மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் சில வட்ட மருத்துவமனைகளிலும் சேர்ந்து மொத்தம் 56 மருத்துவமனைகளில் இரத்த வங்கி போதிய வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மருத்துவமனையின் செயல்பாட்டின் அடிப்படையில் 50 வட்டம் மற்றும் வட்டம் சாரா அரசு மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு மையம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இவற்றின் மூலம் மாதமொன்றுக்கு சராசரியாக 12,652 யூனிட்* (12652 blood Bags) *இரத்தம் சேகரிக்கப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 10,579 யூனிட்* (10579 Blood Bags) *இரத்தம் நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. இதன்மூலம் தேவையான நோயாளிகளுக்கு பல்வேறு அவசர சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிக்சைகளின் பொழுது இலவசமாகவே இரத்தம் கொடுக்கப்பட்டு நோயாளிகளின் உயிர் காக்கப்படுகிறது. மேலும், இரத்த வங்கி மற்றும் இரத்த சேமிப்பு மையத்தின் தேவையை கருத்தில் கொண்டு இதனை மற்ற மருத்துவமனைகளிலும் ஏற்படுத்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் 2015-2016 ஆம் நிதி ஆண்டில் ரூ.1074.80 இலட்சம் செலவில் இரத்த சேமிப்பு மையத்தை தரம் உயர்த்துதல் மூலமும், புதிதாகவும் மொத்தம் 12 இரத்த வங்கிகள் உருவாக்குவதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**42—**

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர்

**வினா எண் 12225—திரு. கே.எஸ். மஸ்தான்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், அவலூர்பேட்டை ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2018 மார்ச் 22]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் அவலூர்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மேற்கு மற்றும் தெற்கு பக்கங்களில் சுற்றுச் சுவர் உள்ளது. கிழக்கு மற்றும் வடக்கு பக்கங்களில் சுற்றுச் சுவர் இல்லாததால், கம்பிவேலி போடப்பட்டுள்ளது. எனவே, தற்போது போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததால், செஞ்சி தொகுதி, அவலூர்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கிழக்கு மற்றும் வடக்கு பக்கங்களில் சுற்றுச் சுவர் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.*

**43—**

## செவிலியர் பணியிடத்தை நிரப்புதல்

**வினா எண் 12303—திரு. எம். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், இராகவாம்பாள்புரம் ஊராட்சி, ஆர்க்கத்திப்பட்டு கிராமத்திலுள்ள துணை சுகாதார நிலையத்தை மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வரவும், செவிலியர் பணியிடத்தை நிரப்பவும் அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நார்த்தேவன் குடிகாடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட இராகவாம்பாள்புரம் துணை சுகாதார நிலையம் தற்பொழுது ஆர்ச்சுத்திப்பட்டு கிராமத்தில் இயங்கி வருகிறது. இத்துணை சுகாதார நிலையத்தில் திருமதி ஜி. ஞானசெல்வி, கிராம சுகாதார செவிலியர் அவர்கள் மக்களுக்கு தாய்-சேய் நலப் பணிகள், தடுப்பூசி பணிகள், குடும்ப நலம் மற்றும்*

சிறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் ஆகிய மருத்துவ சேவைகள் சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றன.

**44**—

## தனிப் பிரிவு தொடங்குதல்

**வினா எண் 12306—திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் நீரிழிவு நோய், இரத்த அழுத்த நோய் உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்க தனிப் பிரிவு தொடங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவு (NCD) தேவையான மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருந்து வகைகளுடன் தனிப் பிரிவாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், இந்த பிரிவில் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் மற்றும் பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் புற்றுநோய், மார்பக புற்று நோய்களுக்கான தேவையான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் நோயாளிகளுக்கு தேவையான மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டு தொடர் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது.

**45**—

## மகப்பேறு பிரிவிற்கு உபகரணங்கள் வழங்குதல்

**வினா எண் 13906—திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, நெ. 4,வீரபாண்டி பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு பிரிவிற்கு தேவையான உபகரணங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் சுகாதாரப் பகுதி மாவட்டத்தில் காரமடை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு பிரிவிற்குத் தேவையான தானியங்கி ஆய்ந்தறியும் கருவி வழங்கப்பட்டு நன்முறையில் தற்போது செயல்பட்டு வருகிறது.

**46**—

## தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவுக்கு புதிய கட்டடம்

**வினா எண் 13915—திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப் பாளையம் அரசு மருத்துவமனை 116 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 102 உள் நோயாளிகள் மற்றும் 1,250 வெளி நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே மற்றும் USG வசதி செய்யப்பட்டுள்ளது. மாதமொன்றுக்கு 18,746 ஆய்வக பரிசோதனை, 249 இ.சி.ஜி., 232 எக்ஸ்ரே, 78 USG மேற்கொள்ளப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 89 பிரசவங்களும், 66 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 136 பெரிய மற்றும் 440 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டம், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, பல் மருத்துவப் பிரிவு, முட நீக்கியல் பிரிவு,

சித்தா, காசநோய், குடும்ப நல அறுவை சிகிச்சைப் பிரிவு, சீமாங், குழந்தைகள் நலப் பிரிவு, 6 படுக்கைகள் கொண்ட பச்சிளங் குழந்தைகள் பராமரிப்புப் பிரிவும் உள்ளது. இங்கு, போதுமான குடிநீர் வசதி, குளிர்சாதன வசதியுடன்கூடிய 2 அறுவை அரங்கம், இரத்த வங்கி போன்ற வசதிகள் உள்ளன. மேலும், இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே, ஸ்கேன், Ventilator, Eliza Reader போன்ற கருவிகள் உள்ளன. மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் தொற்று நோய் பிரிவு மற்றும் தொற்றா நோய் சிகிச்சை பிரிவுகள் செயல்படுவதால் அங்கு வரும் நோயாளிகளுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் போதுமான கட்டட வசதிகள் உள்ளன. மேலும், இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள் நோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். எனவே, தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவுக்கு என புதியதாக கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

**47**—

## பிரசவ அறைக்கான கட்டடம் கட்டுதல்

**வினா எண் 13924—திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, நெ.4, வீரபாண்டி பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவ அறைக்கான கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் நெ.4, வீரபாண்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், அரசாணை எண் 46, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 17-2-2014-ன்படி தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.*





நெ.4, வீரபாண்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவ அறைக்கான கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு இல்லாததால், நெ.4, வீரபாண்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவ அறைக்கான கட்டடம் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**48**—

## கழிப்பறை வசதி செய்தல்

**வினா எண் 13927—திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, வெள்ளியங்காடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும் மக்கள் பயன்பாட்டிற்காக கழிவறை வசதி செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளியங்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. வெள்ளியங்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஏற்கனவே கழிவறை வசதி உள்ளது. போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததால் மக்கள் பயன்பாட்டிற்காக கூடுதல் கழிவறை வசதி செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.*

**49**—

## மருத்துவமனை கட்டடங்களைச் சீரமைத்தல்

**வினா எண் 13928—திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை கட்டடங்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*[2018 மார்ச் 22*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப் பாளையம் அரசு மருத்துவமனை 116 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 102 உள் நோயாளிகள் மற்றும் 1,250 வெளி நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே மற்றும்* USG *வசதி செய்யப்பட்டுள்ளது. மாதமொன்றுக்கு 18,746 ஆய்வக பரிசோதனை, 249 இ.சி.ஜி., 232 எக்ஸ்ரே, 78* USG *மேற்கொள்ளப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 89 பிரசவங்களும், 66 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 136 பெரிய மற்றும் 440 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டம், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, குடும்ப நல அறுவை சிகிச்சைப் பிரிவு, சீமாங், குழந்தைகள் நலப் பிரிவு, 6 படுக்கைகள் கொண்ட பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு பிரிவும் உள்ளது. தொற்று நோய் பிரிவு போன்ற பிரிவுகள் உள்ளன. இங்கு, போதுமான குடிநீர் வசதி, குளிர்சாதன வசதியுடன்கூடிய 2 அறுவை அரங்கம், இரத்த வங்கி போன்ற வசதிகள் உள்ளன. மேலும், இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே, ஸ்கேன்,* Ventilator, Eliza Reader *போன்ற கருவிகள் உள்ளன. இம்மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் நலனை கருத்தில் கொண்டு ஒவ்வொரு நிதி ஆண்டிலும் கட்டட பராமரிப்பு நிதியின்கீழ் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த வருடம் 2015-2016 ஆம் ஆண்டிற்கான ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு கட்டட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது இம்மருத்துவமனை போதிய அளவு கட்டட வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.*

**50—**

## அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்குதல்

**வினா எண் 14063—திரு. சு. புகழேந்தி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*2018 மார்ச் 22]*

*(அ) மதுராந்தகம் தொகுதியில் தேசிய நெடுஞ்சாலை பகுதியில் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் உயிர் காக்கும் சிகிச்சைப் பிரிவுடன் மருத்துவமனை தொடங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் அரசு மருத்துவமனை 110 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றிற்கு சராசரியாக 1,091 வெளி நோயாளிகளும், 87 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 15,740 ஆய்வகப் பரிசோதனை, 132 இ.சி.ஜி., 199* USG, *87 எக்ஸ்ரே, எடுக்கப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 69 பிரசவங்கள், 38 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 82 பெரிய அறுவை சிகிச்சைகள், 1,332 சிறிய அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. மேலும், இம்மருத்துவனையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை, சீமாங், மற்றும்* NBSU, *இரத்த வங்கி உள்ளிட்ட சிறப்புப் பிரிவுகள் உள்ளன. மின்னாக்கி, குளிரூட்டப்பட்ட 2 அறுவை அரங்கம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஆகியவை உள்ளன. 108 அவசர சிகிச்சை ஊர்தி வசதி உள்ளது. இம்மருத்துவமனையில் ஸ்கேன், எக்ஸ்ரே, இ.சி.ஜி.,* Cell Counter, Pulse oximeter, Photo Therapy Unit Defibrillator, Ventilator, Multi Parameter, Traction Unit, Radio Therapy Unit *போன்ற தேவையான மருத்துவக் கருவிகள் உள்ளன. மதுராந்தகம் தொகுதியில் மேற்படி மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவுடன் தேவையான வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், தேசிய நெடுஞ்சாலை பகுதியில் மதுராந்தகத்தில் இருந்து 25 கி.மீ.-ல் செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அவசர சிகிச்சை, உயிர் காக்கும் சிகிச்சை போன்ற பல்வேறு பிரிவுகளுடன் போதுமான வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எனவே, மதுராந்தகம் தொகுதியில் தேசிய நெடுஞ்சாலை பகுதியில் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் உயிர் காக்கும் சிகிச்சைப் பிரிவுடன்கூடிய மேலும் ஒரு அரசு மருத்துவமனையை தொடங்க தற்போது அவசியம் எழவில்லை.*

[2018 மார்ச் 22

**51**—

## புற நோயாளிகள் பிரிவிற்கு புதிய கட்டடம்

**வினா எண் 14107—திரு. பெரியண்ணன் அரசு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, பெருங்களூர் கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் புற நோயாளிகள் பிரிவிற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பெருங்களூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பெருங்களூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புற நோயாளிகள் பிரிவுக் கட்டடம் தற்போது பழுது நீக்கம் செய்யப்பட்டு நல்ல நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.*

**52**—

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர்

**வினா எண் 14166—திரு. சபா. ராசேந்திரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில் காடாம்புலியூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு இல்லாததால்,*



2018 மார்ச் 22]

*காடாம்புலியூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.*

**53**—

## செவிலியர் குடியிருப்பு கட்டுதல்

**வினா எண் 14260—திரு. என். முருகுமாறன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, வாண்டையார் இருப்பு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செவிலியர் குடியிருப்பு கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தில் வாண்டையார் இருப்பு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.*

*வாண்டையார் இருப்பு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செவிலியர் குடியிருப்பு, 2011-2012 ஆம் ஆண்டு தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.*

**54**—

## பிரேத பரிசோதனைக் கூடம் அமைத்தல்

**வினா எண் 14734—திரு. கே.எஸ். விஜியகுமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனை, 38 படுக்கை வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டுவரும் வட்ட அரசு மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றுக்கு சராசரியாக, 590 வெளி நோயாளிகளும், 33 உள் நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 9 பிரசவங்கள், 7 பெரிய மற்றும் 291 சிறிய அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 7,318 ஆய்வக பரிசோதனைகள், 22 ஸ்கேன், 154 இ.சி.ஜி. எடுக்கப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, சித்தா போன்ற பிரிவுகள், குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், 25 கே.வி. மின்னாக்கி, 108 அவசரகால ஊர்தி, பிணவறை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO Plant) போன்ற வசதிகள் உள்ளன. தற்போது, கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனைக் கூடம் உள்ளது. பிரேதப் பரிசோதனைக் கூடத்திற்கு அருகிலேயே மசூதி மற்றும் தேவாலயம் போன்றவை உள்ளதால் பொதுமக்களின் கோரிக்கையினால் இம்மருத்துவமனைக்கு வரும் பிரேதங்கள் அருகில் உள்ள பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பப்படுகின்றன.*

**55—**

## சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி

**வினா எண் 18878—திரு. சு. ரவி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், ஆட்டுப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தனியாக ஆழ்துளைக் கிணறு அமைத்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியத்தில் ஆட்டுப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பஞ்சாயத்திலிருந்து குழாய்மூலம் குடிநீர் வசதி தற்போது பெறப்பட்டு வருகிறது. எனவே, அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், ஆட்டுப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தனியாக ஆழ்துளைக் கிணறு அமைத்து சுத்தகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.*

**56—**

## சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி

**வினா எண் 18899—திரு. சு. ரவி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், மேல்களத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் செவிலியர் குடியிருப்பில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியத்தில் மேல்களத்தூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேல்களத்தூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் செவிலியர் குடியிருப்பிற்கு பஞ்சாயத்திலிருந்து குழாய்மூலம் குடிநீர் வசதி பெறப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.*

[2018 மார்ச் 22

**57—**

## மகப்பேறு பிரிவினை செயல்படுத்துதல்

**வினா எண் 18902—திரு. சு. ரவி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், மேல்களத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பேறுகால மையத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியத்தில் மேல்களத்தூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேல்களத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறுப் பிரிவு (பேறுகால மையம்) 2012-13 ஆம் நிதியாண்டில் தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் ரூ.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறைமூலம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**58—**

## ஊடுகதிர் பிரிவிற்கு தனி அறை அமைத்தல்

**வினா எண் 19417—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பவும், ஊடுகதிர் (X-ray) பிரிவிற்கு தனி அறை அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2018 மார்ச் 22]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் அரசு மருத்துவமனை, 525 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாக இயங்கி வருகிறது. இங்கு நாளொன்றுக்கு 1,657 வெளிநோயாளிகள், 387 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதமொன்றுக்கு 35,502 ஆய்வக பரிசோதனை, 2,074 எக்ஸ்ரே, 495 ஸ்கேன், 711 சி.டி. ஸ்கேன், 902 இ.சி.ஜி. மேற்கொள்ளப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 377 பிரசவங்களும், 166 சிசேரியன்களும் நடைபெறுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 366 பெரிய அறுவை சிகிச்சைகளும், 2,100 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகிறது. இம்மருத்துவமனையின் செயல்பாட்டினை கருத்தில்கொண்டு 38 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இதில் சிறப்பு மருத்துவர்கள் உட்பட 23 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். 58 செவிலியர்கள் ஒப்பளிக்கப்பட்டு அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், போதிய அளவு மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்கள் பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அவ்வப்போது பதவி உயர்வு மற்றும் பணி ஓய்வினால் ஏற்படும் காலிப்பணியிடங்கள் எதிர்வரும் பணிநியமனம் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுகளின்மூலம் நிரப்பப்படும். மேலும், இம்மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே, எக்ஸ்ரே போன்ற வசதிகள் உள்ளன. இவை உரிய கட்டட வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால் தற்போதுள்ள மருத்துவர்கள், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**59—**

## தாய்-சேய் நல மையத்தை செயல்படுத்துதல்

**வினா எண் 21511—திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[*2018 மார்ச் 22*

*பத்மநாபபுரம் தொகுதி, திக்கணங்கோடு, தாராவிளையில் உள்ள தாய்-சேய் நல மையத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை ஊராட்சி ஒன்றியம், ஒலவிளை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் திக்கணங்கோடு (மேற்கு) துணை சுகாதார நிலையம் (தாய்-சேய் நல மையம்) தாராவிளை பகுதியில் 1972 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய நிதியின்கீழ் கட்டப்பட்டுள்ளது. இந்த துணை சுகாதார நிலையம் தற்பொழுது பயன்படுத்த முடியாத நிலையில் பழுதடைந்துள்ளதால், இந்த துணை சுகாதார நிலையம், தாராவிளை, திக்கணங்கோடு என்னும் முகவரியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. 2017-2018 நிதியாண்டிற்கு இச்சுகாதார மாவட்டத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் பழுது மற்றும் பராமரிப்புப் பணிகள் செய்திட, நிதி ஒதுக்கீடு பெற பொதுப் பணித் துறை உதவிப் பொறியாளர் அவர்களிடம் உத்தேச மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. இதனடிப்படையில், உரிய நிதி உதவி பெற்று, பழுது மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், இந்தத் துணை சுகாதார நிலையம்மூலம் தாய்-சேய் நலப் பணிகள், தடுப்பூசி பணிகள், குடும்ப நலம் மற்றும் சிறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் ஆகிய மருத்துவ சேவைகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.*

**60—**

## காத்திருப்போர் அறை கட்டுதல்

**வினா எண் 21910—திரு. அ. நடராஜன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, செம்மியம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கான காத்திருப்போர் அறை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



*2018 மார்ச் 22*]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்று (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் செம்மியம்பாளையம் பிரதான / மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இச்சுகாதார நிலையத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கான காத்திருப்போர் அறை ஏற்கெனவே உள்ளது.*

**61—**

## ஆரம்ப சுகாதார நிலையத்தினை செயல்படுத்துதல்

**வினா எண் 22357—திருமதி ம. கீதா:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, ரெங்கநாதபுரம் ஊராட்சி, கட்டளையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கட்டளை கிராமம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. கட்டளை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. துணை சுகாதார நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது. இந்தத் துணை சுகாதார நிலையம் வாடகை கட்டடத்தில் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. இந்தத் துணை சுகாதார நிலையம், சேங்கல் ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. கட்டளை கிராமத்தின் மக்கள்தொகை 897. இந்தத் துணை சுகாதார நிலையத்தின் கிராம செவிலியர்மூலம் பொது மக்களுக்கு தாய்-சேய் நலப் பணிகள். தடுப்பூசி பணிகள், குடும்ப நலம் மற்றும் சிறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் ஆகிய மருத்துவ சேவைகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.*

**62—**

**வேளாண் இடுபொருட்களை மானிய விலையில் வழங்குதல்**

**வினா எண் 3367—திரு. அ. ராமு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு, குறு தேயிலை சாகுபடியாளர்களுக்கு தேவையான இடுபொருட்களை மானிய விலையில் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். தற்பொழுது தேயிலை விவசாயிகளுக்கு மானிய விலையில் விசை தெளிப்பான் 50% மானியத்திலும், தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் சிறு/குறு விவசாயிகளுக்கு 100% மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75% மானியத்திலும் வழங்கப்பட்டு வருகிறது.

**63—**

**ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்**

**வினா எண் 14026—திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதியில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி இருக்கும் நெல்லை மாவட்டத்தில், தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருவதால், அதைத் தழுவிய ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், கரூர், காஞ்சிபுரம்,





நாகப்பட்டினம், நாமக்கல், திருவண்ணாமலை, திருவள்ளூர், திருவாரூர், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்படாத மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**64—**

**மூலிகை பயிர் சாகுபடி செய்தல்**

**வினா எண் 14027—திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காட்டில் மூலிகை பயிர் சாகுபடி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி மற்றும் களக்காடு வட்டாரத்தில் தேசிய மூலிகைப் பயிர்கள் இயக்கத்தின்கீழ் மூலிகைப் பயிர்கள் சாகுபடி செய்து பயன் பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு:—

(1) 2014-2015 ஆம் ஆண்டிற்கு தேசிய மூலிகைப் பயிர்கள் திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு இலக்கு ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

(2) 2015-2016 ஆம் ஆண்டிற்கு தேசிய மூலிகைப் பயிர்கள் திட்டத்தில் நாங்குநேரி வட்டாரத்தில் நெல்லி ஒட்டுச் செடிகள் 5.55 எக்டரில் 7 விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

(3) 2016-2017 ஆம் ஆண்டிற்கு தேசிய மூலிகைப் பயிர்கள் திட்டத்தில் களக்காடு வட்டாரத்தில் நெல்லி ஒட்டுச் செடிகள் 6 எக்டரில் 5 விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

**65—**

**உதவி வேளாண்மை அலுவலர் அலுவலகம் கட்டுதல்**

**வினா எண் 14602—திருமதி நா. மனோரஞ்சிதம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2018 மார்ச் 22

*(அ) ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், மத்தூரில் உதவி வேளாண்மை அலுவலர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஊத்தங்கரை தொகுதிக்குட்பட்ட மத்தூர் ஒன்றியம், மத்தூரில், அரசால் (2014-2015) உதவி வேளாண்மை அலுவலர் அலுவலகம் அடங்கிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய கட்டடம் ரூ.1.50 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்படுகிறது.*

**66—**

## கொப்பரைக்கு விலை பாதுகாப்பு காப்பீடு திட்டம்

**வினா எண் 17323—திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்னை விவசாயிகள் உற்பத்தி செய்யும் தேங்காய் கொப்பரைக்கு குறைந்தபட்ச விலை பாதுகாப்பு காப்பீடு திட்டத்தை செயல்படுத்த செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மத்திய அரசு 2017-2018 ஆம் ஆண்டிற்கு ஒரு குவிண்டாலுக்கு அரவை கொப்பரைக்கு ரூ.6,500/- (ஒரு கிலோவிற்கு ரூ.65/-) என குறைந்தபட்ச ஆதரவு விலையினை நிர்ணயம் செய்துள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் அரவை கொப்பரைக்கான உள்ளூர் விற்பனை விலையானது ஒரு கிலோவிற்கு ரூ.75/- முதல் ரூ.80/- வரை உள்ளது.*



2018 மார்ச் 22]

*உள்ளூர் விற்பனை விலையானது குறைந்தபட்ச ஆதரவு விலையினைவிட அதிகமாக உள்ளதால், குறைந்தபட்ச ஆதரவு விலையில் விவசாயிகளிடமிருந்து கொப்பரையை வாங்குவதற்கான சாத்தியக்கூறுகள் எழவில்லை. உள்ளூர் விற்பனை விலை குறையும்பொழுது மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொப்பரையை கொள்முதல் செய்ய அரசால் நடவடிக்கை எடுக்கப்படும்.*

**67—**

## உணவு தானிய பயிர்களை அதிக அளவில் பயிரிடுதல்

**வினா எண் 18986—திரு.** S. **செம்மலை:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குறைந்த நீர்ச் செலவில் பயிரிடப்படும் உணவு தானிய மற்றும் பயிர்களை அதிக அளவில் பயிரிட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*குறைந்த நீர்ச் செலவில் பயிரிடப்படும் சிறு தானியம் மற்றும் பயறு வகைகளை அதிக அளவில் பயிரிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறு தானியப் பயிர்களைப் பொறுத்தவரை, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தரமான விதை உற்பத்தி, உயர் விளைச்சல் ரக விதைகள் விநியோகம், நுண்ணூட்டக் கலவை மற்றும் உயிர் உரங்கள் விநியோகம், தொகுப்பு செயல் விளக்கங்கள் மற்றும் மதிப்பு கூட்டுதலுக்கான பயிற்சி போன்ற இனங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

*மேலும், தேசிய உணவு பாதுகாப்பு (சிறு தானியம்) திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்கள் குறித்த செயல் விளக்கங்கள், 10 வருடங்களுக்கு உட்பட்ட உயர் விளைச்சல் ரகம் மற்றும் வீரிய ஒட்டுரக விதைகள் விநியோகம் மற்றும் பயறு வகை பயறுகளை ஊடு பயிராக சாகுபடி செய்தல் போன்ற இனங்கள் சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், திருப்பூர், திண்டுக்கல்,*

தேனி மற்றும் தூத்துக்குடி ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், விவசாயிகளை ஊக்குவிக்கும்வகையில் குறைந்த நீர் தேவைப்படும் பயிர்களுக்கான சிறப்புத் தொகுப்புத் திட்டங்களும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**68**—

## புதிய நெல் மற்றும் கரும்பு ரகத்தை அறிமுகப்படுத்துதல்

**வினா எண் 21198—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரி டெல்டா மாவட்டங்களில் குறுகிய காலத்தில் அதிக மகசூல் தரக்கூடிய புதிய நெல் மற்றும் கரும்பு ரகத்தை அறிமுகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

காவேரி டெல்டா மாவட்டங்களில் குறுவை (ஜூன்-ஜூலை) மற்றும் தாளடி (செப்டம்பர்-அக்டோபர்) பருவங்களில் முறையே 5.185 இலட்சம் ஏக்கர் மற்றும் 4.42 இலட்சம் ஏக்கர் பரப்பில் குறுகிய கால நெல் இரகங்கள் ADT36, ADT43, ADT45 பயிரிடப்படுகின்றன. இது தொடர்பாக அரசால் ஏற்கெனவே, Co51 என்ற குறுகிய கால உயர் விளைச்சல் ரகம் குறுவை மற்றும் தாளடி பருவங்களில் பயிரிட அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகள், இந்த உயர் விளைச்சல் ரகத்தை வெற்றிகரமாக பயிரிட்டு பயன் பெறுகின்றனர். மேலும், தேவையான விதைகள் வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதோடு, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் போன்ற திட்டங்கள்மூலம் மானிய விலையில் (குவிண்டாலுக்கு ரூ.1,000/- வீதம்) விநியோகிக்க தயார் நிலையில் உள்ளது.

தமிழகத்தில் ஆண்டுதோறும் சராசரியாக 3.0 இலட்சம் எக்டர் பரப்பில் கரும்பு பயிரிடப்படுகிறது. ஒரு எக்டருக்கு சராசரியான மகசூலாக 95 மெ.டன் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. கரும்பு பயிரிடப்படும் விவசாயிகளை ஊக்குவிக்கும்வகையில், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கரும்பு பயிர் 11-12 மாதங்கள்





பயிரிடப்படும் பயிராகும். காவேரி டெல்டா மாவட்டங்களில் புதிய கரும்பு ரகங்களை அறிமுகப்படுத்த, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்மூலம் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**69**—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 22544—திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சி, 63-வது வட்டம், சிங்காநல்லூர் குளத்தேரி கிழக்கு பகுதியில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:**

சிங்காநல்லூர் தொகுதி, 63-வது வட்டத்திற்குட்பட்ட குளத்தேரி கிழக்கு பகுதி, நீர்நிலை புறம்போக்கு என்ற வகைப்பாட்டில் உள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை.

**70**—

## கூடுதல் தொழிற்கூடங்கள் கட்டுதல்

**வினா எண் 13506—திருமதி நா. மனோரஞ்சிதம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையில் உள்ள சிட்கோ வளாகத்தில் கூடுதல் தொழில் கூடங்கள் கட்டி மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையில் உள்ள சிட்கோ வளாகத்தில் கூடுதல் தொழில் கூடங்கள் கட்டி மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2018 மார்ச் 22

**71—**

## எண்ணெய் தயாரிக்கும் ஆலையை தொடங்குதல்

**வினா எண் 16114—திரு. சி.வி. இராஜேந்திரன்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில் உள்ள எண்ணெய் தயாரிக்கும் ஆலையை புனரமைத்து, மீண்டும் தொழில் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில் உள்ள சூரியகாந்தி எண்ணெய் பிழியும் ஆலையை மீண்டும் புதுப்பித்து தொழில் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**72—**

## ஊக்கத் தொகை வழங்குதல்

**வினா எண் 22083—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குடிசைத் தொழில் செய்யும் முதியோர்களுக்கு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக வருடத்திற்கு ஒரு முறை ஊக்கத் தொகை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குடிசை தொழில் செய்யும் முதியோர்களுக்கு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக வருடத்திற்கு ஒரு முறை ஊக்கத் தொகை வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*



2018 மார்ச் 22]

**73—**

## வாசனை திரவியத் தொழிற்சாலை

**வினா எண் 22928—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**74—**

## தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

**வினா எண் 8495—திருமதி பொன். சரஸ்வதி :** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோட்டில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருச்செங்கோடு அமைந்துள்ள நாமக்கல் மாவட்டத்தில் தற்போது இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 314 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இவற்றில் 65 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. மேலும்,*

[2018 மார்ச் 22

*தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்கும் திட்டத்தின்கீழ் திருச்செங்கோடு அமைந்துள்ள நாமக்கல் மாவட்டத்தில் இயங்கிவரும் 3 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் நிரப்பப்பட வேண்டிய 106 இடங்களில் 69 இடங்கள் காலியாக உள்ளன. எனவே, புதியதாக மேலும் ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையம் திருச்செங்கோட்டில் அமைக்க தேவை ஏற்படவில்லை.*

**75**—

## தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

**வினா எண் 9677—திரு. என். முருகுமாறன்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், கூடுவெளிச்சாவடியில் ஆதி திராவிடர் நலத் துறைக்கு சொந்தமான இடத்தில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) காட்டுமன்னார்கோவிலில் ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்திட ஆணையிடப்பட்டு, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இத்தொழிற்பயிற்சி நிலையத்திற்கென சொந்தக் கட்டடம் அமைத்திட காட்டுமன்னார்கோவில் தாலுக்கா, கூடுவெளிச்சாவடி, நஞ்சை நிலம் என்ற இடம் தேர்வு செய்யப்பட்டு, பிறகு போதிய இடமின்மையால் கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் காட்டுமன்னார்கோவில் தாலுக்கா, தேத்தாம்பட்டு கிராமம் தேர்வு செய்யப்பட்டு அந்த இடத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.*

*(ஆ) எழாது.*



2018 மார்ச் 22]

**76**—

## தொழிற்பிரிவுகளை ஏற்படுத்துதல்

**வினா எண் 11813—திரு. சு. ரவி:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் தொழிற்பயிற்சி நிலையத்தில் தச்சர், வரைபடம் தயாரிப்பவர், வண்ணம் தீட்டுபவர், வயர்மேன், நில அளவையாளர் ஆகிய தொழிற் பிரிவுகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளில் ஏற்படும் வேலைவாய்ப்புகளுக்கு ஏற்றவாறும் மற்றும் இளைஞர்களிடையே காணப்படும் வரவேற்பிற்கு ஏற்றவாறும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற்பிரிவுகள் ஆண்டுதோறும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. அரக்கோணம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2015-2016 ஆம் ஆண்டில், ரூ.40.45 இலட்சம் செலவில்* Mobile Phone Technology *என்ற தொழிற்பிரிவு புதியதாக தொடங்கப்பட்டுள்ளது. எனவே அரக்கோணம், அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைந்துள்ள அதன் சுற்றுவட்டாரங்களில், தச்சர், வரைவாளர், வர்ணம் பூசுபவர், கம்பியாள், நில அளவையாளர் ஆகிய தொழிற்பிரிவுகளுக்கான போதிய வரவேற்புகள் இருக்கும்பட்சத்தில், உரிய பரிசீலனை மேற்கொண்டு அதனடிப்படையில் இத்தொழிற்பிரிவுகள் துவங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**77**—

## ESI மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 24676—திரு. அ. நல்லதம்பி:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2018 மார்ச் 22

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரம், கோட்டை தெரு மற்றும் ஆரிப் நகர் பகுதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தின் விதிமுறைப்படி, 50,000 தொழிலாளர்கள் ஒரு பகுதியில் வசித்து வந்தால் மட்டுமே, 50 படுக்கை வசதி கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க இயலும். ஏற்கெனவே திருப்பத்தூர் பகுதியில் 1991 காப்பீட்டு நபர்கள் வசிப்பதாக கண்டறியப்பட்டு, 27-2-2017 அன்று தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தால் ஒரு மருத்துவர் கொண்ட மருந்தகம் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரம், கோட்டை தெரு மற்றும் ஆரிப் நகர் பகுதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைத்திட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

**78—**

## இரயில் நின்று செல்லும் வசதி

**வினா எண் 8592—திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் தொகுதி, சிங்காநல்லூர் இரயில் நிலையத்தில், அனைத்து இரயில்களும் நின்று செல்ல மத்திய இரயில்வே துறைக்கு பரிந்துரை செய்ய மாநில அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் இரயில் நிலையத்திலிருந்து 15 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சிங்காநல்லூரில் 5 இணை பயணிகள் இரயில்கள், மெயில் மற்றும் விரைவு இரயில்கள் நின்று செல்கின்றன என்றும்,



2018 மார்ச் 22]

சிங்காநல்லூர் இரயில் நிலையத்தில் பெறப்படும் பயணச் சீட்டுகளின் விற்பனை அதிகரிக்கும்பட்சத்தில் அனைத்து மெயில் மற்றும் விரைவு இரயில்கள் சிங்காநல்லூர் இரயில் நிலையத்தில் நிறுத்தப்படுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் இரயில்வே துறை தெரிவித்துள்ளது.

**79—**

## போக்குவரத்துப் பணிமனைக்கு புதிய கட்டடம்

**வினா எண் 21495—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணிமனையின் தரைதளத்தைச் சீரமைக்கவும், புதிய கட்டடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம் போக்குவரத்துக் கழகத்தின் தற்போதைய நிதி நெருக்கடியின் காரணமாக பணிமனையின் தரைத்தளத்தை சீரமைக்கவும், புதிய கட்டடம் கட்டுவது குறித்தும் தற்பொழுது பரிசீலிக்க இயலவில்லை. இருப்பினும், கும்பகோணம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியினை அளித்திடும்பட்சத்தில் மேற்படி பணியினை செயல்படுத்திட இயலும்.

**80—**

## பெயர் பொறித்த வில்லைகளைப் பயன்படுத்துதல்

**வினா எண் 22504—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2018 மார்ச் 22

(அ) அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு பெயர் பொறித்த வில்லைகளை அணிந்து பணியாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள் தங்கள் பணியின்போது பெயர் பொறித்த வில்லைகளை அணிந்துதான் பணியாற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு, பயணச் சீட்டு பரிசோதகர்கள்மூலம் பெயர் வில்லை அணிந்து பணிபுரிகிறார்களா என கண்காணிக்கப்படுகிறது. அவ்வாறு பணிபுரியாத ஓட்டுநர் மற்றும் நடத்துநர்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**81—**

## விரைவு ரயில் நின்று செல்லும் வசதி

**வினா எண் 22732—திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் இரயில் நிலையத்தில் அனைத்து விரைவு இரயில்களும் நின்று செல்ல மத்திய அரசிடம் வலியுறுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இரயில் நிறுத்தத்தை தேர்வு செய்வது இரயில்வே வாரியத்தின் (Railway Board) கொள்கை முடிவாகும். திருவொற்றியூர் இரயில் நிலையம் மின்சார இரயிலின் மூலமாக நன்கு இணைக்கப்பட்ட புறநகர் இரயில் நிலையமாதலால், இரயில்வே வாரியத்தின் தற்போதைய கொள்கையின்படி கூடுதலாக எந்த புறநகர் இரயில் நிலையங்களிலும் விரைவு இரயில்கள் நின்று செல்ல அனுமதி



2018 மார்ச் 22]

வழங்கப்படுவதில்லை. மேலும் திருவொற்றியூர் இரயில் நிலையத்தில், 12 பெட்டிகள் கொண்ட இரயில்கள் நின்று செல்வதற்கு மட்டுமே நடைமேடை வசதி உள்ளதால் திருவொற்றியூர் இரயில் நிலையத்தில் விரைவு இரயில்கள் நின்று செல்வதற்கான வாய்ப்பில்லை என்று இரயில்வே துறை தெரிவித்துள்ளது.

**82—**

## புதிய பேருந்து வழித்தடங்கள் ஏற்படுத்துதல்

**வினா எண் 23455—திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம், திருவாலங்காடு வரை புதிய பேருந்து வழித்தடங்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூரிலிருந்து திருவாலங்காடு வழியாக தடம் எண் 105சி பேருந்து திருவள்ளூரிலிருந்து அரக்கோணம் வரை 2 பேருந்துகள்மூலம் 12 நடைகளும், தடம் எண் 86-பேருந்து திருவள்ளூரிலிருந்து அரக்கோணம் வரை 6 நடைகளும் மற்றும் தடம் எண் டி2-பேருந்து திருவள்ளூரிலிருந்து களியனூர் வரை 6 நடைகளும் என 4 பேருந்துகள்மூலம் தினமும் 24 நடைகள் இயக்கப்படுகின்றன. இப்பகுதியில், பயணிகளின் அடர்வு 73 சதவிகிதத்திற்கு குறைவாகவே உள்ளதால், தற்போது உள்ள பேருந்து வசதிகளே போதுமானதாக உள்ளது. எனவே, கூடுதலாக வழித்தடங்கள் ஏற்படுத்தி பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**83—**

## இ-சேவை மையங்கள் அமைத்தல்

**வினா எண் 22501—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பேரூராட்சிகளில் இ-சேவை மையங்கள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பேரூராட்சிகளில் இ-சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் மொத்தம் உள்ள 528 பேரூராட்சிகளில் இதுவரை 392 பேரூராட்சிகளில் 694 இ-சேவை மையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் 816 செயலிட முகப்புகள்* (Counters) *மூலம் மக்களுக்கு அரசு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.*

**84—**

## கோயில் கட்ட நிதி ஒதுக்கீடு

**வினா எண் 1606—திரு. பி.எம். நரசிம்மன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதிகளில் கோயில் கட்ட இந்து சமய அறநிலையத் துறை மூலமாக நிதி ஒதுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்களை புனரமைக்க இந்து சமய அறநிலையத்துறையின்மூலம் ரூ.1 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது. புதியதாக திருக்கோயில் கட்ட இந்து சமய அறநிலையத் துறை மூலமாக நிதியுதவி வழங்க வழிவகை இல்லை.*

**85—**

## கோயில் இடத்தினை பயன்பாட்டிற்கு கொண்டு வருதல்

**வினா எண் 5618—திரு. ஆர். நடராஜ்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் குளத்தின் மேற்கு பகுதியிலுள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தினை பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான குளத்தின் மேற்கு பகுதியிலுள்ள 1,975 சதுர அடி பரப்பளவுள்ள இடம் வணிக நோக்கத்திற்காக "இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்" எனும் நிறுவனத்திற்கு வாடகைக்கு விடப்பட்டது. பின்னர் அந்நிறுவனம் வாடகைத் தொகையினை செலுத்தாததால் காலி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டு தற்போது இவ்விடம் திருக்கோயில் நிர்வாகத்தால் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது. மேற்படி இடம் நந்தவனத்தின் தொடர்ச்சியாக இருப்பதால் மேற்படி இடத்தில் திருக்கோயிலுக்கு நந்தவனம் அமைக்கப்படவுள்ளது.*

**86—**

## வாகனம் நிறுத்துமிடம், மண்டபம், பூங்காக்கள் அமைத்தல்

**வினா எண் 5856—திரு. சி. சந்திரசேகரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேந்தமங்கலம் தொகுதி, பேளுக்குறிச்சி பழனியாண்டவர் திருக்கோயில் அருகே வாகனம் நிறுத்துமிடம், திருக்கோயில் மண்டபம், பூங்காக்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், பேளுக்குறிச்சி, அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயிலுக்குச்*

[2018 மார்ச் 22

சொந்தமான நிலங்கள் ஏதும் இல்லை. எனவே, இத்திருக்கோயிலுக்கு அருகே வாகனங்கள் நிறுத்துமிடம், திருக்கோயில் மண்டபம் மற்றும் பூங்காக்கள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.

**87**—

### திருமண மண்டபம் கட்டுதல்

**வினா எண் 5934—திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தொகுதி, 142-வது வட்டம், கொத்தவால்சாவடி தெருவில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றி, சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சென்னை-15, சைதாப்பேட்டை, கொத்தவால்சாவடி, கதவு எண் 117 முதல் 119 முடிய சுமார் 4 கிரவுண்ட் 558 சதுர அடி பரப்பளவுள்ள இடத்தின் ஒரு பகுதியில் சுமார் 1,449 சதுர அடி பரப்பளவுள்ள மனையில் இருந்த ஆக்கிரமிப்பு கடந்த 8-8-2012 அன்று அகற்றப்பட்டு சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு, திருக்கோயில் சுவாதீனத்தில் பாதுகாப்பாக உள்ளது. மேலும், மேற்கண்ட இடத்தில் திருமண மண்டபம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**88**—

### சுற்றுச் சாலை அமைத்தல்

**வினா எண் 6221—திரு. மா. கோவிந்தராசு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2018 மார்ச் 22]

(அ) பேராவூரணியில் உள்ள அருள்மிகு நீலகண்ட பிள்ளையார் கோயிலின் வைரத் தேர் சுற்றி வர சுற்றுச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி நகர் மற்றும் வட்டம், ஏந்தல், அருள்மிகு நீலகண்டபிள்ளையார் திருக்கோயிலுக்கு புதிதாக ரூ.26 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மரத் தேர் செய்யப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக வெள்ளோட்டம் நடைபெறாமல் உள்ளது. இத்தேர் செல்லும் பாதைகள் தனியாருக்கு சொந்தமான பட்டா நிலமாக உள்ளது. முன் காலத்தில் இந்நிலங்களின் பட்டா திருக்கோயில் பெயரில் இருந்துள்ளதால், இந்த நிலங்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நில உரிமையாளர்கள் தேரோடும் சாலை அமைக்க மறுப்பு தெரிவிப்பதால், தேர் செல்லும் பாதைக்கு திருக்கோயில் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்பு, சுற்றுச் சாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

**89**—

### சாலை அமைக்க தடையின்மைச் சான்று வழங்குதல்

**வினா எண் 8123—திரு. அ. நல்லதம்பி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், சின்னகாசிநாயக்கன்பட்டியில் கோவிந்தாபுரம் மெயின் ரோடு முதல் முருகர் கோயில் வரை சாலை அமைக்க தடையின்மைச் சான்று வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, கந்திலி ஒன்றியம், சின்னகாசிநாயக்கன்பட்டி அருள்மிகு

பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் என்கிற முருகன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு கோவிந்தாபுரம் மெயின் ரோட்டிலிருந்து சுமார் 70 அடி நீளமும் 12 அடி அகலத்திலும் தற்போதைக்கு மண் சாலை அமைத்து மக்கள் சென்று வருகின்றனர். மேற்காணும் சாலை அமைந்துள்ள நிலம் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள பெரியகரம் அருள்மிகு லட்சுமிநாராயண பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வே எண் 13414-ல் உள்ள நிலமாகும். இந்நில உரிமை தொடர்பாக 20 வருடத்திற்கு முன் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, தற்போது வழக்கு திருக்கோயிலுக்கு சாதகமாக முடிவாகியுள்ளது. நிலத்தினை தற்போது சுவாதீனம் பெறவும், பட்டா பெயர் மாற்றம் செய்வது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்காணும் பணிகள் முடிவுற்ற பின்னரே இப்பொருள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

**90**—

## திருக்கோயிலுக்கு திருப்பணி செய்தல்

**வினா எண் 11619—திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பருத்திக்கோட்டை ஊராட்சி, தும்பத்திக்கோட்டை கிராமத்திலுள்ள அருள்மிகு மெய்காய் அம்மன் திருக்கோயிலில் திருப்பணிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பருத்திக்கோட்டை ஊராட்சி, தும்பத்திக்கோட்டை, அருள்மிகு மெய்காய் அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள பட்டியலில் சேர்க்கப்படாத திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் பழமையான திருக்கோயில் என்பதால் தொல்லியல் வல்லுநர் கருத்து பெற்றும், மாண்பமை சென்னை உயர் நீதிமன்றக் குழுவின் வழிகாட்டுதல்படியும் இத்திருக்கோயிலுக்கு





மதிப்பீடு தயாரிக்கப்பட்ட நிதியாதாரம் சேகரிக்கப்பட்டபின் உபயதாரர்கள்மூலம் திருப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

**91**—

## சிவன் கோயில் கட்டும் பணி

**வினா எண் 12087—திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திட்டக்குடி தொகுதி, திட்டக்குடி வட்டம், தீவனூர் கிராமத்தில் சிவன் கோயில் கட்டும் பணியை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், தீவளூர், அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில் போதிய வருமானம் இல்லை. இத்திருக்கோயில் திருப்பணிக்கு ரூ.21.33 இலட்சம் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதில் அரசு மானிய நிதியுதவி ரூ.12.00 இலட்சம் பெறப்பட்டு சுவாமி சன்னதி மற்றும் அம்மன் சன்னதி பழுதுபார்த்து புதுப்பித்தல் பணி முழுமையாக நிறைவடைந்துள்ளது. எஞ்சியுள்ள பணிகளான உள்பிரகாரம் தரைவார்த்தல் மற்றும் திருமதில் சுவர் கட்டும் பணிகளுக்கு பொது மக்கள் நன்கொடை/உபயம்மூலம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**92**—

## கோயில் குளத்தைத் தூர்வாருதல்

**வினா எண் 12641—திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, போகனப்பள்ளி அருகில் உள்ள அருள்மிகு முருகர் திருக்கோயிலிலுள்ள குளத்தைத் தூர்வாரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், காட்டிநாயனப்பள்ளி அருள்மிகு ஆஞ்சநேய சுப்பிரமணிய சுவாமி (முருகர் கோயில்) இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் சட்டப்பிரிவு 46(ii)-ன்படி பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு 112.60 அடி நீளமும், 122.00 அடி அகலமும், 16.20 அடி ஆழமும் உள்ள திருக்குளம் ஒன்று உள்ளது. மழை இல்லாமல் நீர்வரத்து இல்லாமல் வற்றிய நிலையில் உள்ளது. இத்திருக்குளத்திற்கு 2013-ம் வருடம் மழைநீர் சேகரிப்பு திட்டம் ஏற்படுத்தப்பட்டு, கடந்த 2 வருடங்களுக்கு முன்பு திருக்குளம் தூர்வாரப்பட்டும், தற்போது திருக்குளம் குப்பைக் கூளங்கள் அகற்றப்பட்டும் நல்ல நிலையில் தூய்மையாக உள்ளது.*

**93—**

## கோயிலுக்கு திருப்பணி செய்தல்

**வினா எண் 12804—திரு. க. கார்த்திகேயன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ரிஷிவந்தியம் தொகுதி, முகையூர் ஒன்றியம், ஜம்பை ஊராட்சியிலுள்ள ஈஸ்வரன் கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோயிலூர் வட்டம், முகையூர் ஒன்றியம், ஜம்பை, அருள்மிகு ஜம்புநாதேஸ்வரர் திருக்கோயில் 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட புராதனமான திருக்கோயிலாகும். தற்போது சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படி, இத்திருக்கோயிலை பழமை மாறாமல் சீரமைக்க தொல்லியல் வல்லுநர் கருத்துரு மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் வழிகாட்டுதலின் அடிப்படையில் உரிய மதிப்பீடு தயாரித்து உபயதாரர் நிதியுடன் அரசு நிதியும் பெற்று தொன்மை மாறாமல் திருப்பணி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*





**94—**

## நிதி உதவி வழங்குதல்

**வினா எண் 16630—திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு வட்டம், பொன்னாவரை கிராமத்தில் உள்ள அருள்மிகு காளியம்மன் ஆலயத்திற்கு கிராம திருக்கோவில் திருப்பணி திட்டத்தில் நிதி உதவி வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், பொன்னாவரை கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு காளியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள பட்டியலில் சேர்க்கப்படாத திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலில் அருள்மிகு பிள்ளையார் மற்றும் அருள்மிகு காளியம்மன் சன்னதிகள் உள்ளன. இத்திருக்கோயில் முன்மண்டபம் புதியதாகக் கட்டப்பட்டு 7-9-2016 அன்று குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. எனவே, இத்திருக்கோயிலுக்கு கிராமப்புற திருக்கோயில் திருப்பணி நிதியுதவி திட்டத்தின்கீழ் தற்போது நிதியுதவி வழங்குவதற்கான அவசியம் எழவில்லை.*

**95—**

## உண்டியலின் காணிக்கை தொகை

**வினா எண் 18304—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் இந்து சமய*

[2018 மார்ச் 22

அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயிலில் 1-4-2015 முதல் 31-3-2016 வரையிலான உண்டியல் காணிக்கை தொகை எவ்வளவு என்பதைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகர் மற்றும் வட்டம், அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயிலின் 1-4-2015 முதல் 31-3-2016 வரையிலான உண்டியல் காணிக்கைத் தொகை விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1-4-2015 முதல் 30-4-2015 வரை | ரூ.5,752/- |
| 1-5-2015 முதல் 31-5-2015 வரை | ரூ.6,201/- |
| 1-6-2015 முதல் 30-6-2015 வரை | ரூ.2,95,557/- |
| 1-7-2015 முதல் 31-7-2015 வரை | ரூ.30,502/- |
| 1-8-2015 முதல் 31-8-2015 வரை | ரூ.58,268/- |
| 1-9-2015 முதல் 30-9-2015 வரை | ரூ.38,378/- |
| 1-10-2015 முதல் 31-10-2015 வரை | ரூ.90,425/- |
| 1-11-2015 முதல் 30-11-2015 வரை | ரூ.6,93,995/- |
| 1-12-2015 முதல் 31-12-2015 வரை | ரூ.76,245/- |
| 1-1-2016 முதல் 31-1-2016 வரை | ரூ.3,36,880/- |
| 1-2-2016 முதல் 29-2-2016 வரை | ரூ.7,45,538/- |
| 1-3-2016 முதல் 31-3-2016 வரை | ரூ.15,23,257/- |
| கூடுதல் | ரூ.40,70,672/- |

**96—**

## திருக்கோயிலுக்கு நுழைவு வாயில்

**வினா எண் 22260—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2018 மார்ச் 22]

(அ) குளச்சல் தொகுதி, மண்டைக்காட்டில் அமைந்துள்ள மண்டைக்காடு அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோயிலுக்கு நுழைவு வாயில் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, சுசீந்திரம், மண்டைக்காடு, அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில் கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்திற்குட்பட்ட ஒரு பெரிய திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு நுழைவு வாயில் அமைக்க உபயதாரர்கள் முன்வரும்பட்சத்தில் இதுகுறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**97—**

## சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 24846—திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, ஆவிடநல்லவிஜயபுரம் ஊராட்சி, பாப்பாநாடு அருள்மிகு திருமேனியம்மன் திருக்கோயில் குளக்கரையை சுற்றி சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பாப்பாநாடு கிராமம், ஆவிடநல்லவிஜயபுரம், அருள்மிகு திருமேனி அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பட்டியலில் சேர்க்கப்படாத திருக்கோயில். இத்திருக்கோயில் நிருவாகம் திருமதி டி. தர்மசம்வர்த்தினி அம்மாள் என்பவரால் பரம்பரை அறங்காவலர் என்ற முறையில் நிருவகிக்கப்பட்டு வருகிறது. மேற்படி திருக்கோயில் திருக்குளம் நல்ல நிலையில் உள்ளது. குளக்கரைக்கு சுற்றுச் சுவர் கட்ட திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லை. எனவே, தற்போது சுற்றுச்சுவர் கட்ட இயலாத நிலை உள்ளது.

[2018 மார்ச் 22

98—

## மாணவர் விடுதி அமைத்தல்

**வினா எண் 4833—திரு. செ. ஸ்டாலின் குமார்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) துறையூர் தொகுதி, துறையூர் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, துறையூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதி அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

99—

## விடுதியில் கூடுதல் இட ஒதுக்கீடு

**வினா எண் 10650—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலம் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி மற்றும் மாணவியர் விடுதியில் கூடுதல் இடம் ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு ஏற்ப நடப்பு கல்வியாண்டில் சேர்க்கை மேற்கொண்ட பின்பு 20% மறுபகிர்வு அடிப்படையில் மற்றும் 10% கூடுதல் இடங்கள் வழங்கவும் மாவட்ட*



2018 மார்ச் 22]

*ஆட்சித் தலைவருக்கு, பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்கு மாநிலத்தில் 1,360 கூடுதல் இடங்கள் வழங்க அதிகாரம் வழங்கப்பட்டு விடுதிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகப்படுத்தும் முறை நடைமுறையில் இருந்து வருவதால் ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதிகளில் கூடுதல் இடங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.*

100—

## முடிதிருத்தும் கருவிகள் வழங்குதல்

**வினா எண் 21942—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கும்பகோணம் வட்டத்தில் விலையில்லா முடிதிருத்தும் கருவிகள் கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு முடிதிருத்தும் கருவிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இத்துறைமூலம் செயல்படுத்தப்பட்டுவந்த முடிதிருத்தும் கருவிகள் வழங்கும் திட்டம் பயனாளிகளிடம் போதிய வரவேற்பு இல்லாத காரணத்தால், அரசாணை எண் 23, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 29-5-2002-ன்படி தொடராமல் கைவிடப்பட்டது. எனவே, விலையில்லா முடிதிருத்தும் கருவிகள் வழங்க வழிவகை இல்லை.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

[2018 மார்ச் 22

## 2. தகவல் கோரல்

### உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி காவேரி மேலாண்மை வாரியம் அமைத்தல், 15-வது நிதி ஆணையத்தின் ஆய்வு வரம்பு மற்றும் 2015 ஆம் ஆண்டு சென்னையில் எற்பட்ட வெள்ளம் குறித்த தணிக்கை அறிக்கை சட்டமன்றத்தில் வைக்காதது ஆகியவை குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 வாரங்களுக்குள் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இம்மாதம் 29 ஆம் தேதி வரையிலே பொறுத்திருப்போம் என்று நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், இந்த அவையிலே ஒரு நல்ல உறுதிமொழியைத் தருவதுபோல சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலை என்னவென்று கேட்டால், தீர்ப்பு வெளிவந்தவுடன், 6 வார காலத்திற்குள் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்க முடியாது என்று மத்திய நீர் வளத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள் ஓர் ஆங்கில பத்திரிகைக்கு அளித்த பேட்டியை நாம் பார்த்தோம். காவேரி பிரிச்சினை குறித்து மாநிலங்களுடைய தலைமைச் செயலாளர்கள் பங்கேற்றக் கூட்டத்திலே பேசிய பிறகு, காவேரி மேலாண்மை வாரியம் என்ற வார்த்தை, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலே இல்லை என்று மத்திய நீர் வளத் துறையினுடைய செயலாளர் அவர்கள் வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார். நேற்றையதினம், மத்திய நீர் வளத் துறையினுடைய செயலாளராக இருக்கக்கூடிய Thiru. U.P. Singh அவர்கள், ஒரு பேட்டியில் '6 வாரங்களுக்குள் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்க முடியாது' என்று வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார். ஆக, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைச் செயல்படுத்த வேண்டிய துறையின் செயலாளரே இப்படி ஒரு பேட்டியைத் தந்திருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, நான் ஏற்கெனவே இந்த அவையிலே, இந்த அரசைக் கேட்டுக்கொண்டதைத்தான் மீண்டும் நினைவுபடுத்துகிறேன். பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திர மாநிலம், தங்களுடைய மாநில பிரச்சினைக்காக, மத்திய அரசுக்கு அழுத்தம் தர வேண்டுமென்கின்ற எண்ணத்திலே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரக்கூடிய ஒரு நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அதுபோல், நம்முடைய மாநில பிரச்சினை குறித்து, இந்த அரசு ஓர் அழுத்தத்தை மத்திய அரசுக்குத் தர*



2018 மார்ச் 22] [திரு. மு.க. ஸ்டாலின்]

*வேண்டுமென்ற அடிப்படையில் எவ்வளவோ முயற்சிகளில் நாம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், எதற்கும் பலன் இல்லாத இந்தச் சூழ்நிலையிலே, இந்த அ.தி.மு.க. அரசு, அங்கு இருக்கக்கூடிய உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக மத்திய அரசுமீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, அழுத்தத்தைத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

*அதுமட்டுமல்ல, 6 வார காலத்திற்குள் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்கவில்லை என்று சொன்னால், மத்திய அரசுமீது, உச்ச நீதிமன்றத்திலே நீதிமன்ற அவமதிப்பு வழக்குகூட தொடுப்பதற்கு உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்தை ஈர்க்கின்றேன்.*

*அதேபோல், 15-வது மத்திய நிதி ஆணையத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய ஆய்வு வரம்பு, மாநிலங்களின் நிதி தன்னாட்சியைப் பாதிக்கக்கூடிய வகையிலே அமைந்திருக்கிறது. அதுகுறித்தும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

*அடுத்து, இன்னொரு முக்கியமான பிரச்சினை. 2015 ஆம் ஆண்டு, சென்னை மாநகரம், கடுமையான வெள்ளத்திலே பாதிக்கப்பட்டபோது, பக்கத்தில் இருக்கக்கூடிய செம்பரம்பாக்கம் ஏரி, முன்னறிவிப்பு இல்லாமல் திறந்துவிடப்பட்ட காரணத்தினால் சென்னையைச் சுற்றியிருக்கக்கூடிய புறநகர் பகுதிகளெல்லாம் தண்ணீரில் மூழ்கி, பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து, உடைமைகளை இழந்த அந்த நிலைமைகளெல்லாம் அனைவருக்கும் தெரியும். எனவே, இதுகுறித்து மத்திய அரசின் மூலமாக இந்த அரசுக்கு ஒரு Audit Report வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரையிலே, அரசின் சார்பில் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய பொதுக் கணக்குக் குழு கூட்டத்திலும் அந்த Audit Report வைக்கப்படவில்லை. சட்டமன்றத்திலும் இதுவரை வைக்கப்படாமல் இருப்பது வேடிக்கையாக இருக்கிறது. ஒருவேளை அதிலே அரசினுடைய குறைபாடுகள், அரசு செய்திருக்கக்கூடிய தவறுகள் எல்லாம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கக்கூடிய காரணத்தால்தான் இதுவரையிலே அது சட்டமன்றத்திலே சமர்ப்பிக்கப்படவில்லையோ என்று நான் நினைக்கிறேன். எனவே, அதுகுறித்தும் அரசினுடைய கவனத்தை ஈர்த்து நான் அமைகிறேன்.*

[2018 மார்ச் 22

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப் பிரச்சினையில், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்பது, காவேரி நடுவர் மன்றத்தினுடைய பிரச்சினையை, தாவாவை, நீர்ப் பங்கீட்டு முறையைப் பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட காவேரி நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பில் விளக்கமாகவும், விவரமாகவும் 'காவேரி மேலாண்மை வாரியம்' என்ற வார்த்தையும், 'காவேரி நீர் முறைப்படுத்தும் குழு' என்ற அந்தச் சொற்றொடரும் இறுதி செய்யப்பட்டிருக்கின்றன. இறுதி செய்யப்பட்ட அந்தச் சொற்றொடரைத்தான் நாம் தமிழக அரசின் சார்பாக, மக்களின் சார்பாக ஒவ்வொரு நிலையிலும் எங்களுடைய தன்மை, உறுதித்தன்மை, நீடித்த, நிலைத்த தன்மை அதுதான் என்று நாங்கள் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய காலத்திலிருந்து இன்றுவரை அனைவரும் வலியுறுத்தி வந்திருக்கின்றோம். இந்தப் பிரச்சினை மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றபொழுது, உச்ச நீதிமன்றமும் ஒரு தீர்க்கமான தீர்ப்பை வழங்கியிருக்கிறது. இரு மாநிலங்களுக்கு அல்லது 3 மாநிலங்களுக்கு இடையே வருகின்ற பிரச்சினையாக இருந்தால், உச்ச நீதிமன்றத்தில் அந்தப் பிரச்சினைகளை எடுத்துச் செல்லுகின்றபொழுது வழங்கப்படுகின்ற தீர்ப்பினை அமல்படுத்துகின்ற கடமையும், பொறுப்பும் மத்திய அரசுக்கு இருக்கிறது. ஆகவே, மத்திய அரசு காவேரி நடுவர் மன்றத்தில் சொல்லப்பட்ட காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் 6 வார காலத்திற்குள் அமைத்திட வேண்டுமென்ற உறுதியான தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இன்னும் 4, 5 நாட்கள் இருக்கின்றன. ஆகவே, அதை தினமும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்களுக்கு நினைவூட்டலாகச் சொல்லிக்கொண்டேயிருக்கிறார். நீங்கள் எந்தளவுக்கு அந்தப் பிரச்சினையில் அழுத்தம் தருகிறீர்களோ, அதற்கும் மேலாக நாடாளுமன்றத்தில் எங்களுடைய அழுத்தம் தினமும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட 13 நாட்களாக சபையே நடக்காதவாறு அங்கே இந்தப் பிரச்சினையை எடுத்துச்சென்று, நாடாளுமன்றத்தில் இருக்கின்ற*



*2018 மார்ச் 22]* [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்தளவிற்கு அழுத்தம் கொடுத்து மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமோ அந்த அளவுக்கு அழுத்தம் கொடுக்கின்ற காரணத்தினால்தான் நாடாளுமன்றத்தையே 13 தினங்களாக முடங்கிப் போக வைத்திருப்பதன்மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு சரித்திரத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த அளவிற்கு நாம் அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்தப் பிரச்சினையில் சட்டத்தின் மூலமாக, நீதிமன்றத்தின் மூலமாக வழங்கப்பட்ட தீர்ப்பினை மத்திய அரசு செயல்படுத்துமா என்ற நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. செய்தித் தாள்களில் மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துகளை அவர் என்ன நினைத்துச் சொன்னார் என்ற விவரம் இன்னும் அரசுக்கு வந்து சேரவில்லை. மத்திய நீர்வளத் துறையின் செயலாளர் அவர்கள் இப்பிரச்சினையின் முழு விவரமும் சொல்லியிருக்கிறார்கள். முழு விவரமும் தெரிந்து அதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பது எங்களுடைய கடமை என்றே நான் கருதுகிறேன். பொறுத்திருப்போம். அது எந்த நிலையை அடைகின்றது என்பதைத் தீர ஆராய்ந்து, மீண்டும் அனைவரும் கூடிப்பேசி, எந்தமாதிரியான சூழ்நிலையை ஏற்படுத்தினால் காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் மத்திய அரசு அமைக்கக்கூடிய சூழல் ஏற்படும்; அதற்கு எந்தமாதிரி அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று நாமெல்லாம் கூடிப்பேசி ஒரு நல்ல முடிவை எடுப்போம் என்பதனை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அடுத்ததாக, 15-வது நிதிக் குழு பற்றி இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதுபற்றிய ஒரு சிறிய விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் பேப்பரைக் கையில் எடுத்தாலே மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் என்னை ஒருமாதிரியாகப் பார்ப்பார். இது ஒரு முக்கியமான பிரச்சினை. பதினைந்தாவது மத்திய நிதி ஆணையம் திரு. என்.கே. சிங் அவர்களின் தலைமையில் அமைப்பதற்கான அறிவிக்கையை கடந்த 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் தேதி மத்திய அரசு வெளியிட்டுள்ளது.*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [*2018 மார்ச் 22*

*2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை ஐந்தாண்டு காலத்திற்கு 15-வது நிதிக் குழு இருக்கும்.*

*மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு பகிர்ந்து அளிக்கப்பட வேண்டிய நிதி அளவுகள் குறித்து, இந்தக் குழு ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்கும்.*

*கடந்த கால மத்திய நிதி ஆணையங்களைப்போல அல்லாமல், பதினைந்தாவது மத்திய நிதி ஆணையத்திற்கான அதிகார வரம்புகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கடந்த காலங்களில் மத்திய நிதி ஆணையத்தின் நிதிப் பகிர்வு குறித்த பரிந்துரைகள் 1971 ஆம் ஆண்டு மக்கள்தொகையின் அடிப்படையில்தான் அமைந்திருந்தன. ஆனால் 15-வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகையின் அடிப்படையில் நிதிப் பகிர்வை மேற்கொள்ள வழிவகுக்கிறது.*

*முற்பகல் 10-10*

*தமிழ்நாடு போன்ற முன்னேறிய மாநிலங்களில் மக்கள்தொகை சிறப்பான முறையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்காத மாநிலங்கள்கூட தமிழ்நாடு போன்ற மாநிலங்களைவிடக் கூடுதல் நிதி உதவி பெறும்வகையில் இந்த அதிகார வரம்பு உள்ளது. அதனால்தான் தமிழ்நாடு இதனைக் கடுமையாக எதிர்க்கிறது.*

*நிதிப் பகிர்வு பரிந்துரைகள், 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகையின் அடிப்படையில் என்று வரம்பு இருந்தால், அறிவிக்கை* 7(ii)*-ன்படி மக்கள்தொகையின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி பிறப்பு விகிதம், இறப்பு விகிதத்திற்குச் சமமான நிலையை அடைய எடுத்த நடவடிக்கைகளுக்கு ஊக்கத் தொகை வழங்குவதற்கு இந்த வரம்புகளில் இடமிருந்தாலும், இந்த ஊக்கத் தொகை* weightage *அளவு, மக்கள்தொகை* weightage *அடிப்படையில் வழங்கப்படும் நிதிப் பகிர்வை சமன் செய்தால் மட்டுமே, தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு இதனால் பாதகம் ஏற்படாது.*

*இது தவிர, முதன்முறையாக மத்திய நிதிக் குழு பரிந்துரைகளில், செயல் அடிப்படையிலான ஊக்கத் தொகை வழங்குவதற்கு சில காரணிகளை இந்த முறை சேர்த்துள்ளனர். அவற்றில் முக்கியமாக அறிவிக்கை பத்தி* 7(iii)*-ல் மத்திய அரசின் திட்டங்களைச்*



*2018 மார்ச் 22*] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் அடிப்படையிலும், பத்தி 7(iv)-ல் மூலதனச் செலவுகள், மின் பகிர்மானக் கழகங்களின் இழப்புகளைக் குறைப்பதற்கு எடுத்த முயற்சிகள், செலவுகளின் தரம் போன்றவற்றின் அடிப்படையிலும், பத்தி 7(v)-ல் வங்கிகள்மூலம் நேரடியாக பயன்களைச் செலுத்துவது, நிதி நிருவாகம், மின்னணு பணப் பரிமாற்றம் போன்றவற்றின் அடிப்படையிலும், இன்னும் பிற காரணிகளின் அடிப்படையிலும் ஊக்கத் தொகை வழங்க மத்திய நிதி ஆணையத்திற்கு அதிகார வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, பத்தி 7(viii)-ன்கீழ் 'Control or lack of it in incurring expenditure on populist measures' என்ற ஷரத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

மத்திய அரசினுடைய திட்டங்கள் எல்லா மாநிலங்களுக்கும் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படுவதில்லை. இத்திட்ட வழிமுறைகளின்படி பின்தங்கிய மாநிலங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்படுகிறது.

இத்தகைய மத்திய அரசின் கொள்கைகளைத் திணிப்பதற்காக இதுபோன்ற அளவுகோல்களை அடிப்படையாகக்கொண்டு ஊக்கத் தொகை வழங்கப்படுவதைப் பல்வேறு மாநில அரசுகள் கடுமையாக எதிர்க்கின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட பல மாநில முதலமைச்சர்களுக்கு கடிதம் எழுதியிருப்பதாக, (குறுக்கீடு) எங்களுக்கு மத்திய அரசிடமிருந்து வந்துவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் கடிதம் எழுதியிருப்பதைப் பற்றி நான் சொல்கிறேன். (குறுக்கீடு) கடிதம் எழுதியிருப்பதாக பத்திரிகைகளில் வந்த செய்திகளை நாங்கள் படித்தோம். ஊக்கத் தொகை வழங்குவதை மாநில அரசு கடுமையாக எதிர்க்கிறது.

மேலும், ஒரு திட்டம் populist திட்டமா, இல்லையா என்பதை நிர்ணயிக்கும் அதிகாரத்தை மத்திய அரசு நிதி ஆணையத்திற்கு வழங்கினால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் அதிகார வரம்பில் அவர்கள் தலையிடுவதாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, populist திட்டங்கள் என்று எதுவும் இல்லை என்றாலும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை எட்டவும், பொருளாதார சமநிலையை அடையவும், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [*2018 மார்ச் 22*

*இத்தகைய பொருத்தமற்ற காரணிகளை மத்திய நிதி ஆணையத்தின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வந்திருப்பது, ஒரு தவறான முயற்சி என தமிழ்நாடு அரசு கருதுகிறது.*

*மேற்கண்ட கருத்துகளின் அடிப்படையில், இந்தத் தேவையற்ற ஷரத்துகள் நீக்கப்பட வேண்டும் என்றும், நியாயமான வகையில் நிதிப் பகிர்வு கணிக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பப்படும்.*

*15-வது மத்திய நிதி ஆணையம் கூட்டும் கலந்துரையாடல் கூட்டங்களில் எல்லாம், மத்திய நிதி ஆணையத்தின் அதிகார வரம்பு முழுமையாக ஏற்க முடியாது என்ற கருத்துகள் கடுமையாக வலியுறுத்தப்பட்டு, மாநிலத்தின் நிலை தொடர்ந்து நிலைநாட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-15*

*மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, மூன்றாவதாக ஒரு பிரச்சினையை இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள மேலாண்மை மற்றும் அதனுடைய தாக்கத்தைப்பற்றிய தணிக்கை அறிக்கை* (Audit Report) *பற்றிய சில கருத்துகளை இங்கே பதிய வைத்திருக்கிறார்கள். அதைப் பற்றியும் சில விளக்கங்களை நான் இங்கே கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.*

*2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 முடிய உள்ள காலத்திற்கான 'மாநில நிதிநிலை', 'பொது மற்றும் சமூகப் பிரிவு', 'பொருளாதாரப் பிரிவு' மற்றும் 'பொதுத் துறை நிறுவனங்கள்' மீதான இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இவை வழக்கம்போல் இந்த வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரின் இறுதி நாளன்று இம்மாமன்றத்தின்முன் சமர்ப்பிக்கப்படும். இதுதவிர, வருவாய்த் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் தொடர்பான அறிக்கைகள் இதுவரை பெறப்படவில்லை. இவை பெறப்பட்டவுடன் இந்தக் கூட்டத் தொடரின் இறுதி நாளன்று மற்ற அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் வெள்ள மேலாண்மை* (Flood Management) *மற்றும் அதன் தாக்கம் குறித்த செயல்பாட்டின் மீதான செயல்பாட்டு தணிக்கை* (Performance



*2018 மார்ச் 22*] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

Audit) *2016 மே முதல் அக்டோபர் வரை நடைபெற்றது. இத்தணிக்கையில், வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை (நீர்வள ஆதாரப் பிரிவு), நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. செயல்பாட்டு தணிக்கை* (Performance Audit) *மீது 18-10-2016 அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் நுழைவு நிலை ஆலோசனைக் கூட்டம்* (Entry Conference Meeting) *நடைபெற்றது. தணிக்கை முடிவுற்றபின், மாநில கணக்காயரால், உண்மைநிலை அறிக்கை* (Factual Report) *அரசுக்கு அனுப்பப்பட்டது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில குறைகள் குறித்து தகுந்த ஆவணங்களுடன் மாநில முதன்மைக் கணக்காயர் அலுவலகத்திற்கு விவரங்களை நேரிடையாக அனுப்பிவைக்க முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் 17-3-2017 ஆம் நாளிட்ட அரசுக் கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டார். 22-12-2016 ஆம் நாளிட்ட அரசுக் கடிதத்தில், துறைத் தலைவரின் ஆலோசனைக்குப் பிறகு, அரசளவில் முடிவுநிலை ஆலோசனைக் கூட்டம்* (Exit Conference) *நடத்தப்பட்டு, தேவைப்படும் திருத்தங்களுடன் அறிக்கை அளிக்கப்படும் என முதன்மைக் கணக்காயர்* (Principal Accountant General) *அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.*

*வரைவு செயல்பாட்டு தணிக்கை அறிக்கையின்* (Draft Performance Audit Report) *மீது 3-5-2017 அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் முடிவுநிலை ஆலோசனைக் கூட்டம்* (Exit Conference) *நடைபெற்றது. அக்கூட்டத்தில் 2015 ஆம் ஆண்டு வெள்ள காலத்தில் அரசுத் தரப்பில் எடுக்கப்பட்ட போர்க்கால நடவடிக்கை குறித்தும், சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டவைகளுக்கும் மேலாக அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட்டு, அனைத்துத் துறையினராலும் வெள்ள மேலாண்மைப் பணிகள் செம்மையாக மேற்கொள்ளப்பட்டது குறித்தும் எந்தப் பதிவுகளும் வரைவு அறிக்கையில் இடம்பெறவில்லை எனத் தலைமைச் செயலாளர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. துறைத் தலைவர்களால் தணிக்கைத் துறைக்கு அளிக்கப்பட்ட பதில் அறிக்கையில் அளிக்கப்பட்ட விவரங்கள் ஏதும் மாநில கணக்காயர் அலுவலகத்தால் கருத்தில் கொள்ளப்படாமலும், ஆவணங்களின் அடிப்படையில் இல்லாமலும் ஒருதலைபட்சமாக வரைவு அறிக்கை* (Draft Report) *மாநில கணக்காயரால் தயாரிக்கப்பட்டுள்ளது.*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 மார்ச் 22

எனவே, அரசுத் தரப்பில் அளிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலான பதிலறிக்கையினைக் கருத்தில்கொண்டு, அறிக்கை தயாரிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது.

பேரிடர் மற்றும் இயற்கைச் சீற்றக் காலங்களில் முனைப்புடன் செயல்படுவதற்கு தமிழக அரசுக்கு ஒரு தெளிவான வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது. பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 வடிவமைப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே பேரிடர் தடுப்பு, தணிப்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு ஆகிய நடவடிக்கைகள் நல்ல முறையில் இவ்வரசால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. மேலும், பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005-ல் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கு உட்பட்டும் மற்றும் அதற்கு மேலாகவும் பேரிடர் மேலாண்மை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தணிக்கைக் குழு உண்மைநிலை அறிக்கை (Factual Report) அளிக்கும்முன் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுடன் விரிவான ஆலோசனை நடத்திய பின்னரே இறுதி அறிக்கையினை அளிக்கும். ஆனால், இந்நிகழ்வில் அதுபோன்று மாநில பேரிடர் நிவாரண ஆணையருடன் ஆலோசனைக் கூட்டம் ஏதும் நடத்தப்படவில்லை.

மேலும், மாநில கணக்காயர் 25-5-2017 ஆம் நாளிட்ட முடிவான தணிக்கை அறிக்கையினை 21-6-2017 அன்று அரசுக்கு அளித்தார். அவ்வறிக்கையில் தலைமைச் செயலாளர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விரிவான பதில்கள் மற்றும் 12-5-2017 அன்று அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து, மாநில பேரிடர் நிவாரண ஆணையர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் அடிப்படையில், 21-6-2017 ஆம் நாளிட்ட அரசு கடிதத்துடன் அனுப்பப்பட்ட பதில்கள் ஆகியவற்றை மாநில கணக்காயர் கருத்தில் கொள்ளவில்லை.

முற்பகல் 10-20

21-6-2017 அன்று தலைமைச் செயலாளர் அவர்கள், மாநிலக் கணக்காயர் அவர்களைத் தொடர்பு கொண்டு தணிக்கை அறிக்கையில் இடம்பெற்றுள்ள சில பத்திகள், ஆவணங்களின் அடிப்படையில் சுட்டிக்காட்டப்படவில்லை என்றும், அவை அறிக்கையில் இடம்பெற ஆதாரம் ஏதும் இல்லை என்பதால், அப்பத்திகளை அறிக்கையிலிருந்து நீக்கம்செய்ய வலியுறுத்தினார்கள். 27-6-2017 ஆம் நாளிட்ட மாநில கணக்காயரின் கடிதத்தில், அரசுத் தரப்பிலிருந்து பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில்,



2018 மார்ச் 22] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வரைவு அறிக்கை திருத்தப்பட்டு, 25-5-2017 அன்றே தலைமைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டுவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது. 21-6-2017 ஆம் நாளிட்ட அரசுக் கடிதத்துடன் அனுப்பப்பட்ட பதிலறிக்கை கருத்திற்கொள்ளப்படாமல், 19-6-2017 அன்று இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு, 21-6-2017 அன்று அரசுக்கு சட்டமன்றப் பேரவையின்முன் வைப்பதற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அரசுத் தரப்பில் அளிக்கப்பட்ட பதிலறிக்கைகளை தணிக்கை அறிக்கையில் சேர்க்க இயலவில்லை என்றும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

செயல்பாட்டு தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பத்திகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது நடைமுறையில் இருப்பதாகும். இதற்கு மாறாக, வருவாய் மற்றும் இதர துறைகள் சார்ந்த இச்செயல்பாட்டு தணிக்கை அறிக்கையானது, சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பட வேண்டும் என்பது முன்நிகழ்வு இல்லாத ஒன்றாகும். மேலும், இது கணக்குத் தணிக்கை அறிக்கையாக இல்லாத காரணத்தினால் சட்டப் பேரவையின்முன் வைப்பதற்கு சட்ட விதிகளில் வழிவகை இல்லை.

கடந்த சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில், நிதித் துறையால் மாநில நிதி, பொது மற்றும் சமூகத் துறை, பொருளாதாரத் துறை, வருவாய்த் துறை, பொதுத் துறை நிறுவனங்கள் சார்ந்த தணிக்கை அறிக்கைகள், 19-7-2017 அன்று சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பட்டன. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் (கடமை, அதிகாரம் மற்றும் பணிநிலை) சட்டம், 1971-ல் (1971 ஆம் ஆண்டைய மத்திய சட்டம் 56) பிரிவு 16-ன்படி இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் கடமையாக, மைய அரசு தொகுப்பு நிதி, மாநில அரசு தொகுப்பு நிதி, யூனியன் பிரதேச தொகுப்பு நிதிக்கு வரவேண்டிய வரவினங்களைத் தணிக்கை செய்வதும், கணக்கீடு மற்றும் வசூல் இனங்களில் அவற்றிற்குரிய விதிகள் மற்றும் நடைமுறைகள் சரியாகப் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பது குறித்து ஆய்வு செய்வதும், இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 151-ன்கீழ் அறிக்கை அளிப்பதும் ஆகும்.

இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 151 உட்பிரிவு (2)-ன்படி இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறையின் அறிக்கை மாநில ஆளுநருக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அவர் மூலமாக

மாநில சட்டப் பேரவையின்முன் வைக்கப்பட வேண்டும். அதன்படி, மாநில தொகுப்பு நிதிக்கு அளிக்கப்பட வேண்டிய அனைத்து வரவுகள் குறித்தும் மேற்கொள்ளப்பட்ட, இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறையின் அறிக்கை மட்டுமே மாநில சட்டப் பேரவைமுன் வைக்கப்பட வேண்டும்.

தணிக்கைத் துறையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செயல்பாட்டு தணிக்கையின் நோக்கமானது மாநகரின் முறையான வளர்ச்சிக்கான பெருந்திட்டங்களை, நீர்நிலைகள் மற்றும் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கான உரிய முக்கியத்துவத்துடன் செயல்படுத்துவதில் பலன்தரத்தக்க தன்மை, மழைநீரின் எளிதான ஓட்டத்தைத் தடுக்கும் ஆக்கிரமிப்புகள் என்ற பிரச்சினையைத் தீர்ப்பதில் பலன் தரத்தக்க தன்மை ஆகியவற்றை ஆய்வு செய்வது குறித்ததாகும்.

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் வெள்ள மேலாண்மை மற்றும் அதன் தாக்கம் குறித்த செயல்பாடு குறித்தும், மாநில கணக்காய்வுத் துறை தலைவரால் சுட்டிக்காட்டப்பட்ட செயல்பாட்டுத் தணிக்கை அறிக்கை குறித்தும் சம்பந்தப்பட்ட துறைகள் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அறிக்கை சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்க வேண்டியதன் சட்டபூர்வ அவசியம் குறித்துத் தெரிவிக்க சட்டத் துறைக்கு கோப்பு அனுப்பப்பட்டுள்ளது. சட்டத் துறையின் கருத்து பெறப்பட்டபின் இவ்வறிக்கையை சட்டப் பேரவையில் வைப்பது குறித்து தக்க முடிவு எடுக்கப்படும்.

சட்டத் துறையின் குறிப்பிற்கிணங்க, இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 151 (2)-ன்கீழ், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் 2015-ல் ஏற்பட்ட வெள்ள மேலாண்மை மற்றும் அதன் தாக்கம் குறித்த செயல்பாட்டு தணிக்கை அறிக்கை, சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து மாநிலத் தலைமை வழக்கறிஞரின் கருத்துரை 13-2-2018 ஆம் நாளிட்ட அரசுக் கடிதத்தின்மூலம் கோரப்பட்டுள்ளது. மாநில Advocate General-ன் அறிக்கை வந்தவுடன் தக்க முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.





**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற வெள்ளத்தில் ஏற்பட்ட பாதிப்பு குறித்து இந்திய தணிக்கை மற்றும் கணக்குத் துறைத் தலைவர் அவர்கள் சிறப்புத் தணிக்கை அறிக்கையை (Special Audit Report) ஜுன் 2017-ல் கொடுத்துவிட்டார்கள். ஆக, 2017-ல் கொடுக்கப்பட்ட இந்த அறிக்கை சட்டமன்றத்திலே இதுவரை வைக்கப்படவில்லை. பொதுக் கணக்குக் குழுவின் பரிசீலனைக்கும் இதுவரை அந்த அறிக்கை அனுப்பப்படவில்லை. அதற்குத்தான் நான் காரணம் கேட்டேன். நீங்கள் சொல்வது இந்த பட்ஜெட் கூட்டத் தொடரின் இறுதியில் வைப்பார்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால், அந்த அறிக்கை 2017-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் நான் இதைக் கேட்கிறேன். ஏன் காலதாமதம்? காலதாமதத்திற்கு என்ன காரணம்? நான் பகிரங்கமாகச் சொல்கிறேன், சட்ட விதியை மீறியிருக்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு சட்ட விதிகளை எந்தவிதத்திலும் மீறவில்லை என்பது குறித்தும் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குரிய கடிதப் போக்குவரத்து எந்தெந்த நாட்களில், எந்தெந்த தேதிகளில், எந்தெந்த மாதங்களில் நடைபெற்றது என்பது குறித்தும், என்னென்ன இனங்களில் அவர்களுடைய கணக்காய்வு குறிப்புகள் ஏற்படுத்தப்பட்டன என்பது குறித்தும், அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, துறைத் தலைவரின் கருத்துகள் கேட்கப்பட்டு, இருவரும் கலந்தாய்வு செய்துதான் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்ற நியதி இருக்கின்றபோது, அவர்களாகவே ஓர் அறிக்கையைத் தயார் செய்து, இங்கே அனுப்புவதும், இங்கு பதில் அனுப்புவதற்கு முன்பாகவே நான் உங்களுக்கு அனுப்பிவிட்டேன் என்று சொல்வதும் இதிலே அடங்கியிருக்கிறது என்பதைத்தான் நான் விளக்கமாகச் சொன்னேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு என்னுடைய பதிலின் நகலினைத் தருகிறேன். அவருக்கு நேரம் இருக்கும்போது முடிந்தால் படித்துவிட்டு, அதற்குப் பின்னர் ஏதேனும் சந்தேகம் அவருக்கு இருப்பின் என்னிடத்தில்

கேட்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன பிரச்சினையும், நான் சொன்ன பதிலும் ஒன்றுதான் என்பதை இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் பதில் அறிக்கை மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் அளிக்கப்பட்டது.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் பதில் அளித்த நகல் உங்களுக்கு வேண்டுமா? (குறுக்கீடு) வேண்டும் என்று சொல்கிறீர்கள். தரச்சொல்கிறேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) மதுரை மாவட்டத்தில் கிறித்தவ ஆலயங்கள் தாக்கப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதுரை மாவட்டத்தில் கிறித்தவ ஆலயங்கள் தாக்கப்பட்டது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ்ராஜன், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திருமதி எஸ். விஜயதரணி, திரு. எச். வசந்தகுமார், திரு. பாண்டி, திரு. வி.எஸ். காளிமுத்து, திரு. ஆர். கணேஷ், திரு. செ. ராஜேஷ்குமார் ஆகியோர் காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். நான் அதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் பேசும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், சுருக்கமாகப் பேசுங்கள். காலையில் என்னுடைய அறையிலேயே சுருக்கமாகப் பேச வேண்டுமென்று சொல்லிவிட்டேன். எனவே சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக சில மதவாத அமைப்பினர் வட மாநிலங்களில் பிற மதத்தினர்மீது தாக்குதல் நடத்துவதுபோல, தற்போது மதுரை மாவட்டத்தில் உள்ள பல கிறித்தவ தேவாலயங்களுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளார்கள். குறிப்பாக, 11-3-2018 அன்று மதுரை, கூடல்புதூர் கிறித்தவ தேவாலயத்தில் அங்குள்ள மக்கள் கூட்டுப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது சுமார் 50-க்கும் மேற்பட்டவர்கள் துப்பாக்கி ஏந்திய போலீசாருடன்





ஆலயத்திற்குள் நுழைந்து அங்கு இருந்தவர்களை ஆபாசமான வார்த்தைகளால் திட்டியும், அங்கிருந்த பொருட்களை அடித்து நொறுக்கியும், கிறித்தவர்களின் புனித நூலாக இருக்கக்கூடிய பைபிளை கிழித்து எறிந்தும், அங்கிருந்த பாதிரியாரைத் தாக்கியும், பாதிரியாருடைய மனைவியை தாக்கி, அவருடைய சேலையை பிடித்து இழுத்து "மஞ்சள் புடவை கட்டி பொட்டு வைப்போம்" என ஆபாச வார்த்தைகளைப் பேசி மிரட்டி உள்ளார்கள். அவர் அரசு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல, மதுரை சிக்கந்தர் சாவடியில் உள்ள சர்ச்சில் சில இந்து முன்னணியினர் ஆயுதங்களுடன் புகுந்து மைக் செட்டைப் பிடுங்கி உடைத்து, அங்கிருந்தவர்களைத் தாக்கி, கடுமையான வார்த்தைகளால் எச்சரித்து இருக்கின்றார்கள்.

Church-ஐ அடித்து நொறுக்கிய தங்கம் வெங்கடேஷ் என்பவரை ஆதாரத்துடன் படம் பிடித்து கொடுத்த பிறகும் பல நாட்களாக அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்புதான் அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால், அந்த சம்பவத்தில் ஈடுபட்ட 100-க்கும் மேற்பட்டவர்கள்மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர் கைது செய்யப்பட்ட பிறகு, நேற்றைய தினம் கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை பகுதியிலே பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக ஓர் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதிலே பேசியவர்கள் மதுரையிலே நடைபெற்றதுபோல, இங்கேயுள்ள கிறித்தவ ஆலயத்திலும் செய்வோம் என்று எச்சரித்திருக்கிறார்கள். எனவே இந்தப் போக்கிற்கு உடனடியாக நாம் ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். குறிப்பாக சிறுபான்மை மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதும், அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவதும், அவர்களின் வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாப்பதும் தமிழக அரசினுடைய கடமையாகும்.

VHP, பஜ்ரங்தள், ஆர்.எஸ்.எஸ்., போன்ற மதவாத அமைப்புகள், மத்தியில் பி.ஜே.பி. ஆட்சியிலிருப்பதால் பயமின்றி, தைரியமாக இதுபோன்ற மதக் கலவரங்களில் ஈடுபடுகின்றனர். தமிழக சிறுபான்மை மக்களின் உரிமையைக் காப்பதும் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவதும் அவர்களது வழிபாட்டுத் தலங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதும் தமிழக அரசின் கடமையாகும்.

எனவே, எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் தமிழகத்தில் நடைபெறாதவாறு அரசு இதுபோன்ற பிரச்சினைகளில்

[திரு. எஸ். ஆஸ்டின்] [2018 மார்ச் 22

ஈடுபடுவோர்மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சிறுபான்மை மக்கள்மீது பல்வேறு வகைகளில் இந்து முன்னணி அமைப்புகள், பஜ்ரங்தள் அமைப்புகள் பிரச்சினையை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக மதுரையில் 3 தொழுகைக் கூடங்கள்-9-30 மணிக்கு அலங்காநல்லூர் பகுதிக்குச் சென்றிருக்கின்றார்கள். 10-30 மணிக்கு அடுத்த இடமான கூடல்புதூருக்குச் சென்றிருக்கின்றார்கள். பிறகு 11-00 மணியளவில் பெதஸ்டாஸ் சர்வீஸ் மிஷனுக்குச் சென்றிருக்கின்றார்கள். 3 போதகர்கள் நடத்தக்கூடிய அந்தத் தொழுகைக் கூடத்திற்கு 30-க்கும் அதிகமானவர்கள் திரு. அழகர்சாமி என்பவர் தலைமையில் போலீஸ் escort உடன் சென்றிருக்கின்றார்கள். அங்கே சென்று அங்குள்ளவரை பயமுறுத்தி, நீ மதம் மாற்றுவதற்காக வந்தாயா, நீ இங்கே இருக்கக் கூடாது, உன்னை விரட்டிவிடுவோம் என்று கூறி அவர் கையில் வைத்திருந்த பைபிளை வாங்கி கிழித்து எறிந்து தீயிட்டு கொளுத்தியிருக்கின்றார்கள். அத்தனை பேரும் எங்களைக் காப்பாற்றுங்கள் என்று அலறி இருக்கின்றார்கள். அங்கு யாருமே கிடையாது. மூன்று பிரச்சினைகளுக்கும் புகார் வாங்கி F.I.R. போட்டிருக்கின்றார்களே தவிர, அதுசம்பந்தமாக ஒரே ஒரு ஆளைத்தான் கைது செய்திருக்கின்றார்கள். வேறு யாரையும் கைது செய்யவில்லை, எவர்மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை. தொடர்ந்து இந்தப் பிரச்சினை நடந்துகொண்டிருக்கின்றது. இப்போது எங்களுக்கு 42 நாட்கள் தவக்காலம்-Lent days. கன்னியாகுமரி மாவட்டத்தில் பார்த்தீர்களென்றால், முரசம்கோட்டிலிருந்து திரு. எட்வர்டு ராஜா என்கின்ற ஒருவர் என்னுடைய தொகுதிக்குட்பட்ட குமார மண்டபத்தில் ஒரு சிறப்புத் தொழுகை நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்று காவல் துறையிடம் அனுமதியும் பெற்றிருக்கின்றார். இவர் ஒரு request letter-ஐ எல்லோரிடமும் கொடுத்து நாங்கள் தவக்காலத்தில் ஒரு சிறப்புத் தொழுகை நடத்துகின்றோம், அதற்கு வாருங்கள் என்று அழைப்பு கொடுத்திருக்கின்றார். அந்த அறிவிப்பைப் பெற்றுக்கொண்டு இந்து முன்னணியைச் சேர்ந்த சிலர் தக்கலை காவல் நிலையத்தில்



2018 மார்ச் 22] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

புகார் கொடுத்திருக்கின்றார்கள். தக்கலை காவல் நிலையத்தில் Crime No.100 என்று வழக்கு பதிவு செய்து, அழைப்பிதழ் கொடுத்த திரு. எட்வர்டு ராஜா என்ற நபரையே கைது செய்து காவல் துறையானது *உண்மைக்குப் புறம்பாக வழக்கை போட்டிருக்கின்றது. இப்படி * உண்மைக்குப் புறம்பாக வழக்கைப் போடுவதால் காவல் துறை கண்காணிப்பாளர்மீது எனக்கு சந்தேகம் வருகின்றது. ஒருதலைபட்சமாக இப்படி நடந்துகொண்டால் சுமூகமான ஒரு நிலை கெட்டுப்போய்விடுமோ, கிறித்தவர்களுக்கு, சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு கிடைக்காமல் போய்விடுமோ என்ற ஒரு பயம் இருக்கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே காவல் துறையைப் பொறுத்தமட்டில் அவர்கள் சரியாகச் செயல்படவில்லையோ என்ற சந்தேகம் இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசும்போது ** வழக்கு என்று சொன்னீர்கள். அதை உண்மைக்குப் புறம்பாக என்று மாற்றிக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி, உண்மைக்குப் புறம்பாக என்று மாற்றிக்கொள்கிறேன். இப்படிப்பட்ட பிரச்சினையிலிருந்து பாதுகாப்பு தர வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது. இந்த அரசின்மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது. மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் சம்பந்தப்பட்ட போலீஸ்காரர்களுக்கு உடந்தையாக இருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது. ஆகவே இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. ஆகவே இதை நான் உங்கள் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன். இனிமேல் இதுபோன்ற பிரச்சினைகள் எதிர்காலத்தில் வராதவாறு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் அன்பு நகர், செல்லையா நகர் மற்றும் ஆனையூர் ஆகிய இடங்களில், கடந்த 11-3-2018 அன்று ஞாயிற்றுக்கிழமையை முன்னிட்டு கிறித்தவர்கள் ஜெப வீடுகளில் ஜெபம் நடத்திக் கொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத சில நபர்கள் அங்கு சென்று ஜெபம்

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.
**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் அதனை நடத்திக் கொண்டிருந்த போதகர்கள் மற்றும் கலந்து கொள்ள வந்திருந்த கிறித்தவ மக்களை தகாத வார்த்தைகளால் பேசி ஜெபம் நடத்தக் கூடாதென எச்சரித்து மிரட்டியுள்ளனர். இதேபோன்று, அன்றையதினமே மதுரை மாவட்டத்தில், சிக்கந்தர்சாவடி, மந்தையம்மன் கோவில் தெருவில் உள்ள ஒரு ஜெபக்கூடத்தில் ஜெபம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத நபர்கள் அவ்விடத்திற்குச் சென்று அங்கிருந்தவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, சிலரை கைகளால் தாக்கி அங்கிருந்த சில பொருட்களை சேதப்படுத்தியதுடன் அவர்களிடமிருந்த பைபிளைப் பிடுங்கி தீ வைத்து எரித்துள்ளனர்.

இச்சம்பவங்கள் தொடர்பாக மதுரை மாநகர், கூடல்புதூர் காவல் நிலையத்தில் திரு. இமானுவேல், திரு. ஸ்டனீஸ் லாஸ் மற்றும் திரு. ஜெகதீசன் ஆகியோர் தனித்தனியே அளித்த புகார்களின்பேரில் மூன்று வழக்குகளும் மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் திரு. ரவி ஜேக்கப் என்பவர் அளித்த புகாரின்பேரில் ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது காவல் துறையினர் அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக தினேஷ் மற்றும் சதீஷ்பாபு ஆகிய இருவரை 16-3-2018 அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

கூடல்புதூர் காவல் நிலைய வழக்குகள் தொடர்பாக இந்து முன்னணியைச் சேர்ந்த ஆரப்பாளையம் பகுதித் தலைவர் அரவிந்தன் என்பவர் கைது செய்யப்பட்டார். இதற்கிடையே, இந்து முன்னணி ஆனையூர் பகுதி பொறுப்பாளர் சதீஷ்பாபு என்பவர் கூடல்புதூர் காவல் நிலையத்தில் 11-3-2018 அன்று அளித்துள்ள புகாரில் அனுமதியின்றி ஜெபக் கூடங்கள் செயல்படுவதாகவும் அக்கூடங்களில் மத்திய அரசுக்கு எதிராகவும், கிறித்தவத்தை பரப்புவதற்காகவும் சிறப்புப் பிரார்த்தனைகள் நடத்தப்படுவதாகவும், எனவே, இது போன்று, மத நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஜெபக் கூடங்கள் மற்றும் போதகர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு புகார் மனுவையும் கொடுத்துள்ளார். இச்சம்பவங்களைத் தொடர்ந்து அப்பகுதிகளில் தேவையான முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க நான்





உத்தரவிட்டதன்பேரில், காவல் துறையினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, மேலும், இதுபோன்ற சம்பவங்கள் ஏதும் நடக்காமல் பார்த்துக்கொண்டனர். மத அமைதியைக் குலைக்க முயல்பவர்கள் யாராக இருந்தாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-35

## (ஆ) சென்னை, அரசு சட்டக் கல்லூரி திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு மாற்றப்படுவதைத் தடுத்து நிறுத்துவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்னை அரசு சட்டக் கல்லூரி, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு மாற்றப்படுவதைத் தடுத்து நிறுத்துவது குறித்து விவாதிக்க மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் ஆகியோர் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள் ஓரிரு நிமிடங்களில் சுருக்கமாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை சட்டக் கல்லூரி 1891 ஆம் ஆண்டு, ஆங்கிலேயர்களால் தொடங்கப்பட்டு, இந்து முஸ்லிம் ஒற்றுமையைப் பறைசாற்றுகின்ற வகையில் அங்கே Henry Irwin அவர்களால் ஒரு கட்டடம் வடிவமைக்கப்பட்டு, கட்டப்பட்டது. சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திலேயே 1899 ஆம் ஆண்டு முதல் இந்தக் கல்லூரி தொடங்கப்பட்டு, இன்று வரையில் செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய பெருமைமிகு கல்லூரி ஆகும். இது இந்தியாவின் இரண்டாவது தொன்மையான கல்லூரியாகும். 1952 ஆம் ஆண்டு மேற்படி கல்லூரி தொடங்கப்பட்டு அறுபது ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, பெருமைமிகு வைர விழாவினை இந்தியாவின் முதல் நீதிமன்றமான சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான இராஜமன்னார் அவர்கள் பங்கேற்று சிறப்பித்திட்ட பெருமைவாய்ந்த கல்லூரி அது. அது மட்டுமல்லாமல், 1990 ஆம் ஆண்டு, இந்த நாட்டினுடைய அரசமைப்புச் சட்டத்தினை இயற்றிட்ட அண்ணல் அம்பேத்கர்

[திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்] [2018 மார்ச் 22

அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, அவருடைய பெயரிலேயே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி எனப் பெயர் மாற்றமும் செய்யப்பட்ட பெருமைமிகு கல்லூரியாகும். இந்தக் கல்லூரியிலே அரசியல் தலைவர்கள், சட்ட வல்லுநர்கள், பல நீதியரசர்கள் மற்றும் இன்று வரையுள்ள பெருமை மிகுந்தவர்களெல்லாம் பயின்றிருக்கக்கூடிய கல்லூரி வளாகம் அது. அப்போதைய சட்டக் கல்லூரி மாணவர்களாக இருந்த, சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர், திரு. துரைமுருகன் அவர்கள், திரு. வைகோ. அவர்கள், திரு. அ.அ. ஜின்னா அவர்கள், சட்டமன்றத்தில் அமர்ந்திருக்கக்கூடிய முன்னாள் அமைச்சர் திரு. செம்மலை அவர்கள், திரு. முரசொலி செல்வம் போன்றோரெல்லாம் அங்கு பயின்றபோது அங்கு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் சிலையினை அமைத்துள்ளனர்.

தற்போதைய மாண்புமிகு அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. ஜெயக்குமார் அவர்கள் மற்றும் இங்கு இருக்கக்கூடிய பல்வேறு மூத்தவர்களும் அதே கல்லூரியில் படித்திருக்கிறார்கள். ஏன்? எதிர்வரிசையில் இருக்கக்கூடிய பெருந்தலைவர்கள்கூட படித்திருக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு. நானும் அங்கு படித்திருக்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் திரு. இரவிச்சந்திரன், திரு. தாயகம் கவி, மாதவரம் சுதர்சனம் அண்ணன், அண்ணன் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், திரு. எம். இராமச்சந்திரன் போன்ற மூத்த உறுப்பினர்களெல்லாம் படித்திருக்கும் கல்லூரி அது. அங்கு முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள், முன்னாள் அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள், இந்திய அரசின் முதல் நிதியமைச்சராக இருந்த திரு. ஆர்.கே. சண்முகம் அவர்கள், முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவத்சலனார் அவர்கள், திரு. வி.கே. கிருஷ்ணமேனன் ஆகியோரெல்லாம் பயின்ற மிகச் சிறந்த பெருமைவாய்ந்த கல்லூரி அது. உயர் நீதிமன்ற வளாகத்திலேயே அது அமைந்திருக்கக்கூடிய காரணத்தால், அங்கு ஏழை எளிய, கிராமப்புற, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களெல்லாம் பயிலக்கூடிய வாய்ப்பினைப் பெறுகின்றபோது, உயர் நீதிமன்ற நடவடிக்கைகளைப் (court proceedings) பார்த்து அறிந்துகொள்ளக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்திருப்பதால், அவர்கள் எளிதாக உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களாக



2018 மார்ச் 22] [திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்]

தங்களுடைய தொழிலை நடத்துவதற்கு நல்ல வாய்ப்பாக அமைந்திருந்தது. அந்தக் கல்லூரி, இப்பொழுது 2008 ஆம் ஆண்டில், 12-11-2008 அன்று மாணவர்களுக்கிடையே வன்முறை சம்பவம் நடைபெற்றபோது, அப்போதைய நீதியரசர் திரு. ப. சண்முகம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையம், சில பரிந்துரைகளை வழங்கியது. அந்தப் பரிந்துரைகளின்படி, சட்டக் கல்லூரியை சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் 3 சட்டக் கல்லூரிகளாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

முற்பகல் 10-40

ஆனால், Bar Council of India, Bar council of Tamil Nadu ஒரு சட்டக் கல்லூரி தொடங்கிட வேண்டுமென்று சொன்னால், அங்கே மாவட்ட நீதிமன்றம் இருந்திட வேண்டுமென்று பரிந்துரை வழங்கியிருக்கிறது. சட்டத்தில் விதியிருக்கிறது. ஆனால், இப்பொழுது சட்டக் கல்லூரிகளை அரசு திருவள்ளூர் மாவட்டம், பட்டரை பெரும்புதூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பாக்கம் என்ற மிக remote villages என்று சொல்லக்கூடிய போக்குவரத்து வசதி இல்லாத, வசதி வாய்ப்புகள் ஏதுமில்லாத, தள்ளி இருக்கக்கூடிய இடங்களில் அமைத்திருக்கிறது. Norms-படி, மாவட்ட நீதிமன்றம் அமைந்திருக்கிற இடத்திலே இருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திற்குள் சட்டக் கல்லூரி இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தச் சட்டக் கல்லூரிகள் தொலைவில் அமைந்திருக்கிற காரணத்தினால் மாணவர்களுக்கு இது மிகப் பெரிய இடையூறாக அமைந்திருக்கிறது. அவர்கள் பயில்வதற்கு ஏற்றதாக இல்லை. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த கல்லூரியில் இங்கே அவையில் இருக்கக்கூடிய பெரும்பான்மையானவர்கள், மிக முக்கியமானவர்கள் எல்லாம் பயின்றார்கள் என்று பெருமையோடு எப்படிச் சொல்கிறோமோ, அதை இன்னும் 100 ஆண்டுகள் கழித்தும் இந்த அவையிலே சொல்லக்கூடிய அளவிற்கு இந்தக் கல்லூரி இருந்திட வேண்டும். எனவே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எழிலரசன், போதும், உரையை முடியுங்கள்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** அந்தக் கல்லூரியை இடம் மாற்றம் செய்திடாமல், அங்கேயே இயங்கிட அனுமதிக்க வேண்டும். அரசு கட்டியுள்ள 2 கல்லூரிகளை நீங்கள் மாற்ற வேண்டாம். அந்தக்

[திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்] [2018 மார்ச் 22

கல்லூரிகள் நடைபெற வேண்டும். ஆனால், இந்தியாவிலேயே முதலில் தொடங்கப்பட்ட கல்லூரி என்று பெருமையோடு சொல்லப்படும் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியை இடம் மாற்றம் செய்யாமல் அங்கேயே இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில் 12-11-2008 அன்று ஏற்பட்ட வன்முறை சம்பவம் மற்றும் அந்த சூழ்நிலை குறித்து விசாரணை செய்வதற்காக அன்றைய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நீதியரசர் திரு. ப. சண்முகம் அவர்களின் தலைமையிலான விசாரணை ஆணையத்தின் முடிவுகளை, அன்றைய தி.மு.க. அரசாங்கம் எண் ஏற்று, அரசாணை எண் S.S.II/421-7/2009, பொது (மி.க)த் துறை, நாள் 7-7-2009 அன்று வெளியிடப்பட்டது. சென்னை மாநகரில் மிகவும் நெரிசல் மிகுந்த இடத்தில் அதிகமான மாணவர் எண்ணிக்கையுடன் செயல்பட்டு வரும் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியினை இடம் மாற்றம் செய்து, சென்னை மாநகரைச் சுற்றியுள்ள இடங்களில் குறைந்தது 3 சட்டக் கல்லூரிகளை ஏற்படுத்தலாம் என்பது விசாரணை ஆணையத்தின் பரிந்துரைகளில் ஒன்று. சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில் ஏற்பட்ட வன்முறை சம்பவம் தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை எண் 27115/2008 மற்றும் பல்வேறு வகையான மனுக்கள் 11-8-2014, 11-9-2014 மற்றும் 28-10-2014 ஆகிய தேதிகளில் அன்றைய தலைமை நீதிபதியினுடைய அமர்வின் முன்பு விசாணைக்கு வந்தபோது, நீதிபதி திரு. ப. சண்முகம் தலைமையிலான விசாரணை ஆணையத்தின் பரிந்துரையின்படி, விரைவில் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியினை வேறு இடத்திற்கு மாற்றம் செய்திட வேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்றம் அரசுக்கு ஆணையிட்டது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கிணங்க, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியினை இடம் மாற்றம் செய்திடும்பொருட்டு, திருவள்ளூர் மாவட்டத்தில் பட்டரைபெரும்புதூர் மற்றும்



2018 மார்ச் 22] [திரு. சி.வி. சண்முகம்]

காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பாக்கம் ஆகிய இடங்களில் நிலம் கண்டறியப்பட்டு, அந்த இடங்களில் உயர் நீதிமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு ஒவ்வொரு கட்டத்திலும் உயர் நீதிமன்றம் ஆராய்ந்து சட்டக் கல்லூரியை இடம் மாற்றம் செய்வது சம்பந்தமாக தீர்ப்பளித்தது. அரசு தன்னிச்சையாக எந்த முடிவும் எடுக்கவில்லை. அந்தத் தீர்ப்பிற்கிணங்க, ஒவ்வொரு கட்டத்திலும் அன்றைக்கு இருந்த உயர் நீதிமன்ற தலைமை நீதியரசர் திரு. கவுல் அவர்கள், சட்டக் கல்லூரிக்கு எவ்வளவு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும், எங்கே இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது என்றும், அதற்கு எவ்வளவு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது என்றும் ஒவ்வொரு கட்டத்திலும் ஆராய்ந்து, ஒவ்வொரு முறையும் தீர்ப்பு வழங்கப்பட்டு, இந்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டன.

காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பாக்கத்திலே புதிய சட்டக் கல்லூரிக்கான கட்டடம் கட்டுவதற்கு ரூ.60,13,15,000/-மும் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், பட்டரைபெரும்புதூரிலே சட்டக் கல்லூரிக்கான கட்டடம் கட்டுவதற்கு ரூ.57,17,80,000/-மும், ஆக மொத்தம் ரூ.117,30,95,000/- ஒப்பளிக்கப்பட்டு, 8-9-2016 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. மேற்படி கட்டடங்கள் பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டு நிறைவடையும் நிலையில் உள்ளன. ஆகவே, பழமை வாய்ந்த இந்தச் சட்டக் கல்லூரியை இடம் மாற்றம் செய்ய வேண்டுமென்பது அரசினுடைய நோக்கமல்ல. தமிழகமே கதிகலங்குகின்ற அளவிற்கு அன்றைக்கு சட்டக் கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்ட மிகப் பெரிய வன்முறை சம்பவத்தை நாம் அத்தனைப் பேரும் பார்த்தோம்.

முற்பகல் 10-45

அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தால்தான் நீதி விசாரணை ஆணையம் நியமிக்கப்பட்டது. அந்த நீதி விசாரணை ஆணையம் வெளியிட்ட முடிவுகள் அன்றைக்கு இருந்த அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டும், 2014 ஆம் ஆண்டு வரை அன்றைய அரசு அதை அமல்படுத்தவில்லை. அதற்குப் பிறகு உயர் நீதிமன்றத்திலே ஒரு Writ Petition தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தலைமை நீதிபதியினுடைய தீர்ப்பிற்கிணங்கதான் இந்த உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2018 மார்ச் 22

## (இ) மதுரை, அருள்மிகு மீனாட்சியம்மன் கோயில் தீ விபத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதுரை மாவட்டம், அருள்மிகு மீனாட்சியம்மன் கோயில் தீ விபத்து குறித்து அரசினுடைய கவனத்திற்கு விதி 55-ன்கீழ் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் அரசினுடைய கவனத்திற்கு சுருக்கமாகக் கொண்டுவருவார்கள்.

***திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான சம்பவத்தின் சில விவரங்களை கூறி, நான் அரசின் கவனத்தை ஈர்க்கிறேன். முதலில் சில வரலாற்று உண்மைகளைப் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். யார் எந்த மதத்திற்கு சிறப்பாக வழிபாடு அல்லது support கொடுக்கிறார்கள் என்ற இந்தக் காலத்தில், நம் எல்லோருக்கும் தந்தையாக இருக்கிற, திராவிட இயக்கத்தின் தந்தையாக இருக்கிற நீதிக் கட்சியின் செயலை இங்கே பதிவு செய்ய வேண்டும். முதன்முதலில் கோயில்களை அரசு சொத்தாக்கி, அறநிலையத் துறையை உருவாக்கிய அரசாங்கம் நீதிக் கட்சி அரசாங்கம். திராவிட இயக்கம் ஒரு சில மதங்களுக்கு மட்டும் எதிராகச் செயல்டக்கூடிய இயக்கம் என்று சிலர் சொல்கிறார்கள். இது முற்றிலும் தவறு. மக்களை கோயிலுக்குக் கொண்டுபோய் சேர்த்த இயக்கமும், கோயில்களை பொது சொத்து ஆக்கிய இயக்கமும் திராவிட இயக்கம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இயக்கத்தின் ஒரு தலைவராக இருந்த என் தாத்தா தமிழவேள் திரு. பி.டி. ராஜன், சுதந்திரத்திற்குப் பிறகு நீங்கள் இருக்கும் இருக்கையில் முதல் தற்காலிக சபாநாயகராகப் இருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைத்தவர். அவர் 60 வருடங்களுக்கு பிறகு முதலில் 1963 ஆம் ஆண்டில் மீனாட்சியம்மன் கோயிலுக்கு திருப்பணியைச் செய்தார். அந்த வரலாற்றின் அடிப்படையிலும், அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையிலும்



2018 மார்ச் 22] [திரு. பழனிவேல் தியாக ராஜன்]

இந்த விபத்து பற்றிய சில குறிப்புகளை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். பிப்ரவரி 2 ஆம் தேதி, சுமார் 10-30 மணிக்கு இப்போதைக்கு தெரிகிற அளவிற்கு ஒரு electrical short circuit-ஆல் அந்த தீ விபத்து ஆரம்பித்து, அது அவசரமாக பரவி, கடைசியாக அடுத்த நாள் காலை 5, 6 மணிக்குத்தான் அந்தத் தீயை அணைக்க முடிந்தது. இந்த தீ விபத்து நமக்கு பல பாடங்களைக் கற்றுக் கொடுத்துவிட்டதாக நான் கருதுகிறேன். இவ்வளவு சிறிய இடத்தில், இவ்வளவு பெரிய தீ விபத்து நடந்ததைப் பார்க்கும்போது மிகவும் ஆச்சரியப்பட வைக்கிறது. ஆனாலும், மீனாட்சியம்மன் அருளால் ஒரு மனித உயிரிழப்புகூட ஏற்படாமல் வெறும் property damage-உடன் முடிந்தது. நாம் பெருமை கொள்கின்ற அளவில் இருக்கின்ற நம் கலாச்சாரத்தின் அடையாளமாகவும், நம் பண்பாட்டின் அடையாளமாகவும் இருக்கும் வரலாற்று சிறப்புமிக்க இந்தப் பழமையான கோயிலில் இந்த விபத்து நடந்தது நம் எல்லோரையும் கொஞ்சம் அச்சப்பட வைக்கிறது. இந்த விபத்து நடக்கும்பொழுது, விபத்து மேலாண்மை மற்றும் அவசர உதவி Emergency Response திட்டங்களில் இருக்கும் சில குறைகள் நமக்குத் தெரிய வந்தன. உதாரணமாக, மதுரை மாநகரம் முழுவதிலும் வெறும் ஆறே ஆறு தீயணைப்பு engines, அதாவது fire engines-தான் இருக்கின்றன. இவ்வளவு பெரிய மாநகரத்தில், இவ்வளவு மக்கள் தொகை அதிகரித்த பிறகும், இவ்வளவு குறைவான தீயணைப்பு engines இருந்தால் இது எப்படி இம்மாநகருக்குப் பாதுகாப்பாக இருக்கும்.

இரண்டாவது, இந்த engine-களில், ஒவ்வொரு engine-லும் சுமார் 7 ஆயிரம் அல்லது 8 ஆயிரம் லிட்டர் தண்ணீர்தான் பிடிக்க முடியும். Fire Engine-ல் உள்ள இரண்டு pump-களும் ஒழுங்காக வேலை செய்தால், 5 நிமிடத்திற்குத்தான் ஒரு engine-லிருந்து தண்ணீர் அடிக்க முடியும். அப்பொழுது, இந்த மாதிரி ஒரு தீ விபத்து நடந்தால் ஆங்காங்கு hydrant அதாவது தண்ணீருக்கு source இல்லாமல் வெறும் தீயணைப்பு engine-களை வைத்து சரியாகப் பணி செய்ய முடியாது.

முற்பகல் 10-50

விபத்து நடந்த பிறகு பல அமைச்சர்கள், எங்கள் ஊர் அமைச்சர்கள் எல்லாம் வந்து ஆய்வு செய்தார்கள். பல குழுக்கள் உருவாக்கப்பட்டு இந்த விபத்திற்கான காரணத்தை முழுமையாக ஆய்வு செய்து அதனுடைய உண்மைத்தன்மை

[திரு. பழனிவேல் தியாக ராஜன்] [2018 மார்ச் 22

வெளிப்படையாக தெரிவிக்கப்படும் என்று கூறினார்கள். விபத்து நடந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆகப்போகின்றன. இதுவரையிலும் எந்த அறிக்கையும் வெளியே வரவில்லை. இந்தமாதிரி ஒரு சம்பவம் நடந்ததில் நாம் பல பாடங்களைக் கற்றுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். முதலாவதாக, இம்மாதிரியான பழமையான, பெருமையான இடங்களை எந்தவகையில் ஒழுங்காக யார் control-ல் பாதுகாப்பாக வைக்க முடியும், யார் ஒருங்கிணைப்பாக இருக்க வேண்டும் என்று தெரிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால், பல துறைகள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. இரண்டாவது, இந்த விபத்து கோயிலில் நடந்ததனால், கல் கட்டடங்களால் ஆன கோயில் என்பதால் damage அதிகமாகவில்லை. இதுவே தெருவுக்கு அந்தப் பக்கம் மாநகரில் இந்த விபத்து நடந்திருந்தால் பல நூறு உயிர்களையாவது இழந்திருப்போம். அப்போது Emergency Response System-ஐ crowded areas-ல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பழனிவேல் தியாக ராஜன், கொஞ்சம் சுருக்கமாக பேசி முடியுங்கள். பாருங்கள். நான் கேள்வி நேரத்தை ஒத்தி வைத்தும் agenda-க்குள் இன்னும் போக முடியவில்லை.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** இரண்டே இரண்டு கருத்தைச் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** தற்போது 48 சதவிகிதம் மக்கள் தொகை மாநகரங்களில் இருக்கிறார்கள் என்று இந்த அரசின் அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். உங்கள் கணக்குப்படி 2026-க்குள் 75 சதவிகிதம் மக்கள் தொகை தமிழ்நாட்டில் மாநகரங்களில்தான் இருக்கப் போகிறார்கள். அப்போது ஏற்கெனவே இவ்வளவு கூட்டம் இருக்கிற இடத்தில் இன்னும் நிறைய பேர் வரப்போகிறார்கள் என்றால், Full Emergency Response Systems உருவாக்கி, மக்களுக்கு எந்தவிதமான விபத்து நடந்தால் எந்தவகையில் reaction இருக்கும். எந்த அரசுத் துறை எந்த resource-ஐ கொடுக்கும் என்ற திட்டங்களையெல்லாம், இந்தச் சம்பவத்தை ஒரு எச்சரிக்கையாக, warning signal ஆக எடுத்துக் கொண்டு, அதற்கேற்றவாறு எந்தமாதிரி திட்டங்களைத் தீட்ட



2018 மார்ச் 22] [திரு. பழனிவேல் தியாக ராஜன்]

வேண்டுமென்ற பாடமும் இதிலே கற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறி, அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே மீனாட்சி அம்மன் கோயிலிலே ஏற்பட்டிருக்கிற தீ விபத்து மிக மிக வருந்தத்தக்கது. சாமியை நம்புகிறவர்களுக்கு மீனாட்சி அம்மன் கோயில்மீது ஈடுபாடு அதிகமாகத்தான் இருக்கும். நாங்கள் எல்லாம் முழுமையாக சாமியை நம்புகிறோம். மீனாட்சி அம்மன் கோயில் போன்ற கோயில்களுக்கு, பாதுகாப்பு வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால், இதுபோன்ற திருக்கோயில்களுக்கு முழுமையான பாதுகாப்பு வேண்டும். பாதுகாப்பு என்றால் அங்கே காவல் துறையைக் கொண்டுபோய் நிறுத்துவதில்லை. நான் சொல்வது, ஏன் இவ்வளவு கடைகளை உள்ளே அனுமதிக்கிறீர்கள்? கோயிலுக்குப் பக்கத்தில் ஏன் அவ்வளவு நெருக்கடி வருகிறது? இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடக்கும்போது அந்தக் கடைகள் அருகில் இருக்கக்கூடிய குப்பை போன்ற பொருட்களால்தான் இன்றைக்கு இவ்வளவு பெரிய பாதிப்பு வந்திருக்கிறது. இந்த மண்டபத்தைப் பொறுத்தமட்டில், தீ விபத்து ஏற்பட்டு அது பாதிப்படைந்திருக்கிறது, அதை எந்த வழியிலும் நீங்கள் சரிசெய்ய முடியாது. மிகப் பழமையான மண்டபம் அது. இப்போது அந்த மண்டபத்தை நீங்கள் கட்டுவதற்கு வேண்டுமென்றால் நிதியை ஒதுக்கலாம். ஆனால், அந்த பழைமையை, நுட்பத்தைக் கொண்டுவர முடியாது. மிகச் சிரமம். நீங்கள் அதை சரி செய்வது மிக மிகச் சிரமம். இப்போது அதைச் சரிசெய்வதற்கு என்ன செய்திருக்கிறீர்கள்? அதற்கு வேண்டிய நிதிகளையெல்லாம் ஒதுக்கியிருக்கிறீர்களா, அந்த வேலைகள் முறையாக நடக்கின்றனவா என்பதை அரசின் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

[திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்] [*2018 மார்ச் 22 முற்பகல் 10-55*]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் வீரவசந்தராயர் மண்டபத்தில் 2-2-2018 அன்று இரவு சுமார் 10-15 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டு மண்டபம் சிதிலமடைந்தது. இருப்பினும், அசாதாரண நிகழ்வுகள் ஏதும் நடைபெறவில்லை. மாண்புமிகு அம்மாவின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மறுநாள் நானும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர், திருக்கோயில் தக்கார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உயர் அதிகாரிகளுடன் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டோம். கோயில் தீ விபத்து பற்றிய செய்தி அறிந்தவுடன், காவல் துறையினர், தீயணைப்புத் துறையினர், மாவட்ட ஆட்சியர் மற்றும் திருக்கோயில் இணை ஆணையர் ஆகியோர் தீ விபத்து ஏற்பட்ட இடத்திற்குச் சென்று, மிகுந்த சிரமப்பட்டு தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்நிகழ்வைத் தொடர்ந்து, மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயிலுக்குச் சென்று, ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்கள். மேற்கண்ட நிகழ்வுகள் தொடர்பாக பக்தர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இந்நிகழ்விற்குப் பின்னர், மஹாசிவராத்திரி அன்று நான்கு கால பூஜைகள் சிறப்பாக நடத்தப்பெற்று, பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்துள்ளனர். மண்டபத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்யவும், மண்டபத்தினைப் புனரமைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுத்திட அறிவுரைகள் வழங்கிடவும், தொழில்நுட்பக் கருத்துகளை வழங்கிடவும் 12 உறுப்பினர்களைக் கொண்ட குழு 5-2-2018 அன்று அமைக்கப்பட்டது. பின்னர், இக்குழுவின் கூட்டங்கள் நடைபெற்றன. எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து திருக்கோயிலுக்குப் பரிந்துரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில், 12-2-2018 அன்று மாண்புமிகு அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், அனைத்துத் துறை செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளைக் கொண்ட கூட்டத்தில், அனைத்துக்



*2018 மார்ச் 22*] [திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்]

கோயில்களிலும் இதுபோன்ற தீ விபத்து ஏற்படாமல் தடுக்க எல்லாவிதமான முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள். அதற்கிணங்க, அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன.மேலும்,குழுவால் தெரிவிக்கப்பட்டவாறு, தீ விபத்து தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து திருக்கோயில்களுக்குப் பரிந்துரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இக்குழுவின் ஆலோசனையைப் பரிசீலித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

சிதிலமடைந்த உத்திரம், பாவுக்கல்லை தாங்கிட இரும்பினாலான பிடி இறுக்கி மற்றும் மரங்களாலான தூண்கள் மற்றும் இணைப்புகள் ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன. இதுபோன்ற நடவடிக்கைகள் ஆயிரங்கால் மண்டபத்திற்கு அருகேயும் செய்யப்பட்டுள்ளன. கூட்டத்தில் குழுவால் தெரிவிக்கப்பட்டவாறு ஆலயத்தில் தீ விபத்து ஏற்பட்ட இடங்களில் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், திருக்கோயில் கட்டுமானம் மற்றும் மின்னிணைப்பு சரி செய்யப்பட்டுள்ளது. மாவட்ட இந்து சமய உதவி ஆணையர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, இக்குழுவில் தொல்லியல் வல்லுநர், பொதுப் பணித் துறை கட்டுமானப் பொறியாளர் மற்றும் மின் ஆய்வாளர் ஆகியோர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, அனைத்துத் திருக்கோயில்களையும் ஆய்வு செய்து அறிக்கை தருமாறு அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை வாயிலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணி தொடர்பாக இதர துறைகளின் தலைமை அலுவலர்களுக்கு கடிதம் எழுதப்பட்டு, அத்துறை பணியாளர்களும், அலுவலர்களும் இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) இது zero hour அல்ல. நான் அடுத்த அலுவலுக்குச் சென்று

[பேரவைத் தலைவர்] [2018 மார்ச் 22

வெகுநேரமாகிவிட்டது. நீங்கள் அவற்றையெல்லாம் பேச முடியாது. (குறுக்கீடு) திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) இன்று கடைசி நாள் அல்ல. இன்னும் நிறைய நாட்கள் இருக்கின்றன, அப்போது எடுத்துக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

### (ஈ) திருக்கோவிலூர் தொகுதி, வெள்ளம்புத்தூர் கிராமம், மர்ம நபர்கள் தாக்கி உயிரிழந்த சிறுவனுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெள்ளம்புத்தூர் கிராமத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திகேயன், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதாமணி ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, ஒரே நிமிடத்தில் அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் தொகுதியில், வெள்ளம்புத்தூர் கிராமத்தில் 21-2-2018 அன்று இரவு ஆதி திராவிடர் குடியிருப்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரை மர்ம நபர்கள் தாக்கியதில் சமயன் என்ற சிறுவன் இறந்துவிட்டான்; அச்சிறுவனுடைய தாய் அழகாயி, சகோதரி தனம் ஆகியோர் பலத்த காயத்துடன் JIPMER மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம், மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு வந்ததற்குப் பிறகு, அவரும் ரூ.1 இலட்சம் வழங்கியிருக்கிறார். ஆனால், இன்னும் காவல் துறையால் துரித நடவடிக்கை எடுக்க முடியவில்லை. காவல் துறையினரே, இந்த வழக்கை CBI வசம் ஒப்படையுங்கள் என்று சொல்வதாக நான் கேள்விப்பட்டேன். எனவே, இவ்வழக்கை CBI வசம் ஒப்படைக்கவும், இழப்பீட்டுத் தொகையை உயர்த்தித் தருமாறும் கேட்டு தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.



2018 மார்ச் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம், வெள்ளாம்புத்தூர் கிராமத்தில் திருமதி ஆராயி என்பவரும், எட்டாம் வகுப்புப் படிக்கும் அவரது மகள் செல்வி தனம் மற்றும் நான்காம் வகுப்பு படிக்கும் அவரது மகன் செல்வன் சமயன் ஆகியோரும் 22-2-2018 அன்று காலை வீட்டிலிருந்து வெளியே வராத காரணத்தினால், சந்தேகமடைந்த திருமதி ஆராயி அவர்களின் உறவினர் திரு. காசி என்பவர் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது, திருமதி ஆராயி மற்றும் அவரது இரண்டு குழந்தைகள் ரத்தக் காயத்துடன் கிடப்பதைப் பார்த்துள்ளார். அவர்களுள் சிறுவன் சமயன் இறந்து கிடந்துள்ளான். உடனடியாக திரு. காசி, காயம் அடைந்த இருவரையும் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார். பின்னர், அவர்கள் இருவரும் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காகக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பாக, திரு. காசி அவர்கள் அளித்த புகாரின்பேரில், அரகண்டநல்லூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, தடயவியல் பிரிவினர், விரல்ரேகை நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் பிரிவினர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு, தடயங்கள் சேகரிக்கப்பட்டன. இந்தத் துயரச் சம்பவம் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, துரிதமாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, சட்டத்தின்முன் நிறுத்தி, தண்டனைபெற்றுத் தருமாறு காவல் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். இதன்பேரில், காவல் துறையினர் நான்கு தனிப்படைகள் அமைத்து, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து கைது செய்ய தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தத் துயர சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் சமயன் குடும்பத்திற்கு ரூ.2 இலட்சமும், காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவரும் திருமதி ஆராயி மற்றும் செல்வி தனம் ஆகியோருக்கு தலா ரூ.50 ஆயிரமும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நிவாரணத் தொகை போதவில்லை, இதை

உயர்த்தி வழங்கவேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (உ) சென்னையில் கொசுக்களின் உற்பத்தியைத் தடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்னை, கொசுக்கள் உற்பத்தியைத் தடுப்பதன் அவசியம் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் ஆகியோர் விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசந்தால் ஆளையே தூக்கும் அளவிற்கு கொசுக்களின் ஆதிக்கம் சென்னையில் கொடிகட்டிப் பறக்கிறது. அரை நூற்றாண்டிற்கு முன்னால் வரட்டிப் புகைக்கு அசைந்த கொசு, பிறகு நொச்சி இலைக்கு மாறியது. பிறகு டார்டாய்ஸ் கொசு வர்த்திக்கு மாறியது. பிறகு ஓடோமாசுக்கு மாறியது. பிறகு mat-டிற்கு மாறியது. இப்போது மின்சக்தி பாய்ச்சப்பட்ட bat-டிற்கு வந்திருக்கிறது. ஆக, கொசுக்களின் வீரியம் என்பது கூடிக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. கொசு மருந்து அடிப்பதாலோ, புகை மருந்து அடிப்பதாலோ Abate போன்ற மருந்துகளை நீர்நிலைகளில் தெளிப்பதாலோ, மடிந்து கொண்டிருந்த கொசு, இப்போது கொஞ்சம் கொஞ்சமாக அதன் வீரிய சக்தி அதிகமாவதன் காரணமாக சென்னையையே ஆக்கிரமிக்கத் தொடங்கி, சென்னையைப் பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாக்கியிருக்கிறது. வணக்கத்திற்குரிய மேயராக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இருந்தபோதும், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோதும், சென்னையில் இருக்கிற இரண்டு மிகப் பெரிய நீர்நிலைகள் கூவம் ஆறு, அடையாறு ஆகியவற்றின் முகத்துவாரங்கள் தூய்மைப்படுத்தப்பட்டு, கடல் நீர் அதனுள்ளே பாய்ச்சப்படும். அப்போது கொசு முட்டைகள் எல்லாம் உப்பு நீர் பாய்ச்சப்படுவதால் இல்லாமல் போய்விடும். அதோடுமட்டுமல்லாமல், நல்ல நீரில் உருவாகிற Larva நிலையிலேயே கொசுக்கள் Gambusia மீன்களின்மூலம் அழிக்கப்பட்டு வந்தன. அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு ஏறத்தாழ 1,894 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் இருக்கின்றன. கூவம் ஆறு, ஓட்டேரி நல்லா, கேப்டன்





காட்டன் கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய், பக்கிங்ஹாம் கால்வாய் போன்ற 30 நீரோடைகள் இருக்கின்றன. இவை எல்லாம் இன்றைக்குத் தூர் மண்டிக்கிடப்பதால், நீரோட்டம் இல்லாமல் இருக்கின்றன. அதனால் கொசுக்களின் உற்பத்தி என்பது சென்னையில் மிகப் பெரிய அளவில் இருந்துகொண்டிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட கழிவு நீர் இணைப்புகள் இன்றைக்கு சட்டப்பூர்வமாக இல்லாததால் மிகப் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிணறுகள், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், இவை எல்லாம் மூடப்படாததனால் இன்றைக்குக் கொசுக்கள் ஏராளமான அளவில் உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றன. மாநகராட்சி நிருவாகம் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளை மூடுவதற்கான நிலையை உண்டாக்குவதும், அனுமதியில்லாமல் இணைக்கப்பட்டிருக்கிற 3 இலட்சம் கழிவுநீர் இணைப்புகளை உடனடியாகத் துண்டிப்பதும், முகத்துவாரங்களைத் தூர் வாருவதும், 1,894 கிலோ மீட்டர் நீளத்திற்கான மழைநீர் வடிகால்களைத் தூர் வாருவதுமான இந்தப் பணிகளைச் செய்தால் மட்டுமே, கொசு பெருக்கமடைவதைக் குறைக்க முடியும். இந்த அரசு இதைச் செய்வதற்கு முன்வருமா என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னை மாநகரத்தில் கொசுக்கள் அதிகமாக இருப்பது பற்றி பேசினார்கள். அவரும் சென்னை மாநகர மேயராக இருந்திருக்கிறார். சீதோஷ்ண நிலை காரணமாக சில நேரங்களில் கொசு உற்பத்தி பெருக்கம் என்பது அதிகமாக இருக்கும். சில நேரங்களில் அது குறைவாக இருக்கும். சென்னையில் கூவம் ஆறு போன்றவை இருக்கின்ற காரணத்தால் சென்னையில் கொசுக்களின் உற்பத்தி அதிகமாக உள்ளது. அதையும் அவர் பேசும்போது mention செய்தார். கொசுக்களை ஒழிக்க நம்முடைய மாநகராட்சி நிருவாகம் நிறைய நடவடிக்கை எடுத்திருக்கிறது. இப்போது, அவர் பேசும்போது, அவர்களுடைய

ஆட்சிக் காலங்களில் நடவடிக்கை எடுத்ததாகச் சொன்னார். நம்முடைய அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலங்களில்கூட நிறைய நடவடிக்கைகள் எல்லாம் எடுத்திருக்கிறோம். அதைப்போல, இதற்கு முன்னால் பார்த்தீர்களென்றால், சென்னையில் நிறைய பகுதிகளில் கொசுவினால் பரவும் யானைக்கால் நோய் இருக்கும். இப்போது, அதெல்லாம் அரசால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. தொடர்ந்து நடவடிக்கை எடுத்ததால் அதுபோன்ற நோய்கள் பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், சில இடங்களில் அந்த season-களில் கொசுக்களின் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. அதற்கு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். சில ஆலோசனைகளையும் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதையும் நாங்கள் கருத்தில் எடுத்துக்கொள்கிறோம்.

சென்னையைப் பொறுத்தளவில், சென்னை மாவட்டம் முழுவதும் உள்ள வீடுகளை 500 வீடுகளுக்கு ஒரு சிறு வட்டம் வீதம், 2,035 சிறு வட்டங்களாக (sector) பிரித்து, ஒவ்வொரு சிறு வட்டத்திற்கும் அனைத்து கொசு தடுப்புப் பணிகளை மேற்கொள்ள நிரந்தர மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் என மொத்தம் 3,230 தொழிலாளர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் முழுமையாக கொசு உற்பத்தியைத் தடுப்பதற்கு மட்டும்தான் நியமிக்கப்படுகின்றனர். அதேபோல மலேரியா கொசு ஒழிப்பு தொழிலாளிகள் ஒவ்வொரு வீட்டிற்கும் வாரத்திற்கு ஒரு முறை சென்று கொசுப் புழு வளரும் இடங்களான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கீழ்நிலைத் தொட்டி, கிணறு போன்றவற்றை மூடி வைக்கவும், தேவையற்ற பொருட்களான டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் குடங்கள் மற்றும் இதர பொருட்களை அகற்றவும் ஆவன செய்வதன்மூலம் அவ்விடங்களில் கொசுப் புழுக்கள் இருப்பின் அவை அழிக்கப்பட்டு வருகின்றன. மேலும், கொசு வளரும் இடங்களான நீர் வழிப் பாதைகளில்—சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து ரூ.19.65 கோடி செலவில் தருவிக்கப்பட்ட 3 Robotic machines மற்றும் பின்லாந்து நாட்டிலிருந்து ரூ.4.10 கோடி செலவில் தருவிக்கப்பட்ட Amphibian machines கொண்டு ஆகாயத் தாமரை மற்றும் மிதக்கும் பொருட்களை அகற்றி கொசுப் புழு கொல்லி மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. குறுகலான கால்வாய்கள் மற்றும் கூவம் ஆறு, அடையாறு, பக்கிங்காம் கால்வாய், கொசஸ்தலையாறு மற்றும் கால்வாய்களில் 11 Fibre படகுகள்மூலம் 22 சிறப்புத் தொழிலாளர்களை ஈடுபடுத்தி, ஆகாயத் தாமரை மற்றும் மிதக்கும்





பொருட்களை அகற்றி கொசுப் புழு கொல்லி மருந்து தெளித்து கொசு உற்பத்தி கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. பெருநகர் சென்னை மாநகராட்சியில் 445 கைத் தெளிப்பான்கள், 15 விசைத் தெளிப்பான்கள், 246 கையினால் புகைப் பரப்பும் இயந்திரங்கள், 21 சிறிய புகைப் பரப்பும் இயந்திரங்கள் மற்றும் 39 வாகனத்தில் பொருத்தப்பட்ட புகைப் பரப்பும் இயந்திரங்கள்மூலம் தீவிர கொசு ஒழிப்புப் பணி நடைபெற்று வருகிறது. மேலும், மலேரியா மற்றும் டெங்கு நோய்களைப் பரவாமல் தடுப்பது குறித்து அனைத்து பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொது இடங்களில் துண்டுப் பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. பொது மக்களிடமிருந்து கொசுத் தொல்லை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றி 1913 என்ற தொலைபேசி எண்மூலம் பெறப்படும் புகார்கள்மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொண்டு வருவதோடு, அந்தந்த மண்டலங்களைச் சேர்ந்த சுகாதார ஆய்வாளர்கள், துப்புரவு அலுவலர்கள், பூச்சியியல் வல்லுநர்கள் மற்றும் மண்டல நல அலுவலர்களால் அப்பகுதிகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. டெங்கு, மலேரியா பற்றி விழிப்புணர்வு மருத்துவ முகாம்கள் நடத்தி, பொது மக்களுக்கு அதற்கான சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆரம்ப சுகாதார நிலையங்களில் கொசுக்களினால் ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், கொசுத் தொல்லை மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும்பொருட்டு Geo Based Real Time Vector Control Monitoring System என்ற மென்பொருளையும் உருவாக்கம் செய்து, கொசுப் புழு உற்பத்தியாகும் இடங்களை நேரடியாகக் கண்காணிக்கும் பணியை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இப்போது கொசுக்களுக்கு மருந்து என்னதான் அடித்தாலும், அவற்றிற்கு வீரியம் அதிகமாகி வருவதால் கொசுக்களின் உற்பத்தி அதிகமாகிவிட்டது என்ற ஒரு கருத்தை சொன்னார். அது உண்மைதான். அதற்குத்தான் இந்த மாதிரி நிறைய meetings எல்லாம் நடத்தி கொசுக்களை ஒழிக்க வெளிநாடுகளில் வேறு என்னென்ன வழிவகைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பது குறித்து அறியவும் நாம் ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். அதைப்போல, Aedes கொசுக்களைப் பார்த்தீர்களென்றால் ஒரு கொசுவின் வாழ்நாள் சுமார் 20 நாட்கள். ஒரு பெண் கொசு தன் வாழ்நாளில்மட்டும் 300 முதல் 500 முட்டைகள் இடும். அதில், Aedes கொசு 500 மீட்டர் வரை

பறக்கும் இயல்புடையது. இவையெல்லாவற்றையும் ஆய்வு செய்து, அவற்றைத் தடுக்கக்கூடிய வகையில் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். அவை season-ல் அதாவது பருவ மழைக் காலங்களில் பார்த்தீர்களென்றால் நல்ல மழை வந்து கொசு முட்டைகளை முழுவதுமாக அடித்துக்கொண்டு சென்றுவிடும். அந்த நேரங்களில் கொசுவே இருக்காது. அதைப்போல, நாங்களும் 2006 முதல் 2011 வரை அவர் மேயராக இருந்தபோது, நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கும்போது, இதேபோன்றதொரு பிரச்சினையை கொண்டு வந்திருக்கிறோம். அதாவது, இது தொடர்ந்து இருக்கின்ற பிரச்சினைதான். இருந்தாலும்கூட, கண்டிப்பாக கொசு இந்த season-ல் அதிகமாக வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இன்னும் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று இதில் என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, அது தீவிரப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும். அமைதி. இன்றைக்கு வினாக்கள் விடைகள் நேரத்தை ஒத்திவைத்ததற்குப் பிறகும்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிய பிரச்சினைகள் அனைத்தையும் எழுப்ப நிறைவாக அனுமதி அளித்திருக்கிறேன். இதை உறுப்பினர்கள் நிறைவோடு ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். இப்பொழுதாவது Agenda-விற்குள் செல்ல என்னை அனுமதிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, ஓசூர் வனச் சரகத்தில் யானை தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓய். பிரகாஷ் மற்றும் திரு. பி. முருகன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.





**திரு. பி. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகள், தளி மற்றும் ஓசூர் வனப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் மற்றும் பொது மக்கள் காட்டு யானைகளால் அடிக்கடி தாக்கப்படுவதால் உயிரிழப்பு மற்றும் உடல் ஊனம் ஏற்படுகிறது. விவசாய விளைநிலங்களில் நெல், கேழ்வரகு, வாழை, கோஸ், காலிஃப்ளவர், தக்காளி போன்ற பயிர்களை நாசம் செய்து வருகிறது. (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், அதெல்லாம் இல்லை. கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதியில். . .

**திரு. பி. முருகன்:** அதேதான், அதேதான், சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யானை தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகையை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து அரசினுடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி உட்காருங்கள். (குறுக்கீடு) Agenda-வில் இருப்பதைப் படியுங்கள்.

**திரு. பி. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, ஓசூர் வனச் சரகத்தில் யானை தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சானமாவு, சூளகிரி பகுதியில் முகாமிட்டிருந்த சுமார் 15-17 வயது மதிக்கத்தக்க ஒற்றை ஆண் யானை காப்புக் காட்டைவிட்டு வெளியேறி, விவசாய நிலங்களுக்குள் சென்று பயிர்களுக்கு சேதங்களை ஏற்படுத்தியும், கால்நடைகளைத் தாக்கியும், குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியும் வந்தது.

[2018 மார்ச் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், ஏற்கெனவே ஒரு விவர அறிக்கை வைத்துவிட்டீர்கள். விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது என்று சொல்லுங்கள், போதும். அதிலிருந்து அவர் கேள்வி கேட்டுக்கொள்வார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

## அறிக்கை

சானமாவு, சூளகிரி பகுதியில் முகாமிட்டிருந்த சுமார் 15-17 வயது மதிக்கத்தக்க ஒற்றை ஆண் யானை காப்புக் காட்டைவிட்டு வெளியேறி விவசாய நிலங்களுக்குள் சென்று பயிர் சேதங்களை ஏற்படுத்தியும், கால்நடைகளைத் தாக்கியும், குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து பாதிப்புகளை ஏற்படுத்தியும், பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியும் வந்தது. வனப் பகுதியை விட்டு வெளியேறிய யானையினை வனப் பணியாளர்கள் பாதுகாப்பாக இராயக்கோட்டை வனச் சரகம், சென்னப்பள்ளி காப்புக்காட்டிற்கு விரட்டினர்.

மேலும், வனப் பணியாளர்களால் ஒற்றை யானையின் நடமாட்டம் குறித்து ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வேட்டைத் தடுப்பு வாகனங்கள்மூலம் யானை நடமாட வாய்ப்புகள் உள்ள கிராமங்களான முருக்கனப்பள்ளி, பந்தப்பள்ளி, கோவில் எப்பளம், டேம் எப்பளம், சென்னப்பள்ளி, தேவர்குட்டப்பள்ளி, ஒட்டேனூர், சின்னார், சின்னகானப்பள்ளி மற்றும் சுற்றியுள்ள இதர கிராமப் பகுதிகளுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதோடு, இதுகுறித்து உள்ளூர் மற்றும் இதர தொலைக்காட்சிகளில் ஓடும் செய்தியாகவும் (Scroll), செய்தித்தாள்களிலும் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தி வந்தனர்.

இந்நிலையில் 3-2-2018 அன்று காலை 7-45 மணியளவில் சின்னார் அருகில் அரசு புறம்போக்கு மலைப்பகுதிக்கு வந்து முகாமிட்டிருந்த யானை அவ்வழியாக வந்த திரு. ராஜப்பன், வயது சுமார் 60 என்பவரும், 4-2-2018 அன்று திரு. முனிராஜ் என்பவரும், போதிய எச்சரிக்கை விடுத்தும் அதனை மீறி சென்ற திரு. தேவன், வயது 57 என்பவரும் 5-2-2018 அன்று காலை சுமார் 6 மணியளவில் யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்தனர்.



2018 மார்ச் 22] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

இறந்த இந்த மூவரின் குடும்பத்திற்கும் உடனடி நிவாரணமாக தலா ரூ.50,000/- 3-2-2018 மற்றும் 4-2-2018 ஆகிய தினங்களில் வழங்கப்பட்டது. இதில் திரு. தேவன் குடும்பத்தாருக்கு உடனடி நிவாரணமாக ரூ.50,000/- என்னால் நேரடியாக வழங்கப்பட்டது.

மேற்படி சம்பவங்களைத் தொடர்ந்து 5-2-2018 அன்று அதிகாலை சுமார் 4 மணியளவிலிருந்தே வனப் பணியாளர்கள் கண்காணித்து, வன கால்நடை மருத்துவர்களின் உதவியுடன் மேற்படி யானைக்கு மயக்க மருந்து செலுத்தப்பட்டது. இவ்வாறு மயக்க மருந்து செலுத்தி பிடிக்கப்பட்ட யானை அஞ்செட்டி வனச் சரகம் நாட்ராம்பாளையம் காப்புக்காடு, பிலிகுண்டுலு பகுதிக்கு கொண்டு சென்று பாதுகாப்பாக விடுவிக்கப்பட்டது.

காட்டு யானையால் தாக்கப்பட்டு இறந்த திரு. ராஜப்பன் மற்றும் திரு. முனிராஜ் குடும்பத்திற்கு அரசாணை (நிலை) எண் 141, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 25-11-2016-ன்படி நிவாரணம் வழங்க செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு எஞ்சிய நிவாரண நிதியான தலா ரூ.3.50 இலட்சம் இருவருடைய குடும்பத்தாருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

காட்டு யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்த திரு. தேவன் குடும்பத்தாரிடமிருந்து நிவாரணம் வழங்க தேவையான சான்றாவணங்கள் (வாரிசு சான்று, இறப்புச் சான்று, பிரேத பரிசோதனை சான்று) இதுநாள்வரை பெறப்படவில்லை. மேற்காண் ஆவணங்கள் பெறப்பட்டவுடன் எஞ்சியுள்ள தொகையான ரூ.3.50 இலட்சம் வழங்கப்படும்.

தற்போது அமலில் உள்ள அரசாணை (நிலை) எண் 141, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 25-11-2016-ன்படி வன உயிரின தாக்குதலால் இறந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.4.00 இலட்சம் நிவாரணம் வழங்க வழிவகை உள்ளது. மாறாக நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வழிவகை இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், அந்த விவர அறிக்கையிலிருந்து ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. பி. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்த விவர அறிக்கையைப்

[திரு. பி. முருகன்] [2018 மார்ச் 22

படித்துப் பார்த்தேன். இருந்தாலும்கூட, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி, ஓசூர், தளி போன்ற சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள வனப் பகுதிகளில் காட்டு யானைகளால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். விவசாய விளைநிலங்கள் பாதிக்கப்படுகின்றன. சென்ற பிப்ரவரி மாதம் 3 நாட்களில் 3 நபர்களை ஒற்றை காட்டு யானை தாக்கியதால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. தினந்தோறும் 60, 70 யானைகள் சானமாவு வனப் பகுதியில் சுற்றித் திரிந்து கொண்டிருக்கின்றன. அவற்றிலிருந்து பிரிந்து வந்த ஒற்றை ஆண் யானைதான் விவசாயிகளைத் தாக்கி கொன்று குவித்து வருகிறது. ஆகவே, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும். வனத் துறையின் சார்பாக ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவின் மூலமாக மக்களுக்கு யானைகள் நடமாட்டம் பற்றி தெரியப்படுத்த வேண்டும். அந்தக் குழுவானது, கர்நாடக மாநிலத்திலிருந்து வருகின்ற யானைகளை சோலார் மின் வேலிகள் அமைத்துக் கட்டுப்படுத்த வேண்டும். ஏற்கெனவே இதே பிரச்சினையை இந்த சட்டமன்றத்தில் சென்ற கூட்டத் தொடரில்கூட எங்களுடைய தளி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பினார். அப்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், ஒரு குழுவை அமைத்திருக்கிறோம், அந்தக் குழு, இந்தப் பகுதியில் அந்தப் பிரச்சினைகள் இல்லையென்று சொன்னதாகச் சொன்னார்கள். தினந்தோறும் அந்தப் பகுதியில் காட்டு யானைகள் அட்டகாசம் செய்வதை நீங்கள் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் பார்த்திருப்பீர்கள். எனவே, காட்டு யானைகளை விரட்டுவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யானை தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா சுமார் 10 இலட்சமாவது நிவாரணம் வழங்க வேண்டுமென்றும், பாதிக்கப்படுகிற விவசாய விளைநிலம் ஏக்கர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாயாவது நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட



2018 மார்ச் 22] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

ஒற்றை யானை காப்புக் காட்டைவிட்டு வெளியேறி விவசாய நிலங்களுக்குள் சென்று பயிர் சேதங்களை ஏற்படுத்தியும், கால்நடைகளைத் தாக்கியும், குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழைந்து பாதிப்புகளை ஏற்படுத்தியும், பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியும் வந்தது. இதுகுறித்து வனத் துறையினர் உள்ளூர் மற்றும் இதர தொலைக்காட்சிகளில் ஓடும் செய்தியாகவும் (Scroll), செய்தித்தாள்கள் மூலமும் மக்களைப் பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தி வந்தனர்.

இந்நிலையில் 3-2-2018 அன்று காலை 7-45 மணியளவில் சின்னார் அருகில் அரசு புறம்போக்கு மலைப் பகுதிக்கு வந்து முகாமிட்டிருந்த யானையால் அவ்வழியாக வந்த சுமார் 60 வயதுமிக்க திரு. ராஜப்பன் என்பவரும், 4-2-2018 அன்று திரு. முனிராஜ் என்பவரும், போதிய எச்சரிக்கை விடுத்தும் அதனை மீறி சென்ற 57 வயதுமிக்க திரு. தேவன் என்பவரும் 5-2-2018 அன்று காலை சுமார் 6-00 மணியளவில் மேற்கண்ட யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்தனர்.

இறந்த இந்த மூவரின் குடும்பத்திற்கும் உடனடி நிவாரணமாக தலா ரூ.50,000/- 3-2-2018 மற்றும் 4-2-2018 ஆகிய தினங்களில் வழங்கப்பட்டது. இதில் திரு. தேவன் குடும்பத்தாருக்கு உடனடி நிவாரணமாக சம்பவம் நடைபெற்ற அந்தக் கிராமத்திற்கு நானே நேரில் சென்று ரூ.50,000/- வழங்கியிருக்கிறேன்.

மேற்படி சம்பவங்களைத் தொடர்ந்து 5-2-2018 அன்று அதிகாலை சுமார் 4-00 மணியளவிலிருந்தே வனப் பணியாளர்கள் கண்காணித்து, வன கால்நடை மருத்துவர்களின் உதவியுடன் மேற்படி யானைக்கு மயக்க மருந்து செலுத்தப்பட்டது. இவ்வாறு மயக்க மருந்து செலுத்தி பிடிக்கப்பட்ட யானையினை அஞ்செட்டி வனச் சரகம், நாட்ராம்பாளையம் காப்புக்காடு, பிலிகுண்டுலு பகுதிக்கு கொண்டு சென்று பாதுகாப்பாக விடுவிக்கப்பட்டது.

காட்டு யானையால் தாக்கப்பட்டு இறந்த திரு. ராஜப்பன் மற்றும் திரு. முனிராஜ் குடும்பத்திற்கு அரசாணை (நிலை) எண் 141, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 25-11-2016-ன்படி நிவாரணம் வழங்க செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு எஞ்சிய நிவாரண நிதியான தலா ரூ.3.50 இலட்சம் இருவருடைய குடும்பத்தாருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

காட்டு யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்த திரு. தேவன் குடும்பத்தாரிடமிருந்து நிவாரணம் வழங்கத் தேவையான சான்றாவணங்கள் (வாரிசுச் சான்று, இறப்புச் சான்று, பிரேத பரிசோதனைச் சான்று) இதுநாள்வரை பெறப்படவில்லை. மேற்காண் ஆவணங்கள் பெறப்பட்டவுடன் எஞ்சியுள்ள தொகையான ரூ.3.50 இலட்சம் அவருக்கு வழங்கப்படும்.

மனித இறப்பிற்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை தி.மு. கழகத்தின் ஆட்சியில் 18-5-2010 முதல் 1½ இலட்சம் ரூபாயாக இருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த ஆட்சிக் காலத்தில் இந்த இழப்பீட்டுத் தொகை 17-8-2013 முதல் ரூ.3 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது அமலில் உள்ள அரசாணை (நிலை) எண் 141, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 25-11-2016-ன்படி வன உயிரின தாக்குதலால் இறந்தவரின் குடும்பத்தினருக்கு மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 4.00 இலட்சம் ரூபாய் நிவாரணமாக உயர்த்தி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாறாக நிவாரணத் தொகையை மேலும் உயர்த்தி வழங்க வழிவகை இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், என்ன? உட்காருங்கள்.

**திரு. பி. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன உயிரினத் தாக்குதலால் இறப்போரின் குடும்பத்திற்கு குறைந்தபட்சம் 10 இலட்சம் ரூபாயாவது நிவாரணம் வழங்க வேண்டும். மாநிலத்தில் உள்ள அனைத்து வனப் பகுதிகளிலும் இருக்கின்ற விவசாயிகள் வன விலங்குகளால் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, இந்த அரசாங்கமும், வனத் துறையும் குறைந்தபட்சம் 10 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வனங்களிலே உள்ள விளை நிலங்களைப் பயன்படுத்துவதற்கு வனத் துறையின் சார்பாக விவசாய இடு பொருட்களை அங்கே சென்று வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தயவுகூர்ந்து விவசாயிகள் நலனைக் கருதி ரூபாய் 10 இலட்சம் நிவாரணமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



## 5. அறிக்கைகள் அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

**திரு. சி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான் மக்களுக்காகவே நான் என்று வாழ்நாள் உள்ள வரை மக்களுக்காகவே வாழ்ந்து வந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியை சிறப்பாக நடத்தி வரும் கொங்கு நாட்டுத் தங்கம், சேலத்துச் சிங்கம், எங்கள் மண்ணின் மைந்தர், எனது அரசியல் ஆசான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016-2018 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பதினொன்றாவது முதல் இருபத்து ஆறாவது வரையிலான 16 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். நன்றி.

முற்பகல் 11-20

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. முன்பண மானியக் கோரிக்கைள், 2018-2019, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018-2019 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்.





## 2018-2019 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 50,52,04 | - | 1 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 22,89,40 | - | - |
| 3 | நீதி நிருவாகம் | 582,12,52 | - | - |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 2,036,94,25 | 84,44,98 | 1 |
| 5 | வேளாண்மைத் துறை | 4,994,32,33 | 277,12,78 | 78,30,00 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 702,66,39 | 33,80,15 | 15,00 |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 439,80,53 | 170,11,25 | - |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 39,49,38 | 39,00,01 | - |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 585,68,46 | 13,66,84 | 1 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 219,79,25 | - | 1 |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 182,99,26 | - | - |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 1,039,43,21 | 36,18,80 | 7,42,69 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 4,931,82,02 | 107,17,12 | - |
| 14 | எரிசக்தித் துறை | 6,667,21,69 | 386,12,01 | 744,96,85 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 9,41,42 | 7,90,80 | 12,00,01 |
| 16 | நிதித் துறை | 601,99,51 | 462,00,00 | 78,73,22 |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 743,53,44 | 30,01 | 60,04 |

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 மார்ச் 22

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 136,47,43 | - | 1 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 6,613,05,00 | 182,73,25 | 1 |
| 20 | உயர் கல்வித் துறை | 2,545,18,04 | 226,94,21 | 1 |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 909,98,77 | 5,734,20,52 | 1 |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 4,460,70,34 | 260,70,03 | 3,00,02 |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 181,68,18 | 26,87,03 | 1 |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 184,08,01 | 2 | - |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 207,42,48 | 1 | - |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 1,749,28,55 | 533,57,49 | 816,00,02 |
| 27 | தொழில் துறை | 1,288,78,26 | 4 | 97,39,87 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 52,44,21 | 12,00,00 | - |
| 29 | சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 66,52,37 | 37,52,89 | 1 |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 73,46,43 | 3 | - |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 94,86,78 | - | 1 |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 820,20,88 | 37,56,28 | 1 |
| 33 | சட்டத் துறை | 21,13,41 | - | - |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 5,347,75,61 | 3,806,38,25 | 303,08,14 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 61,66,99 | 1 | 30,00 |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 130,97,09 | 104,55,24 | 1 |



2018 மார்ச் 22] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 72,45,06 | - | - |
| 38 | பொதுத் துறை | 276,56,18 | 1 | 10,50,00 |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 175,74,68 | 713,86,30 | 1 |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 1,221,09,39 | 1,849,44,60 | - |
| 41 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | 3,560,52,13 | 126,22,45 | 1 |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 9,469,84,87 | 1,252,11,01 | 1 |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 16,120,00,93 | 203,51,78 | 1 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 267,97,97 | 56,41,81 | 1 |
| 45 | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 3,349,36,96 | 17,60,41 | 1 |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 31,54,14 | - | 1 |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 159,69,97 | - | - |
| 48 | போக்குவரத்துத் துறை | 720,84,40 | 633,03,10 | 820,00,01 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 114,70,54 | - | 1 |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 16,488,42,76 | - | - |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 471,60,78 | - | - |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 322,23,58 | 4,89,16 | 1 |
| 53 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | 456,64,13 | - | 1 |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 261,95,79 | 98,32,56 | - |
| | பெரு மொத்தம் | 102,337,58,19 | 17,536,33,24 | 2,972,46,10 |

[2018 மார்ச் 22

## 8. இறுதி துணை நிதிநிலை அறிக்கை, 2017–2018, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2017-2018 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017-2018 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை @ இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்பேரவையின்முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 10,940.12 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு வழிவகை செய்கின்றன. இவற்றில் 6,957.99 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 3,982.13 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2018 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12 ஆம் நாளன்று, 2017-2018 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் “புதுப் பணிகள்” மற்றும் “புது துணைப் பணிகள்” குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

3. ‘ஒகி’ புயல் உட்பட, பல்வேறு இயற்கைச் சீற்றங்களால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சரிசெய்ய மேற்கொள்ளப்பட்ட நிவாரணம், மீட்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்காக 327.32 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

4. பிரதம மந்திரி க்ரிஷி சின்சாய் யோஜனா திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக கூடுதலாக 213.63 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

---

@ 480 முதல் 483 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.



2018 மார்ச் 22] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய உணவு மானியத்திற்கான நிலுவைகளை வழங்குவதற்காக, கூடுதலாக 500 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இதற்காக, துணை மதிப்பீடுகளில் 500 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்வதற்காக, கூடுதலாக 214.76 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, துணை மதிப்பீடுகளில் 214.76 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11-25

7. நாமக்கல்லில் பெருந்திட்ட வளாகம் கட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நில எடுப்பிற்கான இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்காக, 137.18 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, துணை மதிப்பீடுகளில் 137.18 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண் 41-வருவாய்த் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

8. மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழிவகை முன்பணமாக வழங்கப்பட்ட 3,001.47 கோடி ரூபாயை பங்கு மூலதனமாக மாற்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. இதற்காக இத்துணை மதிப்பீடுகளில் 2,671.47 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

9. பிரதம மந்திரியின் கிராமப்புறச் சாலைகள் திட்டத்தின்கீழ், கிராமப்புறங்களில் சாலைகளை மேம்படுத்துவதற்காக, 119.58 கோடி ரூபாயை கூடுதலாக அம்மாவின் அரசு அனுமதித்துள்ளது. இதற்காக இத்துணை மதிப்பீடுகளில் 119.58 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

10. மாநில நெடுஞ்சாலைகள், முக்கிய மாவட்டச் சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளில் பராமரிப்புப்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 மார்ச் 22

பணிகளை மேற்கொள்வதற்காக, கூடுதலாக 300 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

11. 'அனைவருக்கும் வீட்டு வசதி-பிரதம மந்திரியின் வீட்டு வசதித் திட்டத்தின் (நகர்ப்புறம்)' கீழ் குடியிருப்புகள் கட்டுவதற்காக, கூடுதலாக 549.79 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

12. 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊதியத் திருத்தத்தால் ஓய்வூதியதாரர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியங்களையும், ஓய்வுக்காலப் பலன்களையும் வழங்குவதற்காக, கூடுதலாக 802.56 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017-2018 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

## 2017-2018 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 20,42,29 | - | 73,00 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 8 | - | - |
| 3 | நீதி நிருவாகம் | 37 | - | - |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 20 | 3 | 35,59 |
| 5 | வேளாண்மைத் துறை | 694,96,20 | 11 | - |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 25,24,00 | 10,72,12 | 15,20 |



2018 மார்ச் 22] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 21 | 39,90,83 | - |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 3 | - | - |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 19 | 8,29,46 | 10,49 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 28,35,81 | - | 34,26 |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 11,73,05 | - | - |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 258,50,53 | 31,44,86 | 23,74,99 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 502,47,41 | - | - |
| 14 | எரிசக்தித் துறை | 5 | 3 | 1 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 2,53,99 | - | 37,49 |
| 16 | நிதித் துறை | 26 | 1 | 10,07,54 |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 11 | - | 14,65,51 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 8,46,77 | - | - |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 402,40,46 | 77,74,51 | 53,66 |
| 20 | உயர் கல்வித் துறை | 101,19,61 | 3 | 119,85,00 |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 327,11,69 | 27 | - |

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 மார்ச் 22

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 468,04,51 | 1 | 1,46,17 |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 21,10,52 | 4,86,57 | - |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 2,85,88 | 2,08,11 | - |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 26,30,37 | 4,70,62 | - |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 802,20,94 | 8,68,26 | 77,50,00 |
| 27 | தொழில் துறை | 3 | 38,50,08 | 116,34,80 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 46,84,89 | - | - |
| 29 | சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 11,55,16 | 1 | 19,99 |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 7,60,14 | 22,48 | - |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 4 | - | - |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 240,55,49 | 39,12,60 | 73,69 |
| 33 | சட்டத் துறை | 6,21,90 | - | - |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 6 | 6 | 95,02,74 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 6,06,81 | 95,47 | 1,10,25 |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 10,15,01 | - | 19,04 |



2018 மார்ச் 22] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 9,48,92 | - | - |
| 38 | பொதுத் துறை | 58,11,67 | - | 1 |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 15,38,18 | 7,22,38 | 17,99 |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 124,41,14 | 81,82 | - |
| 41 | வருவாய்த் துறை | 52 | 22,17,44 | 63,05 |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 34 | 288,58,21 | 35,40 |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 32 | 18,67,65 | 29,48 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 13 | 5 | - |
| 45 | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 35,45,03 | 23,85,31 | - |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 4 | - | 24,99 |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 286,29,91 | - | - |
| 48 | போக்குவரத்துத் துறை | 11,11,18 | 2,672,13,62 | - |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 17,68,08 | 20,28 | - |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 802,56,10 | - | - |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 327,31,68 | - | - |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 43,11,92 | 4,04,73 | - |
| 53 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 37,78,40 | 46,54,14 | - |
| | பெரு மொத்தம் | 5,801,68,62 | 3,351,52,16 | 465,20,34 |

## 9. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2017-2018, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2017-2018 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of clause 2 of Article 205, read with clause 3 of Article 203 of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the financial year 2017-2018."

## 10. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2017-2018, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2017-2018 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2017-2018 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 22-3-2018 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2017-2018 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.*





### நிறைவேற்றப்பெற்ற 2017-2018 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 20,42,29 | - | 73,00 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 8 | - | - |
| 3 | நீதி நிருவாகம் | 37 | - | - |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 20 | 3 | 35,59 |
| 5 | வேளாண்மைத் துறை | 694,96,20 | 11 | - |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 25,24,00 | 10,72,12 | 15,20 |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 21 | 39,90,83 | - |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 3 | - | - |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 19 | 8,29,46 | 10,49 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 28,35,81 | - | 34,26 |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 11,73,05 | - | - |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 258,50,53 | 31,44,86 | 23,74,99 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 502,47,41 | - | - |
| 14 | எரிசக்தித் துறை | 5 | 3 | 1 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 2,53,99 | - | 37,49 |
| 16 | நிதித் துறை | 26 | 1 | 10,07,54 |

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 11 | - | 14,65,51 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 8,46,77 | - | - |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 402,40,46 | 77,74,51 | 53,66 |
| 20 | உயர் கல்வித் துறை | 101,19,61 | 3 | 119,85,00 |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 327,11,69 | 27 | - |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 468,04,51 | 1 | 1,46,17 |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 21,10,52 | 4,86,57 | - |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 2,85,88 | 2,08,11 | - |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 26,30,37 | 4,70,62 | - |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 802,20,94 | 8,68,26 | 77,50,00 |
| 27 | தொழில் துறை | 3 | 38,50,08 | 116,34,80 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 46,84,89 | - | - |
| 29 | சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 11,55,16 | 1 | 19,99 |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 7,60,14 | 22,48 | - |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 4 | - | - |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 240,55,49 | 39,12,60 | 73,69 |



| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 33 | சட்டத் துறை | 6,21,90 | - | - |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 6 | 6 | 95,02,74 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 6,06,81 | 95,47 | 1,10,25 |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 10,15,01 | - | 19,04 |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 9,48,92 | - | - |
| 38 | பொதுத் துறை | 58,11,67 | - | 1 |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 15,38,18 | 7,22,38 | 17,99 |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 124,41,14 | 81,82 | - |
| 41 | வருவாய்த் துறை | 52 | 22,17,44 | 63,05 |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 34 | 288,58,21 | 35,40 |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 32 | 18,67,65 | 29,48 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 13 | 5 | - |
| 45 | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 35,45,03 | 23,85,31 | - |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 4 | - | 24,99 |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 286,29,91 | - | - |
| 48 | போக்குவரத்துத் துறை | 11,11,18 | 2,672,13,62 | - |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 17,68,08 | 20,28 | - |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 802,56,10 | - | - |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 327,31,68 | - | - |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 43,11,92 | 4,04,73 | - |

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 37,78,40 | 46,54,14 | - |
| | பெரு மொத்தம் | 5,801,68,62 | 3,351,52,16 | 465,20,34 |

## 9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2018 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11-30

## 9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2018-2019, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2018-2019 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

MESSAGE

"In pursuance of clause (2) of Article 206, read with clause (3) of Article 203 of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants in advance, during the Financial Year 2018-2019".

## 11. முன்பண மானியக் கோரிக்கைகள், 2018-2019, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018-2019 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

[2018 மார்ச் 22

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018-2019 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 22-3-2018 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2018-2019 ஆம் ஆண்டிற்கான உடனடி செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## நிறைவேற்றப்பெற்ற 2018-2019 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 50,52,04 | - | 1 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 22,89,40 | - | - |
| 3 | நீதி நிருவாகம் | 582,12,52 | - | - |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 2,036,94,25 | 84,44,98 | 1 |
| 5 | வேளாண்மைத் துறை | 4,994,32,33 | 277,12,78 | 78,30,00 |



2018 மார்ச் 22]

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 702,66,39 | 33,80,15 | 15,00 |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை | 439,80,53 | 170,11,25 | - |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 39,49,38 | 39,00,01 | - |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 585,68,46 | 13,66,84 | 1 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை | 219,79,25 | - | 1 |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 182,99,26 | - | - |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 1,039,43,21 | 36,18,80 | 7,42,69 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 4,931,82,02 | 107,17,12 | - |
| 14 | எரிசக்தித் துறை | 6,667,21,69 | 386,12,01 | 744,96,85 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 9,41,42 | 7,90,80 | 12,00,01 |
| 16 | நிதித் துறை | 601,99,51 | 462,00,00 | 78,73,22 |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 743,53,44 | 30,01 | 60,04 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 136,47,43 | - | 1 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 6,613,05,00 | 182,73,25 | 1 |

[2018 மார்ச் 22

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 20 | உயர் கல்வித் துறை | 2,545,18,04 | 226,94,21 | 1 |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 909,98,77 | 5,734,20,52 | 1 |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 4,460,70,34 | 260,70,03 | 3,00,02 |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 181,68,18 | 26,87,03 | 1 |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 184,08,01 | 2 | - |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 207,42,48 | 1 | - |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 1,749,28,55 | 533,57,49 | 816,00,02 |
| 27 | தொழில் துறை | 1,288,78,26 | 4 | 97,39,87 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 52,44,21 | 12,00,00 | - |
| 29 | சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 66,52,37 | 37,52,89 | 1 |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 73,46,43 | 3 | - |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 94,86,78 | - | 1 |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 820,20,88 | 37,56,28 | 1 |
| 33 | சட்டத் துறை | 21,13,41 | - | - |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 5,347,75,61 | 3,806,38,25 | 303,08,14 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 61,66,99 | 1 | 30,00 |
| 36. | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 130,97,09 | 104,55,24 | 1 |



2018 மார்ச் 22]

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 37. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 72,45,06 | - | - |
| 38. | பொதுத் துறை | 276,56,18 | 1 | 10,50,00 |
| 39. | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 175,74,68 | 713,86,30 | 1 |
| 40. | பாசனம் (பொதுப் பணித் துறை) | 1,221,09,39 | 1,849,44,60 | - |
| 41. | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | 3,560,52,13 | 126,22,45 | 1 |
| 42. | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 9,469,84,87 | 1,252,11,01 | 1 |
| 43. | பள்ளிக் கல்வித் துறை | 16,120,00,93 | 203,51,78 | 1 |
| 44. | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 267,97,97 | 56,41,81 | 1 |
| 45. | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 3,349,36,96 | 17,60,41 | 1 |
| 46. | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 31,54,14 | - | 1 |
| 47. | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 159,69,97 | - | - |
| 48. | போக்குவரத்துத் துறை | 720,84,40 | 633,03,10 | 820,00,01 |
| 49. | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 114,70,54 | - | 1 |
| 50. | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 16,488,42,76 | - | - |
| 51. | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 471,60,78 | - | - |
| 52. | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 322,23,58 | 4,89,16 | 1 |
| 53. | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | 456,64,13 | - | 1 |
| 54. | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 261,95,79 | 98,32,56 | - |
| | பெரு மொத்தம் | 102,337,58,19 | 17,536,33,24 | 2,972,46,10 |

[2018 மார்ச் 22

## 9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2018 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.



2018 மார்ச் 22]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்திற்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்தில் உறுப்பினர்களாகப் பணியாற்ற மயிலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், கெங்கவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. மருதமுத்து மற்றும் துறைமுகம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு ஆகியோரிடமிருந்து முறையான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்புத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்புத்தாள் அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் மூவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

மேற்குறிப்பிட்டுள்ள வாரியத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுடைய பதவிக் காலம், அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக பதவி வகிக்கும் காலம் வரை ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர், ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு அவ்வாரியத்தில் அவர் வகித்துவரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

## 12. வரவு-செலவுத் திட்டம், 2018-2019, பொது விவாதமும் பதிலுரையும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018-2019 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் மற்றும் பதிலுரை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை

நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர், நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அளித்திருக்கிறார்கள். அதன்மீது எங்களது இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துகளை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-35*

2011 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நம்முடைய நிதியமைச்சர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள்தான் இந்த நிதிநிலை அறிக்கையினைப் படித்துக்கொண்டிருக்கிறார்கள்.** (குறுக்கீடு) அதனாலே போனது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதற்கு அதெல்லாம்.

**திரு. துரைமுருகன்:** பரவாயில்லை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எதற்கு? அதெல்லாம் வேண்டாம். அதை எடுத்துவிடலாம்.

**திரு. துரைமுருகன்:** சரி, வேண்டாம், வேண்டாம்.** என்று மீண்டும் அவரே படித்திருக்கிறார். அதற்காக ரொம்ப மகிழ்ச்சி. அண்ணா அவர்கள் அடிக்கடி பொதுக்கூட்டத்திலே ஒரு கதை சொல்வார். அது என்ன கதையென்றால், எப்போதுமே தேவலோகத்திலே இந்திராணி ரொம்ப சதம். ஆனால், இந்திரர்கள் மாறிக்கொண்டே இருப்பார்கள். யாரும் மாறலாம். அதுமாதிரி நம்முடைய நிதி இலாகாவில், நம்முடைய நிதிச் செயலாளர் எல்லோரும் இந்திராணி. அவர், தி.மு.க. ஆட்சியில் இருந்தாலும் சரி, அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தாலும் சரி, அவர்தான் சதம், இந்திராணி. நாங்கள் மாறிக் கொண்டே இருப்போம். எப்படி இருந்தாலும் அவருடைய பணிவுக்காக, யார் இருந்தாலும் அவருடைய பணியைச் செய்கிறார். ஆகையினாலே நிரந்தரம். இங்கே மாறிக்கொண்டிருக்கிறோம். அதைப்பற்றிக் கவலையில்லை. ஆகையினால், நம்முடைய நிதியமைச்சர் அறிவித்திருக்கிற சில திட்டங்களை அவர் சொல்லிவிட்டார். இதை நான் படிக்க முதலில் எடுத்தவுடனே, இந்த நிதி நிலை அறிக்கையினுடைய முக்கிய நோக்கம், இந்த ஆட்சியினுடைய முக்கிய நோக்கம் என்னவென்றால், 'அமைதி, வளம், வளர்ச்சி'. இதுதான் இந்த ஆட்சியினுடைய இலட்சியம், குறிக்கோள். அதை நோக்கித்தான்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இவர்கள் நடைபயணம் போகிறார்கள். தேவைதான் அது. ஆனால், இந்த அமைதி, வளம், வளர்ச்சி என்று சொல்லும்போது, முதலில் இருக்கிறது பாருங்கள் அமைதி. அதைப்பற்றி நான் சொல்லத் தேவையில்லை. அதை அவர்களே ஒத்துக்கொள்ள மாட்டார்கள். நாட்டில் பார்த்தீர்களென்றால், எங்கு பார்த்தாலும், கொலை, கொள்ளை, வெட்டு, குத்து. Sir, short ஆக ஒன்று சொல்கிறேன். எந்த ஆட்சியிலுமே கிடையாது. ரௌடிகள் எல்லோரும் ஒன்றாகக் கூடி birth day கொண்டாடி, அதற்காக cake வெட்டுகிறான் பாருங்கள். அரிவாள் கத்தியிலே வெட்டினான் பாருங்கள். அவனைப் பிடிப்பதற்கு நீங்கள் ஆள் போட்டிருக்கிறீர்கள். அது வேறு விஷயம். அதுமாதிரி ரௌடிகளே cake வெட்டிக் கொண்டாடுகிற அளவுக்கு இருக்கிறது. ஆனால் அமைதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ரௌடிகளைப் பற்றிக் குறிப்பிட்டார். ரௌடிகள் என்பவர்கள் ஒரே நாளில் வருவதில்லை. பல ஆண்டுக் காலமாக பல திருட்டுகள், கொலை வழக்குகளிலே ஈடுபட்டவர்கள்தான் ரௌடிகள். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் ஆட்சியிலும் இருந்தவர்கள்தான் இப்பொழுதும் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் கண்டுபிடிக்கவில்லை. இப்பொழுது நாங்கள் கண்டுபிடித்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவுதான்.

**திரு. துரைமுருகன்:** ரௌடிகள் எல்லா காலத்திலும் இருப்பார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் cake வெட்டினது உங்கள் ஆட்சிக் காலத்தில்தான். அதுதான் வித்தியாசம். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது ஒன்றுதான். கண்டுபிடித்தது நாங்கள். நீங்கள் கண்டுபிடிக்கத் தவறிவிட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ரௌடிகள்

இன்றைக்கு தமிழகத்திலே எங்கெங்கெல்லாம் இருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டதால் தமிழகத்திலிருந்து ரௌடிகள் வெளி மாநிலத்திற்குத் தப்பிச் செல்லக்கூடிய ஒரு சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, எந்த மாநிலமாக இருந்தாலும் சரி, எந்த நாடாக இருந்தாலும் சரி, எல்லா பகுதியிலும் ரௌடிகளின் நடமாட்டம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அது கட்டுப்படுத்தப்பட்டதா என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மாவின் வழியில் நடைபெறும் அரசு, சட்டம்-ஒழுங்கைப் பேணிப் பாதுகாத்து வருவதால் தமிழகம் அமைதிப் பூங்காவாக இருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகத்திலே குற்றங்கள் குறைந்திருக்கின்றன. குற்றங்களை நாம் அதிக அளவிலே கண்டுபிடித்திருக்கின்றோம். அதைத்தான் நாம் பார்க்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** எப்படியோ, கண்டுபிடித்தால் சரிதான். அடுத்து வளம். 'வளமான ஆட்சியைத் தருவோம்' என்று கூறித்தான் ஆட்சிக்கு வந்தீர்கள். ஆனால், மக்கள் வளம் அடைந்தார்களா என்றால் இல்லை. வளம் எப்போது வரும்? வளர்ச்சி வந்தால் வரும். அளிக்கப்பெற்ற 7 நிதிநிலை அறிக்கைகளிலும், வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ள மக்கள் தொகைதான் வளர்ந்துகொண்டிருக்கிறதே தவிர, வேறு எந்த வளர்ச்சியும் இல்லை. உதாரணமாக, வளர்ச்சி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் வளத்தைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் *2011*-லிருந்து *2016* வரை சிறப்பான ஆட்சியைத் தந்த காரணத்தினால்தான் தமிழக மக்கள் *32* ஆண்டுக் காலத்திற்குப் பிறகு ஆளுகின்ற கட்சியே, ஆளுகின்ற ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, அந்தச் சான்று மக்களிடத்திலேயிருந்து எங்களுக்குக் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. ஓர் அரசாங்கம் சிறந்த



முறையிலே செயல்பட்டால்தான் மீண்டும் அந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரமுடியும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தச் சான்றை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மக்கள் தந்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுமட்டுமல்ல, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது 'வளம் காணவில்லை' என்று சொன்னார்கள். *2011* ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை எவ்வளவு திட்டங்களை நாங்கள் செயல்படுத்தியிருக்கிறோம் என்பதை எங்களுடைய ஓர் ஆண்டு சாதனையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையெல்லாம் படித்துப் பார்த்திருந்தால் நிச்சயம் நன்றாகத் தெரியும். ஏனென்றால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அனுபவம் வாய்ந்தவர், மிகுந்த ஆற்றல் படைத்தவர். ஆகவே, அவருக்குத் தெரியாத விஷயமே கிடையாது. ஆகவே, அந்த வரிசையில் இருக்கின்ற காரணத்தாலே இந்த வார்த்தையை அவர் பயன்படுத்துகின்றார். உண்மையிலேயே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் *2011* ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து அவர்கள் மறைகின்ற வரை எண்ணற்ற திட்டங்களை நாட்டு மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்குக் கல்வியிலே மிகப் பெரிய புரட்சி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இந்தியாவிலேயே இன்றைக்கு உயர் கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது. *(மேசையைத் தட்டும் ஒலி)* *2011* ஆம் ஆண்டிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அப்போது, உயர் கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு *21* சதவிகிதமாக இருந்தது. இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறையில் செய்த புரட்சி, கல்வித் துறைக்கு வழங்கிய உதவித் தொகைகளின் வாயிலாக அதிகக் கல்லூரிகள் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டதன் வாயிலாகக் கல்வியின் தரம் உயர்ந்து, ஏழையெளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள் அதிகளவிலே இன்றைக்கு உயர் கல்வி படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் இது வளம் இல்லையா? இதைவிட வேறு என்ன வேண்டும்? *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்னும் ஏராளமான திட்டங்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டேயிருக்கலாம். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்

தமிழகத்தில் 'வளம் இல்லை' என்று சொல்கிறார்களே, தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அதிக வளங்கள் கிடைத்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் மூலமாக வளங்கள் கிடைத்திருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வகையிலே எனக்கு மகிழ்ச்சி. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் PWD Minister-ஆக இருக்கும்போது இவ்வளவு பேசமாட்டார். (சிரிப்பு) ஆனால் Chief Minister ஆகி நன்றாகப் பேசுகிறார். இது எனக்கு வளர்ச்சி, எனக்கு மகிழ்ச்சி.

அடுத்ததாக, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே பொருளாதாரத்தைப் பற்றி சொல்லும்போது, 'மந்த நிலையில் இருக்கிறது' என்று அவரே சொல்லிவிட்டார். 2011-2012 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் 11 ஆம் பக்கத்தில் '2006-2007 முதல் 4 ஆண்டுகளில் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி 7.8 விழுக்காடு மட்டுமே எட்ட முடிந்தது' என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படியென்றால், அதாவது, அப்பொழுது, தி.மு.க. ஆட்சி. எங்களுடைய ஆட்சியில் 2006-2007 முதல் 4 ஆண்டுகளுக்கு 7.8 சதவிகிதம்தான் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி இருந்தது என்று சொன்னார், right. அவ்வாறு சொல்லிவிட்டு, 'வரும் ஆண்டுகளில் 10 விழுக்காட்டுக்குமேல் பொருளாதார வளர்ச்சி அடைய வழிவகை செய்யப்படும்' என்று அந்த நிதிநிலை அறிக்கையில் சொன்னார். அதாவது, கடந்த காலத்தில் நாங்கள் ஆட்சியில் இருந்தபோது 4 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி 7.8 சதவிகிதம்தான் இருந்தது. ஆனால், 'நாங்கள் 10 சதவிகித வளர்ச்சியைக் கொண்டு வந்துவிடுவோம்' என்று நிதியமைச்சர் சொன்னார். ஆனால் 2013-2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 5 ஆம் பக்கத்தில் 2012-2013 ஆம் ஆண்டிற்கான முன் மதிப்பீடுகளின் அடிப்படையில், நிலையான விலை மதிப்பின்படி, மாநிலத்தின் மொத்தப் பொருளாதார உற்பத்தி வளர்ச்சி விகிதம் 4.61 சதவிகிதம் மட்டுமே இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார். ஆக, எங்களுடைய ஆட்சிக் காலத்தில் வளர்ச்சி 7.8 சதவிகிதத்தில் இருந்தது. வளர்ச்சியை 10 சதவிகிதத்திற்குக் கொண்டு வரப்போகிறோம் என்று சொன்னார். ஆனால் 2013-2014 ஆம் ஆண்டில் எவ்வளவு வளர்ச்சி வந்திருக்கிறது என்று சொன்னால் 4.61 சதவிகிதம்தான். 2018-2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் 4 ஆம் பக்கத்தில் வளர்ச்சி விகிதம் எவ்வளவு என்று பார்த்தேன். மாநிலத்தின் பொருளாதாரம் மந்த நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன். வளர்ச்சியை 10 சதவிகிதத்திற்குக் கொண்டு வரப் போகிறோம் என்று சொன்னீர்கள். ஆனால் கடந்த ஆண்டே நீங்கள் 4.61 சதவிகிதம் அளவிற்குத்தான் கொண்டுவந்திருக்கிறீர்கள். இந்த வருடம் வளர்ச்சி எவ்வளவு என்று நீங்கள் சொல்லியிருக்கவேண்டும். ஆனால் புள்ளிவிவரத்தைச் சொல்லவில்லை. அப்படியே விட்டுவிட்டீர்கள். இந்த வீழ்ச்சிக்குக் காரணம் என்ன? தொழில் முதலீடு, உள்கட்டமைப்பு மேம்பாடு, வேளாண்மை உற்பத்தியிலே நீங்கள் கவனம் செலுத்தவில்லை என்பதால்தான் இந்த வீழ்ச்சி வந்திருக்கிறது.



முற்பகல் 11-45

ஒரு மாநிலத்தில் projection, வளர்ச்சி இல்லையென்பதற்கு ஓர் உதாரணத்தை நான் சொல்கிறேன். 2017-2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி, அ.இ.அ.தி.மு.க. அரசில், 1 இலட்சத்து 69 ஆயிரத்து 837 கோடி ரூபாய் மாநிலத்தின் வருவாயிலே projection இருக்கும் என்று கணக்கு போட்டேன். ஆனால், மொத்த வருவாயில் actually 1 இலட்சத்து 56 ஆயிரத்து 824 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது. ஆக, வளர்ச்சி இல்லை. அந்தக் கணிப்பைவிடக் குறைந்து போயிருக்கிறது. ஆகையினால் வளர்ச்சி இல்லை. சரியான வளர்ச்சி இல்லையென்பதற்கு என்ன காரணம்? தொலைநோக்குத் திட்டம் 2023 என்று சொன்னீர்கள். இந்தத் திட்டம் 22-3-2012 இல் ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த 10 ஆண்டுகளில் 15 இலட்சம் கோடி ரூபாய் அளவிலான மொத்த முதலீடுகள் பெறுவதை தொலைநோக்குத் திட்டம் 2023 இலக்காகக் கொண்டிருக்கிறது என்று சொன்னீர்கள். 15 இலட்சம் கோடி ரூபாய் அளவிலான மொத்த முதலீடு பெறப் போகிறோம் என்று சொன்னீர்கள். அதிலே வேளாண்மை மற்றும் பாசனத்திற்கு 1 இலட்சத்து 27 ஆயிரத்து 750 கோடி ரூபாய்; நகர்ப்புற கட்டமைப்புத் துறைக்கு 2 இலட்சத்து 59 ஆயிரம் கோடி ரூபாய், போக்குவரத்து மற்றும் சாலைப் போக்குவரத்துத் துறைக்கு 3 இலட்சத்து 65 ஆயிரத்து 927 கோடி ரூபாய், மனித ஆற்றல் மேம்பாட்டிற்கு 60 ஆயிரத்து 120

கோடி ரூபாய், எரிசக்தித் துறைக்கு 3 இலட்சத்து 89 ஆயிரத்து 335 கோடி ரூபாய் இதிலே அடங்கும்.

மாநில வளர்ச்சி மற்றும் சமூகத் திட்டங்களை உருவாக்குவதற்கு தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 இந்த அரசுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. இந்த ஆவணத்தில் உள்ள திட்டங்களை நிறைவேற்றிடத் தேவையான நிதி ஆதாரங்களின் ஒரு பகுதியைத் தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம்மூலம் திரட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என இப்போது இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறீர்கள். கடந்த 6 ஆண்டுகளாக இத்திட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறிய பணிகளின் பட்டியலின்படி, எவ்வளவு செலவிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையிலே தெரிவிக்க வேண்டும்.

இரண்டாவது தொழில் வளர்ச்சியில் முதலிடம் பெறுவது என்பது முக்கியமானதாகும். விவசாயம், தொழில், அதிலே முதலிடத்தில் தொழில் இருக்கிறது. 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 31 ஆம் பக்கத்தில் 2001 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2014 ஆம் ஆண்டுவரை 3 ஆண்டுகளில் 10 ஆயிரத்து 660 கோடி ரூபாய் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவித்திருக்கிறீர்கள். சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு 2015 ஆம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்றது. 2016-2017 ஆம் ஆண்டு திருத்திய நிதிநிலை அறிக்கையில், பக்கம் 42-ன்படி, இதுவரை 23 ஆயிரத்து 258 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள்தான் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். 31-8-2016 அன்று விதி 110-ன்கீழ், மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இதுவரை 25 ஆயிரத்து 20 கோடி ரூபாய்தான் முதலீடு வந்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். 2018-2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் 44 ஆம் பக்கத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டின்மூலம் 2.42 இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டிலான, 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன எனவும், அதில் 62,738 கோடி ரூபாய் முதலீட்டில் 62 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகக் கூறியிருக்கிறீர்கள். ஆக, தொழில் வளர்ச்சியில் இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருப்பதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.



முற்பகல் 11-50

ஆனால், உங்களுக்கு இன்னொன்றைச் சொல்கிறேன். மத்திய அமைச்சரவையில் Ministry of Commerce and Industry என்ற ஓர் இலாகா இருக்கிறது. அதிலே Department of Industrial Policy and Promotion (DIPP) என்று ஒரு துறை இருக்கிறது. அந்தத் துறையின் சார்பில் புள்ளிவிவரம் ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், share of investment attracted by the States அதாவது, மாநிலங்கள் எவ்வளவு தொழில் முதலீட்டினைப் பெற்றிருக்கின்றன என்பது. அதன்படி, While the share of investment attracted by Tamil Nadu has been on a downhill since 2015, it has been increased in Karnataka, Andhra Pradesh, Telangana, Gujarat and Maharashtra. 2015 ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் தொழில் துறை கீழே விழுந்துவிட்டது. ஆனால் கர்நாடகம், ஆந்திரபிரதேசம், தெலுங்கானா, குஜராத், மகராஷ்டிரா போன்ற மாநிலங்கள் வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றன. அந்த data-வைச் சொல்கிறார்கள். This data shows India received 1,972 investment proposals worth of Rs.3.95 lakh crores. அதாவது, இந்தியாவுக்கு 1,972 investment proposals வந்திருக்கின்றன. அதனுடைய மொத்த மதிப்பீடு 3.95 இலட்சம் கோடி ரூபாய். அவ்வளவு மதிப்புள்ள proposals வந்திருக்கின்றன. இதில் தமிழ்நாட்டின் நிலைமை என்ன என்று பார்த்தால், கர்நாடகாவில் 1,52,000 கோடி ரூபாய்க்கு investment proposal வாங்கியிருக்கிறார்கள். குஜராத்திற்கு 79,068 கோடி ரூபாய்க்கு investment proposal வாங்கியிருக்கிறார்கள். மகாராஷ்டிராவில் 48,581 கோடி ரூபாய்க்கு investment proposal வாங்கியிருக்கிறார்கள். உத்திரப்பிரதேசத்தில் 12,744 கோடி ரூபாய்க்கு investment proposal வாங்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் 3,131 கோடி ரூபாய்க்குதான் investment proposal வாங்கியிருக்கிறார்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம், நான் பேசி முடித்துவிடுகிறேன், அதன்பிறகு நீங்கள் சொல்லுங்கள். இதையே percentage இல் சொல்லவேண்டுமானால் கர்நாடகாவிற்கு 38.4 percentage, குஜராத்துக்கு 20 percentage, மகாராஷ்டிராவிற்கு 12.2 percentage, உத்திரப்பிரதேசத்திற்கு 3 percentage, தமிழ்நாட்டுக்கு 0.3 percentage. இப்பொழுது சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் தொழில் கொள்கை

மற்றும் மேம்பாட்டுத் துறை-DIPP மூலமாக வெளியிடப்படுகின்ற அறிக்கைகள் இரண்டு மாநிலங்களுக்கிடையே ஒப்பீடு செய்யப்படுகின்றன. மாநிலங்களுக்கிடையே ஒப்பீடு செய்யும்பொழுது இரண்டு முக்கியப் புள்ளிவிவரங்களின்படிதான் ஒப்பீடு செய்யப்படுகின்றன. குறிப்பாக, மத்திய அரசின் தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறை-DIPP மூலமாக வெளியிடப்படுகின்ற உத்தேசிக்கப்பட்ட தொழில் முதலீடு என்ற அடிப்படையில் ஒன்றும், அதற்கு அடுத்தபடியாக வெளிநாட்டு முதலீட்டாளர்களுடைய முதலீடு என்ற நேரடி முதலீட்டுத் தொகை என்ற முறையில் ரிசர்வ் வங்கியினால் தொகுத்து வழங்கப்படும் முதலீடு DIPP மூலமாக வெளியிடப்படும் வெளியீடு, அது இரண்டு கட்டங்களாக வெளியிடப்படுகின்றது. குறிப்பிட்ட அம்சம் என்னவென்றால் DIPP மூலமாக IEM புள்ளிவிவரங்கள் தொழில்முனைவோர்களால் திட்டமிடப்பட்டுள்ள முதலீட்டின் அளவே ஆகும். திட்டமிடப்பட்டுள்ள முதலீட்டின் அளவு என்னவென்று கேட்டால், அது முதலீட்டாளர்களுடைய உத்தேச மதிப்பீட்டைத்தான் பிரதிபலிக்கின்றன. ரிசர்வ் வங்கி மூலமாகப் பெறப்படும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் செய்துள்ள முதலீட்டின் அளவுதான் உண்மையிலேயே உறுதி செய்யப்பட்ட முதலீடு என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த அளவிலே பார்க்கும்போது FDI, அதாவது, அந்நிய நேரடி முதலீட்டைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் கடந்த *2000* ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை தமிழகம் நான்காவது இடத்தில் இருக்கிறது.

*முற்பகல் 11-55*

குறிப்பாக *17,745* கோடி ரூபாய் முதலீடு வரப்பெற்றள்ளது. இதை million dollar என்ற அளவில் குறிப்பிடும்போது *2,756* ரூபாய் என்ற அளவில் இருக்கிறது. மேலும் *2011* முதல் *2017* வரையிலான காலகட்டத்தில், கிட்டத்தட்ட தமிழ்நாட்டிற்கு வந்துள்ள முதலீட்டின் அளவு *1* இலட்சத்து *18* ஆயிரத்து *99* கோடி ரூபாய் என்ற அளவிற்கு முதலீடுகள் வந்துள்ளன. இது *19,175* million dollar என்ற அளவில்தான் இருக்கிறது. FDI பெறுவதில், அதாவது, அந்நிய முதலீடுகள் பெறுவதில் தொடர்ந்து தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளது. முதலீடுகளை ஈர்க்க உகந்த மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது. First state Maharashtra, second state Delhi. Delhi-ல் Gurgaon இருக்கிறது. U.P. இருக்கிறது. Then Haryana இருக்கிறது. Gurgaon, Delhi, Haryana மாநிலங்கள் சேர்ந்ததுதான் Delhi.



அதனால் அது இரண்டாவது இடத்தில் உள்ளது. மூன்றாவது இடம் கர்நாடக மாநிலம். அந்நிய நேரடி முதலீடுகள் பெறுவதில் தொடர்ந்து தமிழகம்தான் நான்காவது இடத்தில் முன்னணியில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் உத்தேச மதிப்பீட்டைக் கணக்கிடக் கூடாது. ரிசர்வ் வங்கிமூலம் கணக்கிடப்பட்ட அந்நிய நேரடி முதலீட்டாளர்களிடமிருந்து வருகின்ற முதலீட்டைத்தான் நாம் கணக்கிட வேண்டும். அந்த அளவில் பார்க்கும்போது, தமிழகம் தொடர்ந்து நான்காவது இடத்தில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், Karnataka State-ஐப் பொறுத்தவரைக்கும் *2017*-ல் அங்கு நடந்த investment விவரங்களில் அங்குள்ள கட்டமைப்புகளை எல்லாம் சேர்த்திருக்கிறார்கள். மின் சக்தியைச் சேர்த்திருக்கிறார்கள். Solar power—ஐச் சேர்த்திருக்கிறார்கள். அதனால் அவர்களின் முதலீடு—அந்தக் கட்டமைப்புகளையெல்லாம் சேர்த்துதான் அந்த முதலீடுகளேயொழிய, மற்றபடி கர்நாடகா மாநிலம் முதல் இடத்தில் இல்லை. மூன்றாம் இடத்தில்தான் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவேரி பிரச்சினை குறித்த வரலாற்றினைச் சொல்லிக் கொண்டிருந்தபோது, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எடுத்த நடவடிக்கைகள், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த தொடர் நடவடிக்கைகளையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்கின்றபோது, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கோபித்துக்கொண்டு இந்த வரலாற்றில் நாங்கள் செய்த சாதனைகளையும் சொல்லவேண்டியதுதானே என்று மிகவும் ஆதங்கப்பட்டு, குறைபட்டுக்கொண்டார். நான் திரும்பவும் அவரைக் கேட்கிறேன். எதிர்க்கட்சி என்ற நிலையிலிருந்து நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு

பேசுகின்றபோது 2007 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி 7 சதவிகிதம் என்று குறிப்பிட்டு, jump ஆகி 2013-2014 ஆம் ஆண்டிற்குச் சென்றுவிட்டார். இடையில் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி 2011-2012-ல் நடைபெற்றது. அந்த ஆட்சியில் உபரி வருவாயாகத்தான் தமிழகத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் வழிநடத்திச் சென்றார்கள் என்பதனையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதைத் தொடர்ந்து கடுமையான வறட்சி. அதனால் முதன்மைத் துறையில் வருமானம் குறைக்கப்பட்டது. உலக அளவில் பொருளாதார மந்த சூழ்நிலை நிலவியதால், அதில் இந்தியாவும் பாதிக்கப்பட்டது. இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கின்ற தமிழகத்திலும் அது பாதித்திருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் நான் என்னுடைய பதிலுரையில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, வேளாண்மைத் துறையிலே போதிய வளர்ச்சி இல்லையென்ற ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) வேளாண்மைத் துறையிலே போதிய வளர்ச்சி இல்லையென்று நீங்கள் பேசுகின்றபோது சொன்னீர்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்திலும் சரி, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிலும் சரி, இன்றைக்கு அகில இந்திய அளவிலே, உணவு தானிய உற்பத்தியில் அதிக விளைச்சலை ஏற்படுத்தி தமிழ்நாடு தொடர்ந்து முதல் பரிசைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இந்த ஆண்டுகூட மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் புது டெல்லிக்குச் சென்று, உணவு தானிய உற்பத்தியில் அதிகம் விளைச்சல் பெற்றதற்காக மத்திய அரசின் க்ரிஷி கர்மான் விருதினைப் பெற்று வந்துள்ளார் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மறுபடியுமா?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Frost & Sullivan என்ற ஒரு புகழ்பெற்ற சர்வதேச ஆலோசனை நிறுவனம் பத்து காரணிகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில், தமிழகத்திற்கு இரண்டாவது இடத்தை அளித்திருக்கிறது. அந்தப் பத்து காரணிகள் என்னவென்றால், Investment potential-ல் first place for Tamil Nadu. அரசின் செம்மையான செயல்பாட்டில் second place. மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறைக்கு second place. Education Department, second place. அடிப்படைக் கட்டமைப்பிற்கு third place. கணினிமயமாக்கலில், digitisation-ல் third place. வேலைவாய்ப்பில் third place. பொருளாதார மதிப்பீட்டில் fourth place. ஒட்டுமொத்த மதிப்பீட்டில் தமிழகம்தான் இரண்டாம் இடத்தில் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடகம், குஜராத், ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களை ஆய்வில் கணக்கிடும்போது நமக்கு கீழேதான் இருக்கின்றன என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் Invest India நிறுவனம் நடத்திய ஆய்வில் தொழில் முதலீட்டாளர்களை ஈர்ப்பதில் 87 சதவிகித மதிப்பெண் வாங்கி தமிழகம்தான் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், துணைத் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கின்றார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றார், நீங்கள் பேசாமல் இருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், திரு. ரங்கநாதன், அவர் பேசுகின்றார், நீங்கள் வேறு பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் முதலில் ஏதோ ஒரு

கணக்கு சொல்லி நாங்கள் நான்காவது இடத்தில் இருக்கின்றோம் என்று சொன்னார். இன்னொருவர் கொடுத்த ஏதோ ஒரு report-ஐச் சொல்லி நாங்கள் இரண்டாவது இடத்தில் இருக்கின்றோம் என்று சொல்கின்றார். நான் Central Government கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய Department of Industries and Commerce-ல் கொடுத்த report -ஐ சொன்னேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு report-ஐக் கொடுப்பார்கள், அதில் தப்பு ஒன்றும் இல்லை. அதற்காக நான் சொல்லவில்லை. Central Government கொடுத்த report-ஐ நான் கொடுத்திருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் துறை வளர வேண்டுமென்றால், என்னென்னவெல்லாம் வேண்டும் என்று கேட்பார்கள். என்னென்னவெல்லாம் வேண்டும் என்பது Economics-ல் ஒரு கேள்வி. முதலில் நிலம் வேண்டும், அதன் பிறகு raw materials வேண்டும், அதன் பிறகு தண்ணீர் வேண்டும், அதன் பின் electricity வேண்டும். இவை எல்லாவற்றையும்விட transport வேண்டும் என்று கேட்பார்கள். இந்த மாதிரி 5, 6 ingredients வேண்டும் என்று Economics-ல் சொல்வார்கள். அது மாதிரி பார்த்தீர்களென்றால் தொழில் துறையில் தென் மாவட்டங்களைத் தொழில்மயம் ஆக்க வேண்டும் என்று உங்களுக்கு மிகவும் ஆசை. அது நல்லதுதான், அதை நான் வரவேற்கின்றேன். அதற்காக நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்று கேட்டால், தென் மாவட்டங்களை எப்படியாவது தொழில்மயமாக்க வேண்டும் என்பதற்காக மதுரை-தூத்துக்குடி தொழில்வழித் தடத்தைச் செயல்படுத்துவதற்கு மாநில அரசு எடுத்துவரும் முயற்சிகள்மூலம் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லியிருக்கின்றீர்கள். நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்கின்றேன், 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 32 ஆம் பக்கத்திலும் இதையே சொல்லியிருக்கின்றார்கள். 2015-2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 36 ஆம் பக்கத்திலும் இதையே சொல்லியிருக்கின்றார்கள். 2016-2017 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 43 ஆம் பக்கத்திலும் இதையே சொல்லியிருக்கின்றார்கள். 2017-2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் இதையே சொல்லியிருக்கின்றார்கள். அடுத்த வருடமும் இதையே சொல்வீர்கள். (குறுக்கீடு) இது உங்கள் துறையா? சரி, சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தொழில் துறையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் வாதத்திற்காகச் சொல்லவில்லை. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் 1.31 என்று minus-ல் இருந்ததா இல்லையா? உங்களுடைய காலக்கட்டம் என்பதற்காக நான் குறையாக எதுவும் சொல்லவில்லை. இங்கே இருக்கின்ற தொழிற்சாலைகளில் மோட்டார் வாகன உற்பத்தியில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் இடத்தை வகித்துக்கொண்டிருக்கின்றது. புதியதாக ஒரு தொழிற்சாலை வருகின்றபோது உற்பத்தியாகின்றவற்றையெல்லாம் அடுத்த மாநிலத்திற்கு எடுத்துச் சென்று விற்கின்றபோது Transport charges அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், இங்கே 8 சதவிகித அளவிற்குத்தான் விற்பனையாகும், மற்றவையெல்லாம் மற்ற மாநிலங்களுக்குச் செல்கின்றன. இங்கு ஏற்கெனவே கார் ஆக இருந்தாலும் சரி, two-wheeler ஆக இருந்தாலும் சரி, அதிகமாக உற்பத்தியாகின்ற காரணத்தினால் விற்பனைக்கு அடுத்த மாநிலத்திற்குச் செல்கின்றார்கள். அதற்காக இந்த மாநிலத்தில் தொழில் வரக் கூடாது என்பதற்காக இல்லை. இன்னொன்று, ஒவ்வொரு மாநிலத்திலும் இதுபோன்ற GIM நடத்துகின்றார்கள். GIM நடத்துகின்றபோது 8 இலட்சம் கோடி, 10 இலட்சம் கோடி என்று சொல்கின்றார்கள். அந்த 8 இலட்சம் கோடி, 10 இலட்சம் கோடியில் original ஆக நீங்கள் பார்த்தீர்களென்றால், மேற்கு வங்கத்தில் 10 இலட்சம் கோடி என்று போட்டார்கள். ஆனால் 1 இலட்சம் கோடி வந்திருந்தாலே அது பெரியது. ஏனென்றுசொன்னால், சாலைகள் அமைப்பதையெல்லாம் அவர்கள் அந்த GIM-ல் சேர்க்கின்றார்கள். ஒவ்வொரு சாலை அமைப்பதையும் அவர்கள் investment என்று எடுத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் இதுபோன்றுதான் நடக்கின்றது. ஒவ்வொரு மாநிலத்திலும் என்னென்ன தேவை இருக்கிறதோ, அதற்கேற்றாற்போல் வருகின்றது. உங்களுடைய ஆட்சிக் காலத்தில் மின்சாரமில்லாத காரணத்தினால் பாதி தொழிற்சாலைகள் இங்கே வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் தடையில்லா மின்சாரத்தைக் கொண்டுவந்ததற்குப் பின்னால், இங்கே பல தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன. இப்பொழுதுகூட நீங்கள் சொன்னீர்களே South Corridor என்று. South Corridor கடந்த மூன்று வருடங்களாகத் தொடர்ந்து வருகிறது, வருகிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று நீங்கள் சொன்னீர்களே, அதற்குத் தேவையான இடத்தை முதலில் எடுக்க

வேண்டும். நாங்கள் அந்த Corridor-ஐ அறிவித்திருக்கிறோம். அதற்குரிய இடத்தை எடுக்க வேண்டும். ஒன்பது மாவட்டங்களில் நாங்கள் இடத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இடங்களை எடுப்பதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதனால்தான் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதை நிதிநிலை அறிக்கையில் போடவில்லையென்றால், நீங்கள் என்ன சொல்வீர்கள்? போன ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆண்டு Road குறித்துப் பேசவே இல்லை என்று சொல்வீர்கள். அதற்காகத்தான் இது குறிப்பிடப்பட்டிருக்கிறதேயொழிய தமிழகத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மரியாதைக்குரிய அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில் அமைதியாக சட்டம்-ஒழுங்கு நல்ல முறையில் இருக்கின்ற காரணத்தினால், தொழிலதிபர்கள் முதலில் தமிழகத்தைத்தான் தொழிற்சாலைகள் அமைக்கத் தேர்வு செய்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I have got highest regard for you. நான் சொல்லாததையெல்லாம் சொன்னதாக நீங்களாக நினைத்துக்கொண்டு, நீங்கள் கடகடகடவென்று சொல்லிக்கொண்டு போகிறீர்கள். பரவாயில்லை. நான் கேட்பது ஒன்றுதான். வேறு ஒன்றும் இல்லை. ஒரு சாலை. மதுரை-தூத்துக்குடி தொழில்வழித் தடத்தைச் செயல்படுத்துவதற்காக மாநில அரசு எடுத்துவரும் முயற்சிகள்மூலம் தமிழ்நாட்டில் தென்மாவட்டங்களை இணைப்பது. இந்தச் சாலைகள் போடுவதைத்தான் 5 வருடங்களாகச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இதே வார்த்தைகளைப் போட்டு போட்டு அடிக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. சாலையமைப்பதென்றால் இருக்கின்ற சாலைகளில் அமைக்க முடியாது. Land acquisition-க்கு போக வேண்டும். Land acquisition-க்கு போகும்போது அதை எதிர்த்து பல வழக்குகள் போடுகிறார்கள். நீங்கள் Highways-ல் பார்த்தீர்களானால், ஐந்து வருடங்களாகச் சாலை அமைக்க முயன்றுகொண்டிருக்கிறோம். Land acquisition முடியாவிட்டால் என்ன செய்ய முடியும்? அதை எதிர்த்து உடனே வழக்கிற்குச் சென்றுவிடுகிறார்கள். வழக்கு போடுவதால்தான் இன்னும் அமைக்க முடியவில்லை என்று சொன்னேன். நீங்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சாலை பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வந்த பிறகுதான், தமிழகத்தில் அதிக அளவில் சாலைகளை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை, இரண்டு முறை மத்திய அமைச்சர் சென்னைக்கு வருகை தந்து இரு முறையும் ஆய்வு செய்து கிட்டத்தட்ட ஒரு இலட்சம் கோடி ரூபாய் தமிழக சாலை மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அவரே பேட்டி அளித்துவிட்டுச் சென்றுள்ளார். பல சாலைகள் விரிவுபடுத்தப்பட இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், உட்கட்டமைப்பு அதிகமாக இருக்க வேண்டும், அப்போதுதான் அதிக அளவில் தொழிற்சாலைகள் வரும் என்ற நோக்கத்தில் இன்றைக்கு தமிழகத்தில் உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்துவதற்காகவும், சாலைகளை விரிவுபடுத்துவதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலாவதாக பசுமைச் சாலை-Green Corridor. இதில் பார்த்தீர்களானால், சேலத்திலிருந்து சென்னை வரை ரூ.10,000 கோடியில் உருவாக்கப்படும் என்று மத்திய தரை வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சரே சென்னைக்கு வருகை தந்தபோது சொல்லிவிட்டுச் சென்றார். இதை எதற்காகச்

சொல்கிறேனென்றால், இன்றைக்குத் தமிழ்நாட்டில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், போக்குவரத்து எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், புதிய தொழிற்சாலைகள் வருகின்ற காரணத்தினாலும் எளிதாக வாகனங்கள் செல்வதற்காக மத்திய அரசை நமது அரசு அணுகியது. மத்திய அரசும் தேவையான உதவிகளைச் செய்வதாக அறிவித்து, மத்திய அமைச்சர் ஒரே வருடத்தில் இரண்டு முறை சென்னைக்கு வருகை தந்து, ஆய்வு மேற்கொண்டு, எந்தெந்தப் பகுதிகளில் சாலைகள் விஸ்தரிக்கப்பட வேண்டுமோ அவற்றிற்குத் தேவையான நிதி உதவிகளைச் செய்வேன் என்று சொல்லி, அதற்குத் தேவையான நிதியையும் ஒதுக்கீடு செய்துவிட்டுச் சென்றிருக்கிறார் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரவாயல் தொகுதியைப் பொறுத்தவரையில், alignment எல்லாம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பணியும் விரைந்து செயல்படுத்தப்படும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது ஒரே ஒரு சாலை. திருப்பி திருப்பி சொல்கிறீர்களே, ஐந்து வருடங்களாக என்று. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் land acquisition என்று சொல்கிறார். ஆகையால், இந்த சாலையையே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மதுரை-தூத்துக்குடி Industrial corridor சாலைக்கு 10 கோடி ரூபாய் அரசு நிதி ஒதுக்கியுள்ளது. Mahindra Consulting Engineers Ltd.-யிடம் திட்ட மதிப்பீடு கொடுத்திருக்கிறோம். அதற்கு ஒரு Special Officer போடச் செய்ய வேண்டும். Chief Secretary-முதன்மைச் செயலர் அவர்களிடமும் கேட்டுள்ளோம். நிச்சயமாக Special Officer நியமனம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு துரித நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கொள்ளுங்கள், மேற்கொள்ளுங்கள். ஆனால், இதையே திருப்பி திருப்பி ஐந்து வருடங்களாகச் சொல்கிறீர்களே என்பதற்காகதான் சுட்டிக்காட்டினேன். சாலை அமைப்பதிலே கவனம் இல்லை, அதற்காகத்தான் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. Right.

வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு குறித்து, நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கிறீர்கள். 2012-2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பக்கம் 11-ல் வரும் காலங்களில் 2 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கான பயிற்சி அளிக்கப்படும் என்று கூறியிருக்கிறீர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 12-10

அதாவது, 2 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கான பயிற்சி அளிக்கப்படும் என்று கூறியிருக்கிறீர்கள். எப்போது? எந்த Budget-ல் கூறியிருக்கிறீர்கள்? 2012-2013 ஆம் ஆண்டு Budget-ல். 2017-2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 10-ம் பக்கத்தில், கடந்த ஆறு ஆண்டுகளில் 2.46 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கான பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறீர்கள். 2018-2019 அதாவது இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 10-ம் பக்கத்தில், இதுவரையில் 7 ஆண்டுகளில், 4.32 இலட்சம் இளைஞர்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சி பெற்றுள்ளார்கள் என்று கூறியிருக்கிறீர்கள். நான் கேட்க விரும்புவது, இதுவரையிலே நீங்கள் 4,32,000 இளைஞர்களுக்கு திறன் வளர் பயிற்சி கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், 2 கோடி பேருக்கு திறன் வளர் பயிற்சிக் கொடுக்கப் போகிறோம் என்று சொன்னீர்கள். ஆக, இன்னும் இருப்பது 3 வருடங்கள். உங்கள் திட்டப்படி, மீதமுள்ள 195 இலட்சம் இளைஞர்களுக்கு திறன் வளர் பயிற்சி உங்களால் தர முடியுமா என்பதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து படித்து முடித்த இளைஞர்களுக்கு அதாவது, 10th, 11th, +2 படித்து முடித்தவர்களுக்கும், ஐ.டி.ஐ. மற்றும் பாலிடெக்னிக் படித்து முடித்தவர்களுக்கும் அவர்களுடைய திறன் வளர்ச்சியை ஊக்குவித்து, திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்தார்கள். பல இலட்சம் இளைஞர்களுக்கு கிட்டத்தட்ட ஒவ்வொருவருக்கும் 60, 70 வகையான பயிற்சிகளைத் தந்து, அந்தப் பயிற்சிகளின் மூலமாக அவர்கள் சுய வேலைவாய்ப்பினைத் தேடிக் கொள்வதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கு வழிவகை செய்யப்படும் என்று சொன்னார்கள். அது தொடர் நிகழ்வாக ஒவ்வோர் ஆண்டும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக 2011-2012-லிருந்து வருடத்திற்கு 100 கோடி ரூபாய் என்ற அளவிலும், இந்த 2 வருடங்களாக 150 கோடி ரூபாய் என்ற அளவிலும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கு நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு வருடமும் எந்த அளவிற்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களையும், நிதிநிலை அறிக்கையில் அப்பயிற்சி தரப்பட்டிருக்கின்ற விவரங்களையும் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஒரே ஆண்டில் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிப்போம் என்று நாங்கள் சொல்லவில்லை. தொடர் நிகழ்வாக அந்தப் பயிற்சி அளிக்கப்படும் என்றுதான் நாங்கள் சொன்னோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** வருங்காலங்களில் 2 கோடி பேருக்கு பயிற்சி கொடுக்கிறோம் என்று நீங்கள் சொன்னீர்களே, ஆனால், இன்னும் balance இருக்கிறதே? 195 இலட்சம் பேருக்கு பயிற்சி அளிக்க முடியவில்லையே. இன்னும் 3 வருடங்கள்தான் இருக்கின்றன. அதற்குள் அவர்களுக்கு நீங்கள் பயிற்சி கொடுப்பீர்களா என்றுதான் கேட்க விரும்புகிறேன். அவ்வளவுதான்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆட்சி '100 ஆண்டுகளுக்கும் மேலாக நிலைத்து நிற்கும்' என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து நாங்கள் 2 கோடி பேருக்கு ஒவ்வோர் ஆண்டும் வகை வகையான பயிற்சிகள் அளித்து, வேலைவாய்ப்பைத் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் 1,29,903 நபர்களும் மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் 24,147 நபர்களும் என ஒட்டுமொத்தமாக 1,54,050 நபர்கள் மட்டும் பணியில் அமர்த்தப்பட்டனர். ஆனால், அம்மா அவர்களுடைய ஆட்சியில் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் 2,58,103 நபர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் 4,82,380 நபர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) என ஒட்டுமொத்தமாக 7,40,483 நபர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2 கோடி நபர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவது குறித்து சொன்னார்கள். அது குறித்து அம்மா அவர்களின் Vision 2023-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எது எப்படியோ, எங்கள் ஊர் அமைச்சர் அவர்கள் நன்றாகப் பதில் சொல்கிறார்கள்.

பிற்பகல் 12-15

அடுத்து, சென்னையைப் பொறுத்தவரையிலே, குடிநீர்ப் பிரச்சினை என்பது மிக முக்கியமான பிரச்சினை. நான் கேட்க விரும்புவது, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இந்த அரசாங்கம் எந்த முயற்சியும் எடுக்க மாட்டேன் என்கிறதே என்பதுதான் என்னுடைய வருத்தம். காரணம், சென்னைக்கு குடிநீர் பூண்டி, புழல் போன்ற ஏரிகளிலிருந்துதான் தரப்படுகிறது. இவை வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டது. அதற்கு பிறகு 1983-ல் முன்னாள் முதலமைச்சர் மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்களும், திரு. என்.டி.ஆர். அவர்களும் கிருஷ்ணா நதி தண்ணீரைக் கொண்டு வருவது குறித்து ஓர் ஒப்பந்தம் போட்டார்கள். அதற்குப் பிறகு அதை கிடப்பில் போட்டுவிட்டார்கள். அதற்குப் பிறகு நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது குறிப்பாக நான் பொறுப்பேற்ற பிறகு திரு. சந்திரபாபு நாயுடு, திரு. என்.டி. ராமாராவ் நாயுடு, திரு. சென்னாரெட்டி ஆகிய ஒவ்வொருவரையும் பார்த்து தண்ணீர் ஸ்ரீசைலத்திலிருந்து எடுக்க வேண்டும். ஸ்ரீசைலத்திலிருந்து போத்திரெட்டிப்பட்டியில் தண்ணீர் எடுத்து பணக்கச்சாலா regulator-க்குக் கொண்டுவந்து, வெலுகோடு reservoir-ல் தேக்கி, அதைக் கொண்டு வந்து வைக்கில் ஓடையில் விட்டு, நர்மதா Dam-ல் விட்டு, அங்கிருந்து கண்டலேறுவிற்கு கால்வாய் வெட்டி, கண்டலேறுவிலிருந்து சத்தியவேடு வந்து, சத்தியவேடுவிலிருந்து பூண்டிக்கு வந்து, பூண்டியிலிருந்து தண்ணீர் கொடுக்க வேண்டும். ஒரு inch-கூட வெட்டவில்லை. ஆனால் கலைஞர் அவர்கள் என்னை depute செய்து. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா ஆற்று தண்ணீரைக் கொண்டு வந்தது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே திராவிட முன்னேற்றக் கழக எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் முன்னின்று கொண்டு வந்ததாக இங்கே ஒரு தகவலை தந்துகொண்டிருக்கிறார். அதிலே ஒரு சிறு விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலேயே கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு வர வேண்டுமென திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலேயே சொல்லியிருந்தார். அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு, திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடத்தில் கிருஷ்ணா ஆற்று



தண்ணீர் தாவாவை குறித்து திரு. ஜெகஜீவன்ராம் அவர்களின் தலைமையிலே பேசுவதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்தைக் கேட்டபொழுது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அன்றைய முதலமைச்சராக இருந்த தி.மு.க. தலைவர் அவர்கள், வீராணம் திட்டத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரலாம் என்கிற எண்ணத்தில் ‘எங்களுக்கு கிருஷ்ணா ஆற்று நீர் வேண்டாம்’ என்று சொன்னார். அதற்குப் பிறகு வீராணம் திட்டம் தோல்வியடைந்ததற்குப் பிறகு எங்களையும் அந்தக் கிருஷ்ணா ஆற்று தாவாவிலே ஒரு party-ஆக சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தபோது, அன்றைக்கு இருந்த திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்களுடைய அரசு முடியாது என்று தடுத்துவிட்டார்கள். அதற்குப் பின்னால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக வந்து, அவர் திருமதி இந்திராகாந்தி அம்மையாரோடும், அன்றைக்கு ஆந்திர முதல்வராக இருந்த திரு. என்.டி.ஆர். அவர்களோடும் பேசி, தெலுங்கு-கங்கை தண்ணீரைக் கொண்டு வந்த பெருமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேரும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி நீர் திட்டத்தைப் பொறுத்தவரை அதற்கு விதை போட்டு, மரமாக்கி அதை வளர்த்த பெருமை, பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆனால், அந்தத் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்ன செய்தார்கள் என்றால் அவசர கோலத்தில் ஒரு விழா ஏற்பாடு செய்து திரு. என்.டி. ராமாராவ் அவர்கள் ஒரு குடம் தண்ணீர் எடுத்து வந்துவிட்டார், உங்கள் தலைவர் ஒரு குடம் கொண்டு வந்தார். அந்தக் குடத்திலிருந்துதான் தண்ணீரை ஊற்றினீர்களே தவிர, கிருஷ்ணா நீர் சென்னைக்கு வரவில்லை. (மேசையைத் தட்டும்

ஒலி) ஆனால், புரட்சித் தலைவர் கொண்டு வந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி, சென்னைக்கு அந்தத் தண்ணீர் வரக் காரணமாக இருந்த தலைவர், முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் வரலாற்று உண்மை. வேண்டுமானால் பத்திரிகை நண்பர்கள் அந்த ஃபோட்டோவைக்கூட எடுத்து நாளைக்கு பத்திரிகையில் போடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

**திரு. துரைமுருகன்:** *ஒவ்வொருவரும் புது, புது கருத்தாக சொல்கிறார்கள் சார். நான், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களும், திரு. என்.டி. ராமாராவ் அவர்களும்தான் ஒப்பந்தம் போட்டார்கள் என்று சொன்னேன். அதற்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அவரின் மறைவிற்கு பிறகு அப்படியே நின்றுபோய் விட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு நான்தான் செய்தேன். உங்களுக்கு தெரியுமா? நான் சொன்னேன் அல்லவா? எந்தெந்த இடத்திற்கு எப்படி எங்கேயிருந்து தண்ணீர் வருகிறது என்று. இதை யாராவது பார்த்திருக்கிறீர்களா? நான் பார்த்திருக்கிறேன். 7 முறை நான் போய்ப் பார்த்தேன். ராப்பூர்திட்டிலிருந்து 400 அடி பள்ளம் வெட்டினார்கள். அந்த பள்ளம் வெட்டும் பொழுதெல்லாம் நானும், திரு. பொன்முடி அவர்களும் ஸ்ரீசைலத்திலிருந்து போய் பார்த்து வந்தோம். ஆகையினால் அதையெல்லாம் விட்டுவிட்டு, நீங்கள் 'நாங்கள்தான் செய்தோம், நாங்கள்தான் கொண்டுவந்தோம்' என்கிறீர்கள்.*

*இரண்டாவது என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவர் பாவம். எப்பொழுதாவது ஏதாவது சொல்வார். (சிரிப்பொலி) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்--அதாவது கலைஞரும், திரு. என்.டி. ராமாராவ் அவர்களும் குடம் எடுத்து வந்தார்கள் என்று சொன்னார்.*

*பிற்பகல் 12-20*

*இல்லை, அதுவே தவறு. திரு. என்.டி. ராமாராவ் இல்லை, அவர் இறந்துபோய் விட்டார். திரு. சந்திரபாபு நாயுடுதான் வந்தார். ஆகையினால், நாங்கள் தண்ணீர் கொண்டு வந்து,*



*அது வந்துகொண்டிருக்கிறது. அதை இல்லையென்று சொல்ல வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) ஆகையினால், தண்ணீர் இப்போது இல்லை. இந்த வருடம் என்ன நிலைமை, நீங்கள் டிசம்பர் மாதத்திலேயே தண்ணீர் கொடுங்கள் என்று அவர்களைக் கேட்டிருக்கலாம். ஆனால், இப்போது என்ன செய்திருப்பீர்கள், நமக்கு மழை வரும், எதற்கு அவர்களிடத்தில் வாங்க வேண்டுமென்று விட்டுவிட்டீர்கள். ஆனால், நிலைமை இப்போது என்ன தெரியுமா? . . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன கருத்து மாற்றுக் கருத்து, சரியில்லாத கருத்து. ஏனென்றால் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். கடந்த முறை நானும், அண்ணனும் நேரடியாக ஆந்திராவுக்குச் சென்று அங்கிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவை சந்தித்து கேட்டோம். அவர்கள் என்ன சொன்னார்களென்றால், மாநிலம் இப்போது இரண்டாகப் பிரிந்துவிட்டது. எங்களுக்குள்ள 5 டி.எம்.சி.-யில் நாங்கள் $2\frac{1}{2}$ டி.எம்.சி. தண்ணீர்தான் தருவோம் என்கிறார். $2\frac{1}{2}$ டி.எம்.சி. தண்ணீரை நீங்கள் தெலுங்கானாவில் போய் வாங்கிக்கொள்ளுங்கள் என்கிறார். மீதி கேட்டால் நீங்கள் போய் கர்நாடகத்தில் வாங்க வேண்டும் என்கிறார்கள். அவர்கள் நமக்கு 12 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டும். ஒருவர் மேல் ஒருவர் தூக்கிப்போட்டு நமக்குத் தண்ணீர் தர மறுக்கிறார்கள். இப்போதுகூட, தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தி நம்முடைய செயலாளர் அவர்களும், தலைமைச் செயலாளர் அவர்களும், நானும் தொடர்ந்து கடிதம் எழுதியதன் வாயிலாக இந்தத் தண்ணீர்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது. கிட்டத்தட்ட 2 டி.எம்.சி. தண்ணீருக்குமேல் நமக்குக் கிடைத்திருக்கிறது. கிட்டத்தட்ட இப்போது $4\frac{1}{2}$ டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. அதுமட்டுமல்ல, சென்னை மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்குவதற்காக அம்மாவுடைய அரசு இன்றைக்கு கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகையில் நீர்த்தேக்கம் ஒன்று கட்டப்பட்டு 1 டி.எம்.சி. தண்ணீரைத் தேக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினார்கள். கிட்டத்தட்ட 330 கோடி ரூபாயில் திட்ட மதிப்பீடு தயாரித்து

அந்தப் பணி துவங்கப்பட்டது. நிலம் கையகப்படுத்துவதில் சிலபேர் நீதிமன்றத்திற்குப் போய்விட்டார்கள். நீதிமன்றத்திற்குப் போன காரணத்தால்தான் அந்தப் பணிகளை முடிக்க முடியவில்லை. அதைக்கூட அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடு ஏற்பட்டு, அந்த நிலத்தையெல்லாம் கையகப்படுத்தி இன்னும் ஒரு 4, 5 மாதங்களுக்குள் அந்தப் பணிகளை நிறைவுபெற்று ஒரு டி.எம்.சி. தண்ணீரைத் தேக்கி நம்முடைய சென்னை மாநகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்குவதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, அம்மா அவர்களுடைய அரசுதான் இதைச் செய்திருக்கிறது. உங்களுடைய அரசு செய்யவில்லை. இப்போது புதிதாக இந்த நீர்த்தேக்கத்தைக் கட்டியதும் அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சென்னையிலே இருக்கிற குடிநீர்ப் பிரச்சினையைப்பற்றி அம்மா அவர்களுடைய அரசு திட்டமிடவில்லை, பிரச்சினைகள் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று பேசினார்கள். தமிழகத்தில் 142 வருடங்களில் இல்லாத மிகப் பெரிய வறட்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் காலத்தில்தான் வந்தது. 60, 62 சதவிகிதம் மழைப்பொழிவு குறைவு. அந்தக் கடுமையான வறட்சியை 142 வருடங்களுக்கு முன்பு நம் முன்னோர்கள் பார்த்தார்கள். இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான அரசு சிறப்பான முறையிலே அதை எதிர்கொண்டு, இன்றைக்குப் பார்த்தீர்களென்றால், கிட்டத்தட்ட இப்போது மட்டும் 1,083.99 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு 41,474 பணிகள், பல பணிகள் செய்து வருகிறோம். மின் மோட்டார் திறனை அதிகரித்தல், ஆழ்துளைக் கிணறுகளைச் சுத்தப்படுத்துதல், ஆழ்துளைக் குழாய் கிணறுகளை அமைத்தல், புதிய நிரூற்றுக் கிணறு அமைத்தல், மின் மோட்டார்களை மாற்றியமைத்தல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல் போன்ற பணிகளைச் செய்து மிகச் சிறப்பாக சமாளித்தோம். அதுமட்டுமல்ல, சென்னையைப் பொறுத்தளவுக்குக் கடந்த ஆண்டு நீர் இருப்பைப் பார்த்தீர்களென்றால், ஏரிகளில் 1,535 மில்லியன் கன அடிதான் இருந்தது. ஆனால், இன்றைய தேதியில் 4,973 மில்லியன் கன அடி நீர் இருப்பு இருக்கிறது. ஆகவே, சென்னையைப் பொறுத்த அளவிற்கு நமக்கு எந்தப் பிரச்சினையும் இப்போது வராது. அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த பல்வேறு நடவடிக்கைகள் மட்டுமல்ல, அம்மா அவர்கள் 110 விதியின்கீழ் 150 M.L.D. 400 M.L.D. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் குறித்து அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் எங்களை எல்லாம் அழைத்துக்கொண்டுபோய் மத்திய அரசிடம் பேசினார்கள். அதேபோல, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இங்கே வரும்போது அவரை வலியுறுத்தி 150 M.L.D., கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை அறிவிக்கச் செய்தார்கள். ஏனென்றால் கடுமையான வறட்சி வருகிறது. நீராதாரத்திற்கு கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் அவசியம். அதற்காக அம்மா அவர்கள் அறிவித்தார்கள். 150 M.L.D. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைப் பொறுத்தவரை டெண்டருக்குப் போய்விட்டோம். 400 M.L.D. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கும் பார்த்தீர்களென்றால், ஜப்பான் நாட்டு நிதி JICA மூலம் நடவடிக்கை எடுத்து priority-க்கு கொண்டு வந்துவிட்டோம். மத்திய அரசை வலியுறுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக priority-க்கு கொண்டு வந்துவிட்டோம். கடந்த 10 நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை டெல்லிக்கு அனுப்பினார்கள். அதற்காக நான் டெல்லிக்கு போய் வந்தேன். ஆகவே, எல்லா நடவடிக்கையையும் எடுத்திருக்கிறோம். அதேபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் கிட்டத்தட்ட 21 ஆயிரம் கோடி ரூபாயை குடிநீருக்காக மட்டும் ஒதுக்கி, பல்வேறு திட்டங்களை மேம்படுத்தி இருக்கிறார்கள். அதற்கு முன்னால் நீங்கள் 5 வருடம் ஆட்சியில் இருக்கும்போது வெறும் 7,000 கோடி ரூபாய்தான் குடிநீருக்கு ஒதுக்கி இருந்தீர்கள். அப்போது மொத்தம் 4,900 M.L.D. தான் நாம் மொத்தமாக கொடுத்துக் கொண்டிருந்தோம்.

பிற்பகல் 12-25

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, கிட்டத்தட்ட 7,382 மில்லியன் லிட்டர் குடிநீர் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. முந்தைய தி.மு.க. ஆட்சியைவிட, கிட்டத்தட்ட 2,432 மில்லியன் லிட்டர் குடிநீர் அதிகமாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இன்னும் நிறைய திட்டங்களை, மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் விரிவாகக் கூறினால், உங்களுக்குப் பேச நேரம் இருக்காது. எனவே, குடிநீர்ப் பிரச்சினையை, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலான அரசு சிறப்பான முறையில் எதிர்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது கிருஷ்ணா நதி நீர் குறித்து. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏதேதோ சொல்கிறார். நான் கிருஷ்ணா நதி நீர் குறித்த பேச்சை விட்டுவிட்டு நேரடியாக உரைக்கு வருகிறேன்.

2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, பக்கம் 68-ல், "நாளொன்றுக்கு 400 மில்லியின் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலை நிறுவ ஆய்வு மேற்கொள்ளப்படும்" என்று தெரிவித்திருந்தீர்கள். 16-4-2013 அன்று, விதி 110-ன்கீழ், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள், கீழ்க்கண்ட இரண்டு திட்டங்களை அறிவிக்கையில்,

'1. 150 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றொரு நிலையம் நெம்மேலியில் அமைக்கப்படும். அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது;

2. சென்னை மாநகரத்தில் அதிகரித்து வரும் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய, தெற்குப் பகுதியில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும்



மற்றொரு நிலையம் தொடங்கப்படும். இந்தத் திட்டத்திற்கு திட்ட அறிக்கை தயார்' என்று மாண்புமிகு அம்மையார் அவர்கள் பேசினார்கள்.

2015-2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, பக்கம் 50-ல், "150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் தொடங்கப்படும்" என்று தெரிவித்தீர்கள். 2016-2017 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், "தென் சென்னையிலுள்ள பேரூரில், 3,227.84 கோடி ரூபாய் செலவில், நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறனும், நெம்மேலியில் 1,258.88 கோடி ரூபாய் செலவில், நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறனும் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களையும் முறையே ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) மற்றும் ஜெர்மன் பன்னாட்டு நிறுவனம் (KfW) ஆகியவற்றின் நிதி உதவியுடன் நிறுவப்படும்" என்று சொன்னீர்கள். ஆனால், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் குறித்து எதையும் தெரிவிக்கவில்லை. சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றிட 7 ஆண்டுகளாக என்ன செய்தீர்கள்? என்றுதான் நான் கேட்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) அதைத்தான் நீங்கள் சொல்லிவிட்டீர்களே! (குறுக்கீடு) அதைத்தானே திரும்பச் சொல்லப்போகிறீர்கள். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு, ஏற்கெனவே நான் பேசியபோது பதில் சொல்லிவிட்டேன். எனினும், தற்போது பதில் சொல்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள், 400 எம்.எல்.டி. மற்றும் 150 எம்.எல்.டி. திறன்கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் இரண்டு திட்டங்களை அறிவித்தார்கள். அதற்கு அதிகமான தொகை தேவைப்படுகிறது. ஒரு திட்டம் JICA நிதியுதவியுடனும், மற்றொரு திட்டம் KfW நிதியுதவியுடனும் மேற்கொள்ளப்படுகிறது. ஜெர்மன் பன்னாட்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் தொடங்கப்படவிருக்கும் 150 எம்.எல்.டி. திறன்கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு ஒப்பந்தம் கோரிவிட்டோம். தொடர் நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டதால், process ஆகிவிட்டது. அதேபோன்று, 400 எம்.எல்.டி. திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு, முன்பு 3,000 கோடி ரூபாய் தேவைப்பட்டது. தற்போது, அதற்கு 5,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை தேவைப்படுகிறது. அது மிகப் பெரிய தொகை. அதற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையை தான் (JICA) மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தபோது, அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பாரதப் பிரதமர் அவர்கள் தமிழகம் வந்தபோதும் வலியுறுத்தினார்கள். அதேபான்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களையெல்லாம் டில்லிக்கு அழைத்துச் சென்று நேரடியாக பேசியதையடுத்து, priority-ல் இந்த வருடம் இரண்டு திட்டங்களையும் செயல்படுத்தப் போகிறோம். 150 எம்.எல்.டி. திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு டெண்டர் வரை சென்றுவிட்டோம். அதேபோன்று 400 எம்.எல்.டி. திறன்கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தையும் கொண்டுவரப்போகிறோம். அதற்கு 5,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான மிகப் பெரிய தொகை தேவைப்படுகிறது. அத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து தொடந்து follow-up செய்ததால்தான், process நடந்திருக்கிறது. அதனால்தான், இத்திட்டம் குறித்து பட்ஜெட்டில் தெரிவிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

பிற்பகல் 12-30

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதேபோன்றுதான் எங்களுடைய தளபதி அவர்கள் அமெரிக்காவிற்கு சென்று வந்ததால்தான், நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. நான் தற்போது ஒன்றை கேட்கிறேன். தற்போது நீங்கள் JICA, KfW நிதியுதவி குறித்தும், டெண்டர் குறித்தும் சொன்னீர்கள். நான் இந்தத் திட்டம் குறித்து ஒன்றைக் கேட்கிறேன். இந்தத் திட்டத்திற்கு 2016 ஆம் ஆண்டிலேயே டெண்டர் வைக்கலாம் என்று சொன்னீர்கள். 2016 ஆம் ஆண்டு டெண்டர் வந்தாகிவிட்டது. 2017 ஆம் ஆண்டில் technical bid-ஐக்கூட திறந்துவிட்டீர்கள். ஆனால் இன்னும் (குறுக்கீடு) work order கொடுப்பதற்கு bid இன்னும் திறக்கவில்லை. ஏன் செய்யவில்லை நீங்கள்? ஒரு வருடம் இல்லை



இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஏன் திறக்கவில்லை அந்த bid-ஐ. ஏனென்றால், **திறக்கவில்லை. அதனால் bid திறக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும். இது ஒரு வருடம், இரண்டு வருடங்கள் இல்லை. இப்போதுதான் fund tie up முடிந்தது. டெண்டர் விட கால அவகாசம் இருக்கிறது. டெண்டர் rule-ல் உள்ளபடிதான் செய்ய முடியும். எல்லாவற்றையும் மீறி செய்ய முடியாது. அதாவது டெண்டருக்கென்று ஒரு rule இருக்கிறது. Fund tie up செய்து இப்போதுதான் டெண்டர் கோரியிருக்கிறார்கள். இது பெரிய திட்டம். இப்போது ஏதாவது பிரச்சினை என்றால் உடனே நீதிமன்றத்திற்கு சென்று விடுகிறார்கள். இதற்கென்று ஒரு Committee இருக்கிறது, consulting agency இருக்கிறது. எல்லாம் முறைப்படி நடக்கும். அதிலே எந்த சட்ட விதிமீறலும் கிடையாது. இரண்டு வருடம் மற்றும் ஒரு வருடம் என்பது எல்லாம் கிடையாது. அது தவறான தகவல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) ** என்கிற அந்த வார்த்தை, நான் சொன்னது உட்பட நீக்கப்படுகிறது.

**திரு. துரைமுருகன்:** தவறாக நினைக்காதீர்கள். அந்த bid open பண்ணுவது இருக்கிறது அல்லவா? அந்த ** திறக்கவில்லை என்று நான் சொன்னேன். (சிரிப்பு) அப்படியா நான் சொல்வேன்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரும்பவும் நான் சொல்கிறேன். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மிகுந்த அனுபவம் வாய்ந்தவர். சாமர்த்தியமாகப் பேசக்கூடியவர். எப்படிப் பேசினால் எப்படி இருக்கும் என்பதை ஆய்வு செய்து, ஆராய்ந்து, அதற்கு என்ன சொல் போடவேண்டுமோ, அந்தச் சொல்லை போடக்கூடிய வல்லமை மிக்கவர். ஆகவே, சாதாரணமாக நீங்கள் பேசினாலே நாங்கள் எல்லாம் புரிந்துகொள்வோம். இப்படியெல்லாம் பேச வேண்டிய தேவையே இல்லை. ஆகவே நன்றாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய சிறப்பான கருத்துகள் நல்ல அறிவுரைகளையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அதைச்சொன்னீர்கள் என்றால், அரசுக்குத் தேவையான ஆக்கபூர்வமான கருத்துகள் கிடைக்கின்றபோது அது இன்னும் கூடுதலாக சிறப்பாக நாங்கள் பணி செய்வதற்கு உதவியாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய contribution-க்கு நன்றி. ஆனால், உள்ளாட்சித் துறை அமைச்சரை நான் கேட்பது இந்த டெண்டர் 2016 ஆம் ஆண்டிலே போடப்பட்டது. 2017 ஆம் ஆண்டு வரையிலே இன்னும் திறக்கவில்லை. Technical bid மட்டும் திறந்தீர்கள். இதற்கு ஐந்து பேர் போட்டிருக்கிறார்கள். இன்னுமொன்று தெரியுமா? கடனை 2016 ஆம் ஆண்டிலேயே வாங்கிவிட்டீர்கள். அதற்கு பிறகு work bid-ம் திறக்கவில்லை. ஆனால், அதற்கு வட்டி கட்டிக்கொண்டிருக்கிறீர்கள். சார் உலகத்தில் இந்த மாதிரி எங்கேயாவது இருக்குமா? (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது ரூ.1,300, ரூ.1,400 கோடி சார். அதை நாம் ஜெர்மன்காரரிடம் வாங்கியாகிவிட்டது. ஜெர்மன்காரருக்கு நீங்கள் என்றைக்குச் சொன்னீர்களோ அன்றையிலிருந்தே வங்கியில் வட்டி போய்க்கொண்டிருக்கிறது. ஆனால், ஏன் திறக்க மாட்டேன் என்கிறீர்கள். அந்த ஐந்து பேரின் டெண்டரையும் திறந்துபார்த்து யாருக்காவது ஒருவருக்குக் கொடுங்களேன். அதற்கு பதில் சொல்லுங்கள் சார்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார். இந்த திட்டத்திற்கு முதலில் ரூ.914 கோடிக்குத்தான் அரசாணை போடப்பட்டது. அதற்குப் பிறகு மாற்றி மாற்றி பல அரசாணைகள் போடப்பட்டுவிட்டன. முழுமையாகவே JICA அல்ல. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** நீங்கள் பேசும்போது நாங்கள் அமைதியாகத்தானே இருந்தோம். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். அதன்பிறகு அவர் பதில் சொல்லட்டும். இத்திட்டத்திற்கு நிதி நிறுவனங்களிலிருந்து மூன்று திட்டங்களுக்குகீழ் நிதி வருகிறது. அதேபோல், ஒவ்வொரு வருடமும் material விலை அதிகமாகிவிடுகிறது. அதேபோல இத்திட்டத்திற்கான நிதியனைத்தையும் முழுமையாக JICA-யிடமிருந்து பெறவில்லை. இப்போது AMRUT திட்டத்தின்கீழும் நிதி வந்திருக்கிறது. AMRUT திட்டத்தில் என்றால், மத்திய மாநில அரசிடமிருந்து 50, 50 சதவீதம். இப்படி ஒவ்வொரு திட்டமும்--எடுக்கமுடிகிறது. வாங்கும் கடனுக்கு வட்டி நிறைய கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, பல்வேறு காலகட்டத்தில் பல்வேறு நிதிகள் tie up செய்துதான் டெண்டர் போடுகிறோம். ஒட்டுமொத்தமாக அதை வாங்கி, டெண்டருக்கு முன்னரே உடனடியாக வட்டி கட்டுவது போன்ற சூழ்நிலை இல்லை. அந்த மாதிரி இல்லை. நாம் ஒவ்வொரு திட்டத்திற்கும் பிரித்து 2, 3 fund--மூன்று fund-ல் அதை எடுத்திருக்கிறோம். ஆகவே, உடனடியாக வட்டி கட்ட வேண்டிய அவசியமில்லை.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய துணைத் தலைவர் இங்கு உரையாற்றிய நேரத்தில் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களை சொல்லியிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்வதை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், நாங்கள் கேட்கிற கேள்வி, நாங்கள்

மட்டுமல்ல, இந்த சபை தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்று, என்னவென்று கேட்டால், இந்தப் பிரச்சினையில் எப்போது G.O. போட்டிருக்கிறீர்கள்; எந்தத் தேதியில் G.O. போட்டிருக்கிறீர்கள்; எந்தத் தேதியில் கடன் வாங்கியிருக்கிறீர்கள்; எப்போது, எந்தத் தேதியில் டெண்டர் open செய்திருக்கிறீர்கள்; டெண்டர் தேதி எப்போது fix செய்திருக்கிறீர்கள்? இந்தத் தேதிகளை எல்லாம் முறையாக இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டியது உங்களுடைய கடமை. இதை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை எங்களுக்கும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை. நீங்கள் தேதியைச் சொல்லவில்லை என்று சொன்னால், நாங்கள் சந்தேகப்படுவது வேறுவிதமாகத்தான் இருக்கும். அதனால்தான் எங்களுடைய கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். எனவே, அந்தத் தேதியைச் சொல்லுங்கள். நாங்கள் மட்டுமல்ல, இந்த நாட்டிற்கும் தெரிய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள். அவர்கள் சொல்வார்கள், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) தேதி குறித்த விவரங்கள் எல்லாவற்றையும் உடனே கையில் வைத்திருக்க முடியாது.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட இங்கு சொன்னார்கள். இந்த தேர்வாய்கண்டிகை, இராமன்சேரி--இது ரொம்ப நாளாய் எனக்கும் தெரியும். ஏனென்றால் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திலே அந்த இரண்டு பகுதிகளும்--இராமன்சேரியும், திருக்கண்டிலம் என்ற இரண்டு ஊர்களும் வரும். கட்ட முடியாமல் போய்விட்டது. 2011-2012-லிருந்து--எப்படிச் செய்கிறார்கள் என்று பாருங்கள். 2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 68-ல் தேர்வாய்க்கண்டிகை, திருக்கண்டலம், இராமன்சேரி ஆகிய இடங்களில் தலா ஒரு டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட நீரினைத் தேக்குகின்ற வகையில் ஏரிகளை உருவாக்குவோம். 2012-2013-ல் 300 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒரு டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட புதிய ஏரி ஒன்றைத் தேர்வாய்க்கண்டிகையில்



உருவாக்குவோம். அது 2014-ஆம் முடியும் என எதிர்பார்த்தோம். 2014-ம் ஆண்டெல்லாம் முடிந்துவிட்டது. அடுத்து, 2013-2014 நிதிநிலை அறிக்கையில் மறுபடியும் தேர்வாய்க்கண்டிகை, கண்ணன்கோட்டை--அது புதிதாக வந்திருக்கிறது--அதில் 330 கோடி ரூபாய் செலவில் ஒரு நீர்த்தேக்கம்.

நான் ஒன்றை மட்டும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதாவது, தேர்வாய்க்கண்டிகை, கண்ணன்கோட்டை, இராமன்சேரி போன்ற பகுதிகளில் எவற்றையெல்லாம் கட்டியிருக்கிறீர்கள்? (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம், please. இதில் நான் இன்னொன்றையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். முன்பு வீசிய புயலில்--ஏற்கெனவே நீங்கள் ஒன்றை கட்டி, கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய் செலவில் ஓர் ஏரி கட்டி, அந்தப் புயலில் அடியோடு அடித்துக்கொண்டு சென்றுவிட்டது. Is it so? (குறுக்கீடு) இல்லை, I saw in newspaper.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது எந்த ஏரி என்று பெயரைச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அதனால், இந்த ஏரிகளில் நீங்கள் எதைக் கட்டி முடித்திருக்கிறீர்கள்? அதை இப்போது நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் தெளிவாகச் சொன்னேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சற்று கவனிக்கவில்லை என்று நான் கருதுகிறேன். கண்ணன்கோட்டை, தேர்வாய்க்கண்டிகை நீர்த்தேக்கத் திட்டம்; இந்தத் திட்டம் முன்னர் 330 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11-9-2011 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணி துவங்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்மூலம் 1 டி.எம்.சி. அடி நீரைத் தேக்க வழிவகை செய்யப்பட்டது. அந்தத் திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டது. ஆகவே, அந்த நிலம் கையகப்படுத்துகின்றபோது, சில நில உரிமைதாரர்கள் நிலத்தைக் கொடுக்க மறுத்து நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டனர். ஆகவே, நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகு, அந்தப் பணி முழுமை பெறவில்லை. கிட்டத்தட்ட 87 சதவிகித பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன.

இன்னும் எஞ்சிய 13 சதவிகித பணிகள்தான் நிறைவு பெறவேண்டியுள்ளது. இப்போது நீதிமன்றத்திலிருந்து நமக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கப்பெற்ற காரணத்தினாலே, அந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்கி, எஞ்சியுள்ள பகுதியும் கட்டி முடிக்கப்பட்டு, அந்த ஒரு டி.எம்.சி. தண்ணீர் தேக்கப்பட்டு நம்முடைய சென்னை மாநகர மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் 2013-2014 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நெம்மேலியிலிருந்து தற்போது இயங்கிவரும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அருகில் காலியாக உள்ள நிலத்தில் 150 எம்.எல்.டி. கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் மற்றும் உந்து குழாய் அமைக்க சட்டமன்ற விதி எண் 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 9-3-2015 ஆம் தேதியிட்ட அரசாணை எண் 47-ன்படி, ரூ.1,371.86 கோடி மதிப்பீட்டில் தமிழக அரசு நிருவாக ஒப்புதல் அளித்தது. அரசாணை எண் 79, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28-7-2017-ன்படி ரூ.1,259.38 கோடிக்கு திருத்திய நிருவாக ஒப்புதல் பெறப்பட்டது. இதன்படி இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு ஜெர்மனி அரசின் நிதி நிறுவனம்-KfW, 100 மில்லியன் யூரோ (தோராயமாக 700 கோடி ரூபாய்) கடன் வழங்குவதற்கு கடன் ஒப்பந்தப் பத்திரத்தில் 28-6-2016 அன்று இந்திய அரசுடன் கையெழுத்திட்டுள்ளது. மீதித் தொகைக்கு மத்திய, மாநில அரசுகளால் AMRUT திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. நிலைய கட்டுமானப் பணிக்கு 15-9-2017-ஐ இறுதி நாளாகக் கொண்டு கீழ்க்கண்ட 5 ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளன: (1) திருவாளர்கள் ஆசியோனா அஃவா நிறுவனம், ஸ்பெயின் (2) திருவாளர்கள் கோப்ரா-டெக்டான் கன்சார்டியம்ஸ், ஸ்பெயின் (3) திருவாளர்கள் ஐ.டி.இ. தொழில்நுட்ப நிறுவனம், இஸ்ரேல் (4) திருவாளர்கள் சூயஸ் இன்டர்நேஷனல், குர்கான் மற்றும் (5)



திருவாளர்கள் வி.ஏ. டெக் வாபாக் நிறுவனம், சென்னை. குழாய் பதிக்கும் பணிக்கு 25-5-2017-ஐ இறுதி நாளாகக் கொண்டு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் திருவாளர்கள் கோயா மற்றும் கம்பெனி கட்டுமான நிறுவனம், ஹைதராபாத் அவர்களிடமிருந்து பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளது. இதனிடையே இந்நிலையம் அமைப்பதற்குத் தேவையான மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின்கீழ் வரும் கடல்சார் ஒழுங்குமுறை ஆணையத்தின் இசைவு பெறுவதற்கு தமிழக அரசின் கடல்சார் துறை பரிந்துரையுடன் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. 28-11-2017 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் வல்லுநர்கள் ஒப்பளிப்புக் குழுக் கூட்டத்தில், தேசிய கடல்சார் ஒழுங்குமுறை ஆணையத்தின் இசைவு வழங்குவதற்கு பரிந்துரை செய்துள்ளது. இதற்கான ஒப்புதல் கடிதம் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்திடமிருந்து விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான திட்ட நிருவாக ஆலோசகரைத் தேர்வு செய்யும்பொருட்டு இதற்கான ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கான தேதி 6-9-2017-லிருந்து 20-9-2017 வரை நீட்டிக்கப்பட்டது. 20-9-2017 அன்று 3 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளன. இதனிடையே சென்னை குடிநீர் வாரியம் கேட்டுக்கொண்டதன்படி நெம்மேலியில் 150 M.L.D. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு திட்ட நிருவாக ஆலோசகராக தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தாரை நியமிக்க தமிழக அரசு ஒப்புக்கொண்டது. இதனை ஏற்க ஜெர்மனி அரசின் KfW நிதி நிறுவனத்தின் ஒப்புதலுக்கு 2-1-2018 அன்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. கடன் வாங்குவதால் எல்லாவற்றையும் அவர்களுடைய directions-படிதான் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த நேரத்தில் தேதி, புள்ளிவிவரங்கள் என் கையில் இல்லை. அதனால்தான் இருக்கின்ற பிரச்சினைகளைச் சொன்னேன். இப்பொழுது முழுமையான விவரங்கள் வந்துவிட்டன. அதேபோல, இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தளவில், மிகப் பெரிய ஒப்பந்தப்புள்ளி வரும்போது, அதை எங்கு யாரிடமிருந்து பெறுகிறோமோ, அவர்களுடைய directions-படிதான் எல்லாவற்றையும் செய்ய வேண்டியிருக்கிறது. மேலும், மத்திய அரசின் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. இதுபோன்ற சூழ்நிலைகள்தான் உள்ளன, வேறெதுவும் கிடையாது. பணிகளைச் செய்யக்கூடிய நல்ல நிறுவனமாக நன்கு செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

இன்றைக்கு சென்னையைப் பொறுத்தளவிற்கு--அண்ணன் வீராணம் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இது மட்டுமல்ல, சென்னைக்கு இன்றைக்கு எல்லாமே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் எல்லா திட்டங்களும் வந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல, நீங்கள் பேசும்போது--மீஞ்சூரில் நாளொன்றுக்கு 100 M.L.D. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு 2004 ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அடித்தளம் அமைத்தார்கள். அதேபோல, கடந்த தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டுக் காலங்களில், நீங்கள் ஆரம்பித்த இன்னொரு திட்டத்தை ஆரம்பித்து 28 சதவிகிதம்தான் முடித்தீர்கள். அதற்கு சுமார் 805 கோடி ரூபாய் மதிப்பிலான நெம்மேலி குடிநீர்த் திட்டத்தை துரிதமாகச் செயல்படுத்தி, இரண்டே ஆண்டுகளில் 72 சதவிகிதப் பணிகளை முடித்து 2013-ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் திறந்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும்கூட நீங்கள் பேசும்போது சொன்னீர்கள். ஆகவே, சென்னைக்கு எல்லா திட்டங்களையும் முழுமையாகக் கொண்டுவந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். இந்தத் திட்டமும் விதிமுறைகளின்படி, சரியான முறையில் விரைவாக நடந்துகொண்டிருக்கிறது. கூடியவிரைவில் இத்திட்டம் நடைமுறைக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள், நீங்கள் அங்கே பேசிக்கொண்டிருந்தால் எப்படி? இங்கே மைக்கில் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வி இதுதான். திட்டத்திற்கு 2017-ல் டெண்டர் விட்டாச்சு. Technical bid open செய்துவிட்டீர்கள். அடுத்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. அடுத்த bid-ஐ open செய்து, யார் வருகிறார்களோ, அவர்களிடம் டெண்டரை கொடுக்க வேண்டியதுதானே? (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் நான் கேட்கிறேன். ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் விளக்கமாகச் சொன்னேன். KfW-விலிருந்து பலமுறை ஆய்வுக்கு வந்திருக்கிறார்கள். அதேபோல, 400 M.L.D.-க்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிலிருந்து பல்வேறு கட்டங்களில் இங்கு வந்து ஆய்வு செய்கிறார்கள். அவர்கள் சில rules-ஐ implement செய்கிறார்கள். இந்த bid-ஐக்கூட அவர்களுக்கு அனுப்பிதான் நாம் ஒப்புதல் பெற முடியும். நாம் நேரடியாக இங்கே முடிவு செய்ய இயலாது. இந்த tender bid-documents-ஐ அவர்கள் முழுமையாகப் பார்த்துவிட்டுத்தான் நமக்குத் தெரிவிப்பார்கள். எல்லா வேலைகளும் இருக்கின்றன.

பிற்பகல் 12-45

அதேபோல், Central Government அனுமதி எல்லாம் பார்த்துத்தான் செய்கிறோம். எதுவுமே கிடையாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பாக அரசின்மீது ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். ஏனென்றால், மூத்தவர், பலமுறை அமைச்சராக இருந்தவர். அவருக்குத் தெரியும். பொதுப் பணித் துறையில் பல்வேறு டெண்டர்களை நடத்தியிருக்கிறார். அந்தமாதிரி சூழ்நிலைகள் எல்லாம் எதுவுமே கிடையாது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் தலைமையிலான அரசு எதுவும் இல்லாமல், வெளிப்படையாகத்தான் ஒப்பந்தம் கோருகிறோம். எந்த உள்நோக்கமும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** ஆக, உங்களுடைய வார்த்தைப் பிரகாரம் 6 மாதங்கள் தாமதம் ஆகியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள், விடுங்கள் சரி.

அடுத்து, நான் ஒன்று சொல்கிறேன். 2006-2011 ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சியில் இருந்தபொழுது 6 இடங்களில் மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கினோம். விழுப்புரம், திருவாரூர், தருமபுரி, சிவகங்கை, பெரம்பலூர், திருவண்ணாமலை. நீங்கள் 2001 ஆம் ஆண்டு அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் என்ன சொன்னீர்கள் என்று கேட்டால், மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி துவக்கப்படும் என்று சொன்னீர்கள். அதே கருத்தைத்தான் உங்களுடைய

தொலைநோக்குத் திட்டத்திலும் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். 2015 ஆம் ஆண்டில் அப்படிப் பார்த்தீர்களென்றால், மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி துவக்கப்படும் என்று சொல்லி, நம்முடைய அரசு சார்பிலே ஒன்று புதுக்கோட்டையில் துவக்கியிருக்கிறீர்கள், சரி. கரூர் மாவட்டத்தில் ஒன்று துவக்கப் போனீர்கள். அது Ex-க்கும், Present-க்கும் தகராறு என்று சொன்னீர்கள். ஆக, Ex-தான் போய்விட்டதே, தள்ளி விட்டுவிட வேண்டியது தானே, செய்துவிட வேண்டியதுதானே.

அடுத்து, இன்னொன்று எய்ம்ஸ். மத்திய அரசு 2015 ஆம் ஆண்டு 6 மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனையை அமைக்கும் என அறிவித்தது. அதிலே தமிழ்நாட்டில் ஒன்று அமைக்கப்படும் என்று சொன்னார்கள். மருத்துவமனை அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்ய தமிழக அரசு பரிந்துரை செய்த 5 இடங்களையும் மத்தியக் குழு 23-4-2015 அன்று ஆய்வு செய்தது. 27-2-2007 அன்று நம்முடைய தமிழக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து இந்த எய்ம்ஸ் மருத்துவமனையை தஞ்சையில் இருக்கிற செங்கிப்பட்டியில் அமைக்க வேண்டும் என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். எய்ம்ஸ் மருத்துவமனை கட்ட வேண்டிய இடங்களை மத்தியக் குழு பார்வையிட்டு 3 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், இதுவரையில் தமிழ்நாட்டில் எங்கே கட்ட வேண்டுமென்று பார்க்கிறோம். இன்றைய நிலைமை என்னவென்று கேட்டீர்களென்றால், அதை செங்கிப்பட்டியில் கட்ட வேண்டும், அதுதான் இடம் என்று சொன்னார்கள். ஆனால், பத்திரிகையிலே நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அதுதான் இந்த சப்ஜெக்ட்டை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் முடித்துவிட்டார்கள். (குறுக்கீடு) இல்லை, பேசிவிட்டார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு கருத்துகளை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு இதய தெய்வம்



புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஆண்டுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்குவது என்பது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசினுடைய கொள்கை. அந்தவகையில், இந்த மூன்று ஆண்டுகளில் ஒன்றை நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விட்டுவிட்டார்கள். சென்னையில் இருக்கக்கூடிய ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் புதிய மருத்துவக் கல்லூரியை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு சார்பில் மாண்புமிகு அம்மா அவர்களே தொடங்கி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையிலும் இல்லாத அளவிற்கு first time-ஏ வரலாற்று நிகழ்வாக 150 இடங்களோடு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரிக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கித் தொடங்கி வைத்தார்கள். அதேபோல கரூரிலும் இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரிக்கான கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டு மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. இந்த academic year-ல் அந்தக் கல்லூரி தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எய்ம்ஸ் மருத்துவமனையைப் பொறுத்தவரையிலும் பல முறை இந்த அவையிலே நாம் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். நீங்கள் இந்தத் தேதி எல்லாம் சரியாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதாவது, கடைசியாக 27-2-2017 அன்று நீங்கள் குறிப்பிட்டதைப் போல மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து, அதற்குப் பிறகு 31-12-2017-ல் இறுதியாக Challenge method என்ற அடிப்படையில் 5 இடங்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மத்திய அரசு சார்பில் ஒரு கருத்துக் கேட்கப்பட்டது. அதாவது Challenge method என்றால் mark system இதிலே யாருடைய பரிந்துரையும் இல்லாமல் on merit-ல் mark system, அதாவது எத்தனை கல்லூரிகள் இருக்கின்றன அதற்கு ஒரு mark, எத்தனை பள்ளிகள் இருக்கின்றன அதற்கு ஒரு mark, nearby எவ்வளவு மருத்துவமனைகள் இருக்கின்றன அதற்கு ஒரு mark, nearby railway station இருந்தால் அதற்கு ஒரு mark, nearby airport இருந்தால் அதற்கு ஒரு mark. இவைதவிர, அங்கு இருக்கக்கூடிய water facility, electricity facility இப்படி ஒவ்வொன்றிற்கும் mark system-ன்படி mark போடுவார்கள். Challenge method-ல் அவர்களே ஒரு form கொடுத்து, என்னென்ன வசதிகள் உள்ளன என்பதை fill-up செய்து கேட்டார்கள். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசின் சுகாதாரத் துறைச் செயலாளர் மூலமாக அந்த விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டு, அனைத்து விவரங்களும் சேகரிக்கப்பட்டு, தமிழக அரசின்

சார்பில் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி டில்லி சென்றபோதும் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடம், இதுகுறித்து தெரிவிக்கப்பட்டு 3 ஆண்டுகள் ஆகின்றன. மத்திய அரசால் கேட்கப்பட்ட அனைத்து விவரங்களையும் தமிழக அரசு உடனடியாக வழங்கிவிட்டது. மத்திய அரசு உடனடியாக இதற்கான பணிகளைத் தொடங்க வேண்டும் என்று அழுத்தம் கொடுத்திருக்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதுகுறித்து மத்திய அமைச்சருடன் தொலைபேசியில் பேசியிருக்கிறார்கள். வெகு விரைவில், இதுகுறித்து பரிசீலனை செய்து அறிவிக்கப்படும் என்ற உறுதியை மத்திய அரசு கொடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மகிழ்ச்சியாகப் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நல்ல பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் “It is learnt that Sengipatti in Tanjore District has been identified as the best suited location for siting of the AIIMS. I request that the decision to locate the proposed AIIMS at Sengipatti in Tanjore District may be announced forthwith” அந்த இடத்தில்தான் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே recommend செய்துவிட்டார்கள். அந்த மருத்துவமனை மட்டும் மதுரையில் அமைக்கப்படவில்லை என்றால் மொத்த அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களும் இராஜினாமா செய்ய வேண்டும் என்று அந்த மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு மாண்புமிகு அமைச்சர்களான மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்களா? இல்லையா? எனக்கு என்னவென்றால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்தன்பேரில், 1,500 கோடி ரூபாயில், ஒரு மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தை, எந்த வளர்ந்த மாநிலங்களுக்கும் கிடைக்காத இந்தத் திட்டத்தை, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டம் தங்களுடைய மாவட்டத்திற்குக் கிடைக்க வேண்டும் என்று அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களும் கேட்பது அவரவர்களுடைய எதிர்பார்ப்பு மற்றும் கடமை. அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள், ஈரோடு மாவட்டத்தில் அந்த மருத்துவமனையை அமைக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் பேசினார்கள். அந்த மாவட்டம் சார்ந்த தங்களது உணர்வை அந்த மண்ணின் மைந்தர்கள் வெளிப்படுத்துகிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திற்காகவும் வெளிப்படுத்தினார்கள். இருந்தாலும்கூட, இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு 5 இடங்களையும் ஆய்வு செய்து, on merit basis-ல் 200 ஏக்கர் நிலம் மற்றும் Challenge method அடிப்படையில் அதில் one, two, three, four and five என்று பரிந்துரைத்திருக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரையை ஒட்டியே அந்த அழுத்தத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு வலியுறுத்தியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களிடத்தில் கடிதம் கொடுத்ததாக ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். எப்படியாவது எய்ம்ஸ் மருத்துவமனை தமிழகத்திற்கு வர வேண்டும், அதுதான் நம்முடைய குறிக்கோள். 5 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, குழுவினர் அந்த இடங்களை ஆய்வு செய்தார்கள். ஒவ்வோர் இடத்திலும் ஒரு குறைபாட்டைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

ஈரோடு மாவட்டத்தை ஆய்வு செய்யும்போது அங்கு சாலை நடுவில் செல்கிறது, அதனால் அந்த இடத்தில் நிலம் எடுக்க முடியாது என்று சொன்னார்கள். மதுரை மாவட்டத்தில் ஆய்வு செய்யும்போது அந்த இடத்தில் Indian Oil Corporation குழாய் செல்கிறது; அதனால் அந்த இடத்தில் அமைக்க முடியாது என்ற ஒரு காரணத்தைச் சொன்னார்கள். இப்படி ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்லி, நமது மாநிலத்திற்கு வரவேண்டிய ஒரு நல்ல வாய்ப்பை தட்டிக் கழித்துவிடுவார்களோ என்று கருதித்தான், தற்போது பரிந்துரைத்திருக்கும் இடத்தில் 300 ஏக்கர் நிலம் ஒரே இடத்தில் இருப்பதால், இங்கே அமைக்கலாம் என்று சொன்னோம், அதற்கும் பரிசீலித்துக்கொண்டே இருந்தார்கள். இருந்தாலும், இந்த அரசைப் பொறுத்தவரை 5 இடங்களில் ஏதாவது ஓர் இடத்தைத் தேர்வு செய்து, எய்ம்ஸ் மருத்துவமனை தமிழகத்தில் வருவதற்குண்டான நடவடிக்கை எடுக்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, தமிழகத்தில் எந்த மாவட்டத்தில் இந்த மருத்துவமனை வந்தாலும் அது நமக்கு பயனுள்ளதாகத்தான் இருக்கும். ஆகவே, தமிழகத்திற்கு வர வேண்டிய எய்ம்ஸ் மருத்துவமனை வர வேண்டும். அதுதான் நம்முடைய நோக்கம். ஆகவே, அதை எப்பாடுபட்டாவது நிச்சயமாக வரவழைத்துவிடுவோம். ஆகவே, இதுகுறித்து எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு எந்தவித சந்தேகமும் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** அப்பாடா! இதில்தான் எதிர்க்கட்சியினருக்கும் மாண்புமிகு முதலமைச்சருக்கும் ஒரே கருத்து. எங்களுக்கும் எங்காவது ஓர் இடத்தில் மருத்துவமனை வரவேண்டும் என்பதுதான் விருப்பம். எங்களுக்கு என்னவென்று கேட்டால், இந்த அரசு எங்காவது ஓர் இடத்தில் இந்த மருத்துவமனையை வைத்துவிட்டு, அதனால் Revenue Minister இராஜினாமா செய்துவிட்டார் என்று வைத்துக்கொள்ளுங்கள், (சிரிப்பு) அதற்காகத்தான் சொல்கிறேன். அவர் நல்ல மனிதர். அருமையாகப் பழகுவார். நல்லவர் அவர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சாமர்த்தியமாகப் பேசுகிறார். நாங்கள் ஒற்றுமையாக இருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை, அவ்வளவுதான். எப்படியாவது ஒரு பிரச்சினையை உண்டாக்க வேண்டும் என்று பார்க்கிறார்கள். நிச்சயமாக உண்டாக்க முடியாது. (சிரிப்பு) ஏனென்றால், நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகத்தான் இருக்கிறோம். ஆகவே, எந்த இடத்தில் அம்மருத்துவமனை அமைந்தாலும் எங்களுக்கு திருப்திதான். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

பிற்பகல் 12-55

**திரு. துரைமுருகன்:** அவர் சொன்னதற்காகத்தான் சொன்னேன். சரி. விட்டுவிடுங்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தமிழ் பல்கலைக்கழகத்திற்கு ரூ.2 கோடி; சரி. தமிழ் பண்பாட்டு மையம் அமைக்க ரூ.1 கோடி; நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் நிதி ரூ.1,500/-லிருந்து ரூ.2,000/-. முன்னாள் முதல்வருக்கு நினைவு மண்டபம் கட்ட 50.80 கோடி ரூபாய். வேதா இல்லத்தை நினைவிடமாக மாற்ற 20 கோடி ரூபாய். இதற்கெல்லாம் நிதி இருக்கிறது. ஆனால், முன்னாள் முதல்வர் அம்மையார் அவர்கள் விதி 110-ன்கீழ் 14-5-2013 அன்று வெளியிட்ட அறிவிப்பில் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்த்தாய் சிலை வைக்கப்படும் என்று அறிவித்தார். தமிழ்த்தாய்க்கு சிலை எங்கே? தமிழ்த்தாய் சிலைக்கு மட்டும் நிதி இல்லையே என்பதுதான் என்னுடைய வேதனை.

அடுத்து, அரசு ஊழியர்களைப் பற்றியது. அரசு ஊழியர்கள்தான் நம்முடைய நிருவாகத்திற்கு நாடி, நரம்பு. அவர்களைப் பகைத்துக்கொண்டு, அவர்கள் வயிற்றெரிச்சலை சம்பாதித்துக்கொண்டு யாரும் எதுவும் செய்ய முடியாது. மத்திய அரசு 7-வது ஊதியக் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் புதிய ஊதிய விகிதங்களை 1-1-2016 முதல் முன்தேதியிட்டு அமல்படுத்தியது. முன்பெல்லாம் ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் புதிய ஊதிய விகிதங்களை மத்திய அரசு எந்தத் தேதியில் அமல்படுத்துகிறதோ அதே தேதியில் தமிழகத்திலும்

புதிய ஊதிய விகிதங்கள் அமல்படுத்தப்படும். ஆனால், இந்த முறை 7-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் 1-1-2016 முதல் தமிழகத்தில் notional ஆக அமல்படுத்தினாலும், 1-10-2017 அன்று முதல்தான் பணப்பயன்கள்-monetary benefits வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது, அரசு ஊழியர்கள் 21 மாதத்திற்கான பணப் பயன்களை இழந்திருக்கிறார்கள். இதை இந்த அரசு மறுபடியும் rethink செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் பல்வேறு கல்வி நிலையங்களில் hostel-ல் தங்கிப் படிக்கிறார்கள். இதற்கு மத்திய அரசு உதவி அளிக்கிறது. ஆனால், பல ஆண்டுகளாக மத்திய அரசு அந்த பணத்தை அனுப்புவதில்லை. தமிழ்நாட்டிற்கு வரவேண்டியது 1,546.88 கோடி ரூபாய். இதை வாங்காமல் இருப்பது தவறு. அன்றைக்கு ஓர் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இல்லை, இல்லை, நாங்கள் வாங்கிவிட்டோம், கொடுத்தோம் என்று சொன்னார்கள். இதுவரையில் இல்லை என்றுதான் நமக்கு தகவல் வந்திருக்கிறது. அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 2011-2012 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், 71-ம் பக்கத்தில் மோனோ இரயில் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. இதற்கான ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தை விரைவில் தொடங்குவதற்குத் தேவையான நிதி ஆதாரம் இந்த ஆண்டிலேயே கண்டறியப்படும் என்று தெரிவித்திருக்கிறீர்கள்.

2012-2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 42-ல், சென்னை மோனோ இரயில் திட்டத்தின் முதற்கட்டப் பணிகளைச் செய்வதற்காக 8,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 57 கி.மீ. நீளத்திற்கு சர்வதேச ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன என்றும் தெரிவித்திருக்கிறீர்கள். இது, 2011-12, 2012-13-ல்.

2016-17 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 57-ல், இரண்டாம் கட்ட மெட்ரோ இரயில் திட்டத்திற்கான 104.50 கி.மீ. நீளமுள்ள இரண்டு வழித்தடங்களை உள்ளடக்கிய மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான திட்ட அறிக்கையை விரைவில் தயாரித்து செயலாக்கத்திற்கு இந்த அரசு கொண்டு வரும் என்று தெரிவித்திருக்கிறீர்கள். இதுவரையில்



தெரிவித்த மோனோ இரயில் திட்டம் இந்த அறிக்கையில் காணாமல் போயிருக்கிறது. ஆனால், அதற்கு பதிலாக இரண்டாம் கட்ட metro-வைச் சொல்கிறீர்கள். இரண்டாம் புலிகேசி மாதிரி இரண்டாம் கட்டம் வந்திருக்கிறது. ஆகையால், மோனோ இரயில் திட்டத்திற்கு விடை கொடுத்துவிட்டீர்கள்.

2017-18 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பக்கம் 40-ல், மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளாக, மொத்தம் 107.5 கி.மீ. நீளம் கொண்ட 3 மெட்ரோ இரயில் வழித்தடங்கள் சேர்க்கப்படுவதற்கான விரிவான திட்ட அறிக்கை விரைவில் மத்திய அரசுக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்திருக்கிறீர்கள்.

பிற்பகல் 1-00

இந்த ஆண்டு அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் பக்கம் 40-ல், மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்டத்திற்கு, மத்திய அரசு விரைவில் தனது ஒப்புதலை வழங்கும் என்று தெரிவித்திருக்கிறீர்கள். கடந்த ஏழு ஆண்டுகளில், மோனோ இரயில் திட்டம் கைவிடப்பட்டு, இரண்டாம் கட்ட மெட்ரோ என பெயர் மாற்றப்பெற்றது. இதுதான் சாதனையே தவிர, இந்த மெட்ரோ இரயில் திட்டத்தில் வேறு ஒன்றும் நீங்கள் சாதிக்கவில்லை.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 36 ஆம் பக்கத்தில், 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை கூடுதலாக 10,777 மெகா வாட் மின்சார உற்பத்தி செய்யும் திறன் சேர்ந்துள்ளதாக குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரையில், இன்றைய தேதி வரையில் 10,777 மெகா வாட் மின் திறனை சேர்த்துள்ளதாக குறிப்பிட்டுள்ளீர்கள். தி.மு.க. ஆட்சியில், 2007 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் துவக்கப்பட்ட அனல் மின் நிலையத் திட்டங்களான thermal powers, மேட்டூர் 600 மெகா வாட்; வல்லூர் 1,500 மெகா வாட்; வட சென்னை 1,200 மெகா வாட்; தூத்துக்குடி 1,000 மெகா வாட் ஆகிய நான்கு திட்டங்களும் 2011 முதல் 2013 ஆம் ஆண்டுக்குள் செயல்பாட்டுக்கு வந்திருக்கின்றன. இதன் காரணமாக சுமார் 4,300 மெகா வாட் கூடுதலாக மின் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. 3,300 மெகா வாட் மின்சாரத்தை வெளிச்சந்தையிலே நீங்கள் விலைக்கு வாங்குகிறீர்கள். மத்திய தொகுப்பிலேயிருந்து 2,000 மெகா

வாட் மின்சாரம் கிடைக்கின்றது. ஆக, 2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் மற்றும் தொலைநோக்குத் திட்டம் 2023-லும் கீழ்க்கண்ட திட்டங்களெல்லாம் அ.தி.மு.க. ஆட்சியில் துவக்கப்பட்டு, முடிக்கப்படும் என்று கூறினீர்கள். 2016 ஆம் ஆண்டே முடிக்கவுள்ளதாக கூறிய திட்டங்கள் எண்ணூர் விரிவாக்க மின் திட்டம், உப்பூர் மின் திட்டம், 2017 ஆம் ஆண்டே முடிக்கவுள்ளதாக கூறிய திட்டங்கள் வட சென்னை அனல் மின் திட்டம் நிலை-III, வட சென்னை அனல் மின் திட்டம் நிலை-IV, தூத்துக்குடி, உடன்குடி அனல் மின் திட்டம், MTMTEL, சத்தீஸ்கர், கொல்லிமலை நீர் மின் நிலையம், குந்தா நீரேற்று மின் திட்டம் ஆகிய அனைத்து திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டனவா? எத்தனை திட்டங்களை இதுவரையிலே முடித்திருக்கிறீர்கள்? எத்தனை மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றது என்பதை நம்முடைய மாண்புமிகு மரியாதைக்குரிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

உடன்குடியை இப்போது ஆரம்பித்திருக்கிறீர்கள். தி.மு.க. ஆட்சியில் 2009-ல் உடன்குடி மின் திட்டத்தை ஆரம்பித்தோம். தமிழ்நாடு அரசு அதாவது, TNEB-ம், BHEL கம்பெனியும் சேர்ந்து joint venture போட்டு, 2 x 800, 1,600 மெகா வாட் உற்பத்தி செய்வதென்று முடிவெடுக்கப்பட்டது. 2012-2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பக்கம் 44-ல், அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது BHEL நிறுவனத்தை விலக்கிவிட்டு, தமிழக அரசே இந்த உடன்குடி மின் திட்டத்தை தம் சொந்த செலவில் நிறைவேற்றும் என்று அறிவித்தார்கள். அதற்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டன. BHEL Company ஒன்றும், China Company ஒன்றும் போட்டிப் போட்டன. அதிலே, BHEL கம்பெனி L1 ஆயிற்று. China Company court-க்கு சென்றது. ஆனால், நீதிமன்றத்திற்கு சென்று இரண்டு ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. எனவே, 2 x 800, 1,600 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை விட்டு விட்டு, அடுத்து நீங்களாக 2 x 600, 1,200 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு ஒரு tender போடப்பட்டது. அது, இப்பொழுது BHEL நிறுவனத்திற்கே வழங்கப்பட்டுள்ளது. எந்த BHEL நிறுவனத்துடன் சேர்ந்து இந்த உடன்குடி திட்டத்தை ஆரம்பிப்போம் என்று நாங்கள் சொன்னோமோ, அதே BHEL நிறுவனத்திற்குதான் இன்றைக்கு நீங்கள் இந்தத் திட்டத்தை வழங்கியிருக்கிறீர்கள்.



அதுமட்டுமல்ல, இந்தத் திட்டத்தில் உற்பத்தித் திறன் 250 மெகா வாட் குறைந்து போய்விட்டது. நாங்கள் போட்ட உடன்குடி மின் திட்டத்திற்கும், நீங்கள் இப்போது கொண்டு வந்திருக்கின்ற உடன்குடி மின் திட்டத்திற்கும் வித்தியாசம் என்னவென்றால் 250 மெகா வாட் மின் உற்பத்தி குறைவு. செலவு, 1,700 கோடி ரூபாய் அதிகம். ஆக, 9 ஆண்டுக்காலம் வீணாகிவிட்டது. இதுதான் மின்சாரத் துறையிலே நீங்கள் ஆற்றியிருக்கிற பெரும் பணி என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்மிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டதாக பல திட்டங்களை பற்றிச் சொன்னார். மேட்டூர் அனல் மின் திட்டமாக இருக்கட்டும், வட சென்னை அனல் மின் திட்டமாக இருக்கட்டும், வல்லூர் மின் திட்டமாக இருக்கட்டும். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் வெறும் 30 சதவிகித பணிகள் மட்டும்தான் நடைபெற்றிருந்தன. மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன் 2012-2013 ஆம் ஆண்டு அதை வேகப்படுத்தி, அதை உற்பத்திக்குக் கொண்டு வந்தார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 2006 முதல் 2011 வரை வெறும் 236 மெகா வாட் மின்சாரம் மட்டும்தான் உற்பத்தியானது. அந்த 5 ஆண்டுக் காலம் மின்சாரம் இல்லாமல் எவ்வளவு தொழில்கள் பாதிக்கப்பட்டன என்பது தெரியும். 3,330 மெகா வாட் மின்சாரம் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கியிருக்கின்றோம். Long-term purchase-ல் வாங்கியிருக்கின்றோம். ஏன், உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் நீங்கள் வாங்கி மின்தடை இல்லாமல் பண்ணியிருக்கலாமே! வேண்டாமென்று யாராவது சொன்னார்களா? (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல, உடன்குடி மின் திட்டத்தைப் பொறுத்தவரையில் நாங்களும் BHEL-க்குத்தான் support ஆக இருந்தோம். நாங்கள் ஒன்றும் China Company-க்கு support செய்யவில்லை. கிட்டத்தட்ட argument எல்லாம் முடிந்து ஒன்றரை ஆண்டுக்காலம் கழிந்த

பிறகுதான் தீர்ப்பு வந்தது. Court-க்குப் போய் நாங்கள், இப்போது தீர்ப்பு கொடுங்கள் என்று சொல்ல முடியாது. தீர்ப்பு கொடுத்தவுடன் உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பொற்கரங்களால் அன்றையதினம் அடிக்கல் நாட்டப்பட்டு, இப்போது பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, என்னுரைப் பொறுத்தவரையில், 2018 ஆம் ஆண்டு, அதாவது இந்த ஆண்டுக்குள் extension முடிக்க வேண்டியதுதான். ஆனால் அந்தப் பணியை எடுத்த Lanco கம்பெனி loss ஆன காரணத்தினால் அந்தப் பணி முடிக்க முடியாமல் இருக்கின்றது. அதை மீண்டும் டெண்டருக்குக் கொண்டுவர இருக்கின்றோம். கொண்டு வந்துதான் அந்தப் பணியை மீண்டும் தொடங்க வேண்டும். அதேபோல வட சென்னை அனல் மின் திட்டப் பணியாக இருந்தாலும் சரி, எல்லாப் பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 2020-2021-க்குள் அது முழுமையாக உற்பத்தியைத் தொடங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், இருங்கள். மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த்தாய்க்கு சிலை வைப்பதைப் பற்றி, தமிழ் வளர்ச்சித் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியைச் சொல்லி மாண்புமிகு உறுப்பினர் கேள்வி எழுப்பினார். எங்கே தமிழ்த்தாய்க்கு சிலை என்று கேட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதே அவையிலே அறிவித்த ஒரு திட்டம், மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தில் 50 கோடி ரூபாயில் பழந்தமிழர் பண்பாட்டு மையம் உருவாக இருக்கிறது. ஐரோப்பா கண்டத்தில் இருக்கிற இத்தாலிக்கு சென்று Trevi நீரூற்றை பார்ப்பது மாதிரி, அந்த concept-ல் நாம் தமிழ்த்தாயிடமிருந்து பிறந்த குழந்தைகள், தமிழ்த்தாயிடமிருந்து பல நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் எங்கு இருக்கிறார்கள்; இவையெல்லாவற்றையும் ஒன்றிணைத்து அந்த இடத்திலே ரூ.50 கோடி மதிப்பீட்டில் ஒரு கண்காட்சி உருவாகிக்கொண்டிருக்கிறது.



அதில் நடுநாயகமாக தமிழ்த்தாயின் சிலை வீற்றிருக்கும். அந்த அளவுக்கு உயரமான சிலையாக இது இருக்காது. ஆனால், அது உன்னதமான சிலையாக இருக்குமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த வருட இறுதிக்குள் அந்தப் பணி நிறைவு பெறும்.

**திரு. துரைமுருகன்:** நான் முதலமைச்சரிடத்திலே இந்தப் பதிலை எதிர்பார்த்தேன். அவர் வெளிநாட்டுக்குப் போய் வந்து, சின்ன சிலை என்கிறார். நான் பெரிய சிலையை எதிர்பார்த்தேன். பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து ஒரு விஷயம். நம்முடைய…

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், இருங்கள். மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** உயரமான பல நிறுவனங்களை உருவாக்கியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. தமிழுக்காக உருவாக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசால் உருவாக்கப்பட்டது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதுபோல, தமிழுக்குப் படைக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்தையும் உருவாக்கியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. உயரமான சிலைகள் அல்ல, உயரமான நிறுவனங்களை உருவாக்கியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** நாங்களும் பேசவேண்டியிருக்கும். நீங்கள் இந்த அவைக்குத் தேவையில்லாத கருத்துகளைப் பேசுகிறீர்கள். ** (குறுக்கீடுகள்)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன். இருங்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை வேந்தர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருக்கின்றவர்கள் ** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னார். ஒரு துணை வேந்தரை நியமனம் செய்வதைப் பொறுத்தவரையில், Search Committee போடுவதோடு அரசினுடைய பணி முடிந்துவிடுகிறது. Search Committee அமைக்கப்பட்ட பிறகு, அந்தக் கமிட்டியின் பரிந்துரையின்பேரில் மேதகு ஆளுநர் அவர்கள் துணை வேந்தர்களை நியமனம் செய்கிறார்கள். ஆனால் இவர்களுடைய ஆட்சிக் காலத்திலே முதன்முதலாக ** என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ** (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இதுவெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பற்றி இங்கே ஒரு விவாதத்தை முன்வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் சொல்லி முடித்துவிடுகிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. இரவிச்சந்திரன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ரங்கநாதன், உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** ** *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு நிமிடம் பொறுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், சற்று அமைதி காக்கவும். இப்பொழுது பட்ஜெட்மீது நிறைவாக விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. நல்லபடியாக போய்க்கொண்டிருந்த இந்த விவாதம் திசைமாறி இப்பொழுது வேறு எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, அவைக் குறிப்பிலே இவையெல்லாம் இருப்பது முறையல்ல.*

*மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விவரத்தைச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமில்லாமல், இந்த விவாதத்தில், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் சில விவரங்களைச் சொல்லியிருக்கிறார்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

ஆகவே, இதுசம்பந்தமான அத்தனை குறிப்புகளும் அவைக் குறிப்பில் இருப்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) நாட்டு மக்களுக்கு பயனளிக்காத, தேவையில்லாத விவாதம் என்கிற காரணத்தினாலே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன அத்தனை குறிப்புகளும், மாண்புமிகு முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், மற்றவர்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோர் பேசியது உட்பட அத்தனை குறிப்புகளையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். நீங்கள் மேற்கொண்டு நிதிநிலை அறிக்கையிலே பேசி முடிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நெம்மேலியில் *150* எம்.எல்.டி. கொள்ளளவு திறன்கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது, சுற்றுச்சூழல் அனுமதி, மத்திய அரசாங்கத்தின் அனுமதி, அதேபோல, KfW-யிலிருந்து கடன் வாங்கிய அந்த document-ஐயெல்லாம் பார்த்தீர்கள் என்றால் உங்களுக்கே புரியும். உங்களுடைய ஆட்சியில் நெம்மேலியில் இதேபோல ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தபோது எதிர்க்கட்சித் தலைவர்தான் அப்போதைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தார்கள். அப்போதுகூட பார்த்தீர்கள் என்றால், *100* எம்.எல்.டி.-க்கும் இதேமாதிரிதான் அவகாசம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். *31-7-2009* அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பணி ஆணை *30-12-2009* அன்று வழங்கப்பட்டது. இதேமாதிரி *5* மாதங்களுக்குமேல்தான் பணியைத் துவங்கியிருக்கிறார்கள். அதேமாதிரிதான் இப்போதும் காலதாமதம் ஆகியிருக்கின்றது. எனவே, இதில் உள்நோக்கம் இருப்பதாக உறுப்பினர் பேசினார்கள். அந்தமாதிரியெல்லாம் கிடையாது. அந்த உள்நோக்கம் என்பதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எப்போதுமே ஆரோக்கியமாகத்தான் பேசுவார்கள். இன்றைக்கு அவர் இந்தமாதிரி பேசுவார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. அவர் பேசுவது எல்லாமே எப்போதுமே, எல்லோருக்கும் ஆரோக்கியமாகவும், advice



தருவதாகவும்தான் இருக்கும். இன்றைக்குத்தான் இப்படிப் பேசுகிறார்கள். இதேமாதிரிதான் உங்கள் ஆட்சியிலும் காலதாமதமாகத்தான் பணியை எடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, வீராணம் திட்டத்தை தி.மு.க. ஆட்சியில் முடிக்க முடியாமல் விட்டுவிட்டுச் சென்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முடித்தார்கள். தி.மு.க. ஆட்சியில் *28* சதவிகிதப் பணிகள்தான் முடிக்கப்பட்டன. *72* சதவிகிதப் பணிகளை அம்மா அவர்கள் வந்துதான் முடித்தார்கள். தி.மு.க. ஆட்சியில் எதைப் பின்பற்றினார்களோ, அதே rule-ஐத்தான் நாங்களும் பின்பற்றியிருக்கிறோம். அனைத்துத் திட்டங்களையும் சென்னைக்கு அம்மா அவர்கள்தான் கொண்டுவந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேச ஆரம்பித்து ஒன்றரை மணி நேரம் ஆகிவிட்டது. கொஞ்சம் விரைவாக உரையை முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இப்போது நான் உங்களுக்காகத்தான் பேசப் போகிறேன். அதாவது, அத்திக்கடவு-அவிநாசி திட்டம் பற்றிதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அதற்குத்தான் நான் ஏற்கெனவே நன்றி சொல்லிவிட்டேன்.

**திரு. துரைமுருகன்:** *2016-2017* ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கை, பக்கம் *26*-ல் அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தை *1,862* கோடி ரூபாய் செலவில் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை *2011* ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டதெனத் தெரிவித்துள்ளீர்கள். அதாவது, *1,862* கோடி ரூபாய்க்கான திட்ட அறிக்கை *2011* ஆம் ஆண்டிலேயே தயாரித்துவிட்டீர்கள். *2017-2018* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, பக்கம் *33* இல் நீர்ப்பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டமாக அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த ஆணையிட்டு, அதற்காக *250* கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆரம்பக்கட்டப் பணிகள் தொடங்கப்படும் என்று இதில் தெரிவித்திருக்கிறீர்கள். ஆக, ஒதுக்கப்பட்டதும் சரி, *2017* இல் ஆரம்பக்கட்ட பணிகளை மேற்கொள்ள *250* கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது நல்லதுதான். ஆனால், இந்தப் பணிகளை

நீங்கள் துவக்கவும் இல்லை, நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தவும் இல்லையென்பது என்னுடைய கருத்து. 2011 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கைக்கு 7 ஆண்டுகள் கழித்து, தற்போது 2018-2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, பக்கம் 32 இல் அத்திக்கடவு-அவிநாசி குடிநீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசனத் திட்டத்தை, 1,789 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த இந்த அரசு விரைவில் அனுமதி வழங்க உள்ளது என்றும் தெரிவித்துள்ளீர்கள். மேலும், இந்த ஆண்டு 250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டும் 250 கோடி ரூபாய்தான் ஒதுக்குகிறோம் என்று சொன்னார்கள். அதற்கான வேலை ஒன்றும் செய்யவில்லை. இந்த ஆண்டும் ஒதுக்கியிருக்கிறீர்கள். நீங்கள் இதை நம்பி அவ்வளவு பெருமையாக "ஆ", "ஊ" என்று பாராட்டிப் பேசினீர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சாமர்த்தியமானவர். ஆகவே, அவரைப் பற்றி நாங்கள் தெளிவாகப் புரிந்து வைத்திருக்கிறோம். அத்திக்கடவு-அவிநாசி திட்டம் நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றப்படும் என்பதை நான் உறுதியாகச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், ஏற்கெனவே போடப்பட்ட திட்டம். மலையிலிருந்து உபரி தண்ணீரை நாம் கீழே கொண்டுவருகிறோம். ஏனென்றால் 5 வருடங்களுக்கு ஒருமுறைதான் உபரி நீர் கிடைக்கிறது. அதுவும் மலையிலிருந்து, மலைப் பகுதியிலிருந்து அந்தத் தண்ணீரைக் கொண்டுவருகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபோது, நாம் மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற வேண்டும். இப்படிப் பல்வேறு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே மாற்றுத் திட்டமாக புதிய திட்டத்தை உருவாக்கி, நான் ஏற்கெனவே பலமுறை சொன்னதைப்போல காளிங்கராயன் கால்வாயிலிருந்து Lift irrigation மூலமாகத் தண்ணீர் எடுக்கப்பட்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். அதற்குண்டான விரிவான திட்ட அறிக்கை விரைவில் அறிவிக்கப்பட்டு, அதற்குண்டான டெண்டர் அறிவிக்கப்பட்டு உடனடியாகத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும். அதில் சிறிதளவும் சந்தேகம் தேவையில்லை.



இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், மாண்புமிகு பேரவைத் தலைவர் தொகுதிக்கும் இந்தத் திட்டம் வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவருக்கு (குறுக்கீடு) நான் அந்தத் தொகுதியில் . . . (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை முதலில் திரு. சுப்பராயன் அவர்கள்தான் பேசுவார். நான் அவரோடு பவானியிலிருந்து நடந்துபோய் ஒவ்வொரு குளமாகப் பார்த்திருக்கிறேன். அதனால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் என்னைவிடப் பெருமைப்படுபவர்கள் யாரும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக்க நன்றி, அந்தத் தொகுதிக்கு இந்தத் திட்டம் கொண்டுவர வேண்டும் என்பதற்காக நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தொடர்ந்து வற்புறுத்தி திட்டத்தை modify செய்து மத்திய அரசாங்கத்திற்குக்கூட அனுப்ப வேண்டாம், நம்முடைய நிதியிலேயே செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டி கேட்டுக்கொண்டு, இப்பொழுது அந்தத் திட்டம் நிறைவேறுகிற அளவுக்கு வந்திருக்கிறது. அதனால்தான் நன்றி சொன்னேன். நீங்களும் சேர்ந்து நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்னதுபோல, மத்திய அரசிடமோ அல்லது நபார்டு திட்டத்தின் மூலமாகவோ கடனுதவி பெற்றால்கூட காலதாமதம் ஆகிவிடும் என்று கருதி, இந்தத் திட்டத்திற்கான தொகை முழுவதும் மாநில அரசு நிதியிலிருந்தே செலவிடப்பட்டு, இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று நம்முடைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார். அதன் அடிப்படையில் மாநில அரசே முழு நிதியும் ஒதுக்கி, இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு

உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க மகழ்ச்சி. வேளாண்மை. சென்ற ஆண்டு ஆளுநர் உரை பக்கம் 17 இல் மற்றுமொரு முன்முயற்சியாக, வேளாண்மை உற்பத்தி மற்றும் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க, கலப்புப் பண்ணைய முறையை (Mixed farming) ஊக்குவிக்கும் வகையில் 'ஒருங்கிணைந்த வேளாண்மைத் திட்டத்தை' வரும் வரவு-செலவுத் திட்டத்தில் இந்த அரசு அறிமுகப்படுத்தும் என்று அறிவித்தீர்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் அந்தத் திட்டத்திற்கு வெறும் 50 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளுக்கு நிதியுதவி, விவசாயிகளின் கடன் தள்ளுபடி போன்ற அம்சங்கள் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை. விவசாயிகள் பெற்ற கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று உயர் நீதிமன்றமே கருணையுடன் அறிவித்த நிலையில், நீங்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்று அதற்குத் தடை உத்தரவு பெற்றிருக்கிறீர்கள் என்பது, இந்த அரசுக்கு விவசாயிகள்மீதும், வேளாண்மைமீதும் அக்கறை இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. இப்படிப் பல்வேறு குற்றச்சாட்டுகளை இந்த ஆட்சியின்மீது சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆனால் நேரம் போதாது என்று கருதுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை குறித்து பலர் பலவிதமாகச் சொல்கிறார்கள். Comment அடிக்கிறார்கள். எல்லாவிதமான comment-ம் அடித்துவிட்டார்கள். அதையெல்லாம் கண்டுகொள்ளவில்லை. கல்லூரியில் படிக்கும்போது Mock Parliament என்று நடத்துவார்கள். இதேமாதிரி எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி, கேள்வி, விவாதம் எல்லாம் நடத்துவார்கள். அதில் ஒருவர் நிதியமைச்சராக வருவார். அவர் Mock Parliament-ல் Mock Budget-ஐ present செய்வார். அந்தமாதிரி, Mock Parliament Budget மாதிரி இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்று கூறி விடைபெறுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு.ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விவசாயிகளுடைய நிலை குறித்து இங்கே எடுத்துரைத்தார்கள். பொதுவாக இந்திய அரசியல் வரலாற்றிலே, தமிழக அரசியல் வரலாற்றிலே பேரிடர் நிவாரண நிதியாக வெள்ளத்திற்கு நிவாரண நிதி கொடுக்கப்பட்டிருக்கிறது, தீ விபத்துக்கு நிவாரண நிதி கொடுக்கப்பட்டிருக்கிறது. எத்தனையோ நிவாரண நிதிகள் இருக்கின்றன. ஆனால் இந்திய அரசுக்கு வழிகாட்டுகின்ற வகையிலே, விவசாயிகளுடைய வாழ்வில் ஒளியேற்றி வைக்கும் வகையில் வறட்சிக்கு நிவாரணம் கொடுத்து விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றிய ஒரே அரசு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மாவின் அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை *(குறுக்கீடு)* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், 'வேளாண்மையில் வளர்ச்சியில்லை' என்ற ஓர் குற்றச்சாட்டை இங்கே கூறினார்கள். அவருக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் உணவு உற்பத்தியில் தொடர்ந்து 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்குமேல் உற்பத்தி செய்து, மத்திய அரசினுடைய 'க்ரிஷி கர்மான்' விருதைப் பெற்று இன்று உணவு தானிய உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தைப் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்குத் தொடர்ந்து புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி வேளாண்மையை ஊக்கப்படுத்துவதற்காக, விவசாயிகளின் நலன் கருதி, தொடர்ந்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்ன அறிவித்தார்களோ அதேபோல மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் சம்பா தொகுப்புத் திட்டத்தையும், குறுவை தொகுப்புத் திட்டத்தையும் இன்றைக்கு அறிவித்து, காவேரி டெல்டா விவசாயிகளைக் காப்பாற்றி வருகிறார்கள்.

அதோடுமட்டுமல்ல, பல்வேறு காரணங்களால் உயிரிழந்த விவசாயிகளுக்கு தாயுள்ளத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், இன்றைக்கு 89 பேர்களுக்கு தலா 4 இலட்சம் ரூபாய் நிதியாக வழங்கி, அந்தக் குடும்பங்களைக் காப்பாற்றியவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மழையில்லாத வறட்சிக் காலத்திலும், வளர்ச்சி கண்டு கொண்டிருப்பது வேளாண்மைத் துறை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் நலன் காக்க, தவ வாழ்க்கை வாழ்ந்து, தந்தை பெரியாரின் கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணாவின் எண்ணங்களையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் இலட்சியங்களையும் கட்டிக் காத்து, பெரும் புகழ் சேர்த்து, பெருமை படைத்த அம்மா என்னும் அன்புத் தெய்வத்தின் கருணை உள்ளத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) கனிந்த இதயத்தால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் எளிய தொண்டனாகிய எனக்கு எட்டாவது முறையாக நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்யும் பெரும் பாக்கியமும், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்த விவாதங்களுக்குப் பதில் சொல்கின்ற நல்வாய்ப்பும், கொடுத்து அருளிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதற்கண் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையின் வழி நின்று, தமிழகத்திற்கு வளம் சேர்க்கவும், தமிழக மக்களின் நலன் காக்கவும், மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சியப் பாதையில், ஆட்சித் தேரை தலைமையேற்று வழி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களுக்கும், சட்டமன்ற விதிமுறைகளுக்கு சற்றும் குறை ஏற்படாதவகையில், யாருக்கும் எவ்வித பாகுபாடும் காட்டாமல், சட்டமன்ற உறுப்பினர்களின்



உரிமை காத்து, அவர்கள் உவகைகொள்ளும்வகையில், தக்க வாய்ப்புகள் தந்து, சட்டமன்ற ஜனநாயகத்திற்குப் பெருமை சேர்க்கும்படி, இந்த அவையை சீரோடும், சிறப்போடும், வழிநடத்தி செயல்பட்டுவரும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்து, 2018-2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களுக்கு எனது பதிலுரையை அளிக்க விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் விடிவெள்ளி, ஏழைகளின் ஏந்தல், பெண்ணினத்தின் மணிமகுடம், அறிவும், ஆற்றலும், துணிவும் ஒருங்கே அமையப்பெற்ற தமிழகத்தின் தன்னிகரற்ற தலைவி, இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில், (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெற்றுவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கடந்த 15 ஆம் தேதியன்று, 2018-2019 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை இம்மாமன்றத்தில் தாக்கல் செய்தது.

இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம், 19-3-2018 அன்று தொடங்கி, இன்று வரை தொடர்ந்து 4 நாட்கள் நடைபெற்றது. நேற்று வரை மாண்புமிகு உறுப்பினர்கள் 15 பேர் தங்களது கருத்துகளை தெரிவித்துள்ளனர்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு.துரைமுருகன் அவர்களும், இந்த நிதிநிலை அறிக்கையின்மீதான தனது அரிய பல கருத்துகளை இன்று நீண்ட நெடிய நேரம் எடுத்துரைத்திருக்கிறார்கள்.

மேலும், இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின்பு, பல்வேறு கட்சித் தலைவர்கள் மட்டுமன்றி, பத்திரிகைகளும், ஊடகங்களும், தங்களுடைய கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளன. ஆக்கபூர்வமான சில கருத்துகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன. அரசியல் ரீதியாக குறை சொல்வதற்காகவே கூறப்பட்ட கருத்துகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

The Hindu நாளிதழில், “GST aids revenue growth” என்றும், “Focus on farm sector” and “MSMEs in Tamil Nadu Budget” என்றும், “Mega city mission to be revived” என்றும், “Nutrition kit for pregnant women” என்றும், “Cash-strapped STUs, to get a boost” என்றும் பல்வேறு தலைப்புகளில் செய்திகளை வெளியிட்டுள்ளது.

பிற்பகல் 1-30

அதேபோல, The New Indian Express நாளிதழ்- "OPS plays safe; Targets revival" என்றும் OPS sows seed of high growth for agri sector என்றும், Centre, Tamil Nadu to revive restoration of critical Pallikaranai marsh land என்றும் கருத்து தெரிவித்துள்ளது. Deccan Chronicle பத்திரிகை, Strategies will help Tamil Nadu economy pick up in next fiscal என்றும் Economic equality is priority of Government என்றும், "Infrastructure projects in city get lion's share" என்றும் செய்திகளை வெளியிட்டுள்ளது. The Times of India பத்திரிகை, Tamil Nadu spends beyond its means leaving very little for infrastructure என்ற தலைப்பில் பல்வேறு திட்டங்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளது. குறிப்பாக 25% increase in higher education allocation என்றும் State to revamp agriculture sector என்றும் aero-space park, defence corridor key plans என்றும் குறிப்பிட்டுள்ளது. தினத் தந்தி நாளிதழில், நிதி நிலை அறிக்கையின் பல்வேறு அம்சங்களை தனித்தனியாக எடுத்துக்கூறி 16-3-2018 அன்று தலையங்கம் வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பாக அத்திக்கடவு-அவிநாசி குடிநீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசனத் திட்டத்தை ரூ.1,789 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு விரைவில் அனுமதி வழங்க உள்ளது என்ற அறிவிப்பு நிச்சயமாக கொங்கு மண்டல விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றும் ஒரு மகிழ்ச்சிகரமான அறிவிப்பாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த பட்ஜெட்டில் சில புதிய அறிவிப்புகள் இருப்பதை பாராட்டித்தான் ஆக வேண்டும் என்று கூறி தினத்தந்தி நாளிதழ் பாராட்டு தெரிவித்துள்ளது.

பல்வேறு ஊடகங்கள், விவசாயிகளுக்கு வழங்கப்படும் 8,000 கோடி ரூபாய் பயிர்க் கடன், போக்குவரத்துக் கழகங்களுக்கு 3,000 புதிய பேருந்துகள், ஏழைக் குடும்பங்களுக்கு இரண்டரை இலட்சம் வீடுகள், பள்ளிக் கல்வித் துறைக்கு 27,205 கோடி ரூபாய் ஒதுக்கீடு, ஊரக வளர்ச்சித் துறைக்கு 17,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு, உயர் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு அதிகப்படுத்தப்பட்டிருப்பது போன்றவற்றை குறிப்பிட்டுக் கூறியுள்ளன.

பல்வேறு தொழில் அமைப்புகளும், வரவு-செலவுத் திட்ட அறிக்கையை வரவேற்றுள்ளன. அவர்களின் கருத்துகளை தலைவணங்கி ஏற்று, இந்த வெளிப்படையான விமர்சனங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வரவு-செலவுத் திட்டம், மாநிலம் சந்தித்துவரும் பல்வேறு பிரச்சினைகளை



முன்னிறுத்தி அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விதமான வழிமுறைகளையும் தொகுத்து வெளியிட்டுள்ளது என்பதை நான் மீண்டும் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். அதன் அடிப்படையில்தான், வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு, ஏழைகளுக்கான வீடு வழங்கும் திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு, வேலைவாய்ப்பினை உருவாக்கிட சிறப்பு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், திறன்வளர் பயிற்சி அளிக்க நிறுவனங்களின் கட்டமைப்பை மேம்படுத்துதல், திறன் பயிற்சிக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்துதல் போன்ற பல்வேறு அம்சங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ளன. வேளாண்மைத் துறையில் பல புதிய உத்திகள் கையாளப்பட்டு வருகின்றன. மீன் வளத் துறையில் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான புதிய திட்டங்கள் உள்ளன.

உயர் கல்வி மற்றும் பள்ளிக் கல்வி ஆகியவற்றிலும் செயல்படுத்துவதற்கான திட்டங்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கியுள்ளதுடன் பல புதிய முயற்சிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. ஏழைகளுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குதல், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், மாற்றுத் திறனாளிகளுக்கான திட்டங்கள், தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு, மூலதனத்தை ஈர்க்க பல புதிய உத்திகள், சிறு மற்றும் குறுந்தொழிலை ஊக்குவிக்க கொள்முதல் முன்னுரிமை, மக்கள் நல்வாழ்வுத் துறையில் அரசு மருத்துவமனையின் தரத்தை மேம்படுத்த பல்வேறு அறிவிப்புகள் என பல திட்டங்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

பல்வேறு அறிவிப்புகளையும், திட்டங்களையும் உள்ளடக்கி இந்த நிதிநிலை அறிக்கை தயாரித்து வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக, ஒவ்வோர் ஆண்டும் நிதிநிலை அறிக்கை தயாரிக்கும்போது புதிய திட்டங்கள் என்ன இருக்கின்றன என்று கேட்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை, ஏற்கெனவே பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுவரும் நிலையில் அவற்றை முறையாகச் செயல்படுத்த வேண்டும் என்பதும், அத்தகைய திட்டங்களில் தேவைப்படும் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதும், மாறிவரும் சூழலுக்கு ஏற்ப புதிய திட்டங்களைத் தீட்டி அறிவிக்க வேண்டும் என்பதையும்தான் முக்கியமாகக் கருதுகிறோம். தேவைக்கேற்ப சில திட்டங்களை மீண்டும் செயல்படுத்தவும் உள்ளோம்.

உதாரணமாக 1,250 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில், சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்தையும், நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தையும் 2018-2019 முதல் மீண்டும் செயல்படுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனவே, தேவைக்கேற்ப தேவையான புதிய முயற்சிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வளவு அருமையான, அற்புதமான திட்டங்களை உள்ளடக்கியுள்ள இந்த நிதிநிலை அறிக்கை, கஷ்டமான சூழ்நிலையில் அளிக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு அம்மா அவர்களின் விசுவாசமிக்க தொண்டர்கள் "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று முழக்கமிட்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், இம்மியும் பிசகாமல், இமைப் பொழுதும் சோராமல், செயல்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்ற நிதிநிலை அறிக்கையாகதான் இருக்கிறது என்று தமிழக மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பாராட்டுக்கள்தான், நிதிநிலை அறிக்கையின் மாபெரும் வெற்றி. மிகச் சிறந்த நிதிநிலை அறிக்கை என்று மனசாட்சி உள்ள அனைவருமே மனம் திறந்து பாராட்டுகிறார்கள். ஆனால், ஒரு சிலருக்கு மட்டும் பாராட்ட மனமே வருவதில்லை. நிதிநிலை அறிக்கையை, இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பாகவே அதை எப்படி எல்லாம் குறை சொல்லலாம் என்று அறிக்கை தயாரிக்கும் வேலையில் அவர்களும் இறங்கிவிடுகிறார்கள்.

*பிற்பகல் 1-35*

அப்படித்தான் "ஓட்டைப் பானையில் செய்த சமையல்" என்றும், பயனற்ற document என்றும் சிலர் விமர்சித்திருக்கிறார்கள். சட்டியை ஓட்டையாக்கி விட்டுச் சென்றதே அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள்தான் அந்த ஓட்டையை அடைத்து சமையல் செய்து கொண்டிருக்கிறோம். மக்களுக்கு நல்லாட்சி என்ற உணவும் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே, அவர்கள் பாராட்டுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. தமிழ்நாட்டின் முன்னேற்றத்திலும், மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திலும் எங்கள் கவனத்தை முழுமையாக செலுத்தி, எங்கள் பணியையும் பயணத்தையும் நாங்கள் வெற்றிகரமாகத் தொடர்ந்துகொண்டிருக்கிறோம்.



இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்மீது, சில அரசியல் கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ள கருத்துகளைப் பார்க்கும்போது, மகாபாரதத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம்தான் நினைவிற்கு வருகிறது.

பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் குருவான துரோணாச்சாரியார் ஒரு நாள், தருமனையும், துரியோதனனையும் அழைத்தார். துரியோதனனிடம் இந்த உலகத்தில் தேடிப் பார்த்து ஒரு நல்லவனை அழைத்து வா என்றும், அதேபோல், தருமனிடம் ஒரு கெட்டவனைப் பிடித்துவா என்றும் ஆணையிட்டார்.

இரண்டு பேரும் தங்கள் குருவின் கட்டளையை ஏற்று, அதை நிறைவேற்ற உடனடியாகப் புறப்பட்டுச் சென்றார்கள். தருமன், ஒவ்வொரு இடமாகத் தேடிப்பார்த்தபோதும், அவர் கண்ணுக்கு கெட்டவர்கள் யாரும் தென்படவில்லை. உலகம் முழுவதும் சுற்றி வந்தும், கெட்டவர்கள் எவரையும் காண முடியாமல், தன் குருவிடம் திரும்பிவந்து, இவ்வுலகில் துஷ்டன் என்று யாரும் இல்லை என்று எடுத்துரைத்தார்.

அதே நேரத்தில், துரியோதனனும் உலகம் முழுவதும் சுற்றி வந்து, பலரிடத்திலும் பழகிப் பார்த்துவிட்டு, இந்த உலகத்தில் நல்லவனே கிடையாது என்று தன் குருவிடம் வந்து சொன்னார். இந்த உலகத்தில் நல்லவர்கள் யாரும் கிடையாது-இது துரியோதனனுடைய முடிவு. இந்த உலகத்தில் துஷ்டர்களே கிடையாது. இது தருமனுடைய முடிவு. கெட்ட உள்ளம் படைத்தவனுக்கு உலகத்திலுள்ளோர் அனைவரும் கெட்டவர்களாகத் தெரிந்தனர். நல்ல உள்ளம் படைத்தவனுக்கு உலகத்திலுள்ளோர் அனைவரும் நல்லவர்களாகத் தெரிந்தனர். (மேசையைத் தட்டும் ஒலி) இது போலத்தான், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு கருத்துகளும், அவரவர்கள் மனநிலையைப் பிரதிபலிப்பதாகவே உள்ளன என்றே நான் கருதுகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எத்தனையோ நல்ல விஷயங்கள் இருந்தாலும், அவற்றையெல்லாம் பார்த்து, திட்டங்களை எப்படி செம்மைப்படுத்துவது என்ற ஆக்கப்பூர்வமான கருத்துகளை அவர்கள் எடுத்துரைக்காமல், அரசியல் ஆதாயம் என்ற கருப்புக் கண்ணாடி அணிந்து வெறுப்புக் கருத்துகளை வெளிப்படுத்தி, சிறிய குறைகளைக் கூட பெரிய குறைகளாகச் சுட்டிக்காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் மனநிறைவு பெற முயற்சித்திருக்கின்றனர் என்றே கருதுகிறேன். தற்போது நீங்கள் அணிந்திருக்கும் கண்ணாடி வெளிச்சத்திற்கு

வந்தால் வெள்ளையாகத் தெரியும், வெயிலுக்கு வந்தால் கருப்பாகத் தெரியும், (குறுக்கீடு) தெரியாதா? (சிரிப்பு) குறையாக நினைத்தவற்றையெல்லாம் எவ்வாறு சரி செய்யலாம் என அவர்கள் கருத்து தெரிவித்திருந்தால், அது தமிழ்நாட்டிற்கு பயனுள்ளதாக அமைந்திருக்கும் என்று, எடுத்துக் கூற விரும்புகிறேன்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறியதைப் போல், இனியவை எவ்வளவோ உள்ளபோதும், அவற்றையெல்லாம் தவிர்த்துவிட்டு, எதிர்மறையான கருத்துகளை மட்டுமே கூறுவது எதிர்க்கட்சிகளின் இயல்புதான் என்று நான் எடுத்துக்கொள்கிறேன்.

இருந்தபோதிலும், அவர்கள் கூறிய குறைகளையும்கூட உதாசீனப்படுத்தாமல்- அண்ணன் நீங்கள் சொன்னது. அவற்றையும் கருத்தில் கொண்டு, அந்தக் குறைகளையும் எவ்வாறு நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற அளவில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து முயற்சி எடுக்கும் என்பதை இந்தப் பேரவைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) உறுதிபட தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இன்னும் இருக்கிறது. (சிரிப்பு) வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் பெரும்பாலான உறுப்பினர்களின் கருத்துகள், நிதி மேலாண்மை குறியீடுகளில் தமிழகத்தின் நிலை பற்றிதான் இருந்தது.

வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை, கடன் அளவு, வட்டிச் செலவினம் இவையெல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகவே தெரியும். அதுவும், நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் அவர்களுக்கும் நன்றாகவே தெரியும். இது பற்றி, பல்வேறு தருணங்களில் விளக்கம் அளித்திருந்தாலும், அதைப் பற்றிய விரிவான புரிதல் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, அதற்கான விளக்கத்தை, இங்கு நான் மீண்டும் அளிக்க வேண்டும் எனக் கருதுகிறேன்.

நிதி மேலாண்மையில் பொறுப்புடனும், மத்திய நிதிக் குழு பரிந்துரைத்துள்ள வரையறைக்குள்ளும் தமிழ்நாடு அரசு சிறப்பாக



நிதிநிலையைப் பராமரித்து வருகிறது. ஆனால், அதே சமயம், பிற மாநிலங்களில் இல்லாத பல மக்கள் நலத் திட்டங்களையும், தொலைநோக்கு மக்கள் நலத் திட்டங்களையும் நமது மாநிலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது.

சிரமமான நிதிச் சூழல் இருந்தாலும்கூட, மக்கள் நலத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொய்வின்றி செயல்படுத்தி வருகிறது என்பதைப் பெருமையுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பிற மாநிலங்களில் இல்லாத அளவிற்கு நிருவாகக் கட்டமைப்பை தமிழகத்தில் நாம் உருவாக்கி இருப்பதால், குறிப்பாக கல்வி, சுகாதாரம், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம், விவசாயம், காவல் துறை போன்ற துறைகளில் அலுவலர்கள் அதிகமாக உள்ளதால்தான், கட்டமைப்பு பலமாக உள்ளதால்தான், பிற மாநிலங்களில் இல்லாத அளவிற்கு சம்பளம் மற்றும் ஓய்வூதியச் செலவினம் தமிழ்நாட்டில் உள்ளது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அதனால்தான் நமது மாநிலம் மனித வளக் குறியீட்டிலும் மிகவும் உயர்ந்த நிலையில் உள்ளது.

பிற்பகல் 1-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் வருவாய்ப் பற்றாக்குறையைப் பற்றி நாம் பார்க்கலாம். 2011-2012 முதல் 2012-2013 வரை நமது மாநிலம் வருவாய் உபரியுள்ள மாநிலமாகத்தான் இருந்தது. இதற்குக் காரணம், பல புதிய திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தியபோதிலும், வரி வருவாய் வரவினங்களில் நல்ல வளர்ச்சியும் இருந்தது. உதாரணமாக, மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வளர்ச்சி, 2011-2012-ல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த முதல் வருடம் 24.56 சதவிகிதமாகவும், இரண்டாவது வருடம் 2012-2013-ல் 19.72 சதவிகிதமாகவும் நல்ல ஆரோக்கியமான சூழலில்தான் இருந்தது. ஆனால், 2013-2014 முதல் உலகப் பொருளாதார வளர்ச்சியில் இந்திய அளவில் மந்த நிலை ஏற்பட்டது. இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சிக் குறைந்ததுபோல், தமிழ்நாட்டிலும் பொருளாதார வளர்ச்சிக் குறைந்தது. இந்த மாற்றம் தமிழ்நாட்டில் மட்டும் நிகழ்ந்தது அல்ல; பல மாநிலங்களிலும் இந்த மாற்றம் ஏற்பட்டது. அதனால்தான், நமது மாநில வரி வருவாய் வரவு 2013-2014 முதல் கணிசமாகக் குறைந்துவிட்டது. 2013-2014-ல் மாநிலத்தினுடைய சொந்த வரி

வருவாய் 3.46 சதவிகித வளர்ச்சியும், அதே காலகட்டத்தில் வருவாய்ச் செலவினங்கள் சராசரியாக ஆண்டுதோறும் 14.63 சதவிகிதம் அளவிற்கு மிகவும் கூடியது. மாநில வரி வருவாய் போதிய வளர்ச்சியைப் பெறாத நிலையில், வருவாய்ப் பற்றாக்குறை இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்டது என்பதுதான் உண்மை. இதன் காரணமாக, 2013-2014 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை 1,789 கோடி ரூபாயாக இருந்தது. அதேபோல, மாநில வரி வருவாய் 2014-2015 ஆம் ஆண்டில் 6.70 சதவிகித வளர்ச்சியை மட்டுமே பெற்றது. அதனால் 2014-2015 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை 6,408 கோடி ரூபாயாக இருந்தது. வருவாய் செலவினங்களில் பெருகிவரும் சம்பளம், ஓய்வூதியம், நிருவாகச் செலவு மற்றும் மக்கள் நலத் திட்டங்கள் சார்ந்தது என்பதால், இவற்றை திடீரென நாம் குறைத்துவிட இயலாது. அதனால்தான் இந்த வருவாய்ப் பற்றாக்குறை நிலை தொடர்ந்தது. பொதுவாக, பொருளாதார மந்தநிலை அல்லது பொருளாதார வளர்ச்சி என்பது ஓரிரு ஆண்டுகளில் மாறி, பொருளாதார வளர்ச்சி மீண்டும் உயர வாய்ப்பு ஏற்படும். ஆனால், இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்தது. இது தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய அளவிலும் ஏற்பட்ட ஒரு சூழல்தான். இந்தியாவில் ஒரு மாநிலமாக இருக்கின்ற தமிழ்நாடு இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது.

2015-2016 ஆம் ஆண்டிலும் மாநில வரி வருவாய் வளர்ச்சி, போதிய அளவு உயரவில்லை. அதேசமயம் மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு அதன் வரி வருவாயில் பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில் பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரைகள் 2015-2016 ஆம் ஆண்டு முதல் செயல்முறைக்கு வந்தன. பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரையில், தமிழ்நாட்டிற்கு இதுவரை கிடைத்து வந்த பங்குத் தொகையில் சுமார் 19 சதவிகிதம் குறைக்கப்பட்டது. இதன் விளைவாக, தமிழ்நாட்டிற்கு சராசரியாக ஆண்டொன்றிற்கு கிடைத்து வந்த நிதிப் பகிர்வில் சுமார் 6,000 கோடி ரூபாய் நம்முடைய மாநிலத்திற்குக் குறைக்கப்பட்டது. வரிப் பகிர்வில் இதுபோன்ற மாற்றங்களை மத்திய நிதிக் குழு செய்யும்பொழுது, இந்த மாற்றங்களால் வெகுவாகப் பாதிக்கப்படும் மாநிலங்கள் எவை என்று கண்டறிந்து, அவற்றிற்கு ஈட்டு மானியம் வழங்கி, எந்த மாநிலமும் அதுவரை பெற்று வந்த நிதியில் பாதிப்பு ஏற்பட்டுவிடாமல் இருக்க மத்திய நிதிக் குழு உரிய பரிந்துரைகளை அளித்திருக்க வேண்டும். ஆனால், மத்திய நிதிக் குழு இதைச்



செய்யத் தவறிவிட்டது. இதைத்தான் மத்திய அரசிடம் நாங்கள் பலமுறை வலியுறுத்தினோம். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது பலமுறை நேரடியாகவும், கடிதம் மூலமாகவும் மத்திய அரசை வலியுறுத்தினார்கள். இந்த நிதிப் பகிர்வால் தமிழகத்திற்கு நியாயம் கிடைக்கவில்லை என்பதையும், நியாயமாகக் கிடைக்க வேண்டிய நிதி குறைக்கப்பட்டுள்ளது என்பதையும் எடுத்துரைத்து, சிறப்பு நிதி உதவி வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலிருந்து இன்று வரை நாம் கோரிக்கை வைத்து வருகின்றோம். அதற்கு மத்திய அரசு இதுவரை செவி சாய்க்கவில்லை. இதனால்தான் 2015-2016 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டொன்றிற்கு சுமார் 6,000 கோடி ரூபாய் நமக்கு நியாயமாக வர வேண்டிய வரவுகளில் இழப்பு ஏற்பட்டது. 2015-2016 ஆம் ஆண்டிலும் மாநில வரி வருவாய் வளர்ச்சி 2.31 சதவிகிதமாகவே குறைந்திருந்தது. ஆனால், வருவாய்ச் செலவு 9.44 சதவிகிதமாக உயர்ந்த நிலையில், வருவாய்ப் பற்றாக்குறை 2015-2016 ஆம் ஆண்டில் 11,985 கோடி ரூபாயாக உயர்ந்தது.

பிற்பகல் 1-45

குறைந்த வரி வருவாய் வளர்ச்சியுடன் மத்திய நிதிப் பகிர்வில் 6,000 கோடி ரூபாய் அளவு குறைவு போன்றவற்றோடு, 2016-2017 ஆம் ஆண்டில், 'உதய்' திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய சூழல் நம்முடைய மாநில அரசுக்கு ஏற்பட்டது. இதனால் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் 22,815 கோடி ரூபாய் கடனை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டது. இதன் விளைவாக மாநில அரசுக்கு 1,779 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு கூடுதல் வட்டிச் செலவினம் ஏற்பட்டது. இது தவிர, கொடுக்கப்பட்ட 22,815 கோடி ரூபாய் கடனை ஆண்டுதோறும் 4,563 கோடி ரூபாய் வீதம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் மானியமாக மாற்ற வேண்டிய நிலையும் நம்முடைய அரசுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக வருவாய்ப் பற்றாக்குறை ஆண்டுக்கு 6,342 கோடி ரூபாய் கூடுதலாகி விட்டது. இந்தக் காரணங்களால்தான் 2016-2017 ஆம் ஆண்டிற்கான மாநில வரி வருவாய் 6.79 சதவீதமாக உயர்ந்தாலும், வருவாய்ப் பற்றாக்குறை 12,964 கோடி ரூபாயாக உயர்ந்தது.

இந்நிலையில், 2017-2018 ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் முதல், அலுவலர் குழுவின் பரிந்துரைப்படி அரசு ஊழியர்களின் சம்பள விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டன. இதனால் 2017-2018 ஆம் ஆண்டிற்கு மட்டும் ஐந்து மாத காலத்திற்கு 5,800 கோடி

ரூபாய் கூடுதல் செலவினம் வருவாய்ச் செலவினமாக ஏற்பட்டது. இப்படி அடுக்கடுக்காக, அடுக்கடுக்காக, அடுக்கடுக்காக பல்வேறு பிரச்சினைகளால் 2013-2014 முதல் 2017-2018 வரை இத்தகைய கடுமையான நிதிச் சூழ்நிலையை போதிய வரி வருவாய் வளர்ச்சியின்றி சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனினும், மாநில வரி வருவாய் வரவுகளில் பொருளாதார மந்த நிலை 2017-2018 ஆம் ஆண்டில் ஓரளவு மாறிவரும் சூழலால் வரி வருவாய் வளர்ச்சியிலும் சாதகமான மாற்றம் ஏற்பட்டாலும், சம்பள உயர்வு, தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் கடன் போன்றவற்றால் வருவாய்ச் செலவு 2017-2018 ஆம் ஆண்டில் 13.71 சதவிகிதம் உயர்ந்த காரணத்தால் வருவாய்ப் பற்றாக்குறை 2017-2018 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடுகளில் 18,370 கோடி ரூபாயாகக் கணக்கிடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும், வரி வருவாய் வளர்ச்சியில் தற்போது ஒரு நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி உயர்ந்து வரும் நிலையில், 2018-2019 ஆம் ஆண்டில், மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் வளர்ச்சியும் 14.11 சதவிகித அளவிற்கு இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் வருவாய்ப் பற்றாக்குறை 2018-2019 ஆம் ஆண்டிற்கு 17,491 கோடி ரூபாயாக 2017-2018 ஆம் ஆண்டைக்காட்டிலும் குறைக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வரி வருவாய் வளர்ச்சி உயரும்போது இந்த வருவாய்ப் பற்றாக்குறை மேலும் குறைய வாய்ப்பு உள்ளது. இந்தக் கடினமான நிதிச் சுமைகளை எல்லாம் மாநில அரசு தாண்டி வந்துள்ள நிலையில், அதிகரித்து வரும் வருவாய் வளர்ச்சியும், வரி அல்லாத வருவாய்களில் கூடுதல் நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு எடுத்துவரும் முயற்சிகளும் வருவாய்ப் பற்றாக்குறையைப் படிப்படியாகக் குறைக்க வழி ஏற்படுத்தும். அதேசமயம், மாநில அரசின் வருவாய்ச் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் துறைவாரியாக அரசு ஊழியர்களின் எண்ணிக்கையை மறுசீரமைக்க, ஓய்வு பெற்ற I.A.S. அதிகாரி திரு. ஆதிசேஷய்யா அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. வருவாய்ச் செலவினங்களைக் கட்டுப்படுத்த இந்தக் குழு அளிக்கும் பரிந்துரைகளைச் செயல்படுத்தும்போது வருவாய்ப் பற்றாக்குறை குறைக்கப்பட்டு, வருவாய் உபரி நிலைக்கு மாநில அரசு திரும்ப வழிவகை ஏற்படும் என்பதை இப்பேரவைக்கு அன்போடு



தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தருணத்தில் மாநில அரசுகளின் பெரும்பகுதி செலவினம் வருவாய் செலவாகத்தான் இருக்கும் என்பதையும், மூலதனச் செலவுக்கான வாய்ப்புகள் மத்திய அரசைப்போல் மாநில அரசுக்கு இல்லை என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அதனால்தான் 2017-2018 ஆம் ஆண்டில் மகாராஷ்டிர மாநிலத்தில்கூட வருவாய்ப் பற்றாக்குறை 14,843 கோடி ரூபாயாக உள்ளது. ராஜஸ்தான் மாநில வருவாய்ப் பற்றாக்குறை இந்த ஆண்டில் 20,166 கோடி ரூபாய். கேரளா, கர்நாடகா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களும் வருவாய்ப் பற்றாக்குறை மாநிலங்களாகத்தான் உள்ளன. அதிக அளவில் மத்திய அரசின் உதவிபெறும் தெலுங்கானா, குஜராத் போன்ற மாநிலங்களில்தான் வருவாய் உபரி உள்ளது. இதுவும் மத்திய அரசின் நிதியுதவியால்தான் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில் அது கட்டுக்குள்தான் உள்ளது. மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதத்தைப் பார்த்தால்தான் உண்மை நிலையை அறிய முடியும். நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படியும், தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின்படியும் இந்த விகிதாச்சாரம் 3 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும். இதனைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து கடைப்பிடித்து வந்துள்ளது. 2016-2017 ஆம் ஆண்டில் மட்டும், இது 4.20 என்ற அளவில் இருந்தது. இதற்கான காரணமும் 'உதய்' திட்டம்தான். மத்திய அரசும் கூடுதலாக இத்திட்டத்தின்கீழ் கடன் பெற, இந்த வரையறைக்கு விதிவிலக்கு அளித்திருந்தது. இதனை ஏற்று, தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்திற்கு திருத்தமும் 2016-2017 ஆம் ஆண்டில் நாம் கொண்டு வந்திருக்கிறோம். 'உதய்' திட்டத்தில் பெறப்பட்ட கடன் நீங்கலாக, நிதிப் பற்றாக்குறை 2016-2017 ஆம் ஆண்டில் 33,356 கோடி ரூபாயாகவும், நிதிப் பற்றாக்குறை விகிதாச்சாரம் 2.49 சதவீதமாகவும் இருந்தது என்று இறுதிக் கணக்குகள் தெரிவிக்கின்றன. நமது மாநிலத்தைப் போன்று 'உதய்' திட்டத்தைச் செயல்படுத்திய ராஜஸ்தான், அரியானா, உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்கள் தமிழ்நாட்டைப்போல் நிதிப் பற்றாக்குறையை அடுத்த ஆண்டுகளில் 3 சதவீத

வரையறைக்குள் கொண்டுவர இயலவில்லை என்பதையும், அதை நாம் கட்டுப்படுத்தி இருக்கிறோம் என்பதையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டும். ஆனால், 2017-2018 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் நிதிப் பற்றாக்குறை 40,736 கோடி ரூபாயாகவும், 2018-2019 ஆம் ஆண்டில் இது 44,481 கோடி ரூபாயாகவும் இருப்பதால், மாநில உற்பத்தி மதிப்பில், முறையே இவை 2.82 சதவீதமாகவும் 2.79 சதவீதமாகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட வரையறைக்குள்தான் உள்ளது. இதைக் கட்டுப்படுத்த, மூலதனச் செலவுகளை அரசு குறைக்கவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். தேசிய மற்றும் மாநில அளவில் நிலவி வந்த பொருளாதாரத் தேக்கநிலை மாறி மிதமான அளவில் பொருளாதாரம் தற்போது வளர்ந்து வருகிறது. திறமையான நிதி மேலாண்மையின் காரணமாக நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 2019-2020 ஆம் ஆண்டில் 2.76 சதவீதமாகவும், 2020-2021 ஆம் ஆண்டில் 2.57 சதவீதமாகவும் படிப்படியாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக, கடன் அளவைப்பற்றி பலரும் பல்வேறு கருத்துகளை இங்கே கூறி வருகின்றனர். வெளியிலும் கூறி வருகின்றனர். 2010-2011 ஆம் ஆண்டின் இறுதியில், அதாவது தி.மு.க. ஆட்சியின் இறுதியில், நிகரக் கடன் அளவு 1,01,349 கோடி ரூபாய். அந்த ஆண்டின் மாநில உற்பத்தி மதிப்பு 5,84,896 கோடி ரூபாய். ஆனால், 2017-2018 ஆம் ஆண்டு இறுதியில், நிகரக் கடன் அளவு 3,11,882 கோடி ரூபாயாகவும், ஆனால், மாநில உற்பத்தி மதிப்பு 14,45,227 கோடி ரூபாயாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2017-2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிகரக் கடன் அளவு 3,14,366 கோடி ரூபாய் என குறிப்பிட்டிருந்தாலும், அம்மாவின் அரசு, பொறுப்புடன் கடன் பெறுவதைக் குறைத்து, நிகரக் கடன் அளவை அதாவது நமக்கு 3,14,366 கோடி ரூபாய் என மத்திய அரசு நிர்ணயித்தபோதிலும், நாம் பெற்ற நிகரக் கடன் அளவை 3,11,882 கோடி என்ற அளவிலேயே கட்டுப்படுத்தி உள்ளோம். மாநில உற்பத்தி மதிப்பு உயர்வதுபோல், கடன் அளவும் உயர்வது இயல்பான ஒன்றுதான்.



தமிழ்நாட்டின் நிலுவைக் கடனை மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, நமது மாநிலத்தின் கடன் நிலை பற்றி நன்கு அறிய முடியும். 2018-2019 ஆம் ஆண்டு இறுதியில், மகாராஷ்டிராவின் கடன் 4.61 இலட்சம் கோடி ரூபாயாகவும், தமிழ்நாட்டை விடக் குறைந்த அளவு மாநில உற்பத்தி மதிப்பு உள்ள மேற்கு வங்காளத்தின் கடன் 3.94 இலட்சம் கோடி ரூபாயாகவும், உத்திரப்பிரதேசத்தின் கடன் 4.43 இலட்சம் கோடி ரூபாயாகவும் உள்ளது.

தமிழ்நாட்டின் கடன் அளவு, 2018-2019 ஆம் ஆண்டு இறுதியில், அதாவது 31-3-2019-ல்தான் 3.55 இலட்சம் கோடி ரூபாயாக இருக்கும் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதையும் குறைப்பதற்கான முயற்சியை அம்மா அவர்களின் அரசு மேற்கொள்ளும் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அளவில் உள்ள அரசுகளும், பிற மாநில அரசுகளும் பின்பற்றும் நடைமுறையைப் போன்றே தமிழ்நாடு அரசும் கடன் பெற்று வருகிறது. கடன் பெற்று வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிடுவது உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைதான். அந்த அளவில் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் பெற்று வரும் கடனை மூலதனப் பணிகளுக்காகவும், மனித வள மேம்பாட்டிற்காகவும், மக்கள் நலத் திட்டங்களுக்காகவும் செலவிட்டு வருகிறது. மாநில அரசு கடன் பெறுவதுகூட, மத்திய அரசு நிர்ணயிக்கும் வரம்பிற்குள்தான் பெற்று வருகிறது. உதாரணமாக, 2017-2018 ஆம் ஆண்டில், மத்திய அரசு, பெறப்படும் கடன் உச்சவரம்பை 42,768 கோடி ரூபாயாக நிர்ணயித்தாலும், மாநில அரசு பெற உள்ள கடன் 40,518 கோடி ரூபாய் மட்டுமே ஆகும். அதேபோல, 2018-2019 ஆம் ஆண்டிற்கு, மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள கடன் அளவு 47,887 கோடி ரூபாய் என்றாலும், கடன் பெறப்பட உள்ள அளவு 43,962 கோடி ரூபாய் மட்டுமே என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆண்டுதோறும் நிகரக் கடன் அளவு உயர்ந்து வருவதாலும், பொருளாதார வளர்ச்சியும் உயர்ந்து வருவதால், மாநில உற்பத்தி மதிப்பில் கடன் அளவு கட்டுக்குள்தான் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது என்பதனையும் இங்கே அன்போடு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, பொருளாதார மதிப்பில் கடன் அளவு, தமிழ்நாட்டிற்கு 25 சதவீதம் இருக்கலாமென நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த

மாற்றங்களினால், 2018-2019 ஆம் ஆண்டில், இந்த அளவு 22.29 சதவீதமாக மட்டுமே இருக்கும். இதுவும்கூட, வரி வருவாயில் வளர்ச்சியும், செலவுகளைக் கட்டுப்படுத்துவதில் முன்னேற்றமும் ஏற்படும்பட்சத்தில், இந்த ஆண்டே இது கணிசமாகக் குறைய வாய்ப்பு உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் விரும்புகிறேன். இதற்கான முயற்சியில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து தீவிரமாக ஈடுபடும். எனவே, “கடன் அளவு உயர்ந்துகொண்டே வருகிறது” என்று பொதுமக்களிடம் பீதியைக் கிளப்ப வேண்டாம். ஏனெனில், அதன் வரம்பு கட்டுக்குள்தான் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த வருவாய்ப் பற்றாக்குறை நிலையும், இந்தப் பற்றாக்குறையை ஈடு செய்ய கடன் பெற வேண்டிய சூழலும் தற்போது ஏற்பட்டிருந்தாலும், கடன் அளவு கட்டுக்குள்தான் இருக்கிறது. இந்த நிலை மாறும் என்றும், வரும் ஆண்டுகளில் வருவாய்ப் பற்றாக்குறை படிப்படியாகக் குறைக்கப்பட்டு, மாநில உற்பத்தி மதிப்பில், கடன் அளவு குறைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட்டிச் செலவினத்தைப் பொறுத்தவரை, அது உயர்ந்துள்ளது என்பது உண்மைதான். மொத்த வருவாய் வரவினங்களில், வட்டி செலுத்துதலுக்கான செலவினம் 2015-2016 ஆம் ஆண்டில் 14.08 சதவீதமாகவும், 2016-2017 ஆம் ஆண்டில் 15.30 சதவீதமாகவும் இருந்தது. 2017-2018 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளின்படி, 16.88 சதவீதமாகவும், 2018-2019 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, சற்று குறைந்து 16.81 சதவீதமாகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

2016-2017 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கடன் தொகையான 22,815 கோடி ரூபாயைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டதன் விளைவாக, 1,779 கோடி ரூபாய் கூடுதல் வட்டி செலுத்த வேண்டிய சுமை அதிகரித்துள்ளது. இதன் காரணமாகவே, மொத்த வருவாய் வரவுகளில் வட்டி செலுத்துதல் விகிதம் 2016-2017 ஆம் ஆண்டைக்காட்டிலும், 2017-2018 ஆம் ஆண்டில் 15.30 சதவீதத்திலிருந்து 16.88 சதவீதமாக அதிகரித்துள்ளது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2018-2019 ஆம் ஆண்டில் சம்பள உயர்வினால் ஏற்படும் கூடுதல் செலவைக் கணக்கில் கொண்டபோதிலும், வட்டிச் செலவு



விகிதம் 2017-2018 ஆம் ஆண்டைவிடக் குறையும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இங்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் வரி வருவாயைப் பெருக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளாலும், பொருளாதாரம் மந்த நிலையிலிருந்து மிதமான வளர்ச்சி அடைந்து வருவதாலும், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வரவுகளில் நல்ல வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, வட்டி செலுத்துதல் விகிதாச்சாரம் அதிகரித்து வந்தாலும், நிதிப் பற்றாக்குறையும் கடனளவும் வரும் ஆண்டுகளில் கட்டுக்குள் கொண்டு வரப்படும். இதன் விளைவாக, வட்டி செலுத்துதல் 12 முதல் 14 சதவீதம் என்ற அளவிற்குள் கொண்டுவரப்பட்டு, மாநில நிதிநிலை சீராகப் பராமரிக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, தமிழக அரசு நிதி மேலாண்மையில் எப்பொழுதும்போல் பொறுப்புடனும், சிறப்புடனும் நிருவகித்து வரும் அதேவேளையில், தமிழக மக்களுக்கான வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்களையும், பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கான சிறப்புத் திட்டங்களையும் தொடர்ந்து செயல்படுத்தி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துத் தந்த பாதையில், நிதிச் சுமை உள்ளிட்ட அனைத்து இடர்ப்பாடுகளையும் கடந்து, நாட்டிலேயே முதன்மை மாநிலம் என்ற அம்மா அவர்களது கனவை நனவாக்க, (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முனைப்போடு தொடர்ந்து செய்யும் என்பதனை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிதிநிலைக் குறியீடுகள் பற்றி குறிப்பிட்ட கருத்துகளுக்கு இந்த விளக்கம் போதுமானதாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுபதி அவர்கள், 2017-2018 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை ஒப்பிட்டு பல்வேறு கருத்துகளை இங்கே தெரிவித்தார். நிதிநிலை அறிக்கையில் பக்கம் 16-ல், 11-வது வரியை படித்துப் பாருங்கள், வரியே போடவில்லை என்று சொல்லிவிட்டு, பஸ் கட்டணம், மின்சாரக் கட்டணம், பால்

விலை ஆகியவற்றையெல்லாம் ஏற்றிவிட்டு, வரியில்லாத பட்ஜெட் என்று குறிப்பிடுகிறார்கள் என்று தெரிவித்தார்.

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவர் கூறியவாறு 16 ஆம் பக்கம் 11-வது வரியிலும் நான் தேடித் தேடிப் பார்த்தேன். அவர் சொன்ன கருத்துகள் எதுவும் என் கண்களில் தென்படவில்லை. எதற்காக அவர் இவ்வாறு ஒரு தவறான தகவலை இங்கே தெரிவித்திருக்கின்றார் என்பது எனக்குத் தெரியவில்லை. இந்த வரவு-செலவுத் திட்டத்தை நாங்கள் வரியில்லாத பட்ஜெட் என்று கூறவில்லை. வரி இல்லாத பட்ஜெட் என்று கூறுவதாக இங்கே நீங்கள்தான் கூறினீர்கள். புதிய வரிகள் எதுவும் போடவில்லை என்பதுதான் உண்மை என்று தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, புதிய வரி இல்லாத பட்ஜெட் என்று கூறலாம் என்று நீங்கள்தான் கூறுகிறீர்கள். எங்களைப் பொறுத்தவரை, மக்கள்மீது தேவையற்ற வரிச் சுமையைச் சுமத்தக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளோம். கூடுதல் வரி விதிப்பதைவிட பொருளாதார வளர்ச்சியால் ஏற்படும் கூடுதல் வரி வருவாயையே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பெருமளவு நம்பியுள்ளது. வரி அல்லாத வருவாயை பெருக்குவது பற்றியும் ஆலோசித்து வருகிறோம். ஆனால் பஸ் கட்டணம், மின்சாரக் கட்டணம் போன்றவை மாறிவரும் சூழலுக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டியதுதான். இந்த நிறுவனங்கள் செம்மையாக செயல்படவேண்டுமென்றால், இத்தகைய மாற்றங்கள் அவசியமானதும்தான். இதுபோன்ற உயர்வுகளை, எல்லா அரசுகளும் செய்தாகவேண்டிய நிலையில்தான் உள்ளன. ஏன்? தி.மு.க. அரசுகூட இதுபோன்ற கட்டணங்களை உயர்த்தி உள்ளது என்பதும் உண்மைதான்.

அதுபோல, 2017-2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 2016-2017-ல் 2.72 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியுள்ளதாகவும்,--ஏற்கெனவே இந்த பட்டா விஷயத்தில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தக்க விளக்கத்தை அளித்துவிட்டார். திரும்பவும் நான் அதற்குள் சென்று நேரத்தை நீட்டிக்க விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அடுத்த சப்ஜெக்ட்டிற்கு நான் செல்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நீங்கள் தாராளமாக ஒன்றரை மணிநேரம் எடுத்துக்கொண்டு முடித்தீர்கள்.

மாநில சமச்சீர் நிதியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுபதி அவர்கள் பேசினார். மாநில சமச்சீர் நிதியின்கீழ் 2017-2018 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும், அதே 100 கோடி ரூபாய்தான் 2018-2019 ஆம் ஆண்டிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுப் பேசினார். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை, ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2017-2018 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் பல்வேறு பணிகள் எடுக்கப்பட்டு, பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2018-2019 ஆம் ஆண்டிற்கும் இத்திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2017-2018 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட அதே 100 கோடி ரூபாய் அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோலத்தான், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும் ஆண்டுதோறும் 75 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு செலவிடப்படுகிறது என்பதையும் தெளிவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். இத்திட்டத்தில் எடுக்கப்பட்ட பணிகள் பற்றிய விரிவான விவரங்கள் மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்படும். அனைத்து விவரங்களையும் வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்போது சேர்ப்பது நேரம் கருதி இயலாத ஒன்று என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேம்பாட்டுக் கழகத்திற்கு ஈடுசெய்யப்படும் ஊக்க மூலதனமாக 2016-2017 ஆம் ஆண்டில் 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 270 கோடி ரூபாய்--இதுவும் அந்தப் பிரச்சினையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுபதி அவர்கள் கிளப்பினார். 270 கோடி ரூபாய் 2017-2018 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்தாலும், அந்த நிறுவனம் நிதி திரட்டுவதற்கு எடுத்த முயற்சியில் முழு பயனும் அந்த ஆண்டில் கிடைக்கப்பெறாத நிலையில், அந்த நிதி விடுவிக்கப்படவில்லை. அந்த நிதிதான் 2018-2019 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு விடுவிக்கப்படவுள்ளது.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகத்தைப் பொறுத்தவரை இந்திய அளவிலும், வெளிநாடுகளிலும் பல்வேறு நிறுவனங்களைத் தொடர்புகொண்டு நிதி திரட்டுவதற்கான

பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறது. இதுபோன்ற நிறுவனம் தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக அமைக்கப்பட்டது என்பதையும், மத்திய அரசு இதுபோன்ற நிறுவனத்தை அமைத்திருந்தாலும், அதைவிட முன்னேறிய நிலையில்தான் நமது நிறுவனம் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிறுவனத்தின்மூலம் 6,000 கோடி ரூபாய் நிதி திரட்டப்படும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நிதியை உடனடியாகத் திரட்டிவிட முடியாது. எடுக்கப்பட்ட முயற்சியின் விளைவாக இந்தியன் வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கழகம், பொதுக் காப்பீட்டுக் கழகம், ஊரக மின் கழகம் போன்றவற்றிடமிருந்து ரூ.1,275 கோடி நிதி திரட்ட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

பிற்பகல் 2-05

சில வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து 2,800 கோடி ரூபாய் வரை வழங்க ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. திட்ட தயாரிப்புக்கான நிதி, ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் புதிய திட்டங்களுக்கான அறிக்கைகள், இந்த நிதியைப் பயன்படுத்தித்தான் தயாரிக்கப்படுகின்றன என்பதையும் இங்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு கிராமப்புற புத்தாக்கத் திட்டம், 2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதும் உண்மைதான். ஆனால், அமெரிக்க டாலரின் மதிப்பில் ஏற்பட்ட வேறுபாடுகளால் இந்தத் திட்ட மதிப்பீடு தற்போது 920.63 கோடி ரூபாயாக உள்ளது என்பதும் உண்மைதான். இதில் தவறு ஏதும் இல்லை. 2017-2018 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கடன் ஒப்பந்தம் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டதால் 2018-2019 ஆம் ஆண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என்று தெரிவித்துள்ளோம். கடன் ஒப்பந்தம் தற்போது முடிக்கப்பட்டுள்ளதால் வரும் நிதியாண்டு ஜூன் மாதம் முதல் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொருளாதார வளர்ச்சியைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். 2017-2018 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 9 சதவிகிதமாக இருக்கும் என தெரிவித்தோம். ஆனால் அது 8.03 சதவிகிதம் எனத் தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் முதன்மைத் துறை வளர்ச்சி 0.63 அளவிலேயே உயர்ந்துள்ளது. ஆனால், தொழில் துறை வளர்ச்சி 7.79 சதவிகிதமாகவும், சேவைத் துறைகளின் வளர்ச்சி 9.48 சதவிகிதமாகவும் இருந்ததால்தான் 8.03 சதவிகித வளர்ச்சி மட்டுமே ஏற்பட்டுள்ளது. 2018-2019 ஆம் ஆண்டிலும் மேலும் இது 9 சதவிகிதமாக இருக்கும் என கணக்கிட்டிருக்கிறோம். இதற்குக் காரணம் 2017-2018 ஆம் ஆண்டைப்போல் அல்லாமல், 2018-2019-ல் விவசாய வளர்ச்சியிலும், தொழில் வளர்ச்சியிலும், மாற்றம் இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டுதான் இந்தக் கணிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



எனவே, ஓர் ஆண்டின் கணிப்பு சரியாக அமையவில்லை என்றால், எல்லா ஆண்டுகளிலும் கணிப்பு சரியாக இருக்காது எனக் கூற முடியாது. 2018-2019 ஆம் ஆண்டில் நமது மாநில பொருளாதார வளர்ச்சி 9 சதவிகிதம் இருக்கும் என்ற கணிப்பு சரியாகவே இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 25,478 வீடுகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் என தெரிவித்திருந்தோம். 2018-2019 ஆம் ஆண்டில் 4,746 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த விவரங்களில் முரண்பாடுகள் எதுவும் இல்லை. மற்ற வீடுகள் கட்டப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையையும் மாண்புமிகு உறுப்பினர்கள்தான் தெரிவித்திருந்தார்கள்.

அதேபோல், கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தில் சில முரண்பாடுகள் உள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுபதி அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் (ஊரகம்) 2017-2018 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சிறப்பு ஒதுக்கீட்டையும் சேர்த்து, 1.76 இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இவற்றோடு 20,000 பசுமை வீடுகளையும் சேர்த்தால் 2017-2018 ஆம் ஆண்டில் 1.96 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்பது சரியே. இதில் தவறு எதுவும் இல்லை.

2018-2019 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் (ஊரகம்) 1.30 இலட்சம் வீடுகள் கட்டப்பட உள்ளன. இதைத் தவிர, பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ், மாநில நிதியில் 20,000 வீடுகளும் கட்டப்பட உள்ளன என்பதையும் தெரிவித்து, எனவே, இந்தப் புள்ளிவிவரங்களில் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் பேசும்போது, (குறுக்கீடு)--இல்லையா? 2017-2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 12,318 கோடி ரூபாயாக இருந்த மாநிலத்தின் வரியல்லாத வருவாய், திருத்த மதிப்பீடுகளில் 10,767 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டதற்கான காரணம் பற்றிக் கேட்டிருந்தார். பொதுவாக, வரியல்லாத வருவாயில், கனிம வளங்களிலிருந்து பெறப்படும் உரிமைத் தொகை, கட்டணங்கள், வட்டி வரவுகளும், அரசுப் பொது நிறுவனங்களின் ஈவுத் தொகைகளும் (Dividends) அரசு வசூலிக்கும் அபராதங்கள், கட்டணங்கள் ஆகியவையும் இதில் அடங்கும். 2017-2018 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 'உதய்' திட்டத்திற்குப் பின்னர், மின் பகிர்மானக் கழகத்திற்கு வீட்டிணைப்பு மின்சார நுகர்வோர்களுக்கு மானியத்தில் வழங்கப்படும் 2,500 கோடி ரூபாய் குறைக்கப்படுவதால் அதற்கான தொகை வரியல்லாத வருவாயாக மின் பகிர்மானக் கழகத்திடமிருந்து பெறப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இது ஒரு புத்தக சரிக்கட்டல் முறைதான். பின்னர், திருத்த மதிப்பீடுகளில் இந்தக் கணக்கீட்டு முறை மாற்றப்பட்டு, வரியல்லாத வருவாயாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக, மின்சார மானியம் அந்த நிறுவனத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது. அதனால்தான், 2016-2017 ஆம் ஆண்டின் கணக்குகளில் 9,913.76 கோடி ரூபாயாக இருந்த வரியல்லாத வருவாய், 2017-2018 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 10,767 கோடி ரூபாயாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்த வருவாய் 11,301 கோடி ரூபாயாகக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, திருத்திக்கொள்வதற்கு இதில் ஒன்றும் இல்லை என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் பேசுகின்றபோது, 2016-2017, 2017-2018, 2018-2019 ஆகிய ஆண்டுகளில் பெறப்பட்ட கடனில், மூலதனப் பணிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட நிதி போக, 46,000 கோடி ரூபாய் எங்கே சென்றது என்று கேட்டார்.



பிற்பகல் 2-10

இந்த மூன்று ஆண்டுகளில், அரசால் பெறப்பட்ட கடன் 1,44,779 கோடி ரூபாய். இதில் மூலதனப் பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகை 96,104 கோடி ரூபாய். மீதமுள்ள தொகையான 48,675 கோடி ரூபாய் மக்கள் நலத் திட்டங்களுக்குத்தான் செலவிடப்பட்டுள்ளது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை)

ஆண்டுக்கு 70,000 கோடி ரூபாய்க்குமேல் மக்கள் நலத் திட்டப் பணிகளுக்காகவும், கல்வி, சுகாதாரம் மற்றும் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படும் மானியத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ளது. மாநில வரி வருவாய் குறைந்து வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படும்போது, மக்கள் நலத் திட்டங்களை நாம் திடீரென நிறுத்திவிட முடியாது. அவற்றைத் தொடர்ந்து செயல்படுத்தவே, பெறப்பட்ட கடன் தொகை செலவிடப்பட்டுள்ளது என்பதையும், வருவாய்ப் பற்றாக்குறை குறையும்போது, கடன் பெறுவதும் குறைக்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் பேசும்போது, மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய நிதிகள் பெறப்பட்டதா எனக் கேள்வி எழுப்பினார். காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் மாண்புமிகு திரு. இராமசாமி அவர்களும் மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய நிதியைப் பெற்று முறையாகப் பயன்படுத்த வேண்டுமென்று தெரிவித்தார். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசு மாநிலத்திற்கு வழங்கும் நிதி உதவிகளில் நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மாநிலத்திற்கு வழங்கப்படும் மானியமும், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கு மத்திய அரசின் பங்களிப்புத் தொகையாகப் பெறப்படும் மானியமும் முக்கியமானவை ஆகும்.

மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகையில், 13-வது நிதிக் குழு காலத்தில் அந்தக் குழு பரிந்துரைப்படி செலவிடப்பட்டு, மத்திய அரசால் உறுதியளித்தபடி திரும்ப வழங்கப்படாத தொகை 522.91 கோடி ரூபாய். மத்திய அரசு பொறுப்பேற்கும் சில முக்கிய திட்டங்களான ஆதி திராவிடர்

மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான மெட்ரிக் படிப்புக்கு முந்தைய மற்றும் பிந்தைய படிப்பிற்காக 1,419.38 கோடி ரூபாயும், அனைவருக்கும் கல்வி இயக்கம் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கம் ஆகியவற்றிற்கு முறையே 1,312.04 கோடி ரூபாயும், 934.10 கோடி ரூபாயும் நிலுவையில் உள்ளன.

இவற்றுடன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 382.56 கோடி ரூபாயும், இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-ன்கீழ் 238.24 கோடி ரூபாயும், குடும்ப நலத் திட்டத்தின்கீழ் 217.31 கோடி ரூபாயும், வெள்ள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் 342.94 கோடி ரூபாயும், மீன்பிடித் துறைமுகங்கள் கட்டுதல் திட்டத்தின்கீழ் 134.53 கோடி ரூபாயும் மற்றும் ஏனைய திட்டங்களுக்கு 679.63 கோடி ரூபாயும் நிலுவையில் உள்ளன.

மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய இந்நிலுவைத் தொகைகளைப் பெறுவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் பல்வேறு நிலைகளில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் நான் இங்கே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்து வரும் இத்தகைய பல்வேறு நடவடிக்கைகளினால், 2017-2018 ஆம் நிதியாண்டின் தொடக்கத்தில் நிலுவையிலிருந்த, 17,303.04 கோடி ரூபாயிலிருந்து, ஆதி திராவிடர் மாணவர்களுக்கான மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான உதவித் தொகைக்காக 434.48 கோடி ரூபாயும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக 902.93 கோடி ரூபாயும், குடும்ப நலத் திட்டத்திற்காக, 144.81 கோடி ரூபாயும், மீன்பிடித் துறைமுகங்கள் கட்டும் திட்டத்திற்காக 22.67 கோடி ரூபாயும், தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விற்பனை ஊக்கத் தொகைக்காக 20.86 கோடி ரூபாயும், பழங்குடியின மாணவர்களுக்கான மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான உதவித் தொகைக்காக 20.20 கோடி ரூபாயும் மற்றும் கோமாரி நோய்த் தடுப்புத் திட்டத்திற்காக 18.780 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 1,564.65 கோடி ரூபாயை நாம் எடுத்துக்கொண்ட சிறந்த முயற்சிகளின் காரணமாக மத்திய அரசு தற்போது விடுவித்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



எனவே, மத்திய அரசின் திட்டங்களிலிருந்து பெறப்பட வேண்டிய நிலுவைத் தொகைகளைப் பெறுவதற்கு, தமிழ்நாடு அரசு தொடர்ந்து அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அண்ணன் அவர்கள் மாநில அரசு வருவாயைப் பெருக்க வேண்டுமெனக் கூறினார். மாநிலத்தின் வரி வருவாயை ஆதாரமாகக் கொண்டு பொருளாதார வளர்ச்சியைப் பெருக்க வேண்டும். வரி அளவுகளை உயர்த்தி வளர்ச்சியைப் பெருக்குவது என்பது இயலாத காரியம். அதாவது, வரி போட்டுத்தான் வருவாய் வளர்ச்சியைப் பெருக்குவது என்பது தற்போது இயலாத காரியம். அதனால்தான், மாநிலத்தின் வரி வருவாய்க்கான ஆதாரங்களைப் பெருக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து முயன்று வருகிறது.

வரி அளவை உயர்த்தாமல், மணல், கனிம வளம், கனிம மணல் போன்றவற்றின்மூலம், கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பிற்பகல் 2-15

எனவே, கூடுதல் நிதியைப் பெற மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து முயற்சிகளை முனைப்புடன் மேற்கொள்ளும் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசுகின்றபொழுது ஆரம்பத்தில் இந்த அரசு அமைதி, வளம், வளர்ச்சி என்பதற்குரிய விளக்கத்தை அவருக்கே உரிய பாணியில் இங்கே எடுத்துச் சொன்னார்கள். 2011-2012 ஆம் ஆண்டு நம்முடைய வளர்ச்சி விகிதம் 5.41 சதவிகிதம், 2012-2013 ஆம் ஆண்டு 7.58 சதவிகிதம், 2013-2014 ஆம் ஆண்டு 4.89 சதவிகிதம், 2015-2016 ஆம் ஆண்டு 6.13 சதவிகிதம், 2016-2017 ஆம் ஆண்டு 7.41 சதவிகிதம், 2017-2018 ஆம் ஆண்டு 8.01 சதவிகிதமாக படிப்படியாக நம்முடைய மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி உயர்ந்துகொண்டேதான் இருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதன் காரணமாகத்தான், நமது மாநிலம் இன்றைக்கு அமைதியான

சூழ்நிலையில் சட்டம்-ஒழுங்கு காப்பாற்றப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களிலும் சிறப்பான மாநிலமாக ஜாதிச் சண்டை இல்லை, மதக் கலவரங்கள் இல்லை, தமிழகம் அமைதிப் பூங்கா மாநிலமாக இருக்கிறது என்பதனையும் (மேசையைத் தட்டும் ஒலி) நாம் எல்லோரும் நன்றாகவே அறிவோம்.

வளர்ச்சியைப் பொறுத்தவரையில், ஒரு தனிநபருடைய வருமானத்தை வைத்து அந்த மாநிலத்தினுடைய வளர்ச்சி, அங்கு வாழ்கின்ற மக்களுடைய ஆரோக்கியமான நிலையை நாம் கண்டுகொள்ளலாம் என்ற அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 2011-2012 ஆம் ஆண்டில் நம்முடைய தனிநபர் வருமானம் 1 இலட்சத்து 3 ஆயிரத்து 600 ரூபாய். நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள். ஏதோ விளக்கம் சொன்னால் மட்டும் தெரியாததுமாதிரி இருப்பார். 2011-2012 ஆம் ஆண்டில் தனிநபர் வருமானம் 1 இலட்சத்து 3 ஆயிரத்து 600 ரூபாய்தான். ஆனால், 2017-2018-ல் நம்முடைய தனிநபர் வருமானம் 1 இலட்சத்து 88 ஆயிரத்து 492 ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, 85 ஆயிரம் ரூபாய் தனி நபர் வருமானமாக 2011-லிருந்து இன்று வரை ஒரு மனிதனுடைய தனி நபர் வருமானம் உயர்ந்து ஆரோக்கியமான சூழ்நிலையில் இருக்கிறது என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அண்ணே, இதற்கு மேலே யாரும் விளக்கம் சொல்லமுடியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர், ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 36 ஆயிரம் ரூபாய் ஒருவர்மீது கடன் வைத்துவிட்டார்கள் என்று சொல்கிறீர்கள். இப்போது இருக்கிற கடன் ரூபாய் 45 ஆயிரம். உங்களுடைய ஆட்சியில் 45 ஆயிரம் ரூபாய் ஒவ்வொருவரின் தலைமேலே வைத்துவிட்டீர்கள். என்ன செய்வது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் 2011 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் முன்னெடுத்துச் செல்கின்றது என்பதற்கு உதாரணமாகத்தான் இன்றைக்கு கல்வி, மருத்துவத் துறைகளில் நமது மாநிலத்தில் ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சி, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்ற சரித்திர உண்மையை



இங்கே பதிவு செய்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்கு உயர் கல்விச் சேர்க்கையில் 26 சதவிகிதம்தான் நம்முடைய மாணவர்கள் உயர் கல்வியில் சேர்கின்ற சதவிகிதம் என்று இருந்த நிலைமையையெல்லாம் இன்றைக்கு மாற்றி, 46.90 சதவிகிதமாக என்று நமது மாணவர்களுடைய உயர் கல்விச் சேர்க்கை உயர்ந்திருக்கிறது என்பதனையும் நான் எதிர்க் கட்சியில் சேர்ந்திருக்கின்ற தலைவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் உட்பட மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இவ்வளவு கடினமான சூழ்நிலையிலும் நிதி மேலாண்மையைப் பொறுத்தவரையில் திறம்பட அதைச் சமாளித்து, மத்திய அரசு விதிக்கின்ற கட்டுப்பாட்டிற்குள் நமது மாநிலத்தை இட்டுச் செல்கின்ற நிலையைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்பதையும், இதில் எந்தவித தொய்வும் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தீட்டிய மக்கள் நலத் திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு எதுவும் குறைக்கப்படவில்லை, தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. இருக்கின்ற திட்டங்கள் சீரமைக்கப்பட்டு, அது ஒழுங்காக மக்களைப் போய்ச் சேர வேண்டும் என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய எண்ணம், மக்கள் நலத் திட்டங்கள் தொலைநோக்குத் திட்டங்களாக இருக்க வேண்டும், அந்தத் திட்டங்களினுடைய முழுமையான பலன்கள் பொது மக்களுடைய திருக்கரங்களில் நேரடியாகக் கிடைக்கச் செய்கின்ற நோக்கத்தில்தான் இன்றைக்கு நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லி, உறுதியாக இந்த நிதிநிலை அறிக்கையில் என்னுடைய பதில் உங்களுக்கெல்லாம் திருப்தியைத் தரும் என்று நம்பி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2-20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் 2018-2019 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை

நிறைவேற்றித் தர வேண்டும் என்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மதிவாணன், திருப்தியாக பதில் சொல்லிவிட்டார்களே! பிறகு என்ன? (குறுக்கீடு) நீங்கள் திருப்தியடையவில்லை என்றால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 2017-2018 ஆம் நிதியாண்டில் தனி நபருடைய வருமானம் உயர்ந்திருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப்பற்றித்தான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்டுவிட்டாரே! அதற்கும் துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டாரே!

**திரு. உ. மதிவாணன்:** ஆனால், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மதிவாணன், அதை விட்டுவிடுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

## 13. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2018), 2018 ஆம்



ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2018 மற்றும் 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2018) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 14. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2018), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@22-3-2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2018), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2018) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@22-3-2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2018 மார்ச் 22

பிற்பகல் 2-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியலில் திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.



2018 மார்ச் 22]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2018), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2018) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

---

@22-3-2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2018 மார்ச் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

***திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என் கருத்தைத் தெரிவிக்கிறேன். உத்தரபிரதேசத்தில் 1 இலட்சம் ரூபாயிலிருந்து online-ல் tender கொடுக்க வேண்டும் என்று அந்த அரசாங்கம் ஒரு நடைமுறையைக் கொண்டுவந்திருக்கிறது. அதுபோல, 1 இலட்சம் ரூபாய் அளவிலே நீங்கள் ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு வரவேண்டும். அதேமாதிரி, மத்திய அரசாங்கம் TGST-யை அக்டோபர் 31 ஆம் தேதியிலிருந்து மூடிவிட்டது. இனிமேல் விளம்பரங்களெல்லாம் Digital முறை மூலமாகத்தான் கொடுக்க வேண்டும், பத்திரிகை மூலமாகக் கொடுக்கக்கூடாது என்று அந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். செய்தித்தாள்களின்மூலம் பார்க்கும்போது, சீனாவில், பேப்பர் உற்பத்தியை நிறுத்தி, இறக்குமதி செய்கிறார்கள். ஏனென்றால், சுற்றுச்சூழல் பாதிக்கும் என்கின்ற காரணத்தால் அவர்கள் பேப்பர் தயாரிப்பதே கிடையாது. ஆனால், இவ்வாறு செய்தால் நம்முடைய பத்திரிகையாளர்களுக்கு சிரமம்தான். சாதாரண ஏழை, எளிய மக்கள் விளம்பரங்களைப் பத்திரிகையில் பார்த்து, tender-ல் கலந்துகொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. அரசாங்கம் கொள்முதல் செய்யக்கூடியவை எல்லாம் அனைவருக்கும் தெரியும் வகையில், அவை பத்திரிகையில் வரவேண்டும் என்கின்ற வகையில் நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே, இந்தத் திருத்தங்களை இதில் கொண்டுவந்து, பத்திரிகையும், பொதுமக்களும் பாதிக்கப்படாத அளவிற்கு அதை நிறைவேற்ற வேண்டும் எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையை தட்டும் ஒலி)



2018 மார்ச் 22] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2018) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@22-3-2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2018 மார்ச் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2018), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 2-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

---

@22-3-2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2018 மார்ச் 22] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2-ல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

## (உ) தமிழ்நாடு தனியார் மருத்துவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2018), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

---

*@22-3-2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*





*சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

*பிரிவுகள் 2 முதல் 11 வரை திருத்தங்கள் இல்லை.*

*பிரிவுகள் 2 முதல் 11 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

[2018 மார்ச் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 13. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)



2018 மார்ச் 22] [பேரவைத் தலைவர்]

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-34 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 15. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

46. (i) 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (நான்காவது திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 47/2012) 7-7-2015 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என்று நிர்ணயம் செய்தது குறித்தும் (2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (நான்காவது திருத்தம்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 47/2012) 1 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது); மற்றும் (ii) 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (நீச்சல் குளங்களை முறைப்படுத்தலும், கண்காணித்தலும்) விதிகளை இயற்றியது குறித்தும் (1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (d) பிரிவு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு, 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2013) 10(3) பிரிவு மற்றும் 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/2013) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்

[2018 மார்ச் 22

(ந.நி.1) துறையின் 7-7-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 97-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்.

47. பாடநூல் மேல்தாள்கள் அச்சிடுவதற்காக பல்வேறு அட்டைகளை தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கு, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) பிரிவு 16 (f)-ன்கீழ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விச் சேவைகள் கழகத்திற்கு அனுமதி வழங்கியது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 12-5-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 137-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

48. நிதித் துறையினால் 8-6-2015 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(2)/ FIN/263(d)/2015 ஆம் எண் அறிவிக்கைக்கு, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) பிரிவு 16 (f)-ன்கீழ், திருத்தம் செய்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 7-10-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 269-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

49. நீர்வள ஆதாரத் துறையின் வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான முதன்மை பொறியாளர் நியமன அடிப்படையில், நீர்நிலைப் பணிகள் தொடர்பான பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் சீரமைத்தல் (RRR) ஆகியவற்றை ஒரே நேரத்தில் மதிப்பீடு செய்வதற்கான பணியை, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) பிரிவு 16 (f)-ன்கீழ், சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழக நீர்வள ஆதார மையத்திடம் ஒப்படைத்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 17-5-2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 131-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



2018 மார்ச் 22]

50. தமிழ்நாட்டில் பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கு உயர் மதிப்பை ஏற்படுத்தும் பொருட்டு தீர்மானத்திற்கு ஆதரவளிக்கும் ஏற்பாட்டுமுறை மற்றும் அங்காடி இணைப்பு வசதிகள் குறித்த ஆய்வை, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) பிரிவு 16 (f)-ன்கீழ், ஐதராபாத்தைச் சேர்ந்த ஓரளவு வறட்சியான வெப்ப மண்டலப் பகுதிகளுக்கான பன்னாட்டு பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைத்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 24-5-2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 136-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

51. கோயம்புத்தூரிலுள்ள டைடல் பார்க் கோயம்புத்தூர் நிறுவன (TPCL) வளாகத்தில், தொடக்கநிலை சேமிப்புக் கிடங்கை (Startup Warehouse) ஏற்படுத்துவதற்கு தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்கள் கழகத்தின் (NASSCOM) சேவைகளை நேரடியாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) பிரிவு 16 (f)-ன்கீழ், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு (ELCOT) அனுமதி அளித்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 6-6-2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 163-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

52. கடலூர் சிறு துறைமுகத்தில் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக, தொடர்புடைய அனைத்து ஆய்வுகளுடன், விரிவான திட்ட அறிக்கையை (DPR) தயாரிப்பதற்காக, ஆலோசனை சேவைகளை சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தினை ஈடுபடுத்திக் கொள்வதற்கு, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) பிரிவு 16(f)-ன்கீழ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கு அனுமதி அளித்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 19-6-2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 176-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[2018 மார்ச் 22

*53. உதவி பொறியாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் வல்லுநர்களை நியமிப்பதற்கும், மென்பொருளை உருவாக்கி பராமரிப்பதற்கும், ஒரு ஆலோசனை மற்றும் சேவை வழங்கும் நிறுவனமாக அண்ணா பல்கலைக்கழகத்தை ஈடுபடுத்திக் கொள்வதற்கு, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) பிரிவு 16* (f)*-ன்கீழ், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அனுமதி அளித்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 30-11-2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 350-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.* [*1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*].

*54. தமிழ்நாடு கனிம நிறுவனத்திடமிருந்து* (TAMIN) *வெர்மிடைல்கள்* (Vermitiles) *மற்றும் கிராபிடைல்களை* (Graphitiles) *கொள்முதல் செய்வதற்கு, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) பிரிவு 16*(f)*-ன்கீழ், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட அரசுத் துறைகளுக்கு அனுமதி அளித்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 30-11-2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 351-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.* [*1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*].

*55. 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்கு அறிக்கையுடன் தணிக்கை அறிக்கை.* [*2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 105(2) மற்றும் 104(4) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]. *(தமிழ்-ஆங்கிலம்)*

*56. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]. *(தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*57. 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை.*



*2018 மார்ச் 22*]

[*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]. *(தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*58. 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் அறுபத்து எட்டாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]. *(தமிழ்-ஆங்கிலம்)*

*59. 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் வரைநிலையின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை.* [*1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]. *(தமிழ்-ஆங்கிலம்)*

*60. 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிக் கணக்குகள் (தொகுதி 1 மற்றும் 2) (ஆங்கிலம்) மற்றும் நிதி ஒதுக்கக் கணக்குகள் (ஆங்கிலம்) ஆகியவற்றை உள்ளடக்கிய குறுந்தகடு.* [*இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*].

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*64. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (2016-2018)*

*65. அரசு உறுதிமொழிக் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை. (2016-2018)*

*66. அரசு உறுதிமொழிக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை. (2016-2018)*

*67. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2016-2018)*

*68. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2016-2018)*

*69. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2016-2018)*

*70. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2016-2018)*

[2018 மார்ச் 22

*71. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2016-2018)*

*72. அரசு உறுதிமொழிக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2016-2018)*

*73. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபதாவது அறிக்கை. (2016-2018)*

*74. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை. (2016-2018)*

*75. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து இரண்டாவது அறிக்கை. (2016-2018)*

*76. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை. (2016-2018)*

*77. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து நான்காவது அறிக்கை. (2016-2018)*

*78. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஐந்தாவது அறிக்கை. (2016-2018)*

*79. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஆறாவது அறிக்கை. (2016-2018)*

*80. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (2018). (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)*

*81. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (2018). (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)*

----